சென்னை மாவட்டக் கோவில் வரலாறு

ஜனவரி 1993

Q2:38·2111
N164
4205

சென்னை மாவட்டக் கோவில் வரலாறு

உ

ஓம்

சென்னை மாவட்டக் கோவில் வரலாறு

ஆசிரியர்

தமிழ்ப் பெரும்புலவர், கணியர்,

டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

திருநெல்வேலி.

©

தமிழ்நாடு அரசாங்கம்

1964

வெளியிடுபவர் :

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வழியாக

அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்

1964.

முதற் பதிப்பு
ஆயிரம் படிகள்
1964

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக, தமிழ்நாடு எழுது பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியாற் பதிக்கப்பெற்று, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வழியாகத் தமிழ்நாடு அறநிலையத் துறையினரால் வெளியிடப்பெற்றது.
1964.

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முதல் அமைச்சர் உயர்திருவாளர் மீ. பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்களின்

முன்னுரை.

நமது நாட்டிலுள்ள திருக்கோவில்கள் சமையச் சின்னங்கள் மட்டுமல்ல; வழிபாட்டுக்குரிய திருத்தலங்களாக விளங்குவதோடு, இலக்கியம், வரலாறு, கட்டிடக் கலை, சிற்பம் முதலிய பல்வேறு துறைகளுக்கும் தொடர்புடையனவாக அவை விளங்குகின்றன. ஆலயங்களைப் பற்றி நாம் விவரமாக அறியும்போது அவற்றின் பழைய வரலாறு, பண்பாடு, நாகரிகம் முதலியவைகளை உணர்ந்து கொள்ள நமக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

கோவில்கள் அமைந்திருக்கும் இடங்களின் இயற்கைச் சூழல், போக்குவரத்து வசதி, தல புராணம், கதை வாயிலான சிறப்புக்கள், ஆலயத்துக்குத் தொடர்பான காரண காரியக் கதைகள், பெயர் விளக்கம் முதலியவைகளை விரிவாக எடுத்துக் கூறும் நல்ல நூல்கள் சமையத்துக்கும், வரலாற்றுக்கும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், சமைய மெய்யுணர்வுக்கும் களஞ்சியம் போல விளங்கக் கூடியவை. இந்த நாள் மக்களுக்கும் இனிவரும் தலைமுறையினருக்கும் அவை பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இத்தகு முயற்சியில் 'நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு' என்னும் நூலுக்கு அடுத்தபடி, "**சென்னை மாவட்டக் கோவில் வரலாறு**" என்னும் இந்த நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. அரசாங்க ஆணைப்படி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர், தமிழ்ப் பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களைக் கொண்டு இந்த நூலை எழுதுவித்திருக்கிறார்கள். அனுபவத்திலும் மொழி அறிவிலும் சிறந்து

விளங்கும் ஆசிரியரவர்கள் ஏராளமான தகவல்களைத் தொகுத்து எளிய தூய நடையில் இந்த நூலை எழுதியிருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு இந்த நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்த நூலின் தொடக்கத்தில் சென்னை மாவட்ட அமைப்பு அதன் உட்பிரிவுகள், அவற்றின் வரலாற்றுக் குறிப்புக்கள், போக்குவரவு வசதிகள், மாவட்ட ஆட்சி ஆகிய பொதுச் செய்திகள் இனிது எழுதப் பெற்றுள்ளன.

இதனையடுத்துப் பிள்ளையார் வடிவம், கதைகள் ஆகியன பற்றி விளக்கியிருப்பது சுவையாக உள்ளது. ஆப்கானித்தானத்தில் காபூலுக்கு அருகே பிள்ளையார் திருவுருவங்கள் கிடைத்திருப்பது பற்றிய செய்தி அறிந்து இன்புறத்தக்கது.

இந்நூலில் திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர்ச் சிவன் கோவில்களையும், திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலையும் பற்றி விரிவாக ஆசிரியர் எழுதியுள்ளார்.

இவற்றினையடுத்துப் பேட்டை வரிசையாகச் சென்னையில் உள்ள பல்வேறு கோவில்களையும் பற்றி இந்நூல் எளிய இனிய நடையில் விளக்கிச் செல்கின்றது.

மாம்பலம், கோடம்பாக்கம், கூவம், அடையாறு முதலிய பெயர்க்காரணங்களை ஆசிரியர் விளக்கியிருப்பது அறிந்து சுவைக்கத்தக்கது.

மயிலாப்பூர்ப் பகுதியில் திருவள்ளுவரின் கடவுட் கொள்கையினைப் பற்றி ஆசிரியர் விளக்கியிருப்பது, இந்நூலுக்குச் சுவையும் சிறப்பும் பயக்கின்றது.

1-11-1963.

எம். பக்தவத்சலம்

அணிந்துரை

மதிப்பிற்குரிய தமிழ்ப் பெரும்புலவர், நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்கள், எம்.ஏ., ஐ.சி.எசு., உயர்நீதி மன்றம், சென்னை.

1. "தரும மிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தல மோங்கு கந்தவேளே" என்பது திருவருட் பிரகாச வள்ளலா ரெனும் இராமலிங்க அடிகளின் திருவாக்கு. கோட்டம்—கோவில். 'இந்தத் திருக்கோவில் யாது? இதன் வரலாறு என்ன?' என்ற பல கேள்விகள் சென்னை வாழும் மக்களுள் ளும் சென்னைப் பள்ளிகளிற் பயிலும் சிறுவருள்ளும் எழுவது இயல்பாகும். இத்தகைய ஐயங்கள் யாவையும் தீர்க்கக்கூடிய அரிய நூல் "சென்னை மாவட்டக் கோவில் வரலாறு" என்று வெளிப் போந்த இதுவாகும். இதை இயற்றிய என் நண்பர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சர் திரு. டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சென்னைத் திருக்கோவில் வரலாற்றைச் சார்ந்த பல அரிய செய்திகளை நுட்ப ஆராய்ச்சியின் பயனாகத் திரட்டிக் கல்வெட்டுக்கள், கோவிற் புராணங்கள், இலக்கிய மரபு போன்ற மூலங்களைத் துருவி, இந்நூலை எளிய நடையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

2. இதில் பாமரர் மட்டுமன்றிப் பண்டிதரும் அறிந்து மகிழக்கூடிய அரிய செய்திகள் புதைந்துள்ளன. ஆப்கானித் தான் நாட்டில் பிள்ளையார் வழிபாட்டுச் சின்னங்கள் கிடைத் தவை விவரிக்கும் பகுதி அத்தகைய சான்றாகும். திருவொற்றி யூரைக் குறித்தும் அத்தலத்தில் வாழ்ந்த பெரியாரைக் குறித் தும் அமைந்த விரிவுரை சில புதிய அரிய செய்திகள் அடங் கியதாகும். அவ்வாறே மயிலையில் எழுந்த திருக்கோவிலின்

ஆதி வடிவத்தைக் குறித்தும், அக் கோவிலுக்கும் கடலுக்கு முள்ள அண்மையைக் குறித்தும் ஆசிரியர் தந்துள்ள விளக்க வுரையும் காண்க.

3. கோடம்பாக்கத்துள் எழுந்தருளிய வடபழநி ஆண்டவர் திருக்கோவில் வரலாற்றைப் பலரும் படித்து இன்புறுவர் என்பது திண்ணம். பல புராணக் கதைகள் இந் நூலின்கண் புகுந்துள்ளன. ஆனால், அவைகளைப் பகுத்தறிவுச் சோதனை யின்றி இவ் வாசிரியர் ஒப்பவில்லை. 'பிள்ளையாருக்கு யானை முகம் அமைந்த வரலாற்றைச் சார்ந்த குறிப்பு இவர் தொன்று தொட்டு வழங்கும் செய்திகள் யாவற்றையும் அப் பண்பினால் மட்டும் ஆய்ந்தறியாமல் ஏற்கவில்லை, என்பதற்குச் சான்றாகும்.

4. வழிபடு தெய்வங்களைக் குறித்த புராணக் கதைகள் பல உருவகப் பண்பு (**Symbolism**) அமைந்தவையாகும் ; ஆறு முகங்கள் கொண்ட தெய்வம், உலக மாயை வடிவான மயில், ஞான வடிவான வேலாயுதம், இச்சா ஆற்றல் சத்தி வடிவங் களான வள்ளி, தெய்வயானை அம்மையார் இவை உட்கிடை யான அரிய உண்மைகளை விளக்குவன.

இவை மக்களுள் எளிதில் விரியும் பொருட்டே, சான்றோர் இவைகளை உருவக அணிகள் மூலம் கதைகளாக வழிபாட்டு எளிமையின் பொருட்டு வழங்கியுள்ளனர். இந்த நோக்கத் துடன் இந்நூல் பயில்வதால், அரும்பயன் பயக்குமென்பது உறுதி.

மா. அனந்தநாராயணன்,
18-10-1963.

அணிந்துரை

உயர்திருவாளர் அ. உத்தண்டராமபிள்ளை,

எம்.ஏ., பி.எல்., ஐ.ஏ.எசு., அவர்கள்,

(முன்நாள் ஆணையர், அறநிலையத் துறை).

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று" —ஔவையார்.

" நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும்
தேடித் திரிந்து சிவபெருமா னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோவிலாக் கொள்வனே"—திருமூலர்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறைவனை மக்கள் வழிபட்டுய்யும் வண்ணம் உலகத்திலுள்ள எல்லா மதத்தினரும் திருக்கோவில்கள் அமைத்துள்ளனர். நம் நாட்டில் எல்லா நகரங்களிலும் எல்லா ஊர்களிலும் எல்லாக் கிராமங்களிலும் திருக்கோவில்கள் உள்ளன. நம் நாகரிகமே திருக்கோவில் நாகரிகம் தானே! 'கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்', " திருக்கோவிலில்லாத திருவிலூரெல்லாம் ஊரல்ல அடவி காடே" என்று கருதினர் நம் முன்னோர்.

பாடல் பெற்ற சிவத் தலங்கள், ஆழ்வார்கள் மங்களா சாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகள், திருப்புகழ் பெற்ற முருகப் பெருமான் படைவீடுகள் தனிச் சிறப்பு வாய்ந்தன. புகழ்பெற்ற அம்மன் கோவில்களும், விநாயகர் கோவில்களும், அடியார் கோவில்களும் ஏராளமானவை நாடெங்கும் பரவியுள்ளன. தலயாத்திரை செய்ய விரும்பும் அன்பர்களுக்குப் பயன் படும் முறையில், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனி நூல்கள் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இப் பணியைச் செய்ய முனவந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாருக்கு அனுமதியும் கொடுத்த விவரம் முதன்முதலாக வெளியிடப் பெற்றுள்ள " திருநெல்வேலி மாவட்டக் கோவில் வரலாறு" என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளது.

இப்போது இரண்டாவது நூலாகச் "சென்னை மாவட்டக் கோவில் வரலாறு" வெளியிடப்பெறுகின்றது. முன்பு வெளியான நூலில் விநாயகர் கோவில்கள், சிவன் கோவில்கள், பெருமாள் கோவில்கள், முருகன் கோவில்கள், அம்மன் கோவில்கள் என்பன தனித் தொகுதிகளாக விளக்கப் பட்டுள்ளன. தலயாத்திரை செய்பவர்களுக்கு ஒவ்வொரு பகுதியிலுள்ள எல்லாக் கோவில்களையும் பற்றிய விளக்கங்கள் ஒருங்கே அமைக்கப் பெற்றால் பெரிதும் பயன்படும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பெற்றது. இக்கருத்துக்கிணங்க ஒரு சில பாடல் பெற்ற கோவில்களைத் தவிர மற்றெல்லாக் கோவில் களின் வரலாறுகளும் இவ்வெளியீட்டில் ஒவ்வொரு பகுதி யிலும் ஒருங்கே அமைக்கப்பெற்றுள்ளன.

இந்நூல் மக்களுக்குப் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. விநாயகர் பற்றியும், சுந்தரமூர்த்தி நாயனர், திருவள்ளுவர் பற்றியும் விரிவான விளக்கங்கள் தரப்பெற் றுள்ளன. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் செயலாளர் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பல இடங்களுக் கும் நேரிற் சென்று வரலாறுகளைச் சேகரித்து ஒவ்வொரு திருக்கோவிலைப் பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார்கள். அவர்களுக்கும், சங்கத்துக்கும், அர சாங்கத்துக்கும் சமைய உலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று இனிது நிறைவு பெற இறைவன் இன்னருள் புரிக.

'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்,'

—அப்பர்,

"உயர் கருணை புரியு மின்பக் கடல் மூழ்கி
உனை எனது ளறியுமன்பைத் தருவாயே,"

—அருணகிரியார்,

அ. உத்தண்டராமன்.
21-10-1963,

நூன்முகம்

தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவில்களைப் பற்றிய வரலாறுகளை மாவட்டவரிசையாக எழுதி வெளியிடுவது இன்றியமையாதது என்பதை உணர்ந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அறநிலையங்களின் ஆணையராக இருந்த உயர் திருவாளர் அ. உத்தண்டராம பிள்ளையவர்களுடன் கலந்து பேசி 21—10—1960-ல் விளக்கமான திட்டம் வகுத்து அதனை அவர்களுக்கு அனுப்பியது. அதனை அவர்கள் நன்கு ஆய்ந்து 17—11—1960 (R.C. எண் 35907/60-A-2)-ல் அரசாங்கத்துக்கு அனுப்பினார்கள். அரசாங்கம் அதனைச் சீர்தூக்கிப் பார்த்துத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு "ரூபா 24,000-ம் செலவில் மாவட்டவரிசையாகத் தமிழ் நாட்டுக் கோவில் வரலாற்றினைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வழியாக ஆக்கி வெளியிடுக" என்று 6—5—1961 (G.O.Rt. எண் 544—வருவாய்த் துறை)-ல் அறநிலைய ஆணையருக்கு ஆணையனுப்பியது.

அறநிலைய ஆணையர் உயர் திருவாளர் மா. செ. சாரங்கபாணி முதலியார் அவர்கள் அதனை 16—6—1961-ல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். சங்கம் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு சங்க அமைச்சர் தமிழ்ப் பெரும் புலவர், கணியர், டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களுக்கு அப்பணியினைத் தந்து 26—7—1961-ல் (எண் 442-1992) அற நிலைய ஆணையருக்குத் தெரிவித்தது. அதனை அவர்கள் ஒப்புக்கொண்டு தமிழ் நாட்டிலுள்ள துணை ஆணையர், உதவி ஆணையர் அனைவருக்கும், "சங்க அமைச்சர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்களுக்கு மாவட்டக் கோவில் வரலாறுகள் எழுதும் பொறுப்பு வழங்கப் பெற்றிருக்கிறது; அவர்களுக்கு வேண்டும் உதவிகளெல்லாம் செய்து தருக" என்று 17—8—1961 (R.C. எண் 3507-60-A.2)-ல் சுற்றாணை

அனுப்பினார்கள். அங்ஙனமே துணை, உதவி ஆணையர் தங்கள் தங்கள் ஆளுகையிலுள்ள திருக் கோவில்களுக்கெல்லாம் ஆணையனுப்பி உதவினார்கள்.

இத்திட்டப்படி முதலாவதாக "நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு" 1962 நவம்பரில் வெளிவந்தது. இப்போது இரண்டாவதாகச் "சென்னை மாவட்டக் கோவில் வரலாறு வெளிவருகிறது."

இவ்வெளியீடுகளுக்கு உற்ற துணையாக இருந்து "முன்னுரை" வழங்கியருளிய தமிழ் நாட்டு முதலமைச்சர் மதிப்பிற்குரிய மீ. பக்தவத்சலம் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கியுள்ள நீதிபதி மதிப்பிற்குரிய மா. அனந்த நாராயணன் அவர்கள், முன் ஆணையர் உயர்திருவாளர் அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் ஆகிய இருவருக்கும், துணைபல புரியும் இன்றைய ஆணையர் உயர் திருவாளர் மா. செ. சாரங்கபாணி முதலியார் அவர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரியது. இதனை ஆர்வத்துடன் வெளியிடும் தமிழ் நாடு அரசாங்க அச்சுக்கூட அதிகாரிகளுக்கும் நன்றி கூறுகிறோம்.

10, 11—6—1934-ல் திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாட்டு அமைச்சராக இருந்து, அம் மாநாட்டின் விளைவாகத் தோன்றிய நம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சராகி முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த் தாய்ப் பணி செய்துவரும் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "நீடூழி வாழ்க" என வாழ்த்துகிறோம்.

அடுத்துத் "தஞ்சை மாவட்டக் கோவில் வரலாறு" வெளிவரும். திருவருளே துணை.

சு. வேங்கடேசுவரன்,
தலைவர்,
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

திருநெல்வேலி,
27—2—1964.

பொருளடக்கம்

பக்கம்

முகவுரை, அணிந்துரை, நூன்முகம், பொருளடக்கம் I-X

1. சென்னை மாவட்ட அமைப்பு 1

2. சென்னை வளர்ந்த வரலாறு 9

3. போக்குவரவு 13

4. சென்னை மாவட்ட ஆட்சி . .. 15

சென்னைத் திருக்கோவில்கள் 19

(அ) பிள்ளையார் வரலாறு 23

(ஆ) பாடல் பெற்ற திருக்கோவில்கள் 47

(1) *திருவொற்றியூர்—ஆதிபுரீசுவரர்* .. 47
(2) *திருமயிலாப்பூர்—கபாலீசுவரர்* 89
(3) *திருவான்மியூர்—மருந்தீசர்* 107
(4) *திருவல்லிக்கேணி—பார்த்தசாரதிப் பெருமாள்* 117

(இ) வட்டங்களின் திருக்கோவில்கள் .. 131

1. *திருமயிலாப்பூர்* 131
2. *திருவல்லிக்கேணி* 159
3. *திருவேட்டீசுவரன் பேட்டை* 162
4. *சேப்பாக்கம்* 164
5. *புதுப்பாக்கம்* 165
6. *சாம்பசார்* 165
7. *இராயப்பேட்டை* 166
8. *தேனாம்பேட்டை* 166
9. *கோட்டூர்* 167
10. *அடையாறு* 167
11. *சைதாப்பேட்டை* 168

12. மேட்டுப்பாளையம் 171
13. மாம்பலம் என்ற மாபள்ளம் 172
14. தியாகராயநகர் 175
15. நுங்கம்பாக்கம் 176
16. கோடன்பாக்கம் 178
17. எழும்பூர் 182
18. சிந்தாரத்திரிப்பேட்டை 183
19. கோமளேசுவரன்பேட்டை 187
20. அமைந்தகரை 188
21. அயனுபுரம் 192
22. கீழ்ப்பாக்கம் 193
23. சேத்துப்பட்டு 194
24. பெரியமேடு 195
25. புரசைப்பாக்கம் 196
26. குயப்பேட்டை 197
27. சூளை 197
28. பிரம்பூர் 198
29. வியாசர்பாடி 198
30. வண்ணாரப்பேட்டை 199
31. இராயபுரம் 200
32. கொருக்குப்பேட்டை 201
33. முத்தியாலுப்பேட்டை 201
34. கொத்தவாற் சந்தை 209
35. பெத்துநாயக்கன்பேட்டை 210
36. பூங்காநகர் 214
37. நேதாசி சாலை 216
38. முல்லா சாகிபு தெரு 216
39. தங்கச்சாலை 217
40. அரசியலார் மனைப்பகுதி 218

ஓம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க

சென்னை மாவட்டக் கோவில் வரலாறு

காப்பு

" ஓரோங்கு செந்தமிழ்ச் செல்வத் திருக்கோவிற்
பேரோங்கு நல்வளம் பேசியுளம்—நாரோங்கி
ஆண்டான் அருளே அடைந்து நலம்பெறவே
பூண்டேன் திருவடியாம் பூண். "

" சென்னைமா வட்டச் சிறப்போங்கு கோவில்கள்
மன்னுபுகழ் யாவும் மதித்துரைக்கப்—பொன்போலும்
பெம்மான் திருவடியே பேணி மனத்துவைத்தேன்
செம்மைத் திருவருளே சேர்பு. "

1. சென்னை மாவட்ட அமைப்பு

நிலமகளுக்குத் திருமுகம் போன்றது இந்தியநாடு; அந்த முகத்தின் நெற்றி போன்றது தமிழ்த் திருநாடு. அதில் இட்ட பொட்டுப் போன்றது சென்னைமா நகரம். இந்தியாவின் மூன்றாவது பெரிய நகரம் இது. இதன் தென் வடல் நீளம் பதினொரு மைல்; கிழமேல் அகலம் ஐந்து மைல்.

இதன் கிழக்கு எல்லை வங்காளக் குடாக்கடல்; பெருங்கடலை விட்டுத் தரையைக் குடைந்து சென்றிருப்பது குடாக்கடல்; இது வங்காள நாட்டை ஒட்டியிருத்தலினால் வங்காளக் குடாக் கடல் என்று பெயரிடப்பெற்றது; இதுவே சாகரம் என்றும் பெயர் பெறும். சகரன் என்ற பேரரசனுடைய பிள்ளைகள் அறுபதினாயிரவர்; அவர்கள் சகரர் எனப்பட்டனர். இந்திரனால் கவர்ந்து செல்லப்பட்டுக் கீழுலகில் கபில முனிவருடைய குடிசையருகே கட்டி வைக்கப்பட்

டிருந்த அரச வேள்விக் குதிரையைக் கண்டு கொணர்வதற்காகச் சகரர்களால் தோண்டப்பட்டுக் கடல் ஆயிற்று இந்த இடம்; அதனால் இது சாகரம் என்று பெயர் பெற்றது. பிற்காலப் புலவர்கள் சாகரம் என்ற சிறப்புப் பெயரைப் பொதுப் பெயராக்கிக் கடலுக்கு வழங்குவாராயினர். சென்னையின் தெற்கு எல்லையாக விளங்குவன, கிழக்கிலிருந்து மேற்காகத் திருவான்மியூரும், கனகமும், வேளாச்சேரியும், வேளாச்சேரி ஏரியும் மேற்கு எல்லையாவன; தெற்கிலிருந்து வடக்காக ஆலந்தூரும், பரங்கிமலையும், நந்தம்பாக்கமும், நேசப்பாக்கமும், கொயம்பேடும், திருமங்கலமும், வில்லிவாக்கமும், கொன்னூரும், குளத்தூரும்; வடக்கு எல்லையாக மேற்கிலிருந்து கிழக்காக மாதவரமும், எருக்கஞ்சேரியும், சாத்தன்காடு, திருவொற்றியூரும் உள்ளன.

இவை யாவும் சென்னை மாவட்டத்துடன் சேர்ந்தன போலவே விளங்குகின்றன. வட கோடியில் உள்ள திருவொற்றியூரும், தென் கோடியில் உள்ள திருவான்மியூரும் அஞ்சல் துறையினரால் சென்னை மாவட்டத்துடன் சேர்க்கப்பெற்று இயங்குகின்றன. ஆகையால் அவைகளையும் சென்னையுடன் சேர்த்தே நாம் இங்கே ஆராயப் போகின்றோம்.

சென்னை மாநகரம் பல வட்டங்களோடு கூடிய மாவட்டமாக அமைக்கப்பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் (District Collector) ஒருவருடைய ஆளுகையில் இருந்துவருகிறது. சென்னை ஒரு பெரு நகராட்சி (Corporation). அது ஐம்பது பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது; அவையாவன :—

1. புது வண்ணாரப்பேட்டை
2. இராயபுரம்
3. சிங்காரத் தோட்டம்
4. சஞ்சீவிராயன் பேட்டை
5. கொருக்குப்பேட்டை
6. வியாசர்பாடி
7. பேசின்பிரிட்சு (Basin Bridge).
8. பெத்துநாயக்கன்பேட்டை
9. ஏழுகிணறு
10. அம்மன் கோவில்
11. முத்தியாலுப்பேட்டை
12. துறைமுகம்
13. கச்சாலேசுவரர் கோவில்
14. கொத்தவாற்சாவடி
15. சௌக்கார்ப்பேட்டை
16. திரிவிலியன் பேசின் (Trevelyan Basin).
17. சூளை
18. புளியந்தோப்பு

19. பெரம்பூர் பாரக்சு (Perambur Barracks).
20. செம்பியம்
21. அயனாவரம்
22. கீழ்ப்பாக்கம்
23. புரசைப்பாக்கம்
24. குசப்பேட்டை
25. வேப்பேரி
26. பெரிய மேடு
27. இடைப்பாளையம்
28. பூங்கா நகர் (Park Town).
29. நேப்பியர்ப் பூங்கா (Napier Park).
30. சிந்தாதிரிப்பேட்டை
31. கோமளேசுவரன்பேட்டை
32. எழும்பூர்
33. ஆயிரம் விளக்கு
34. நுங்கம்பாக்கம்
35. கோடம்பாக்கம்
36. வடக்குத் தியாகராய நகர்
37. இராயப்பேட்டை
38. புதுப்பாக்கம்
39. திருவேட்டீசுவரன் பேட்டை
40. சேப்பாக்கம்
41. திருவல்லிக்கேணி
42. சாம் பசார் (Zam Bazaar).
43. மீர்சாப்பேட்டை
44. வடக்கு மயிலாப்பூர்
45. தெற்கு மயிலாப்பூர்
46. தேனாம்பேட்டை
47. தெற்குத் தியாகராயநகர்
48. சைதாப்பேட்டை
49. கிண்டி
50. அடையாறு

இந் நூலோடு கூடிய சென்னை மாவட்டப் படத்தைப் பார்த்தால் இந்த வரிசை வடக்கிலிருந்து தெற்கே வருவதைக் காணலாம். வட கோடியிலிருப்பது 1. புது வண்ணாரப்பேட்டை; அதற்குத் தெற்கே கிழக்கிலிருந்து மேற்கே வரிசையாயிருப்பன 2. இராயபுரமும், 3. சிங்காரத் தோட்டமும், 4. சஞ்சீவிராயன் பேட்டையும், 5. கொருக்குப் பேட்டையும், 6. வியாசர்பாடியும், 20. செம்பியமும்; கொருக்குப்பேட்டைக்கு நேர் தெற்கே, 7. பேசின் பிரிட்சு (Basin Bridge) இருக்கிறது. அதற்குத் தெற்கே கிழ மேலாக 11. முத்தியாலுப்பேட்டையும், 10. அம்மன் கோவிலும், 9. ஏழுகிணறும், 8. பெத்துநாயக்கன் பேட்டையும், 18. புளியந்தோப்பும், 19. பெரம்பூர் பாரக்சும் (Perambur Barracks), 21. அயனாவரமும் இருக்கின்றன. இவ் வரிசையின் கீழே தெற்கே கிழமேலாகத் 22. துறைமுகமும், 13. கச்சாலேசுவரர் கோவிலும், 14. கொத்தவாற் சாவடியும், 15. சௌக்கார்ப்பேட்டையும், 16. திரிவிலியன் பேசினும் (Trevelyan Basin), 17. சூளையும் 24. குசப்பேட்டையும், 23. புரசைப்பாக்கமும் அமைந்துள்ளன. இவ் வரிசையின் கீழே தெற்கே கிழ மேலாக 27. இடைப்பாளையமும், 26. பெரியமேடும்,

25. வேப்பேரியும், 22, கீழ்ப்பாக்கமும் உள. இடைப்பாளையத்தின் தெற்கே 28. பூங்காநகரும் (Park Town), அதற்குத் தென்மேற்கே 30. சிந்தாத்திரிப்பேட்டையும் இருக்கின்றன. சிந்தாத்திரிப்பேட்டைக்குத் தெற்கே 29. நேப்பியர்ப் பூங்காவும் (Napier Park), அதன் மேற்கே 31. கோமளேசுவரன் பேட்டையும், 32. எழும்பூரும் அமைந்துள்ளன. நேப்பியர்ப் பூங்காவின் தென்கிழக்கே 35. திருவேட்டீசுவரன் பேட்டையும், அதன் தெற்கே 40. சேப்பாக்கமும் உள. சேப்பாக்கத்தின் நெடுந்தூரத்திற்கு மேற்கே 33. ஆயிரம் விளக்கும், 34. நுங்கம் பாக்கமும் உள்ளன. சேப்பாக்கத்திற்குத் தெற்கே 41. திருவல்லிக் கேணியும், அதன் மேற்கே 42. சாம் பசாரும் (Zam Bazaar), 38. புதுப்பாக்கமும், 37. இராயப்பேட்டையும், 35. கோடடன்பாக்கமும் உள. இராயப்பேட்டையின் தென்மேற்காக 36. வடக்குத் தியாகராயநகரம் இருக்கிறது. திருவல்லிக்கேணி, சாம் பசாரின் தெற்கே 43. மீர்சாப் பேட்டையும், அதன் தெற்கே 44. வடக்கு மயிலாப்பூரும், அதன் தெற்கே 45. தெற்கு மயிலாப்பூரும் இருக்கின்றன. தெற்கு மயிலாப்பூரின் மேற்கே 46. தேனாம்பேட்டையும், அதன் மேற்கே 47. தெற்குத் தியாகராய நகரும், அதன் தென்மேற்கே 48. சைதாப்பேட்டையும், அதன் தென் மேற்கே 49. கிண்டியும், அதற்குக் கிழக்கே 50. அடையாறும் அமைந்துள்ளன.

கடற்கரையோரமாகவே வளர்ந்து பெருகியுள்ள இந்த நகரத்தின் தெற்குக்கோடியில் அடையாறு இருக்கிறது. அடையாறு என்ற பெரிய ஆறு கடலிற் புகும் இடத்தில் தோன்றியதனாலே இந்த இடம் "அடையாறு" என்று பெயர்பெற்றது. இதில் புதிதாகத் தோன்றி வளர்ந்துள்ள இடங்கள் காந்தி நகர், கஸ்தூரிபாய் நகர் என்பன. உலகப் பெரியார் காந்தியடிகள், அவருடைய திருமனைவியார் கத்தூரிபாய் ஆகிய இவர்களின் பெயர்களைப் பெற்றன இந் நகரங்கள். "குளங்களின் கழிவு நீரைப் பெற்றுத் தோன்றி மேலும் உள்ள குளங்களை நிரப்பிக் கடலை அடையாமல் அவைகளிலேயே மறையும் பல சிற்றாறுகளைப் போல அல்லாமல் கடலை அடைகிற ஆறு இது. ஆதலின் அடையாறு என்று இது பெயர் பெற்றது" என்பர் சிலர். கடலை அடைகின்ற எண்ணிறந்த ஆறுகளில் இதுவும் ஒன்றுதானே ? திருஞானசம்பந்தப் பெருமான் திருமயிலாப்பூரிலிருந்து புறப்பட்டுத் திருவான்மியூருக்குப் போகும் வழியில் அடியார்களுடன் தங்கியிருந்த இடம் இது ;

ஆதலின், இது " அடியார் " எனப் பெயரிடப் பெற்றது. அடியார் என்பது மருவி அடையார் எனப்பட்டு ஆற்றையும் குறிப்பதாகி " அடையாறு " என்று வழங்கி வருகின்றது என்பர் சமைய ஆராய்ச்சி அறிஞர்.

அடையாற்றுக்கு வடபுறமாகப் புதிதாகத் தோன்றியுள்ள நகரங்கள் மந்தைவெளிப்பாக்கம், அரசர் அண்ணாமலைப்புரம் என்பன. பருப்பொருட்டாக நோக்குமிடத்து அவைகளுக்கு வடக்கே வரிசையாக மயிலாப்பூர், இராயப்பேட்டை, திருவல்லிக்கேணி, சிந்தாத்திரிப் பேட்டை, மதராசாபுரம் என்ற சென்னைப்பட்டினம், இராயபுரம், வண்ணாரப்பேட்டை ஆகிய நகரங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளுக்கு மேற்கே தெற்கேயிருந்து வடக்காகப் பின்வரும் நகரங்கள் வரிசையாக அமைந்துள்ளன : தெற்கே சைதாப்பேட்டை, அதன் வடக்கே தேனாம்பேட்டையும், தியாகராயநகரும் ; அவைகளுக்கு வடக்கே நுங்கம்பாக்கமும், கோடம்பாக்கமும், சேத்துப்பட்டும், அமைந்த (அமிஞ்சிக்)கரையும் ; அவைகளுக்கு வடக்கே பெரியமேடு, வேப்பேரி, கீழ்ப்பாக்கமும், சேனாய் நகரும் ; அவைகளுக்கு வடக்கே சூளையும், புரசைப்பாக்கமும், அயனாவரமும் ; அவைகளுக்கு வடக்கே வியாசர்பாடியும், பெரம்பூரும் இருக்கின்றன. இவை யாவும் சிறு சிறு ஊர்களாக இருந்து வளர்ந்து பெரிய நகர்களாகி விளங்குகின்றன. மேலும், இவைகளுக்கு இடையிடையே பலப் பல சிற்றூர்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இப்போது இவைகளெல்லாம் சென்னைப்பட்டினம் அல்லது மதராசப் பட்டினம் என்ற பொதுப் பெயரால் அழைக்கப் பெறுகின்றன. சென்னப்பன் என்கிற சிற்றரசன் பெயரால் சென்னைப்பட்டினம் என்ற பெயரும், மதராசன் என்ற மீன்வணிகர் தலைவன் பெயரால் மதராசப்பட்டினம் என்ற பெயரும் அங்கே குடியேறியவரால் இடப்பட்டு அழைக்கப்பட்டன. அவை மருவி இன்று சென்னை என்றும் மதராசு என்றும் சொல்லப் பெறுகின்றன.

சென்னை என்ற மதராசு இன்று நம் தமிழ் நாட்டின் தலை நகராகத் திகழ்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டை விட்டுப் பிரிந்து போய்த் தனி நாடுகளாக இருக்கிற கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய நாடுகளுக்கும் இச் சென்னையே தலை நகராகப் பன்னெடுங்காலம் இருந்து வந்தது. மொழிவழி மாகாணங்களாகப் பிரிந்து இந்திய நாடு அமைந்து வளரவேண்டும் என்பது

உலகப் பெரியார் காந்தி அடிகளின் முடிந்த முடிவு. அங்ஙனம் பிரிந்தனவே இவை. ஆந்திரம் என்பது தெலுங்கு நாடு, மைசூர் கன்னட நாடு, கேரளம் மலையாள நாடு; தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தமிழ் மொழியுடன் வடமொழிக் கலப்பால் தோன்றியவை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கி. பி. 1640-ல் ஆங்கிலேயரால் மதராசப் பட்டினத்தில் செயிண்டு சார்ச்சுக் கோட்டை கட்டப்பட்டது; அன்று தொடங்கி வளர்ந்து இன்றுள்ள பெரிய நிலையை அடைந்துள்ளது சென்னை. இந் நகரில் பதினேழிலக்கம் (17,00,000) மக்கள் வாழ்கின்றனர். அவர்களில், நூற்றுக்கு எழுபதின்மர் (70%) தமிழர்; இருபதின்மர் (20%) தெலுங்கர்; மற்றையோர் பதின்மர் (10%). அவர்களிற் பெரும் பாலோர் சைவர்; வைணவர், சுமார்த்தர், கிருத்தவர், முகமதியர், பௌத்தர், சமணர் முதலிய பல சமையத்தினரும் இப் பெரு நகரில் வாழ்கின்றார்கள்.

சென்னை மாநகரில் மிகமிகப் பழமையான ஊர்கள் மயிலாப்பூரும் திருவல்லிக்கேணியும் தான். மயிலாப்பூரில் மிகப் புகழ் பெற்ற கபாலி நாதர் கோவிலும், திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவிலும் இருக்கின்றன. மயிலாப்பூரின் கடற்கரைப் பகுதி செயிண்ட் தோம் என்று பெயர் பெறும். செயிண்ட் (Saint) என்ற ஆங்கிலச் சொல் முனிவரை உணர்த்தும். செயிண்ட் தோமாசு என்ற கிருத்தவ முனிவர் இங்கே வந்து தங்கியிருந்தார். செயிண்ட் தோமாசு என்பதுதான் சாந் தோம் என மருவி வழங்கி வருகிறது. அடையாற்றுக்கு மேற்கில் இருப்பது கிண்டி நகரம். இதிலேதான் சென்னை நாட்டு ஆளுநர் (Governor) மாளிகை உள்ளது.

சற்றேற முப்பது சதுரமைல் பரப்பினையுடைய சென்னை மாநகரம் பற்பல வட்டங்களை உடைமையால் சென்னை மாவட்டம் என்று பெயர் பெறுகிறது என்று கூறினோம். இது 13·4° வடக்குக் குறுக்குக் கோட்டு (Latitude)-க்கும், 80·17° நெடுக்கைக் (Longitude) கோட்டுக்கும் இடையே அமைந்து பங்களூர், மங்களூர் ஆகிய பெரு நகரங்கள் இருக்கும் ஒரே குறுக்குக் கோட்டில் (Latitude) இருக்கிறது. இங்கே திசம்பர் முதல் மார்ச்சுத் தொடக்கம் வரை மழை பெய்கிறது; மார்ச்சு, எப்பிரல், மே, சூன் முற்பகுதி முடியக் கொடுவெயில்

காய்கிறது ; ஜூன் பிற்பகுதியிலிருந்து மூன்று மாதங்கள் தென்றல் வீசுகிறது. செப்டம்பர் நடுவிலிருந்து தென்மேற்குப் பருவக்காற்று மாறி வடகிழக்குப் பருவக்காற்றுல் மழை தொடங்கி அக்டோபர், நவம்பரில் பெய்கின்றது. இம் மழை ஏரிகளையும், குளங்களையும் நிரப்புகின்றது. சென்னைக்குத் தேவையானது செங்குன்றுகளின் (Red Hills) நீர்த்தேக்கம் நிரம்புவதுதான் ; ஏனெனில் அங்கிருந்துதான் சென்னைக்குக் குடிதண்ணீர் வருகிறது.

சென்னை மாவட்டத்தின் இடையில் கூவம் என்ற ஆறு ஓடி வருகிறது. அது சென்னையை இரண்டு கூறுகப் பிரிக்கிறது. கூவம் என்பது கிணறு. பிற ஆறுகளைப் போல மலையிலே தோன்றுமல் இடையிலே ஊற்று நீரில் வாழும் கிணறு போல ஆங்காங்கே ஊற்று நீர் பெற்றிருத்தலினுலே இந்த ஆறு கூவம் எனப் பெயர் பெற்றது போலும்! அடையாறு நகரின் தெற்கு எல்லையாக உள்ளது. வடக்கே ஒரு சிற்றுறு ஓடி வந்து அரசாங்க மருத்துவச்சாலைப் பக்கத்திலே கூவத்தோடு சேர்ந்தது. அதனை 'பேசில் கோக்கிரேன்' என்பவர் ஆழப் படுத்திச் சீர் செய்ததனுலே அது 'கோக்கிரேன் கால்வாய்' எனப் பெயர் பெற்றது. இந் நிகழ்ச்சி கி. பி. 1789 முதல் 1803 வரை ஆளுநராக இருந்த கிளைவு பெருமகனுர் காலத்தில் நடந்ததாதலின் இது கிளைவு கால்வாய் என்ற பெயரோடும் நெடுங்காலம் வரை வழங்கி வந்தது.

கி. பி. 1876, 1877, 1878 ஆகிய ஆண்டுகளில் ஒரு பெரிய பஞ்சம் தோன்றி மக்களைப் பசிப்பிணியில் ஆழ்த்தியது ; அதனுல் பலர் மடியவும் செய்தனர். இப் பஞ்சத்துக்கு முன்னுல் கோக்கிரேன் கால்வாய் பெருகிப் பெருகி வடக்கே கிருட்டிணு மாவட்டத்தில் உள்ள பெத்தகஞ்சம் வரை விரிந்து கிருட்டிணுப் பேராற்றிலிருந்து தெற்கே பெத்தகஞ்சம் வரை வந்த காமாமூர்க் கால்வாயுடன் கலந்து கிருட்டிணுப் பெருங்கால்வாய்களுடன் சேர்ந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாஞ் சாவடியிலிருந்து பாலாறு கடலில் விழும் இடம்வரை இருந்த தெற்குக்கரைக் கால்வாய் தென்னுர்க்காடு மாவட்டத்திலுள்ள மேற்காணம் (Mercaunam) வரை வளர்ந்தது. இந்த இரண்டு கால்வாய்களையும் ஒன்று சேர்க்கும் நோக்கத்துடன் வடக்கே கூவம் ஆற்றிலிருந்து தெற்கே அடையாறு வரை ஐந்து

மைல் நீளத்திற்குச் சென்னை மாவட்டத்திற்கு ஊடே கால்வாய் வெட்டப்பட்டது. இது இருபத்திரண்டு இலக்கம் ரூபாச் செலவில் பஞ்ச நீக்கப் பணியாக நடந்தேறியது. அக் காலத்தில் ஆளுநராக இருந்தவர் பக்கிங்காம் பெருமகனார். அவருடைய பெயரால் இப்பெரு நெடுங் கால்வாய் 'பக்கிங்காம் கால்வாய்' என்ற பெயரை அடைந்தது. இந்தக் கால்வாய் வழியாகத் தெற்கே மேற்காணத்திலிருந்து ஒருவர் தோணி ஏறிப் புறப்பட்டு வடக்கே நானூற்று அறுபத்திரண்டு மைல் தொலைவிலுள்ள காக்கிநாடாவை எளிதில் அடையலாம். இக் கால்வாய் சென்னை மாவட்டத்தில் வடகோடியிலிருந்து தென்கோடி வரை ஊடுருவிப் பாய்கின்றது.

சென்னை மாவட்டம் ஐம்பது பிரிவுகளாகப் பிரிந்திருந்தமையை 1945-ல் அரசாங்கம் வெளியிட்ட சென்னைப் படத்திறுல் மேலே கண்டோம். இப் போது அண்மையில் இப்பகுதிகளை மேலும் பெருக்கித் தனித்தனி பப்பத்துத் தொகுதிகள் கொண்ட பத்து வட்டங்களாகச் சென்னை மாவட்டம் அமைக்கப் பெற்றுள்ளது. அதனால் 1945-க்குப் பின் சென்னை மாவட்டம் எவ்வளவு விரிந்துள்ளது என்பதை நாம் ஊகித்தறியலாம். நாம் சேர்த்துள்ள படம் 1945-ல் சென்னை மாநில அரசினரால் அச்சிடப் பெற்றது. இந்தப் பத்துப் பெரு நகராட்சி வட்டங்களும் இரண்டு பெரு நகராட்சிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உலகத்திலுள்ள பெரு நகரங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து வந்த பெரியவர்கள் நம் சென்னையைப்போலப் பேரழகுடன் விளங்கும் நகரம் வேறு எதுவும் எங்கும் இல்லையென்று கூறுகின்றார்கள். சென்னைக் கடற்கரையைப்போல மிக்க வனப்புடன் விளங்கும் கடற்கரையும் உலகின் வேறெந்தப் பகுதியிலும் இல்லை. இனி, இந் நகரம் வளர்ந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கீழே கூறுவோம்.

2. சென்னை வளர்ந்த வரலாறு

மதராசப் பட்டினம் சென்னப்ப நாயக்கரால் கி. பி. 1639-ல் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பெற்றது. அந்த இடத்தில் மறு ஆண்டில் செயிண்ட் சார்ச்சுக் கோட்டை கட்டி முடிக்கப் பெற்றது. சென்னையில் அர்மீனியர்கள் (Armenians) கி. பி. 1688—1690-ல் முதல் முதலாகக் குடியேறினார்கள். 1693-ல் எழும்பூர், புரசைப் பாக்கம், திருவல்லிக்கேணி, தண்டையார்ப்பேட்டை ஆகிய நான்கு ஊர்களும் ஆங்கில அரசினரால் கைப்பற்றப்பட்டன. தண்டை—தண்டு, படை; தண்டை (படை) தங்கியதனால் தண்டையார்ப் பேட்டை என்ற பெயர் ஆயிருத்தல் கூடும். திருவொற்றியூர், நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, காட்டிவாக்கம், சாத்தன்காடு ஆகிய ஐந்து ஊர்களும் கி. பி. 1708-ல் ஆங்கிலேயர் வசம் வந்தன. ஆங்கிலேயர் எழும்பூர், புரசைப்பாக்கம், தண்டையார்ப் பேட்டை ஆகிய சிற்றூர்களின் ஆட்சியை மெய்யாகவே மேற்கொண்டு புரசைப் பாக்கத்தில் நெசவாளர்களைக் கி. பி. 1721-ல் குடியேற்றி வைத்தார்கள். 1734-ல் சிந்தாத்திரிப் பேட்டை தோன்றியது. 1742-ல் வேப்பேரி, பெரம்பூர், புதுப்பாக்கம், எர்ணாவூர், சடையன் குப்பம் என்ற சிற்றூர்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. சென்னையை ஆங்கிலேயரிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் கைப்பற்றி 1746 நவம்பர் முதல் 1749 திசம்பர் வரை மூன்றாண்டுகள் வைத்திருந்தனர். 1752 பிப்ரவரி மாதம் கோட்டையிலுள்ள வேதக் கோவிலில் (Church) கிளைவுக்குத் திருமணம் நடைபெற்றது. சென்னைப் பட்டினத்திலிருந்த பழைய நகர்க் கோவிலாகிய சென்ன மல்லீசர் என்ற சென்னப்பர் கோவிலும் சென்னகேசவப் பெருமாள் கோவிலும் 1757-ல் இடித்துத் தள்ளப்பட்டன; அவை பின் 1762-ல் மேற்கே தள்ளிப் புதுக் கோவில்லாகக் கட்டப் பெற்றுள்ளன. நவாபுக்கு 1768-ல் சேப்பாக்கத்தில் பெரிய அரண்மனையொன்று கட்டப்பட்டது. செயிண்ட் சார்ச்சுக் கோட்டை பல வகையிலும் வலுப்படுத்தப்பட்டு கி.பி. 1767—1772-ல் இப்போதுள்ள உருவத்தை அடைந்தது. சந்தைகளின் முதல் கொத்தவாலாக 1777-ல் வீரப்பெருமாள் பிள்ளை என்பவர் பதவி ஏற்றார். சென்னை அஞ்சல் நிலையமும், மருத்துவத் துறையும் 1786-ல் தொடங்கப் பெற்றன.

சென்னை விண் காட்சிச் சாலை (Observatory)-யும், மன வைத்தியச் (Lunatic) சாலையும் 1793-ல் கட்டி முடிக்கப் பெற்றன. இன்று இராசாசி மண்டபம் என்று பெயரிடப்பட்டுள்ள விருந்து மண்டபம் 1802-ல் கட்டி முடிக்கப் பெற்றது. அதனைக் கட்டியவர் 'கோல்டின் காம்' (Goldingham) என்ற வான நூல் வல்ல பொறி வல்லுநர்-இம்மண்டபம் 120 அடி நீளமும், 65 அடி அகலமும், 40 அடி உயரமும் உடையது. புதிய உயர்நீதி மன்றத்தின்மேல் விளங்கு கின்ற கலங்கரை விளக்கம் (Light house) 1842-ல் கட்டப்பெற்றது. பொதுக் கல்வித் துறை (Department of Public Instruction) 1845-லும், சென்னைப் பல்கலைக் கழகம் 1857-லும், சென்னை உயர்நீதி மன்றம் 1862-லும் தொடங்கப் பெற்று நிலவுகின்றன. பாது காப்புடைய குடிதண்ணீர் நிலையம் 1868—1872-லும், பாதாளச் சாக்கடை 1871-லும் அமைந்தன.

1874-ல்தான் பல்கலைக் கழக மண்டபம் (Senate House) கட்டப் பெற்றது. இதற்கு முன் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா ஆளுநருடைய விருந்து மண்டபத்தில் வைத்து நடைபெற்றுவந்தது. 1876-ல் சென்னைத் துறைமுகத்தின் அமைப்புத் தொடங்கப் பெற்றது. கன்னிமேரா பொது நூல் நிலையமும், பொருட்காட்சிச் சாலையின் பெருக்கமும் 1887-லும், தெருக்கள் வழியே செல்லும் மின் வண்டித் தொடர் (Tram-way) 1895-லும் தோன்றின. இன்று மின் வண்டி களுக்குப் பதிலாக அரசாங்க வாடகை நெய்யாவி வண்டிகள் நக ரெங்கும் ஓடுகின்றன.

சென்னை உயர் நீதி மன்றம் இப்போதுள்ள கட்டிடத்துக்கு வருமுன் துறைமுகத்தின் அருகே எதிர்ப்புறம் உள்ளதோர் மாளிகையில் இருந்து வந்தது. அந்த மாளிகையில்தான் இன்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் (Collector) அலுவலகம் அமைந்து விளங்குகின்றது ; அது இன்றும் பழைய உயர் நீதிமன்றம் என்றே அழைக்கப்பெறுகின்றது. கீழ்ப் பாக்கத்தில் நாட்டு வைத்தியக் கல்லூரி கோவிற்பட்டி மறைத்திருவன் விருதை சிவஞானயோகிகளுடைய முயற்சியால் அரசாங்கம் அமைத்த முகமது உசுமான் ஆய்வுக் கழகத் தின் பரிந்துரையால், 1924-ல் தொடங்கப் பெற்றது ; அது அண்மையில் மேலைநாட்டு வைத்தியக் கல்லூரியாக மாற்றப்பட்டுவிட்டது.

சிறுசிறு குடிசைகளையுடைய சிற்றூர்களாகச் சிதறியிருந்த கடற்கரைப் பகுதி இன்று சென்னைமாவட்டம் ஆகிய மாநகராட்சியின் நூறு பகுதிகளையுடைய பத்து வட்டங்களாக மாடமாளிகைகள் வானளாவி விளங்கும் பெரு நகரமாகி மிளிர்கின்றது. கடற்கரையில் இப்போது கோட்டை இருக்கும் இடம் மதராசன் என்ற மீனவர் தலைவன் ஆளுகையில் இருந்து வந்ததோடு அத் தலைவன் பெயரால் மதராசப்பட்டினம் என்ற பெயரை அடைந்திருந்தது. அதனை ஆங்கிலேயருக்கு வழங்கியவன் சென்னப்பன் என்ற நாயக்கர் மன்னன். அவனுக்கு அன்று அங்கே கோவில் கொண்டு எழுந்தருளி யிருந்த சென்னமல்லீசராகிய சென்னப்பப் பெருமான் பெயரே இடப் பெற்றது. அவன் பெயரால் சென்னப்பட்டினம் என்பது ஆயிற்று; அது சென்னமல்லீசர் பெயரே. இந் நாட்டினராகிய தமிழர் இருந்த பகுதி கருப்பு நகர் (Black Town) என வழங்கப் பட்டது; அப்பகுதி இன்று சார்சு நகர் (George Town) என்று பெயர் பெற்றிருக்கிறது.

வணிகர்களாக வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் கூட்டத் தார் (East India Company) பல சூழ்ச்சிகளாலே இந்தியா முழுமையும் தம்வசப்படுத்தி அரசாண்டு, 1856-ல் ஆங்கில அரசர் நேர் ஆட்சியில் ஒப்புவித்து விட்டனர். முதலில் இந்தியாவை விக்டோரியாப் பேரரசியாரும், அவரை அடுத்து அவர் மகன் ஏழாவது எட்வர்டும், அவரையடுத்து அவர் மகன் ஐந்தாவது சார்சு மன்னரும் அரசாண் டனர். ஆங்கிலேயர் இந்தியாவில் அரசாங்க அலுவல் பெறுபவருக்கு ஆங்கிலப் படிப்பைக் கட்டாயமாக வைத்திருந்தனர். அதனால் இந்தியா எங்கும் ஆங்கிலம் பரவிற்று. அதனால் இந்தியாவிலுள்ள பலமொழியினரும் ஆங்கிலத்தைப் பொது மொழியாக்கி அதன் வழியாக ஒன்றுபடுவாராயினர். அதனால் அந்நியர் ஆட்சியாகிய ஆங்கிலர் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்று இந்தியர் ஆட்சியை நிலை நாட்டும் பொருட்டு வழிவகுக்க ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அது தான் இந்திய நாட்டுக் காங்கிரசு (Indian National Congress). ஆண்டு தோறும் பெரு நகரங்களில் காங்கிரசு மாநாடு கூடி இந்தியர் நலத்தை ஆராய்ந்தது. அம்மாநாடு நம் சென்னை மாநகரத்தில் 1887, 1894, 1898, 1911—12, 1914, 1927-ஆகிய ஆண்டுகளிற் கூடிற்று. 1920-ல் நீதிக் கட்சி (Justice Party) சென்னை மாகாண

ஆட்சியை மேற்கொண்டது. தன்னலம், ஒற்றுமையின்மை முதலிய காரணங்களால் அது அழிந்து, ஒழிந்து, சிதைந்து போயிற்று. 1937-ல் காங்கிரசுக் கட்சி ச. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் சென்னை மாகாண ஆட்சியை மேற்கொண்டது. இரண்டாவது உலகப்போர் தொடங்கவே ஆங்கில ஆட்சியுடன் ஒத்துழையாமைக் காரணத்தால் முதன் மந்திரி இராசகோபாலாச்சாரியார் முதல் பல தலைவர்கள் சிறைவாய்ப்பட்டனர். நான்கு ஆண்டுகள் கழித்து மறுபடி காங்கிரசு நாட்டு ஆட்சியைக் கைக்கொண்டு இன்றுவரை ஆட்சி நடத்தி வருகிறது. தெலுங்கு நாட்டுப் பிரகாசமும், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், இராசபாளையம் குமாரசாமி ராசாவும், இந்திய நாட்டு ஆளுநராக (Governor-General) இருந்த இராசகோபாலாச்சாரியாரும், காமராசரும், பக்தவத்சலமும் ஆகிய இவர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக முதன் மந்திரிகளாகச் சென்னை நாட்டு ஆட்சியை நடத்தினார்கள். இப்போது பக்தவத்சலனாருடைய ஆட்சி மிக்க சிறப்புடன் நடைபெறுகின்றது. காங்கிரசின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் உலகப் பெரியார் காந்திமாமுனிவர்.

சென்னை மாநகரம் தோன்றிய முந்நூறாவது ஆண்டு விழா 1939 ஆகஃஸ்டுத்திங்கள் 4-ம் நாள் மிக்க சிறப்புடன் நடைபெற்றது.

3. போக்கு வரவு

செயின்ட் சார்ச்சுக் கோட்டையிலிருந்தே சென்னை வளர்ந்தது. அதனால் சென்னைக் கோட்டையிலிருந்து இரண்டு பெருஞ்சாலைகள் தொடங்குகின்றன. ஒன்று மலைப் பெருஞ்சாலை (Mount road); மற்றொன்று பூனமல்லிப் பெருஞ்சாலை. மலை என்பது செயிண்டு தாமசு மலை (Saint Thomas Mount), இது பரங்கிமலை என்று வழங்கப்படுகிறது. பூனமல்லி என்பது பூவிருந்தவல்லி; செந் தாமரைப் பூவில் எழுந்தருளியிருக்கும் வல்லிக்கொடி போன்ற திருமகளின் பெயரே பூவிருந்தவல்லி என்பது; அது அவ்வம்மை கோவில் கொண்டிருக்கும் ஊருக்கு ஆயிற்று. பூவிருந்தவல்லி என்பது பூந்தமல்லி என்றும் பூனமல்லி எனவும் மருவி வழங்குகின்றது.

பரங்கி மலையிலும் பூவிருந்த வல்லியிலும் ஆங்கிலச் சேனைகள் வைக்கப்பட்டிருந்தன. அவ்விடங்களை எளிதில் அடைவதற்காக மலைப் பெருஞ்சாலையும் பூந்தமல்லிப் பெருஞ்சாலையும் போடப்பெற்றன. இப் பெருஞ் சாலைகளிலிருந்து பற்பல கிளைச் சாலைகள் அமைந்து சென்னை மாவட்டம் முழுவதிலும் செல்வதோடு இந்தியா முழுவதி லும் செல்லுகின்றன. அதனால், அரசாங்க வாடகை விரைவு நெய்யாவி வண்டிகள் சென்னையிலிருந்து தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, சேலம், கோயமுத்தூர், வேலூர், இராமநாதபுரம், செங்கோட்டை, திருப்பதி, பங்களூர் முதலிய பற்பல இடங்களுக்கு நாடோறும் அடிக்கடி செல்கின்றன. இவைகளோடு தனியார் வண்டிகளும் எண்ணிறந்தன நாட்டின் வேறு பற்பல இடங்களுக்கும் விரைந்தோடு கின்றன. பொருள்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளும் (இலாரிகள்) உள்ளன.

எழும்பூரிலிருந்து புகை வண்டிகள் புறப்பட்டுத் தெற்கிலும் தென் மேற்கிலும் உள்ள நகரங்களுக்குப் பலமுறை நாடோறும் விரைந்து செல்லுகின்றன. பலப்பல இடங்களிலுள்ள விளைபொருள்கள் பற்றுக்

குறையுள்ள பகுதிகளுக்கெல்லாம் எடுத்துச் செல்லப் பெறுகின்றன ; அதனால் காசுப் பஞ்சத்தைத் தவிர உணவுப் பஞ்சம் இல்லாதொழிகின்றது. பூங்கா நகரிலுள்ள நடு நிலையத்திலிருந்து (Central Station) புகை வண்டிகள் புறப்பட்டுப் பம்பாய், கல்கத்தா, தில்லி முதலிய இந்தியப் பெரு நகரங்களுக் கெல்லாம் எளிதிற் செல்வதற்கு வாய்ப்புத் தருகின்றன. சென்னைக் கடற்கரையிலிருந்து மின் வண்டிகள் எண்ணற்றன தாம்பிரம் வரை அடிக்கடி ஓடுகின்றன. விண் வழியாகவும் சென்னை உலகப் பெரு நகரங்களோடு தொடர்பு கொண்டிருக்கிறது ; விண் ஊர்திகள் தங்கும் இடம் மீனம்பாக்கம்.

வெளியூர்களிலிருந்து சென்னையில் வந்து இறங்கும் வழிப்போக்கர்களுக்குப் புகை வண்டி நிலையத்திலேயே எல்லா வகையான வண்டிகளும் வாடகைக்குக் கிடைக்கின்றன. அவைகளில் ஏறித் தாம் தாம் விரும்புகிற இடங்களுக்கு அவர்கள் எளிதிற் போய்ச் சேரலாம் ; அவர்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் வசதியான இடங்கள் சென்னை மாநகர் எங்கும் உள.

4. சென்னை மாவட்ட ஆட்சி

சென்னை நகரம் ஐம்பது பகுதிகளாக இருந்ததை அண்மையில் நூறுபகுதிகளாகப் பிரித்துள்ளமை மேலே கூறினோம் அல்லவா? அப்பகுதிகள் மாநகராட்சிப் பகுதிகள் (Corporation Divisions). சென்னை நகரத்தைச் சென்னை மாவட்டம் என்று அரசாங்கம் அமைத்திருக்கிறது. சென்னை மாவட்ட ஆட்சி நடைபெறும் விவரம் கீழே கூறுவோம்.

மாவட்டம் என்பது பல வட்டங்களை (Taluks) உடையது; வட்ட ஆட்சித் தலைவர் தாசில்தார்; இரண்டு மூன்று வட்டங்களை ஒரு தொகுதியாக்கி அத் தொகுதிக்கு ஆட்சித் தலைவர் ஒருவர் இருக்கிறார்; அவர் துணை மாவட்ட ஆட்சித்தலைவர் (Deputy Collector) அல்லது (Sub Collector) அல்லது (Revenue Divisional Officer) என்று பெயர் பெறுவார். இவர்கள் அனைவருக்கும் தலைவரே மாவட்ட ஆட்சித் தலைவர் (District Collector). எனெனில் மாவட்டத்திலுள்ள பல துறைகளுக்கும் அவரே தலைவர். ஆனால் இன்றும் ஆங்கிலத்தில் அவர் கலெக்டர் (Collector) என்றே வழங்கப்படுகிறார். கலெக்டர் என்ற சொல்லுக்குப் பொருள் சேர்ப்பவர் என்பது; அதாவது வரிப்பணங்களைச் சேர்ப்பதே துவக்கத்தில் அவருடைய முதன்மையான கடமையாக இருந்தது; இன்று அந்நிலை மாறி அவர் எல்லாத் துறைகளுக்கும் தலைமை தாங்குவதால் ஆதியில் ஏற்பட்ட கலெக்டர் என்ற பெயர் இப்போது முற்றிலும் பொருந்தாததாக இருக்கிறது. மேலும் இன்று வரித்துறைப்பளு அவருக்கு இருப்பது பொருந்தாது என்பதை உணர்ந்த அரசாங்கம் அவருக்கு அடுத்து உதவித் தலைமையாக மாவட்ட வரித்துறைத் தலைவர் (District Revenue Officer) ஒருவரை மாவட்டங்கள் தோறும் அமைத்து ஆட்சியை நடத்துகின்றது.

சென்னை மாவட்டம் பல வட்டங்களாசப் பிரிக்கப்படாவிட்டாலும் மூன்று வட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. பதினேழு சதுர மைல் பரப்புள்ள வடசென்னை வட்டம் ஒன்றும், பதினெட்டுச் சதுரமைல் பரப்புள்ள தென் சென்னை வட்டம் ஒன்றும், இருபத்து மூன்று சதுரமைல் பரப்புள்ள கிண்டிவட்டம் ஒன்றும் ஆக மொத்தம்

ஏறத்தாழ ஐம்பத்தெட்டுச் சதுரமைல் பரப்புள்ள மூன்று பெரும் பிரிவுகளை உடையது சென்னை மாவட்டம். இதனை முன் சற்றுஏற முப்பது சதுரமைல் என்று கூறியது பல்லாண்டுகளின் முன்னைய குறிப்பு. வட சென்னையில் தண்டையார்ப் பேட்டை, சியார்ச்சு நகரம் (George Town), புரசைப்பாக்கம், பிரம்பூர் என்னும் நான்கு நகரப் பகுதிகள் அடங்கும் ; இதற்கு மூன்று வரித்தண்டலாளர்கள் (Revenue Inspectors) இருக்கிறார்கள். தென் சென்னையில் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, சிந்தாத்திரிப்பேட்டை, நுங்கம்பாக்கமும் மாம்பலமும், தியாகராயநகரம், எழும்பூர், வேப்பேரி ஆகிய ஆறு பகுதிகள் அடங்குவன ; இதற்கு நான்கு வரித்தண்டலாளர்கள் இருக்கின்றனர். இவைகளுக்குத் தனித்தனி ஒரு வட்டத் தலைவர் (தாசில்தார்) இருக்கிறார்.

கிளை வட்டமதில் அடையாறு, ஆலந்தூர், வேங்கடாபுரம், திருமங்கலம், புலியூர், அயனாவரம், செமீன் மாம்பலம் ஆகிய ஏழு பகுதிகள் அடங்குவன ; இவற்றோடு செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து பிரிந்து இதனோடு இணைக்கப்பட்டுள்ள சைதாப்பேட்டை, அடையாறு, கோட்டூர், அரும்பாக்கம், செம்பியம், அமைந்தகரை (அம்மஞ்சிக்கரை) பள்ளிப்பட்டூர், ஊரூர், வேலச்சேரி, சாளிக்கிராமம், வட அகரம், நடுவக்கரை, பிரவல்லூர், சிறுவல்லூர் முதலிய முப்பது ஊர்களும் இதில் அடங்கும் ; இதற்கு மூன்று வரித் தண்டலாளர்கள் உளர். இக்கிளைப்பகுதி க்குத் தலைவர் வட்டத்தலைவர்களைப் (தாசில்தார்) போலத் தனி உரிமையுடைய ஒரு துணை வட்டத் தலைவர் (Deputy Thasildar).

இம் மூன்று வட்டங்களுக்கும் சேர்ந்து ஒரு கருவூலம் (Treasury) இருக்கிறது ; அது துணைக் கருவூலமே (Sub Treasury). இதனை ஆளும் துணைக் கருவூல அதிகாரி சைதாப்பேட்டையிலுள்ள மாவட்டக் கருவூல அதிகாரியின் பார்வையில் அடங்கியுள்ளார். மேலே கண்ட அலுவலர் அனைவர் அலுவலகங்களெல்லாம் சென்னைக் கடற்கரையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தினுள்ளேயே தனித்தனி இடங்களில் அமைந்துள்ளன. இந்தப் பெரிய அலுவலகம் பழைய உயர் நீதி மன்றம் (Old High Court) என்று இன்றும் அழைக்கப்பட்டு இப்போதுள்ள மிகமிகப் பெரிய உயர் நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டப் பெறு முன் உயர் நீதி மன்றம் இங்கிருந்தது என்ற உண்மையை மெய்ப்பிக்கும் சான்றாகின்றது.

சென்னை மாவட்டத்தில் நஞ்சை நிலங்களே இல்லை; அவை இருந்த இடங்களும் அவைகளுக்கு நீர்ப்பாசனமாக இருந்த பெரிய பெரிய குளங்களும் இன்று தூர்க்கப்பட்டு மாடமாளிகைகளாகக் காட்சி தருகின்றன. ஆதலின் நிலவரி தண்டும் பணி சென்னை ஆட்சியாளருக்கு இல்லை. கட்டிடங்கள் கட்டப்பெற்றுள்ள இடங்களுக்கு மனைவரி (Ground Rent)யும், விடுவரி (Quit Rent) யுமே இங்கே தண்டப்படுகின்றன. இன்று இந்த இரண்டு வரிகளையும் உள்ளடக்கிக் கட்டிட மதிப்புக்கு ஏற்றபடி நூற்றுக்குக் கால் ரூபா (4 சத வீத) வரி போடப்பட வேண்டும் என்ற சட்டம் ஆட்சிக்கு வரும் நிலைமையில் இருக்கின்றது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆட்சியில் துணைபுரிய ஐந்து மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் (Deputy Collectors) இருக்கிறார்கள். அவருள் ஒருவர் வரி விதிப்பின் (Assessment) ஒரு பகுதியைக் கவனிப்பதோடு அலுவலக ஆட்சியையும் கவனிக்கும் உறுதுணைவ (Personal Assistant)ராக விளங்குகிறார்; ஒருவர் வரித் தலைகளை (Stamps)ப் பகிர்ந்து தரும் பணியுடையார்; மூன்றாமவர் சென்னை மாநகராட்சிக்குரிய பணிகளையும், நான்காமவர் வீட்டு வசதிக் கண்காணிப்பினையும், ஐந்தாமவர் தொழிலாளர் இடவசதிப் பணியினையும் உறுதுணைவருக்குத் துணையாகக் கவனித்து வருகின்றனர்.

சட்டத்தையும் ஒழுங்கையும் (Law and Order) பாதுகாக்கும் பொறுப்பு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை; அதனை மேற்கொண்டிருக்கும் அலுவலர் காவல் ஆணையர் (Police Commissioner). இங்ஙனமாகச் சென்னை மாவட்ட ஆட்சி நடைபெற்று வருகின்றது.

சென்னை மாவட்டத் திருக்கோவில்கள்

சென்னை மாவட்டத்தின் அமைப்பும், வரலாறும், போக்கு வரவும், மாவட்ட ஆட்சிமுறையும் சுருக்கமாக ஆராயப் பெற்றன. இனி, சென்னை மாவட்டத்திலுள்ள திருக்கோவில்களை ஆராய்வோம்.

உலகிலுள்ள மக்கள் அனைவரும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்று நம்புகின்றார்கள். அவனை வழிபடுவதுதான் துன்பம் நீங்கி இன்புற்று வாழும் வழி என்றும் அவர்கள் உணர்கின்றார்கள். அவனைத் தத்தம் வீடுகளிருந்து வழிபடுவதோடுகூடப் பலர் ஒன்றாகக் கூடி வழிபடுவதற்கும் கட்டிடங்கள் அமைத்திருக்கிறார்கள்; அக் கட்டிடங்களே திருக்கோவில்கள் எனப் பெயர் பெறுகின்றன.

கோவில் என்பது கோ+இல் என்னும் இரண்டு சொற்களாகப் பிரியும். கோ+இல்: இவை தம்மை உடம்படுத்துவதற்கு வகரம் உடம்படு மெய்யாகத் தோன்றிக் கோவில் என்றாகும். கோவில் என்பது சொல், அதனைக் கோயில் என்பது வகரயகரப் போலி, கோ என்ற சொல் பசு, தலைவன், ஒன்று சேர் என்று பொருள்படும்; இல் என்பது இடம், இல்லை என்று பொருள் தரும். கோ என்ற சொல்லுக்கு 'ஒன்று சேர்' என்ற பொருளை எடுத்துக்கொண்டால் நண்பர்களையும், பகைவர்களையும், ஆண்களையும், பெண்களையும், தலைவர்களையும், பணியாட்களையும், செல்வர்களையும், ஏழைமக்களையும் ஒன்றுசேர்க்கும் இடம் கோவில் என்று இது பொருள்படும். கோ என்பது பசு, அதாவது உயிர்; அது சென்று தங்கி வழிபட்டுத் தவம் புரிந்து பசுத் தன்மை நீங்கி இறைவன் திருவருளால் பதியோடு ஒன்று சேரும் இடம் என்றும் இது பொருள்படும். கோ—பசுத் தன்மை, இல்—இல்லாததாக்கும் நிலையம். யாவர்க்கும் கோவாகிய கடவுள் இருக்கும் இடம் இது என்றும் நாம் தெளியலாம்.

இவ்வளவு முதன்மையான இடம் கோவில். ஆதலின் இது எல்லா ஊர்களிலும் இருக்க வேண்டுவது இன்றியமையாதது. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று நம் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருநாவுக்கரசர் பெருமானும் தம் தனித்திருத்தாண்டகத்தில்,

"திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண் நீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே."

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். திருக்கோவில் இருப்பது தான் ஊருக்குத் திரு; திரு—செல்வம், ஆக்கம். ஊருக்கு ஆக்கம் தருவதாகிய திருக்கோவில் ஒன்றுவது இல்லாதிருக்குமானால் அது ஊர் ஆக மாட்டாது; அடவி காடே ஆகும். அடவி, காடு என்பன ஒரு பொருட் பன்மொழி. அடவி—காடு; அதாவது அது கொடிய காடு என்பதுதான். அவ்வூரில் வாழும் மக்கள் மாக்களே ஆவர். கோவில் உள்ள ஊரிற் குடியிருப்பவர் "திருவெண் நீறு அணிதல் வேண்டும்; பத்திமிக்கவராய்ப் பெருமானை நோக்கி மெய்ம் மறந்து ஆடிப் பாடுதல் வேண்டும்; அவ்வூரில் மக்கள் எளிதில் வந்து கூடி வழிபடுவதற்காகப் பல இடங்களிலும் பல கோவில்கள் அமைந் திருத்தல் வேண்டும்; விருப்பத்தோடு வெண் சங்குகளைப் பெருக்கிப் பூசனை செய்து வெண் நிறமான இடபக் கொடியினை ஏற்றுதல் வேண்டும்; அவ்வூர் மக்கள் அன்புடன் பல மலர்களைப் பறித்துப் பூசனை செய்து பின்னரே உண்ணுதல் வேண்டும்".

உலகத்திலே பலப்பல சமையங்கள் நின்று நிலவுகின்றன. அவைகளைக் கைக்கொண்டுள்ள மக்கள் அனைவரும் திருக்கோவில் வழிபாடு உடையவர்களே; திருவுருவ வழிபாடு உடைய சமையங்கள் சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம் முதலியன. "சிவ பெருமானை வழிபடுவது சைவம்; திருமாலை வழிபடுவது வைண வம்; கணபதி என்ற பிள்ளையாரை வழிபடுவது காணபத்தியம்; குமரனாகிய முருகனை வழிபடுவது கௌமாரம். ஆண்டவனுக்குத் திருவுருவம் ஏது? ஆகையால் ஒரு திருவுருவத்தில் ஆண்டவனை வழி படுவது பொருந்தாது" என்று கூறும் கிருத்தவம், முகமதியம் முதலிய சமையத்தார்களும் கோவிலைப் பெரியனவாகவும், சிறியன

வாகவும் கட்டிக்கொண்டு முறையே சிலுவையையும், பிறையையும் தம் சமைய அடையாளங்களாக வைத்து வழிபடுகின்றனர். கிருத்து நாதரைக் கடவுளுடைய பிள்ளையாகக் கொண்டு அவர் அடிபட்டு மரித்த சிலுவையைத் தங்கள் சமைய அடையாளமாகத் தாங்கிக் கிருத்தவர்கள் போற்றி வருகின்றனர். கிருத்தவர், முகமதியரது திரு விழாக்கள் மிக்க ஆடம்பரத்துடன் நடைபெறுகின்றன.

சைவம், வைணவம் ஆகிய சமையங்களும் "ஆண்டவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் வல்லவன். அவன் அருளே கண்ணகக் காணில் அல்லாமல் அவன் இப்படியன், இந்நிறத்தன், இவன் இறைவன் என்று எழுதி உருவமைத்துக் காட்டுவது இயலாது" என்று தான் கூறுகின்றன. மிக்குயர்ந்த ஞானம் பெற்றாரே இறைவனை அவன் திருவருளாற் காணுவர், உயர்ந்த ஞானம் பெறாத மக்களுக்கு இன்றியமையாதது திரு உருவ வழிபாடு; மனம் பற்று வதற்கு ஓர் குறி வேண்டும். ஆதலால் முற்றிய ஞானிகளும் கடைசி வரை ஆலய வழிபாட்டைக் கைக்கொண்டே இருப்பார்கள்.

சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம்,

"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்று கூறுகின்றது.

மேலும், சைவம் உலகப் பொதுச் சமையம்; "எந்தப் பெயரால், எந்த உருவத்தில் வழிபாடு செய்தாலும் சிவபெருமானே அங்கே அவ்வுருவில் வந்து திருவருள் புரிவான்" என்று கூறுகின்றது சைவம்.

பின் வருவது சிவஞானசித்தியார் :—

"யாதொரு தெய்வம்கொண்டீர் அத் தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் மற்று அத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையும்செய்யும்
ஆதலால் அவை இலாதான் அறிந்து அருள் செய்வன்
அன்றே".

கடவுள் " பிறவான், இறவான். " தாய் வயிற்றிற் பிறப்பவர் யாவரும் உயிரினங்களே. கடவுள் திடீர் என்று தோன்றித் தன் அடியாருடைய தொல்லையைத் துடைத்துத் திருவருள் பாலிப்பான். சிவபெருமான் பிறந்தான் என்ற செய்தி எங்கும் கேட்டிலம், திருமாலும் ' கசேந்திரன் என்ற யானைமுன் திடீரென்று தோன்றினான், நரசிங்கம் ஆனான்' என்றெல்லாம் கேட்கின்றோம். கணபதியும் திருமுருகனும் தாயார் வயிற்றிற் பிறந்தவர் அல்லர்.

தமிழ் நாட்டிலுள்ள நம்முடைய திருக்கோவில்களை ஆறுவகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. பிள்ளையார் கோவில்கள், 2 சிவன் கோவில்கள், 3. கூத்தர் கோவில்கள், 4. பெருமாள் கோவில்கள், 5. திருமுருகன் கோவில்கள், 6. பிறகோவில்கள்.

பிறகோவில்கள் என்ற தலைப்பில் சாத்தனார் கோவில்கள், அம்மன் கோவில்கள், அடியார் கோவில்கள், பிற சில்லறைக் கோவில்கள் அமையும். அகத்தியர், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முதலியோர் திருக்கோவில் பெற்ற அடியார்கள்.

சென்னை மாவட்டத்தில் அறநிலைய ஆட்சித் துறையினர் கணக்கில் வந்துள்ள திருக் கோவில்கள் இருநூற்றுத் தொண்ணூற்றேழு; இவற்றுள் பிள்ளையார் கோவில்கள் 75, சிவன் கோவில்கள் 39, கூத்தர் கோவில்கள் இரண்டு, பெருமாள் கோவில்கள் 51, சிவ விட்ணு திருக்கோவில் ஒன்று, திரு முருகன் கோவில்கள் 22, பிறகோவில்கள் 107 ஆக மொத்தம் 297. பிற கோவில்கள் என்ற தலைப்பில் வீரபத்திரர் கோவில்கள் 2, அம்மன் கோவில்கள் 81, ஆஞ்சனேயர் கோவில்கள் 10, தருமராசர் கோவில்கள் 6, அடியார் கோவில்கள் 8: ஆகமொத்தம் 107.

முதலில், பிள்ளையார் பெருமைகளை ஆராய்வோம்.

(அ.) பிள்ளையார் வரலாறு

பிள்ளையாரை அறியாத பிள்ளைகளே இரார். ஏன்? மனிதர்களில் எல்லாப் பருவத்தினரும், வாலிபர், கிழவர் அனைவரும் அவரை அறிவார்கள்; ஏனென்றால், வரும் தீமைகளை விலக்கி நன்மைகளை அருளும் பெருமான் அவர்; அதனால் அவர் விக்கின ஈசுவரர்; விக்கினம்—இடையூறு, கேடு; தம்மை நினையாதவர்களுக்கு அவர் விக்கினங்களைக் கொடுப்பார்; தம்மையே தஞ்சம் என்று அடைபவர்களுக்கு வருகிற விக்கினங்களை யெல்லாம் அவர் போக்கியருளுவார்.—

"அகரம் என அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்து அகர உகர மகரங்கள் தம்மாற்
பகரும் ஒரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்த் தெய்தப்
போற்றுநருக்கு அறக் கருணை புரிந்து அல்லார்க்கு
நிகரில்மறக் கருணை புரிந்து ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்."

(விநாயக புராணம்)

தாங்கள் நினைத்த காரியங்களெல்லாம் வெற்றியாக நிறைவேற வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் அனைவரும் அவரை வணங்கிப் பூசனை ஆற்றுவார்கள். பள்ளி மாணவர்கள் தேர்வுகளில் வெற்றி அருள வேண்டும் என்றும் வெற்றி பெற்றவுடன் இத்தனை தேங்காய்கள் விடலை போடுவோம் என்றும் நேர்ந்து கொள்கின்றார்கள். தம் பிள்ளைகள் நோய்வாய்ப்படும் போது பிள்ளையாரை நோக்கி அந் நோயை நீக்கி அருளுதல் வேண்டுமென்றும் அதற்காக இவ்வாறு பூசைசெய்வோம் என்றும் பெற்றோர் நேர்ந்து கொள்ளுகிறார்கள். வாதிகள் நேர்ந்து கொள்வது போலவே பிரதிவாதிகளும் நேர்ந்து கொள்கின்றார்கள். நல்லவர்கள், பொல்லாதவர்கள், செல்வர்கள், ஏழைகள், நோயாளிகள், மருத்துவர்கள், அனைவரும் அவரையே தஞ்சம் என்று அடைகிறார்கள். மக்கள் அனைவரும் பிள்ளையாருக்குப் பிள்ளைகள் தாமே!

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா."

இங்ஙனம் பாடுகிறார் நம் ஔவைப் பிராட்டியார். இதனால் பிள்ளையாருக்குப் பால், தேன், சர்க்கரைப் பாகு, பருப்பு இவைகள் நான்கையும் சேர்த்துக் கொழுக்கட்டையாக அவித்துப் படைத்து நம் பாட்டியார் "துங்கக் கரிமுகத்துத் தூமணியே!" என்று வழிபட்டு வந்தார் என்பது தெளிவாகின்றது. துங்கம்—தூய்மை; கரி-யானை; இதனால் யானை முகத்தை உடைய மேலான மணி போன்றவர் பிள்ளையார் என்பது விளங்குகின்றது.

யானை முகத்துடன் இருக்கும் இப்பிள்ளையார் யாவர்? இவர் யானை முகத்துடன் வந்த வரலாறென்ன? இவைகளை ஆராய்ந்து உண்மை தெரிவதற்கு விநாயகர் புராணத்தை நாம் படித்தறிதல் வேண்டும். ஒப்பற்ற அப்புராண ஆசிரியர் கவிச் சக்கரவர்த்தி கச்சியப்ப முனிவர். இவர் திருவாவடுதுறை ஆதீன குல தெய்வமாய் விளங்கும் மாபாடியம் சிவஞான முனிவரின் முதல் மாணாக்கர்.

முற்காலத்தில் கயமுகன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான்; கயம்—யானை. அவனுடைய தந்தை மாகத முனிவன்; தாய் விபுதையம்மை. மாகத முனிவன் யானை முகத்தோடு தனக்குப் பிறந்த கயமுகனுக்குத் திருவருளின் மேன்மையை ஓதிச் "சிவாய நம" என்ற ஐந்து எழுத்து மந்திரத்தின் சிறப்புகளைச் சொல்லி அவனைப் பேரறிவுடையவனாக ஆக்கி, சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் ஆற்றும்படி அனுப்பினான். கயமுகன் "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற உண்மையை உணர்ந்தவன்; ஆதலின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். பெருமான் அவன் தவம் கண்டு மகிழ்ந்து அவன்முன் தோன்றி 'அழியாத உடம்பும், மனிதர், பறவை, விலங்கு முதலியவற்றாலும், எந்த ஆயுதத்தாலும் மடிக்க முடியாத ஆற்றலும்' அவனுக்குத் தந்தருளினான்.

அழியா உடல் பெற்ற யானைமுகன் அதனாற் செருக்கடைந்து பலவகையான துன்பங்களைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் செய்து வந்தான். அவர்களுக்கும் சிவபெருமான் தந்தையாவான் அல்லவோ? அவர்கள் படும் பாட்டைக் கண்டு மனமிரங்கி யானை முகனுக்கு நல்லறிவு காட்டி அவனை ஆட்கொள்ளத் துணிந்தான் பெருமான்.

உமையம்மை பெண்யானையாகி நின்றாள்; சிவபெருமான் ஆண் யானையாகி நின்று தன்னுடைய திருவடிகளை வழிபடும் அடியார்களுடைய இடர்களைக் களைவதற்கு யானை முகத்தோடு ஒரு பிள்ளை அப்போது தோன்றுமாறு செய்தான். அங்ஙனம் தோன்றிய பிள்ளையே அனைவரும் பிள்ளையாராக வழிபடும் துங்கக் கரிமுகத்துத் தூமணி. இவ்வரலாற்றையே திருஞான சம்பந்தர் திருவலிவலம் என்ற ஊரிலே பாடியருளிய தேவாரப் பதிகத்தில் ஒரு பாட்டிற் பாடுகின்றார். அது வருமாறு:—

“ பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே. ”

அங்ஙனம் யானை முகத்துடன் வந்து தோன்றிய பிள்ளையார் சிவபெருமானைத் தவிர வேறானவர் அல்லர். கயமுகன் மனிதராலும் விலங்காலும் மடிதல் கூடாது என்று வரம் பெற்றிருந்தவன்; அதனாலேயே அவனை மடித்தற்காகச் சிவபெருமான் விலங்காகிய யானை முகத்துடனும் மனித உடலுடனும் கூடிய விலங்கும் மனிதனும் சேர்ந்த ஓர் புது வடிவத்துடன் தோன்றி நின்றான். அப்போது பிள்ளையார் திருமுன்பு கயமுகன் தோன்றினான். எந்த ஆயுதத்தாலும் அவன் வெல்ல முடியாதவன் அல்லவா? அதனால் அவர் தமது வலது கொம்பை முறித்து அவன் மேல் எறிந்தார். அதனால் அவன் உடம்பு இரு கூறாகப் பிளக்கப்பட்டு இரத்த வெள்ளம் பீறிட்டுப் பெருகி அக்காடெங்கும் பரந்தது. உடல் பிளக்கப்பட்டாலும் அழியாத உடலை வரமாகப் பெற்ற பெரியவன் அல்லவா கரிமுகன்? அவன் உடனே பெருச்சாளி உருவெடுத்துப் பிள்ளையாரைத் தாக்க ஓடி வந்தான். பிள்ளையார் தம் அருட் கண்ணால் அவனைப் பார்த்தார். உடனே தன்னிலை அடைந்தான்

கயமுகன் ; அவரைப் பலவாறு போற்றினன். பிள்ளையார் அவனைத் தம் ஊர்த்தியாக ஏற்றுக்கொண்டார். இங்ஙனமாகக் கயமுகன் தன் யானைமுக உரு அழிந்து பெருச்சாளி உருவுடன் பிள்ளைப் பெருமானைத் தாங்கும் பெரும் பேறு பெற்றான்.

கயமுகனுடைய நெஞ்சு பிளந்து பீறிட்டுச் செந்நிறமான இரத்த வெள்ளம் பெருகியதனால் அக்காடு செங்காடாயிற்று. அங்கே பிள்ளையார் கயமுகனைக் கொன்ற பாவம் தீரச் சிவலிங்கப் பெருமானை நிலைபெறுத்திப் பூசனை புரிந்தார். இங்ஙனம் கணபதியினாலே நிலை பெறுத்தப் பெற்றமையால் அங்கே சிவலிங்கப் பெருமான் ‘ கணபதி ஈச்சுவரன் ’ என்று பெயர் பெற்றான். அந்தத் திருக்கோவில் கணபதி ஈச்சுவரம் என்ற திருப் பெயரோடு இன்றும் திகழ்ந்து வருகின்றது. அந்தச் செங்காட்டில் திருக் கோவிலின் அருகே மக்கள் குடியேறினார்கள் ; அந்த ஊர்தான் திருச்செங்காட்டங்குடி.

கணபதி என்பது பிள்ளையாருக்கு ஓர் பெயர். அது பசுபதி என்ற பெயரோடும் பொருந்தும்; பசு—உயிர், பதி—தலைவன்; அவனே சிவபெருமான். பசுபதி உயிர்கள் அனைத்திற்கும் தலைவன். அதைப் போலவே கணம் என்பது உயிர்களின் தொகுதி ; பதி—தலைவன் ; பசுபதியைப் போலவே கணபதியும் உயிர்களுக்குத் தலைவன் என்று தான் பொருள்படுகிறது. ஆதலின் கணபதிதான் பசுபதி ; பசுபதி தான் கணபதி. சிவபெருமானும் அவனுக்கு மூத்த மகன் எனக் கருதப்பெறும் பிள்ளையாரும் ஒருவரே என்பது இதனால் வெள்ளிடை மலை போல் விளங்குகின்றது. இடையூறுகள் அனைத்தையும் துடைத்து ஆட்கொள்ளும் அருட்கடலாகிய பிள்ளைப் பெருமானுடைய திருவுருவங்களை ஆராய்வோம்.

சிவபூசை செய்கிறவர்கள் சிவலிங்கப் பெருமானுடைய திரு மேனியை மிக எளிதாக அமைக்கிறார்கள். சந்தனத்தாலோ, மணலாலோ, திருநீற்றாலோ, அன்றி மண்ணாலோ சிவலிங்கம் கணப் பொழுதில் அமைக்கப் பெறுகிறது. அதனால், அவ்விலிங்கம் கணிகலிங்கம் எனவும், அப்பூசனை கணிகலிங்க பூசனை என்றும் பெயர் பெறுகின்றன. கணம் என்பது கண்மூடி விழிக்கும் நேரம் ; அதுவே கணிகம் என்றும் கூறப்படுகிறது. அதைப் போலவே பிள்ளைப் பெருமான் திருவுருவமும் மிக எளிதில் அமைக்கப் பெறுகிறது.

மண்ணினாலோ, சாணத்தினாலோ பிடித்து வைக்கப் பெறும் சிவலிங்க உருவமே பிள்ளையார் திருவுருவம் ; அதனை மஞ்சளாலும் பணக்காரர் பிடித்து வைக்கிறார்கள். இவரைப் பூசிப்பதற்கு அறுகம் புல்லே எல்லாவற்றிலும் சிறந்ததாகத் தேவைப்படுகிறது.

இவர் எங்கும் நிறைந்த பரம்பொருள்; ஆதலால் இவர் எல்லா இடங்களிலும் முதற்கண் வழிபடப் பெறுகிறார். வீடுகளில் நடைபெறும் திருமணம் முதலிய நன்மைகளுக்கும் இவர் திருமேனி திருவிளக்கின்முன் அருகே அமைக்கப் பெற்று வழிபடப்பெறுகிறது. சுடுகாட்டில் நடக்கிற பிணச் சடங்குகளுக்கும் இவர் திருவுருவ வழிபாடு இன்றியமையாததாகின்றது.

" மந்திரம் பொய்யானால் சாணிப் பிள்ளையாரைப் பார் " என்று ஓர் பழமொழி வழங்குவதை நாம் அறிவோம் ; கைபடாமல் ஓரிடத்திற் கிடக்கும் சாணிகூடப் புழுத்துப்போகிறது ; ஆனால் கையினாற் பிடித்து வைக்கப் பெற்ற சாணிப் பிள்ளையாரில் இருக்கும் சாணமோ எத்தனை காலமானாலும் சிறிதும் கெடாமல் இருக்கிறது கண்கூடு.

இன்று பல இலக்கக் கணக்கிற் பணம் செலவிட்டுச் செம்மைப் படுத்தப்பட்டுள்ள மதுரை மீனாட்சி சொக்கர் திருக்கோவிலிலும், திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவிலிலும், திருவொற்றியூர், திருமயிலாப்பூர், சிதம்பரம் முதலிய திருப்பதிகளிலே உள்ள திருக்கோவில்களிலும் இருக்கிற சிவலிங்கங்களெல்லாம் ஆதியில் ஏதாவது ஒரு மரத்தடியிலேதான் இருந்தன என்பதற்கு அந்தந்தத் தலங்களுக்குள்ள தல விரிச்சங்களும் தல புராணங்களும் சான்று தருகின்றன. அரசும் வேம்பும் சேர்த்து வைக்கப் பெற்றுள்ள அம் மரங்களின் அடியிலிருக்கும் பிள்ளையாரே மிகவும் சிறந்தவராகக் கருதப் பெறுகிறார். அம் மரங்கள் அவருக்கு நிழல் தருவதற்காக மட்டும் வைக்கப்பட்டவை அல்ல ; வழிபட வரும் மக்களுக்கும் அவை நிழல் தந்து ஆதரிக்கின்றன. அவை மருந்தாகவும் அவர்களுக்கு உதவுகின்றன. கதிரவன் தோன்றும் நேரத்தில் முழுகி ஒரு செம்பில் அல்லது ஒரு குடத்தில் நீர் கொண்டு சென்று அரச மரத்தடியில் உள்ள அப் பிள்ளையாரை முழுக்காட்டி ஒரு சிறு அறுகம் புல்லை அவர் முடிமேல் வைத்து அவரை அம் மரங்களோடு சுற்றிவரும் அடியார்களுக்கு உடம்பிலுள்ள நோய்களெல்லாம் பறந்தோடும்படி

அங்கே தோன்றும் காற்றே செய்துவிடுகின்றது. கருப்பைக் கோளாற்றால் கருத்தரிக்காது கலங்கும் பெண்கள் கதிரவன் தோன்றும் பொழுது வழிபடச் சென்று அம் மரத்தடியில் அக்காற்றை உட்கொள்ளும் போது கருப்பையிலுள்ள தீய புழுக்கள் அழிந்து பின் கருத்தரிக்க வழி உண்டாகிறதென்று கற்று வல்ல மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

கண்ணுக்கு விருந்தாக யானை முகத் திருவுருவம் அமைக்கப் பெறுகிறதே அல்லாமல் வேறு காரணம் பற்றியன்று. சிறுவரும் பெரியாரும், ஏழைகளும் செல்வரும், ஏனி பிச்சைக்காரர்களும் கூடத் தொட்டு முழுக் காட்டிப் பூசை செய்யும் திருமேனி ஆதலால் பிள்ளையாருடைய யானை முகம் முதலிய உறுப்புக்கள் மிக விரைவில் தேய்ந்து சிவலிங்கம் போல் ஆகிவிடுகின்றன. மூல மந்திரமாகிய ஓங்கார வடிவமே அத் திருமேனி. ஆதலின் தேய்ந்து போனாலும் ஆடிப்போனாலும் அதனையே செப்பனிட்டு ஆடாமற் பதித்து வழிபட வேண்டும் என்பது விதி.

கண்ணன் சிறு குழந்தையாக இருக்கும்போது தவழ்ந்து சென்று வெண்ணெயைத் திருடித் தின்றான் என்பது கண்ணபிரானைப்பற்றிய வரலாறு. இதனை மனத்துட் கொண்ட சிறந்த சிற்பி ஒருவன் பிள்ளை யாரைத் தவழும் உருவத்திற் கற்பித்து உருவாக்கி அதனை வேலூரைச் சேர்ந்த சலகண்டேசுவரர் கோவிலில் வைத்திருக் கின்றான். பெருச்சாளியின் மேல் நின்று பிள்ளையார் கூத்தாடுவது போல் மயிலாப்பூரில் கூத்தாடும் பிள்ளையாரை ஆக்கிக் கபாலீசுவரர் கோவிலில் வைத்திருக்கின்றான் ஓர் சிற்பி. மயிலாப்பூரில் வேறோர் இடத்தில் ஒரு சிறு தனிக் கோவிலிலே இருக்கிறது கூத்தாடும் பிள்ளை யார் திருவுருவம். தஞ்சையில் ஓர் பிள்ளையார் பெருச்சாளியின் மேல் நின்று கொண்டிருக்கிறார். திருவொற்றியூரில் ஐந்து யானை முகங்க ளோடு கூடிய ஐம்முகப் பிள்ளையார் தம்முடைய பெருச்சாளியை விட்டு விட்டுப் பத்துக் கைகளுடன் ஒரு சிங்கத்தின் மீது வீற்றிருக் கின்றார். அதில் அவருக்கு ஐந்து தலைகளும் வரிசையாக அமைந் துள்ளன. ஆனால் நான்கு திசைகளுக்கும் நான்கு முகங்களைச்சுற்றி வைத்து ஐந்தாவது முகத்தை உச்சியில் வைத்து அமைத்துள்ள வெண்கலத்தால் ஆகிய ஐம்முகப் பிள்ளையார் உருவம் ஒன்று சென்னைக் கோட்டைக் காட்சிச் சாலையில் வைக்கப்பெற்றிருக்கிறது. நான்கு

கைகளையுடைய பிள்ளையார் 'உச்சிட்டப் பிள்ளையார்' (மா கணபதி) எனப் பெயர் பெறுவார். பேரன்புடைய சிற்பி ஒருவன் பிள்ளையாரைப் பார்த்து, "பெருமானே! உம்முடைய யானை முகத்தைப் பார்க்கப் பார்க்க அடியேனுக்குக் அச்சம் உண்டாகிறது. தேவரீர் மனித முகத்தோடு அடியேனுக்குக் காட்சி அருளல்வேண்டும்." என்று அன்புடன் வேண்டிக்கொண்டான். உடனே கருணைக் கடலாகிய பிள்ளையார் அவனுக்கு மனித முகத்தோடு காட்சி அருளினார்; உடனே அச்சிற்பி அவரை அந்தத் திருக்கோலத்தில் அமைத்து "நரமுகப் பிள்ளையார்" என்று பெயர் தந்து வணங்கினான். அந்நரமுகப் பிள்ளையாரைச் சிதம்பரம் தெற்கு வீதியில் வடக்கே பார்த்த திருமுகத்துடன் இன்றும் ஒரு சிறு தனிக் கோவிலில் நாம் கண் குளிரக் கண்டு வணங்கி அருள் பெறலாம்.

ஒரு சிற்பி பிள்ளையாருக்குப் பெண் உரு அமைக்க எண்ணினான்; அங்ஙனமே அமைத்தான். தலை யானைத்தலை, கால் புலிக்கால் உடலோ அழகிய பெண் உடல்; இத்தகைய திருமேனியை மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் திருமுன்பு பெரிய திருவாயில் காவலர்கள் அருகே கீழ்புறம் எதிரில் உள்ள தூண் ஒன்றில் இன்றும் நாம் கண்டு மகிழலாம். சுசீந்திரம் தாணுமால்அயன் திருமுன்பு கும்பிட்டு அம்மையைக் கும்பிடப்போகும் வழியிலுள்ள ஓர் தூணில் நான்கு கைகளுடன் பிள்ளையார் பெண்ணுக அமர்ந்திருக்கிறார். இந்தப் பெண் உருவத்திற்கு ஆண்யானைத் தலை இல்லை; பெண்யானைத் தலையையே அமைத்து மகிழ்ந்திருக்கிறான் சிற்பி.

பிள்ளையாரை ஒரு சிங்கத்தின் மேல் ஏற்றிப் பார்த்தான் ஒரு சிற்பி என்பதை முன்னரே கண்டோம். மற்றொரு சிற்பி அவரை அன்பு கனிந்த உள்ளத்தோடு நோக்கி, "பெருமானே! நீர் பெரிய எலிமேல் வருகிறீர்; கண் குளிரக் கண்டேன், இன்புற்றேன்; அந்த எலியாக இருப்பவன் யானைமுகன்தானே! ஆதலின் தேவரீர் அடியேன் முன் யானைமேல் எழுந்தருளி வந்து காட்சி அருளுதல் வேண்டும்" என்று வேண்டி நின்றான். "வேண்டுவோர் வேண்டுவதே தந்தருளும்" கருணைக்கடலாகிய பெருமான் உடனே பேரழகுடைய யானை ஒன்றின் மேல் அமர்ந்து காட்சி அருளினார். ஒரு நொடியும் தாமதியாது அச்சிற்பி அவ்வழகிய திருமேனியை யானைமேற்

கும்பிட்டு அருள்பெற்றான். அப்பிள்ளையார் திருநெல்வேலி வட்டத்தில் புதூர் என்ற ஊரில் " ஆனைமேல் அழகிய விநாயகர் " என்ற திருப் பெயருடன் இன்றும் காட்சி அருளுகின்றார். இப்புதுமையை உடைமை யாலேதான் புதூர் எனப் பெயர் பெற்றது போலும் அவ்வூர்! இவருடைய தம்பி மயில் வாகனனாகிய முருகப் பெருமான் யானைமேல் ஏறித் திருச்செந்தூருக்கு எழுந்தருளி வந்தமையை நாம் திரு முருகாற்றுப்படையிற் படித்து இன்புறலாம்.

திருக் கோகர்ணம்

கோ கர்ணம் என்பது 'பசுவின் காது' என்று பொருள்படும். கோ—பசு; கர்ணம்—காது; பசுவின் காதுபோல வளைந்துபோன சிவலிங்கத்தையுடைய திருக்கோவில் உள்ள ஊர் கோ கர்ணம் என்பது. இது பம்பாய் மாநிலத்தில் உள்ள பாடல் பெற்ற தலம், 'இவ்வூரிலுள்ள சிவலிங்கம் ஏன் பசுவின் காது போலாயிற்று?' என்பதை ஆராய்வோம்.

இலங்கை மாநகரிலிருந்து எல்லா உலகங்களையும் ஆண்டு கொண் டிருந்தான் இராவணேசுவரன். அவன் பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் உடையவன்; சைவ சமய ஆசிரியர்களாலே தேவாரத் திற் புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணியன்; சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருக்கயிலாய மலையைத் தன் இருபது தோள்களினால் தூக்கிய பேராற்றல் படைத்தவன். அவனுக்கு அருட்கடலாகிய சிவபெருமான் பற்பல வரங்களை அருளி மகிழ்ந்தான்; பெருமான் அவனுக்கு மூக்கோடி வாழ்நாளை அருளினான். அதனால் அவன் தேவாரத்தில் " முக்கோடி வாழ்நாளது உடையானை " என்று புகழப் பெறுகிறான். முக்கோடி என்பது மூன்று கோடி; அது வாழ்நாளை உணர்த்துகின்றமையால், 'மூன்று கோடி ஆண்டுகள் அவன் வாழ்ந்தான்' என்று சிலர் கருதுகின்றனர். இக்கருத்துத் தவறு என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிவு. இதன் உண்மை இது எனக் கூறுவோம். கோடி என்பது புதுமை; ஒருவன் தன் வாழ் நாளில் மனைவி ஒருத்தியை அடைந்து திருமணம் செய்து கொள்வது முதற் புதுமை; அறுபதாவது 'ஆண்டு நிறைவு விழாவில் தன்

மனைவிக்கு மறுமுறை திருநாண்பூட்டி இரண்டாவது புதுமையைக் காண்கின்றான்; இதனைச் சாதாரணர் ' சட்டி அப்தப் பூர்த்தி ' என்று கூறுகின்றனர். மூன்றாவது கோடி அவன் நூறாண்டு நிறைந்து தன் மனையாளுடன் வாழ்க்கை தொடங்கும்போது நிகழ்கின்றது. இங்ஙனமாக ஒவ்வொருவருக்கும் வாழ்நாளில் மூன்று கோடிகள் நிகழ்தல் கூடும். அதனால் முக்கோடி வாழ்நாள் என்பது ஒருவன் 'முழுமையும் வாழ்ந்த வாழ்நாள்' என்று பொருள்படும். இராவணேசுவரன் முக்கோடி வாழ்நாளும் வாழ்ந்தான். " நிரம்பிய வாழ்நாள் பெற்று நீடு வாழ்க " என இவனைச் சிவபெருமான் வாழ்த்தினான் என்பதே முக்கோடி வாழ்நாள் அருளினான் என்பதன் உண்மை. திருவருளிற் பழுத்த தவப்பெருமாட்டி மண்டோதரி அம்மையின் கணவனாவான் இராவணேசுவரன். மணிவாசகப் பெருமான் இவ்வம்மையின் புகழைத் தம் திருவாசகத்திற் பின் வருமாறு புகழ்கின்றார்:—

" ஏர்தரும் ஏழுலகு ஏத்த எவ்வுருவும் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென் இலங்கை அழகமர் மண்டோதரிக்குப்
பேரருள் இன்பம்அளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென் பாண்டி நாடனைக் கூவாய்."

(குயிற்பத்து—2).

இராவணேசுவரன் ஒருநாள் திருக்கயிலைக்குச் சென்று இலங்கை மாநகரம் அழியாமல் இருப்பதற்குச் சிவபெருமானை வணங்கி ஒரு சிவலிங்கத்தைப் பெற்று இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்தான். அந்த இலிங்கம் இலங்கையைச் சேர்ந்தால் அத்தீவுக்கு அழிவே கிடையாது. இதனால், ' அவன் அதனை இலங்கைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்குமுன் தடைசெய்தல் வேண்டும் ' என்று விண்ணவர் பிள்ளைப் பெருமானை வேண்டிக் கொண்டனர். அவ் வேண்டுதலுக்கு இரங்கிய பிள்ளையார் ஒரு சிறுபிள்ளை ஆகி அவன் முன் வந்து நின்றார். அவன் அந்த இலிங்கத்தை அச் சிறுபிள்ளையின் கையிற் கொடுத்துத் தன் மாலைக் கடனை முடித்து வரும் வரை அதனைக் கீழே வைக்காமல் தாங்கி நிற்குமாறு வேண்டிக் கொண்டான். அவர் அவனைப்பார்த்துத் தான் அதனைத் தூக்க முடியாத நிலை வரும்பொழுது அவனை மூன்று முறை அழைப்பதாகவும், அதற்குள் அவன் வந்து வாங்காமற் போனால் அதனைக் கீழே வைத்து விடுவதாகவும் கூறினார். சிறிது

நேரத்தில் அந்நிலை வந்ததாக அவர் அவனை மும்முறை கூவி அழைத்தார்; அவன் வரவில்லை; அவர் உடனே அதனைக் கீழே வைத்து விட்டார். இராவணன் ஓடோடி வந்து அதனைத் தூக்கிப் பார்த்தான். சிவலிங்கம் பசுவின் காது போல வளைந்துவிட்டதே தவிர அவனால் அதைப் பிடுங்கி எடுப்பது இயலாததாயிற்று. அதுவே கோ கர்ணலிங்கம். அதனையுடைய அவ்வூர்தான் கோ கர்ணம். உடனே கடுஞ்சினம் கொண்ட இராவணன் பிள்ளைப் பெருமான் தலையில் ஓங்கிக் குட்டினான். அதனால் அவர் சினம் கொண்டவர் போலக் கிளர்ந்து எழுந்து அவனைத் தம் துதிக்கையால் தூக்கி விண்ணில் எறிந்து பந்தாடத் தொடங்கினார். பின் அவன் ' அவரை அறிந்து பணிந்தான். அதனால் அவர் இராவணனுடைய முயற்சிக்கு விக்கினம் செய்தும் உலகத்திற்கு வர இருந்த விக்கினத்தை நீக்கியும் அந்த இலிங்கத்தை உலகவர் அனைவரும் வழிபட்டு நன்னிலை அடையுமாறு திருவருள் பாலித்து விக்கினேசுவரர் என்ற தம் பெயரை உலகத்திற்கு நிலை நாட்டிக் காட்டியருளினார். இராவணேசுவரன் தன் தலையிலே குட்டிக்கொண்டு தோப்பணமும் போட்டுப் பிள்ளையாருடைய திருவருளைப் பெற்று இலங்கைக்குச் சென்றான்.

காவிரியாறு

சூரபதுமனுக்கு அஞ்சி இந்திரன் இந்திராணியுடன் சீர்காழியை அடைந்து அதனைச் சார்ந்த காட்டில் ஒளிந்து சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்திருந்தான்; மழையில்லாமற் பூச்செடிகள் வாடி வதங்கின. அவன் பிள்ளையாரை வேண்டிக் கொள்ள அவர் மனம் இரங்கி அப்போது அங்கே பூசனை செய்திருந்த அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் ஒரு காக்கை யாகி ஏறிக் கவிழ்த்தார். அதிலிருந்து காஏறி ஆறு தொடங்கி இந்திரனுடைய கவலையை அகற்றியது. காவேறி ஆறு என்பதுதான் காவேரி என்றும், காவிரி எனவும் மருவி வழங்குகின்றது. பிற்காலத்தார் சிலர் காவிரி என்பது இருபுறமும் சோலைகள் விரிந்து வளரச் செய்து இப்பெயர் பெற்றது அந்த ஆறு என்று கூறி வருகின்றனர். கா—சோலை, விரி—விரிந்திருப்பது. தம் கமண்டலத்தைக் கவிழ்த்தவர் பிள்ளையார் என்பதை உணர்ந்த அகத்தியர் அவரை வணங்கி நின்று அருள் பெற்றார்.

வள்ளி திருமணம்

வள்ளியம்மையார் கிழ உருவில் இருந்த முருகப்பெருமானை மணக்க இசையாதிருந்த போது பிள்ளையார் மதயானையாகி அவ்வம்மையை அச்சுறுத்தித் தம்பியாரைத் தழுவித் திருமணம் செய்துகொள்ளச் செய்தார். இங்ஙனமே சூரபதுமன் சண்டையில் மடிந்த வீரர்களை மாயா தேவியாகிய அவன் தாயார் எழுப்பி, எழுப்பி விட்டபோது பிள்ளைப் பெருமானே அதனைத் தடுத்துச் சூரபதுமனை வெல்லுமாறு தம் தம்பியாருக்குத் துணை புரிந்து உதவினார்.

சென்னையிற் பிள்ளையார்

சென்னை மாவட்டத்தில் ஏறத்தாழ எழுபத்தைந்து பிள்ளையார் கோவில்கள் இருக்கின்றன என்று கூறினோம். இவை அறநிலையத் துறையாருடைய கணக்கில் வந்தன ; கணக்கில் வராத பிள்ளையார் கோவில்கள் எண்ணற்றன. அவை நீங்கலாகச் சிவன் கோவில்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது இரண்டு மூன்று பிள்ளையார் கோவில்கள் இருக்கின்றன. பெருமாள் கோவில்களிலும் தும்பிக்கை ஆழ்வார் என்ற பெயரோடு பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார்.

சென்னையிலுள்ள பிள்ளையார்கள் பலப்பல பெயர்களால் அழைக்கப் பெறுகின்றார்கள். அவர்களுள் சத்தி விநாயகர், சித்தி விநாயகர், சித்தி கணேசர், வரசித்தி விநாயகர், வனசித்தி விநாயகர், சித்தி புத்தி விநாயகர் என்பவர் ஒரு தொகுதியினர்; பிள்ளையார் எல்லாச் சத்திகளையும் உடையவர், சித்திகளையெல்லாம் வரமாக அருளுபவர். சித்திகள் கைகூடுவதற்குப் புத்தி வேண்டும். புத்தியைத் தந்து வழி காட்டி அடியார்களுக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட காரியங்களெல்லாம் சித்தியாகச் செய்கின்றார் பிள்ளைப்பெருமான். சித்தி புத்தி கற்பக விநாயகர் என்ற பெயர்களால் அவர் கேட்டவற்றையெல்லாம் கை கூட்டுவிக்கும் கற்பகமரம் போல விளங்குபவர் என்பது தெளிவாகிறது. அரசடிக் கற்பக விநாயகர், மாவடி விநாயகர், வேம்படி விநாயகர் என்பன அவர் எழுந்தருளியிருக்கும் மரங்களைக்கொண்டு அமைந்த பெயர்கள்.

கோவில்களைக் கட்டிய பெரியார்கள் வைத்த பெயர்களே இப்பெயர் கள்; பால விநாயகர், சுந்தர விநாயகர், சிவசுந்தர விநாயகர், செல்வ விநாயகர், செல்வப் பிள்ளையார், சிந்தாமணி விநாயகர், இரத்தின விநாயகர், முத்து விநாயகர், பிரசன்ன விநாயகர், அதிபதி பிரசன்ன விநாயகர், நாட்டுப் பிள்ளையார், நாட்டுச் செல்வ விநாயகர், தில்லை விநாயகர், தரும விநாயகர், சேர்வை விநாயகர், கூத்தாடும் பிள்ளை யார், வேத விநாயகர், வினை தீர்த்த விநாயகர், வினை தீர்த்த கற்பக விநாயகர், ஞான சோதி நிருத்தன விநாயகர், ஆதி விநாயகர், கமல விநாயகர், செங்கழுநீர்ப் பிள்ளையார், செண்பகப் பிள்ளையார், சாலைப் பிள்ளையார், பரிபூரண விநாயகர், இக்கட்டு விநாயகர் ஆகிய இப்பெயர் கள் குறிக்கும் பொருள் வெளிப்படை.

கோவில் கட்டியவர் பெயரால் அமைந்தன பின் வரும் பெயர் கள்:—சண்முக விநாயகர், மூக்கர் நல்லமுத்து விநாயகர், சிந்தாத்திரி விநாயகர்.

எல்லை காட்டும்பிள்ளையார், மாந்திரீகப் பிள்ளையார் என்பன தக்க காரணங்களால் ஏற்பட்ட பெயர்கள். வல்லவை கணபதி என்பது வல்லவையாகிய தம் மனையாளுடன் கூடிய. கணபதியைக் குறிக்கும். அதனால் 'வல்லவை மன்' என்பது பிள்ளையாருக்கு ஒரு பெயர். வல்லவையைத் தம் மடிமீது வைத்திருப்பவர்போல அவர் படங்களைச் சிலர் கற்பித்து வரைகின்றார்கள். சிற்பி ஒருவனால் பெண் உருவாக அமைக்கப்பட்ட பிள்ளையாரை மனைவியோடு கூடியிருப்பவர் என்று மற்றொரு சிற்பி உரு வகுத்திருக்கின்றான். சிற்பிகளின் கற்பனையே கற்பனை !

பிள்ளையாரைப் பற்றிய பிற வரலாறுகள்

முன் கோ கர்ணமும் காவிரியும் தோன்றிய வரலாறும், அவர் முருகப்பெருமானுக்கு வள்ளி நாயகியைத் திருமணம் செய்து வைத்த வரலாறும் கூறப் பெற்றன . வேறு சில பின்வருவன:—

1. பார்வதி தேவி ஒரு நாள் குளிக்கப் போகும் போது குளிப் பறையின் முன் ஒரு காவலாளி வேண்டும் என்று கருதி, தன்

ஞானத்தைத் திரட்டி ஒரு பிள்ளையாகப் படைத்து அதனைக் காவலாக வைத்து நீராடப் போனாள். அவ்வேளை சிவபெருமான் பார்வதியைப் பார்க்க வந்தார். இந்தக் குழந்தை அவரைத் தடுத்தது; உடனே அவர் அப்பிள்ளையின் கழுத்தை வெட்டித் தள்ளினார். அதனை அறிந்த பார்வதி ஓடிவந்து அழுதாள். அதனால் சிவபெருமான் அங்கே வெட்டிக்கிடந்த ஒரு யானைத் தலையை அப்பிள்ளை தலையில் வைத்து உயிருண்டாக்கினார். அதுவே பிள்ளையார்; யானைமுகன்."

இவ்வரலாறு விளையாட்டுப் பிள்ளைகள் சொல்லும் கதை போல இருக்கிறது. உலக நாதராகிய சிவபெருமானும் பார்வதியும் குளிப்பதும் குடும்பம் நடத்துவதுமாக இருந்தார்கள் என்பது அறிவுக்குப் பொருந்து மாறில்லை. பிள்ளையாருடைய வெட்டப்பட்ட தலை எங்கே போயிற்று? யானைத்தலை அங்கே எப்படி வந்தது? கயமுகனை அடக்குவதற்காகக் கணபதி வந்தார் என்று கூறும் திருஞான சம்பந்தர் தேவாரத்திற்கும் விநாயக புராணத்திற்கும் நேர்மாறாக இவ்வரலாறு உள்ளது.

2. ஔவைப் பிராட்டியார் முன்பு சேரமான்பெருமாள், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகியவர்களுடன் திருக்கயிலாயத்தில் தம்மையும் சேர்க்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். முறையே குதிரை மேலும் வெள்ளையானை மேலும் சென்ற சேரமானும் சுந்தரரும் கயிலை சேருமுன் பிள்ளையார் ஔவையாரைத் தம் துதிக்கையால் உயரத்தூக்கி அத்திருமலை மேற் சேர்த்தருளினார்.

3. "நான்முகன், திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் பிள்ளையாரை வழிபட்டார்கள்; அவர் அவர்களுக்குத் தம் வயிற்றி னுள்ளே எல்லா உலகங்களும் அடங்கியிருப்பதைக் காட்டினார்." என் பது புராண வரலாறு. கண்ணபிரான் வாயைத் திறக்க அவனுடைய வயிற்றினுள்ளே எல்லா உலகங்களும் அடங்கியிருப்பதை அவனுடைய தாய் யசோதைப் பிராட்டியார் கண்டு வியந்து தம்முன் இருப்பது சிறு பிள்ளையல்ல, உலகநாதன் என்பதை உணர்ந்து கொண்டார் என்னும் வரலாறு போன்றது இது.

4. ஒரு சமயம் நாரதர் சிவபெருமானிடம் ஒரு பழத்தைத் தந்து பணிந்தார். "உலகத்தை முதலிற் சுற்றி வருகிறவர்களுக்கு இப் பழம் தருவேன்" என்று சிவபெருமான் கூறினான். சூரபதுமனை அடக்கி

ஆளத் தோன்றிய முருகப் பெருமான் பிள்ளையாருக்குப் பிற்காலத்திலே தோன்றிய சிவனார் தோற்றம். முருகனும், கணபதியும் சிவனாரும் ஒருவரே. இருந்தாலும் கணபதி சிவனாருடைய மூத்த பிள்ளையார் என்றும் முருகன் இளையபிள்ளையார் என்றும் புராணம் கூறுகிறது. முருகன் தம் மயில் மேலே ஏறி உலகத்தைச் சுற்றத் தொடங்கினார். பிள்ளையாரோ, "உலகங்களெல்லாம் உம்மிடமே அடங்குமே!" என்று சொல்லிச் சிவபெருமானைச் சுற்றிவந்து பழத்தைக் கேட்டார். அவருக்கு உடனே பழம் தரப்பெற்றது. முருகப் பெருமான் உலகைச் சுற்றிவந்து சேர்ந்து "பழம்" என்று கேட்டார். அப்போது சிவபெருமான் "பழம் நீ" என்று முருகப்பெருமானை மார்புறத் தழுவினான். அந்த இடமே "பழநி" என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

உலகைச் சுற்றி வருவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சிவபெருமானைச் சுற்றி வருவது. ஏனெனில் அவனுடைய திருமேனியில் உலகங்கள் அனைத்தும் அடங்கும். மற்றொன்று விமானத்தில் ஏறிச் சுற்றி வருவது. எளிய வழிப்படி சுற்றினார் மூத்தபிள்ளையார். அவருடைய திருமேனியின் உள்ளும் உலகங்கள் அடங்கும் என்பதை மேலே கண்டோம்; 'முருகப்பெருமான் திருமேனியிலும் அவை அனைத்தும் அடங்கும்' என்ற உண்மையைச் சூரபதுமன் கண்டான், அவனுக்கு முருகப்பெருமான் பேரருளினால் தம்முடைய பெருந் திருமேனியைக் காட்டியபோது.

5. வேதவியாச முனிவர் பாரதக் கதையினைப் பாடினார். அதனைப் பிள்ளையார் கயமுகனைப் பிளக்க ஒடித்த தம் கொம்பினால் மாமேரு மலையில் அம் முனிவர் பாடப் பாட எழுதினார். இதனை அருணகிரிநாதர் பின் வருமாறு திருப்புகழிற் பாடினார் :—

"முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே."

6. முப்புரங்கள் தேவர்களுக்குத் துன்பங்கள் பலப்பல விளைத்து வந்தன. தேவர்களைப் பாதுகாக்கச் சிவபெருமான் இசைந்தான். அப்போது தேவர்கள் பெருமானுக்கு ஒரு தேரை அமைத்தார்கள். பூமியே தேர், சந்திர சூரியர் அதன் இரண்டு சக்கரங்கள், நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள், நான்முகன் தேரோட்டி, திருமால்

மால்விடையாகிய ஊர்தி, மா மேருமலை வில். இந்தத் தேரை அமைத்த தேவர்கள் துன்பம் துடைக்கும் கடவுளாகிய பிள்ளையாரை வணங்கவில்லை. எத்தொழிலைத் தொடங்கினாலும் பிள்ளையாரை முதற்கண் வணங்குவது இன்றியமையாதது. இதனை அறிவுறுத்தச் சிவபெருமான் அத்தேரில் ஏறியவுடன், அதன் அச்சு முறியுமாறு செய்தார். இது தம்மை வணங்காமல் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பெறும்படி முயன்றபோது சிவபெருமான் முதலில் ஆலகால விடம் தோன்றுமாறு செய்து அவர்களை அச்சுறுத்தியது போன்றது. அச்சு முறியுமாறு செய்து அத் தேரில் ஏறிய சிவ பெருமான் தேவர்களுடைய எண்ணத்தை அறிந்தான். "நான் தேரோட்டியாக இல்லாது போனால் இவர் எப்படித் திரிபுரங்களை எதிர்ப்பார் ?" என்று நான்முகன் எண்ணினான் ; திருமாலும் ஏனைய தேவர்களும் அங்ஙனமே எண்ணினார்கள்; அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த எண்ணிய சிவபெருமான் அவர்களுடைய சிறுமதி கண்டு நகைத்தான். உடனே எவர் துணையுமின்றி முப்புர களும் வெந்து சாம்பலாயின. இதனை மாணிக்கவாசக அடிகள் திருவாசகத்தில்,

> "தச்சு விடுத்தலும் தாம் அடி இட்டலும்
> அச்சு முறிந்தது என்று உந்தீ! பற
> அழிந்தன முப்புரம் உந்தீ ! பற."

என்று பாடினார். அருணகிரியாரும் திருப்புகழில் அச்சை முறித்த செயலைப் பிள்ளையார் மேல் ஏற்றி :—

> "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
> அச்சறப் பொடி செய்த அதிதீர "

என்று பாடினார். இது நடந்த இடமே அச்சிறுபாக்கம் என்ற ஊர்.

7. கயமுகனைப் பெருச்சாளியாக்கித் தம் ஊர்தியாக அமைத்த பிள்ளையாரை வணங்கிய தேவர்கள் "தேவரீர், எங்கள் வேண்டுதலை ஏற்றருள் செய்ய வேண்டுகிறோம். தலையில் குட்டிக்கொண்டு தோப்பணம் போடுமாறு இக்கயமுகன் எங்களைத் துன்புறுத்தினான். அவனுக்கு நாங்கள் செய்துவந்த அவ் வழிப்பாட்டைத் தாம் ஏற்றருள் செய்யவேண்டும்" என்று வேண்டி நின்றனர். பிள்ளையார் 'அங்ஙனமே ஆகுக' என்று கட்டளையிட்டார். அது முதல் பிள்ளையார்

திருமுன்பு குட்டிக்கொண்டு தோப்பணம் போடும் வழிபாட்டுமுறை அமைந்தது. இதற்கு வேறு காரணமும் கூறுகின்றனர். ஒருநாள் திருமாலின் சக்கரத்தைப் பிள்ளையார் மறைத்துவிட்டார். அதனைப் பெறுவதற்காகத் திருமால் தம்முடைய நான்கு கைகளினாலும் தம் காதுகளைப் பிடித்துக்கொண்டு அவர் முன் ஆடினார். அது கண்டு மகிழ்ந்த பிள்ளையார் சக்கரத்தைத் திருமாலிடம் தந்தருளினார். "தோர்பி" என்பது நான்கு கைகள், "கரணம்" என்பது காது; இது தோர்பிக்கரணம் என்று ஆகி மருவி உலக வழக்கில் தோப்புக் கரணம் ஆயிற்று; அது 'தோப்பணம்' என்று அகராதியில் ஏறிற்று.

பொதுவாகப் பார்த்தால் பணக்காரக் கோவில்கள் மிகச் சிலவே; பணம் குறைந்த கோவில்கள் மிகப் பல. அவைகளினும் பிள்ளையார் கோவில்களோ பொதுவாகப் பண வரவு குறைந்தனவே; ஒன்றிரண்டு நல்ல நிலையில் இருக்கின்றன. அவற்றுட் சில சென்னையில் உள்ளன; கண்டு வழிபடுவாம்.

திருவொற்றியூர்ப் பெருஞ்சாலை—சித்திவிநாயகர்

ஆதியில் இத்திருக்கோவில் இருக்கும் இடத்தில் ஓர் அரசமரம் நின்றது. அதன் அடியில் கல்லினால் நாகர் ஒன்றிருந்தது. அதன் பக்கத்தில் தேவாங்கச் செட்டியார் ஒருவர் குடியிருந்தார்; அவர் பெயர் பென்னம் கோவிந்தசாமிச் செட்டியார். அவர் கி.பி. 1925-ல் இதனைப் பெரிய பிள்ளையார் கோவிலாகக் கட்டத் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து 1946-ல் நா. முனிசாமிச் செட்டியார் என்பவர் இக் கோவிலை நல்ல முறையிற் பெரிதாக்கினார். 1958 விகாரி ஆண்டு கார்த்திகை மாதம் 28-ம் தேதி திங்கட்கிழமையன்று இதற்குக் குடமுழுக்கு நடைபெற்றது. குடத்தில் நீரை வைத்து மந்திரித்து அந்நீரைப் பெருமான் திருமுடிமேல் விட்டு முழுக்காட்டுவதுதான், குடமுழுக்கு. இது கும்பாபிடேகம் எனப் பெறுகிறது.

இத் திருக்கோவில் சற்றுப் பெரியதாகவே இருக்கிறது. பெரிய திருமதில்களை உடைய இக்கோவில் முகப்பில் வடக்கு வரிசையில்

கீழோரம் சூரியனும் அவனை அடுத்து மேற்கே வயிரவக் கடவுளும் அவருக்கும் மேற்கே மாணிக்கவாசகர் தொழுதுநிற்கச் சிவகாமி காணத் திருக்கூத்தாடும் பெருமானும் இருக்கின்றனர். தெற்கு வரிசையில் கீழோரத்தில் அனுமாரும் அவரை அடுத்து மேற்கே சமையாசிரியர் நால்வருடன் சேக்கிழார் பெருமானும், கச்சியப்ப சிவாசாரியாரும் இருக்கிறார்கள்.

கீழைத் திருவாயிலினுக்கு நேரே மேற்கே நடு நாயகமாகத் தனிக் கோவிலில் சித்தி விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். அவருக்குத் தென்புறம் உள்ளே சந்திரசேகரரும் வெளியில் தெற்கணாமூர்த்தியும் உளர். பிள்ளையாருக்குப் பின்புறம் பழைய அரச மரமும், நாகரும் இருக்கின்றன. வடக்கே உட்சுற்றில் பிள்ளையார், அருணகிரிநாதர் இவர்களுடைய எழுந்தருள் திருமேனிகள் இருக்கின்றன; வெளிப் புறம் சிவன்கோவிலிற் போலச் சண்டேசுவரர் இருக்கின்றார்.

பிள்ளையாருக்குப் பின்னால் மேற்கே கோட்டை மதிலை ஒட்டித், தெற்கேயிருந்து பின்வரும் தெய்வங்கள் இருக்கின்றனர்: தெற்கோரம் கிழக்கே பார்க்கத் திகடசக்கரப் பிள்ளையார், அவரைக் கும்பிட்டு நிற்கிறார் பட்டினத்தார். அடுத்து வடபுறம் காமாட்சியம்மை யுடன் ஏகாம்பரநாதர் இருக்கிறார். அதற்கு வடபுறம் பூதேவி, சீதேவியுடன் சீனிவாசப் பெருமாளும் அதற்கும் வடக்கே வள்ளி தேவயானையுடன் கந்தசாமியும் எழுந்தருளியுள்ளனர். இராமலிங்க அடிகள் கந்தசாமியைக் கும்பிட்டு நிற்கிறார். இதன் மேலும் இத் திருக்கோவில் வடபுறம் வளர்ந்திருக்கிறது.

வடக்குக் கோவிலில் மேலோரம் மூன்று கட்டுகள் இருக்கின்றன, அவற்றுள் தெற்கோரம் ஒன்பது கோள்கள் (நவக்கிரகங்கள்) உள. நடுப்பகுதியில் கிழக்கே பார்க்க வள்ளி தேவயானையுடன் திருமுருகன் எழுந்தருள் திருமேனியும் அவர்களைக் கும்பிட்டு வடக்கே பார்த்து அருணகிரிநாதர் திருமேனியும் உள. வடகோடியில் பொற்கலை பூரணை என்னும் மனைவிமாருடன் ஐயப்பசாமி இருக்கிறார்; இவர்களுக்கு எதிரே இருக்கிறது ஒரு சிறு கோவில். அதில் துர்க்காலட்சுமியம்மை திருவுருவும், துர்க்காலட்சுமியம்மை எழுந்தருள் திருமேனியும் இருக்கின்றன. வடகிழக்கு மூலையில் வடபழநியாண்டவர் எழுந்தருளி யிருக்கின்றார்.

வண்ணாரப்பேட்டை—பாலவிநாயகர்

வண்ணாரப்பேட்டையில் பேரம்பாலுச் செட்டித் தெருவில் பாலவிநாயகர் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அவர் முன்னால் இருப்பது பெருச்சாளி; அவருக்குப் பின்புறம் கிழக்கே பார்க்கப் பாலாம்பாளுடன், பாலேசுவரரும் அப்பகுதியின் வடபுறம் நடுநாயகமாகச் சாமுண்டீசுவரியும், அதற்கு வடபுறம் வள்ளி தேவயானையுடன் முருகப்பெருமானும் எழுந்தருளியிருக்கின்றனர். அம்மை சாமுண்டீசுவரிக்கு முன் சிங்கம், பலிபீடம், கொடிமரம் உள்ளன.

தங்கசாலைத் தெரு—இரட்டைப் பிள்ளையார்

தங்கசாலைத் தெரு வடகோடியில் மேற்கு வரிசையில் கிழக்கே பார்க்க ஒரு பிள்ளையாரும் தெற்கே பார்க்க ஒரு பிள்ளையாரும் ஆக இரண்டு பிள்ளையார்கள் ஒரே கோவிலில் இருத்தலினாலே இக் கோவில் இரட்டைப் பிள்ளையார்கோவில் என்று பெயர் பெறுகிறது.

தங்கசாலைத் தெரு—ஆதிபீடப் பிரசன்ன விநாயகர்

இத் திருக்கோவிலில் பிள்ளையாரும் அவருக்கு வடபுறம் கிழக்கே பார்க்க விசுவநாதரும் அவரருகே தெற்கே பார்க்க விசாலாட்சியம்மையும் எழுந்தருளியுள்ளனர். உள்ளே உட்சுற்றும், வெளியே வெளிச்சுற்றும் இருக்கின்றன. இப் பிள்ளையாரை இப் பக்கத்தினர் அடிபட்ட பிள்ளையார் என்கின்றனர்; ஏனோ?

தங்கசாலைத் தெரு—நாட்டுப் பிள்ளையார்

கிழக்கு வரிசையில் மேற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார் நாட்டுப் பிள்ளையார். இவர் நாட்டுச் செல்வ விநாயகர் என்னும் பெயரும் உடையவர். இவருக்கு வடபுறம் படைவீட்டு அம்மன் என்ற மாரியம்மன் வடக்கே பார்க்க இருக்கின்றாள். அவ்வம்மை திருமுன் இருக்கும் தெரு பெத்து நாயக்கன் தெரு. பிள்ளையாருக்குத் தென்புறம் மூலவர் முருகரும், எழுந்தருள் முருகரும், கூத்தாடும் சிவபெருமானும் இருக்கின்றனர்.

தங்கசாலைத் தெரு—செங்கழுநீர்ப் பிள்ளையார்

இவர் செம்படவப் பிள்ளையார் என்றும் அழைக்கப் பெறுகிறார்; செம்படவர்களுக்கு வழிபடு கடவுளாக இருந்தவர் போலும்! இக் கோவிலினுள் வள்ளி தேவயானையுடன் முருகப்பெருமானும் கோளூர் அம்மனும் இருக்கின்றனர்.

வேங்கடாசல முதலி தெரு—பிரசன்ன விநாயகர்

சென்னைப் பூக்கடைப் பக்கம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சென்னை மல்லீசுவரர் கோவிலருகே வேங்கடாசல முதலி தெருவில் பிரசன்ன விநாயகர் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். பிரசன்னம் என்பது தெளிவு, மகிழ்ச்சி. மலர்ந்த முகத்தையுடைய விநாயகர் என்று இவரை நாம் குறிப்பிடலாம். அன்றித் தம்மை வணங்கும் அடியார்களுக்குத் துன்பம் உண்டாகும்போது பிரசன்னமாகி அதாவது காட்சியருளி அவர்களுடைய துன்பத்தைத் துடைத்துப் பாதுகாத் தருளும் விநாயகர் என்றும் இவரை நாம் கூறலாம். நாயகர்—தலைவர்; பெருந்தலைவர்—விநாயகர்.

நம் பிரசன்ன விநாயகர் தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு நான்கு கைகள் இருக்கின்றன. வலது கைகள் இரண்டு. அவற்றுள் ஒரு கையில் அங்குசமும், மற்றொரு கையில் முறித்த கொம்பும் வைத்திருக்கிறார்; இடது கைகளில் ஒன்றில் பாசமும், மற்றொன்றில் மோதகமும் வைத்திருக்கிறார்.

“ பெருமதத்தின் ஒருகரத்து மாருதம் எவ்வுயிர்க்கும் உயிர்ப்பிறக்
[கங்காட்ட,
இரு கரத் (து) அங்குச பாசம் பரமதத்தினிடை வீழாதெடுப்ப,
[வீரம்
தரு கரத்து மருப்பு வினைத்துரிசறுப்ப, மோதகக்கை சைவத்
[தெய்வ
ஒரு மதத்தின் சுவை நிறைக்கும் மும்மதச் செண்பகக் களிற்றை
[உளத்துள் வைப்பாம்.”

(திருக்குற்றாலத் தல புராணம்).

அவருக்கு ஒருபுறம் சித்தியும், மற்றொருபுறம் புத்தியும் ஆகிய அவருடைய சத்திகள் எழுந்தருளியிருக்கின்றனர். பிள்ளையாருக்கு முன்னால் கொடிமரமும், பலிபீடமும், பெருச்சாளியும் வரிசையாக இருக்கின்றன. பஞ்சகூட்டம் (கோட்டம்) எனப் பெறும் ஐந்து பிள்ளையார்கள் இங்கே ஓரிடத்தில் உள்ளனர். அவர்கள் 1. பால விநாயகர், 2. நர்த்தன கணபதி, 3. சங்குசக்கர இலிங்கோற்பவ கணபதி, 4. ஐம்முகக் கணபதி, 5. வல்லபை கணபதி என்பவர்.

கிழக்கே பார்க்க விசாலாட்சியம்மையுடன் வீசுவநாதப் பெருமான் எழுந்தருளியுள்ளார். மயில் மேல் முருகன் கிழக்கே பார்க்க, ஒரு தனிக்கோவிலில் இருக்கின்றார். கோமுகியின் அருகே சண்டேசுவரர் அமர்ந்துள்ளார். கோமுகி என்பது பசுவின் முகமாய்ச் செய்யப்பட்ட நீர் விழும் வாய். நீர்—திருமுழுக்கு நீர்.

சலவைக் கல்லால் ஆகிய வலம்புரிப் பிள்ளையாரும், நான்முகனும், திருமாலும், அதிகார நந்தியும், கண்ணபிரானும், மகிடாசுரமர்த்தனி யும், சைவசமையாசிரியர் நால்வரும் ஒரு புறம் காட்சியருளுகின்றார்கள்.

இக் கோவிலிலுள்ள எழுந்தருள் மூர்த்தங்கள் பின்வருவன: சித்திபுத்திகளுடன் பிரசன்ன விநாயகர், 2. விழாக்காலங்களில் முதலிற் போகும் அவிக்கின விக்கினேசுவரர், 3. சண்டேசுவரர், 4. பள்ளியறை விநாயகர் வல்லபையுடன், 5. அத்திரகணபதி, . நர்த்தன கணபதி, மாணிக்க வாசகருடன், மார்கழி மாதம் திருவாதிரை விழாவில் இத் திருக்கோவிலிலிருந்து மணிவாசகருடன் நர்த்தன கணபதியே எழுந்தருளி வருவார். சித்தி என்பது இச்சா சத்தி; புத்தி என்பது கிரியாசத்தி.

பிள்ளையாருடைய வரலாறுகள் விநாயக புராணம் என்ற சிறந்த செய்யுள் நூலில் மிக உயர்ந்த திருப் பாடல்களாற் பாடப் பெற்றுள்ளன. அதனைப் பாடியவர் கல்வியிற் பெரியவராகிய கச்சியப்ப முனிவர். இவர் தம்முடைய விநாயக புராணத்தை நம் பிரசன்ன விநாயகர் திருமுன்பிருந்து அரங்கேற்றியருளினார்.

வடக்கு மயிலாப்பூர்—வடுகூர்ச் செங்கழுநீர் விநாயகர்

கிழக்கே பார்க்க இருக்கிறது இக்கோவில். வீடுகூர் என்பது வடக்கு ஊர். தென் கோடியிலுள்ள இக்கோவிலிலிருந்து வடுகூர்ச் செல்வ விநாயகர் கோவில் தெரு தொடங்குகிறது.

தெற்கு மயிலாப்பூர்—கூத்தாடும் பிள்ளையார்

சித்திரக் குளத்து வடக்குத் தெரு கிழக்கே போகிறது. அதில் தெற்கே பார்க்க இருக்கிறார் கூத்தாடும் பிள்ளையார்.

இங்ஙனமாகச் சென்னை மாவட்டத்திலுள்ள பல பேட்டைகளிலும் தெருக்கள் தவறாமல் பிள்ளையாரப்பன் என்ற பெரியப்பன் எழுந்தருளி யிருந்துகொண்டு பிழைக்கும் வழிகாட்டித் திருவருள் பாவித்து வாழும் மக்களை ஆதரித்தருள்கின்றார்.

ஆப்கானித் தானத்திற் பிள்ளையார்

" இந்தியாவில் வடமேற்கு மூலையிலிருக்கும் முகமதிய நாடாகிய ஆப்கானித் தானத்திலும் பிள்ளையார் வழிபாடு நடைபெறுகிறது. காபூல் நகரம் அதன் தலைநகர். அதன் பக்கத்தில் பத்து மைல் தூரத்திலுள்ள சங்கரதார என்னும் ஊரிற் சில சிற்பங்கள் பூமியி லிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. அவை சூரியன், சிவபெருமான், மாவிநாயகர். அவை அருமையான சலவைக் கல்லிற் செதுக்கப் பட்டவை. 'சங்கரதார' என்பது இப்போது 'சகர்தார்' என்று வழங்கப்படுகிறது. பிள்ளையாருடைய திருவுருவம் குப்தர் காலத்திய சிற்பப் பாங்கைப் போலச் சுருள் சுருளாக அழகுடன் அமைந்து கேசத்துடனும் தோள்வரை நீண்ட வலம்புரித் துதிக்கையுடனும் வாகனமில்லாமலும் காணப்படுகின்றது. பிள்ளையார் அணிந்துள்ள ஆடையின் வேலைப்பாட்டைத் தனிமையில் நோக்கினால் அது குருவி வால், பறவைகளின் இறக்கை முதலிய சித்திரங்களுடன் இருப்பதாகத் தோன்றுகிறது. அவைகளை ஒன்று சேர்த்து நோக்கும்போது அவை,

'ஆகன்தசு' எனப்படும் கிரேக்க நாட்டு இலையின் வடிவை நமக்கு நினைவுப்படுத்துகின்றன. இத் திருமேனியில் பிள்ளையாருக்கே சிறப்பாக உரிய தொந்தி காணப்படவில்லை; கிரேக்க உருவங்களைப் போல மார்பு பரந்தும் வலிமையுடனும் காணப்படுகின்றது. மார்பிலே காணப்பெறும் பூநூல் பாம்பை நினைவூட்டுகின்றது. பூநூலின் பிரமமுடி பாம்பின் முடியைப் போலச் செதுக்கப்பட்டுள்ளது. இடது கொம்பு முறிந்தும், வலது கொம்பு ஒழுங்காகவும் நம் தமிழ்நாட்டிலுள்ள பிள்ளையார் உருவங்களைப் போலவே அந்நாட்டிலும் காணப்படுகின்றமை யால் இங்குள்ள தியானவழிபோலவே பிள்ளையார் அங்கும் 'ஒரு கொம்பர்' என வழங்கப்பெறுகிறார். பறவைகளின் இறக்கையென ஐயுறும்படி விசிறி போல் விரிந்த காதுகளுடன் விளங்கும் இப் பிள்ளையார் திருவுருவம் மிகப்பழமையான காலத்தைச் சேர்ந்த தென்று குறிப்பிடலாம். நான்கு கைகளிருந்தும் மேலிரண்டும் முறிந்து விட்டன; மேல் வலது கையில் தாமரை மலர் இருக்கிறது. கீழ் இரு கைகளாலும் பிள்ளையார் இரண்டு கணநாதர்களின் தலையைத் தடவிக் கொடுத்து அவர்களின் வழிபாட்டை அவர் ஏற்றுக் கொள்ளும் காட்சியைக் காணலாம். குப்தகாலச் சிற்ப முறைப்படி அந்தக் கணநாதர்கள் சுருண்ட கேசத்துடனும் சுருள் போன்ற காதணியுடனும் கழுத்திலே கண்ட மாலையுடனும் தோற்ற மளிக்கின்றனர். கிரேக்கச் சிற்ப முறையிலே இம்மாதிரியுள்ள கணங்களையே "தால்பின்" என்பார்கள். பிள்ளையாரின் உடற் கட்டையும் உடையிலுள்ள அகாந்தசு என்ற இலைச் சித்திரத்தையும் சிற்பப் பாங்கையும் சீர்தூக்கின் குசானர்களுக்கும் குப்தர்களுக்கும் இடையே நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இப்படிமம் செய்யப்பட்டுள்ளதென்று கூறலாம். இப் பிள்ளையார் திருவுருவை இன்று காபூலில் வாழ்கின்ற இந்துக்கள் நரசிங்கத் துவாரா என்னும் காபூல் நகரிலுள்ள இந்துக்களின் அங்காடியில் ஒரு திருக்கோவிலில் எழுந்தருளச் செய்து வழிபட்டு வருகிறார்கள். காபூல் நகருக்குத் தெற்கே எழுபது மைல் தூரத்தில் 'கருதேசு' என்னும் நகரம் இருக்கிறது. அந்நகரின் அருகே சில ஆண்டுகளுக்கு முன் சலவைக் கல்லிற் செதுக்கப்பட்ட ஓர் அழகான பிள்ளையாரின் திருவுருவம் தோண்டி எடுக்கப்பட்டது. அது இன்று காபூலில் 'தர்காபீர்ரதன் நாத்' என்னுமிடத்தில் திருக்கோவிலில் எழுந்தருளச் செய்யப் பெற்றுக் காபூல் வாழ் இந்துக்களால் வணங்கப் பெறுகின்றது. இத்திருவுருவம் இருபத்தெட்டு அங்குல உயரமும், பதினான்கு

அங்குல அகலமும் உடையது. இதன் பீடத்தில் இரண்டு வரிசை கொண்ட கல்வெட்டுக் காணப்படுகின்றது. தொன்மையான நாகரி எழுத்தில் உள்ள இந்த வடமொழிச் சிற்பச் சித்திரத்தின் பொருள் பின் வருவது :—

" ஓம். இது ஓர் அரிய பெரிய சிற்பச் சித்திரம், மாகணபதிக் கடவுளுடையது. இச்சிலையைப் பிரதிட்டை செய்தவன் மா இராசாதி இராசனென்றும், பரம பட்டாரகனென்றும் புகழ் பெற்ற சாகி அரசன், சாகி கிங்களன். இவ்வரசன் தான் செங்கோல் மேற்கொண்டு ஆண்ட எட்டாவது ஆண்டில் ஆவணி மாதம் வளர் பிறைத் திரயோதசி விசாக நாள் சூரியன் சிம்ம மாதத்திலுள்ள புண்ணியத் தினத்தன்று இச் சிற்பத்தைப் பூசைக்காகப் பிரதிட்டை செய்து அதனால் புகழெய் தினன்." " காசுமீர மன்னர்களில் மிகவும் பழமையான நரேந்திரா தித்தியன் என ஓரரசன் இருந்தான். அவனுக்குள்ள கிங்களன் என்ற மறு பெயரே மேலே கல்வெட்டிற் கண்ட பெயர். கல்வெட்டில் மாகணபதியின் திருவுருவம் எப்படியிருக்கிறது என்று கவனிப்போம். கிரேக்கச் சிற்பம் போலக் கால்களிலும், கைகளிலும், பரந்த மார்பிலும் வலுவுடைய கட்டுடன் காணப்படுகிறார் பிள்ளையார். கால்களின் அமைப்பு ஆலிடம் என்னும் பக்க அசைவுடனே காணப் படுகிறது. தும்பிக்கை இடதுபுறம் வளைந்திருக்கிறது. முறிந்த கொம்பும் அப்பக்கத்திலுள்ளது. சாரநாத்தில் குப்த காலத்தில் உண்டான சிற்பப் பாணியை இச் சிற்பத்தில் உள்ள அணிகலம் ஒத்திருக்கிறது. தலையில் ஒட்டியும், அழுத்தமுடனும் வைக்கப்பட்ட சிறு மகுடமும், கழுத்தில் மணி பவளம் வளையங்களுடன் கோக்கப் பட்ட கண்டமாலையும் கூடிய இச்சிற்பம் பின் குப்த காலத்தில் கி.பி. 500-ஐ ஒட்டி ஆக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை வலியுறுத்தும் சான்றாகும். இரு செவிகளும் இலைபோல் அமைந்திருக்கின்றன. கைகளெல்லாம் ஒடிக்கப்பட்டிருந்தாலும் அவை நான்கு எனவும் அவை மிக அழகாக அமைந்திருத்தல் வேண்டுமென்றும் சிற்பத்தைப் பார்க்கும் போதே நாம் அறிகின்றோம். பாம்பு ஒன்றே பிள்ளை யாரின் பூநூல். அவர் பாம்பைக் கயிறாகத் தம் வயிற்றைச் சுற்றிக் கட்டி அதையே பூநூலாகவும் அமைத்திருக்கிறார். அரையில் அணிந் துள்ள ஆடையிலே சீர்த்திமுகமெனப்படும் சிங்கத்தின் தலையையும், தாமரை மொட்டுக்களையும், சிட்டுக் குருவிகளின் தோகையையும் அழகாக எழுதியிருக்கிறான் சிற்பி. உடல், வயிறு, பாம்புப் பூநூல்,

மேலே நோக்கிய ஆண்குறி, சீர்த்தி முகம், பறவையின் தோகை, தாமரை மொட்டு இவைகளையுடைய இச் சித்திர வேலை பீகாரிற் செழிப்புடன் வளர்ந்த மகதக் கலையின் வரசனையைக் குறிக்கும். வலுக் கட்டுடன் வாய்ந்த கால்களும் கைகளும், தொந்தியின் சிறுமையும் இவ்விநாயகச் சிற்பம் கிரேக்கக் கலையின் பொற்காலத்தைச் சார்ந்த தென்பதை வலியுறுத்தும். அப் பொற்காலம் கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலே தொடங்கியது ; கி.பி. 6, 7-ம் நூற்றுண்டிலும் விளங்கியிருந்ததென்பதற்கு நமது மாகணபதிச் சிற்பமே தக்க சான்று. நமது தமிழ்நாட்டுத் தெய்வங்களில் முதன்மை வாய்ந்த பிள்ளையார் அம்மாதிரியே ஆப்கானித்தானத்திலும் திகழ்ந்தார், திகழ்கின்றுர் என்பதில் நாம் மிக்க பெருமை கொள்வோம்.''

இங்ஙனம் கூறுகிருர் சென்னை அரசாங்கத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைச் சிறப்பு அலுவலர் திரு. T. N. இராமச்சந்திரன் என்ற புகழார்.

இனி, பாடல் பெற்ற கோவில்களைக் கண்டு கும்பிட்டுத் திருவருளை அடைந்து பெரு வாழ்வு பெறுவோம்.

சென்னை மாவட்டத்தின் முதன்மையான பாடல் பெற்ற கோவில்கள்:

1. திருவொற்றியூர், 2. திருமயிலாப்பூர், 3. திருவான்மியூர், 4. திருவல்லிக்கேணியில் உள்ளன ; இவை நான்கனுள் முதல் மூன்றும் தேவாரம் பெற்றன. திருவல்லிக்கேணி நாலாயிரப் பிரபந்தப் பாடல் பெற்ற புகழையுடையது.

(ஆ) பாடல் பெற்ற திருக்கோவில்கள்

(1) திருவொற்றியூர்—ஆதிபுரீசுவரர்

சென்னைப் பூங்கா நகரில் உள்ள புகை வண்டி நடுநிலைய (Central Station) த்திலிருந்து வடக்கே கல்கத்தாவுக்குச் செல்லும் புகைவண்டிச் சாலையில் எட்டுக் கிலோமீட்டரில் உள்ளதோர் கடற்கரை நகரம் திருவொற்றியூர். வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்ச் சாலைவழி வடக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது இந் நகரம். அச் சாலை திருவொற்றியூர்ப் பெருஞ்சாலை எனப்பெறுகிறது.

உலகிலுள்ள மிகப் பழமையான ஊர்களில் முதன்மை பெற்றது இவ்வூர். அதனுல் இது ஆதிபுரி என்று பெயர் பெறும். இதில் எழுந்தருளியிருக்கிற பெருமான் ஆதிபுரீசுவரர் என்னப் பெறுகிறார். இந்த ஊரைப் பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஐந்து பாடல்களில் விளக்குகின்றார். அவை கலிய நாயனுர் புராணத்தில் முதல் ஐந்து பாடல்கள் (4022-4026 செய்யுட்கள்) ஆம்.

மிகப் பெரிய இவ்வுலகத்திலே புகழினுல் ஓங்கிய பெருமையை உடையது தொண்டை நாடு; அதிற் கடற்கரை நகர் திருவொற்றியூர். திருக்கோவிலின் திருமதில்களிலே மேகங்கள் வந்து வந்து உலாவும். அதனுல் மலர்கள் நிறைந்த சோலைகள் எங்கும் பரந்திருந்தன. அவற்றைச் சூழ்ந்திருப்பன தேரோடும் பெரிய தெருக்கள். பெருமை மிக்க அப் பெரிய தெருக்களின் இருபுறமும் ஆடுகின்ற கொடிகளையுடைய அழகிய நீண்ட மாடங்களின் வரிசைகள் கண்ணுக்கு இன்பம் தந்தன. நகரத்தின் கீழ்புறம் பெருங்கடற்கரையில் அலை மோதிக்கொண்டிருந்தது. திருக்கோவிலில் இருப்பன பல மண்டபங்கள். அவைகளில் யாவராலும் பன்முறையும் ஓதப்பெறுகின்ற தேவாரத் திருப்பதிகங்களின் இசைப் பாட்டுக்களை இடைவிடாது பாடிக்கொண்டிருப்பார்கள் இசைப் பெரும் புலவர் பலர். ஆங்காங்கே ஆடும் அரங்குகள் அணி செய்திருந்தன. அவைகளில் அன்னம் போன்ற நடையினையுடைய பெண்களின் ஆடல்கள் நீங்காமல் இருப்பன. மக்கள் பயில்கின்ற வீதிகளிலே பலமுறையாக ஒலிக்கும்

இசைக் கருவிகளின் முழக்குடன் கூடித் திருவிழாக்கள் நடைபெறு வன. அவ்வூரிற் பல திருமடங்கள் இருந்தன. அவற்றில் அடியார்கள் உண்ணுவதற்காகச் செந்நெல் அரிசி சமைக்கப்பெற்று மலை போலக் குவியலாக்கிய உணவுப் பெருக்கம் நீங்காதிருக்கும். திருவொற்றி யூரில் திருக்கோவிலின் சார்பாகக் கோவில் மண்டபத்திலே சிவ புராணங்கள் படிக்கப் பெற்று வந்த உண்மையை அங்குள்ள கல் வெட்டுக்களினால் அறிகிறோம்.

கடற்கரையில் வெண்மணல் பரவியிருந்தது. அது வெண் நிலாவின் சிதறிய தூள் போலக் கண்ணுக்குக் காட்சி தந்தது. அங்கே நிறைந்த மலர்களையுடைய குருக்கத்தி மரங்களும், புன்னை மரங்களும், கிளைகளைப் பரப்பி வளரும் குங்கும மரங்களும், புலி நகக் கொன்றை மரங்களும், இதழ்கள் அவிழ்கின்ற செழிப்பான அரும்புகளையுடைய சண்பக மரங்களும், குளிர்ந்த செருந்தி மரங் களும், மேல் நோக்கி நீண்ட மடல்களுடன் வளர்கின்ற தாழை மரங்களும், தத்தம் மலர்களின் மணத்தை வீசின. அதனால் இயல்பாக முடைநாற்றம் வீசும் கழிகளையுடைய கடல் நீரும், தான் பெற்ற இந் நறு மணத்தை முழுமையும் வீசும்.

திருமதில்களை அணைகின்ற மேகங்கள் இடித்தன. அலைகளையுடைய கடல் முழங்கிற்று. பலவகைப்பட்ட இசைக் கருவிகளும் ஒலித்தன ; இம்மூன்று வகைப்பட்ட முழக்கங்களும் இவை இன்ன என வேற்றுமை காண முடியாத நிலையில் ஒன்றாக ஒலித்தன. இப்பெரும் பதியில் அமைந்துள்ள மேன்மைகளைக் கீழே கூறுவோம்.

திருமாலின் உந்திக் கமலத்திலே தோன்றிய படைப்புக் கடவு ளாகிய நான்முகன் இங்கே வந்து சிவபெருமானை நோக்கித் தவம் கிடந்தான். அவனுடைய பெருந் தவத்தைக் கண்டு மகிழ்ந்து அவனுடைய வேள்வித் தீயின் நடுவிலே தோன்றி அந்தத் தீயையே தனக்குக் கோவிலாகக் கொண்டு எழுந்தருளி, ஊழிக் காலத்திற் பொங்கி வரும் வெள்ளத்தைச் சிவபெருமான் மேல் வாராது தடுத்த மையின் அவ்விடம் ஒற்றியூர் எனப் பெறுகிறது.

" ஒற்றியூரும் ஒளி மதி பாம்பின்
ஒற்றி ஊரும் அப் பாம்பும் அதனையே
ஒற்றியூர ஓர் சடை வைத்தவன்
ஒற்றியூர் தொழ நம்வினை ஓயுமே "

(திருநாவுக்கரசர்—திருக்குறுந்தொகை)

நந்திதேவர் திருக்கயிலாயத்திலே சிவபெருமானுடைய பிரதோட நடனம் கண்டமை போலவே அப் பெருமான் அமர்ந்திருந்தவாறு நாடோறும் புரியும் நடனத்தையும் காணுதல் வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, சிவபெருமான் அவருக்கு அவர் கேட்ட வரத்தை அருளினான். நந்திதேவர் கண்ட அந் நடனத்தைத் திருமால், நான்முகன், உரோம முனிவன் என்ற இவர்களும் கண்குளிரக் கண்டு உய்ந்தார்கள். இவ்வூரில் வாசுகி, ஆதிசேடன், வான்மீகி, இலவன், தொண்டமான், ஐந்தருக்கள் முதலியோரும் பெருமானைப் பூசித்துத் திருவருள் பெற்றனர். திருக்கயிலாயத்தை விட்டுப் பொதிகை மலையை நோக்கி வந்துகொண்டிருந்த அகத்திய முனிவர், பார்வதி தேவியைச் சிவபெருமான் மணந்துகொண்ட திருமணக் கோலத்தை இங்கே கண்டு கண்களித்தார். இக் காட்சி பெருந் திருவிழாவில் இவ்வூரில் ஒன்பதாவது திருநாளன்று கொண்டாடப் பெறுகிறது.

வாசுகி என்ற பாம்பைப் பெருமான் தமது திருவுருவத்தில் ஏற்பித்துக் கொண்டான். ஆதலினால் இன்றும் யாவரும் காணும்படி பாம்பின் உருவ அடையாளம் காட்டிப் படம்பக்க நாதன் என்ற திருப்பெயரை அடைந்தான். ஏலேல சிங்கருக்குப் பெருமான் மாணிக்கங்களைக் கொடுத்துத் தியாகேசர் என்ற பெயரைப் பெற்றான். அயோத்தியில் அரசாண்டிருந்த மாந்தாதா என்னும் பேரரசன் பஞ்சம் வந்தபடியால் கோவில்களின் படித்தரங்களைக் குறைத்துக் கோவில்களுக்கு ஆணை அனுப்பினான். அந்த ஆணை " திருவொற்றியூர் நீங்கலாக " என்று வரியொற்றி எழுதினான் இவ்வூர்ப் பெருமான்; அதனால் பெருமான் ' எழுத்தறியும் பெருமான் ' என்று பெயர் பெற்றான்; அதனைக் கண்டு திருவருளை வியந்து மாந்தாதா மன்னன் இவ்வூருக்கு வந்து வழிபாடு செய்திருந்து பேறு பெற்றான்.

இவ்வூரில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய கலிய நாயனார் என்பவர் பிறந்து திருவிளக்குப் பணி செய்து பேறு பெற்றார். திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், ஐயடிகள் காடவர்கோன், பட்டினத்துப் பிள்ளையார் ஆகிய பெரியார்கள் இங்கே வந்து புற்றிடம் கொண்ட பெருமானைப் பாடிப் பேறு பெற்றார்கள். படம் பக்கநாதன், புற்றிடம் கொண்டான், ஆதி புரி ஈசுவரர் என்பன பெருமான் பெயர்கள். அம்மை வடிவுடையம்மை. தல மரம் அத்தி; மகிழமரமும் இங்கே சிறப்புப் பெற்றது இத்திருக்கோவிலினுட் சென்று வழிபட்டு நாமும் திருவருள் பெறுவோம்.

இத்திருக்கோவில் அழகிய கோபுரத்தோடு பார்ப்பவர் நெஞ்சைக் கவர்ந்து சென்னையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் நெடுஞ் சாலையைப் பார்க்க விளங்குகின்றது. கோவிலின் தலைவாசலின் வட புறம் ஒரு பெரிய குளமும் உள்ளே ஒரு சிறு குளமும் இருக்கின்றன. சிறு குளத்தின் தென்மேற்கு மூலையிலேயே இவ்வூருக்கு மிக்க சிறப்பைத் தருகின்ற மகிழ மரம் இருக்கிறது.

இம் மகிழமரத்தை ஒட்டி "மூன்று காற் பெருமான்" (திரிபாத மூர்த்தி) எழுந்தருளி வடக்கு நோக்கி இருக்கின்றான். இத் திருவுருவம் சிவபெருமானுடைய முதன்மையை வெளியிடுவது. சிவ பெருமான் நடுநாயகமாக யோக நிலையில் ஒரு காலுடன் இருக்கின்றான். அவனிடத்திலிருந்து கிளைத்து ஒரு புறம் நான்முகனும் ஒரு புறம் திருமாலும் ஆகிய இருவரும் ஒவ்வொரு காலுடன் பெருமானைக் கைகூப்பிக் கும்பிட்டுக் கொண்டு இருக்கின்றனர். இம் மூன்றுருவும் சிவனுருவே. ஒரே கல்லில் மூன்றடி உயரத்தில் இச்சிற்பம் உருவாயிருக்கிறது. இப்படிப்பட்ட திருவுருவம் ஒன்று திருவானைக்காவில் மட்டும் காணக்கிடக்கின்றது. திருமகிழடியில் எழுந்தருளியிருக்கும் ஆதிபுரீசுவரரைக் கும்பிட்டுக் கொண்டு இத்திருக் கோவிலினுள்ளே புகுவோம்.

இக்கோவிலில் எழுந்தருள் திருமேனி தியாகராசப் பெருமானுடையது. உள்ளே மூலத்தானத்தில் புற்றிடங் கொண்டான் காட்சியருள்கின்றான். அவனுடைய திருமேனி புற்றாகவே இருக்கிறது. அப்புற்றின் மேலே புற்றின் ஒரு சிறு பகுதியை மட்டும் தெரியும்படி

மூடிய கவசம் விளங்குகின்றது. இந்தக் கவசம் கார்த்திகை மாதம் பூரணையோடு கூடிய திருக்கார்த்திகையன்று தொடங்கி மூன்று நாள் மட்டும் திறக்கப்படுகிறது. அந்த மூன்று நாளும் புற்றுத் திருமேனியை முழுதும் கண்குளிரக் கண்டு களிக்கலாம். கோவிலின் உட்சுற்றி லிருக்கும் காளியம்மை வடக்கே பார்த்திருக்கின்றாள். அவ் வம்மையின் பெயர் "வட்டப் பாறை அம்மன்." தெற்குச் சுற்றில் அசுவதி முதல் இரேவதி முடிய இருபத்தேழு நட்சத்திரங்களும் தனித்தனியே சிவலிங்க வடிவமாகக் காட்சி தருகின்றன. வடமேற்கு மூலையில் ஒற்றீசன் திருக்கோவில் இருக்கிறது. இதுவே மிகப் பழமை யானதென்று அறிந்தோர் கூறுகின்றனர். இனி, இத்தலத்திேனாடு தொடர்பு கொண்டு பேறு பெற்ற பெரியவர்களைப் பற்றி ஆராய் வோம்.

25 NOV ... EGMORE, MADRAS

கலிய நாயனார்

கலிய நாயனார் என்ற பெரியார் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலையுடைய மரபினர் வாழ்கின்ற சக்கரப்பாடித் தெருவில் அக் குலத்திற் பிறந்த பெருஞ் செல்வர். முன்னைப் பிறவியிற் செய்த தவப் பயனாக அவருக்கு நல்லுணர்வு தோன்றியது. அழியாத பேரின்ப வீட்டைத் தாம் அடைவதற்கு வழியாவது சிவபெருமானுக்கு உள்ளன்போடு தொண்டு செய்தலே என்ற உண்மையை அவர் கண்டார்; நாடோறும் புற்றிடங் கொண்டார் கோவிலுக்குத் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் சிரமேற் கொண்டார். இப் பெரிய கோவிலில் எரியும் விளக்குகளுக்குச் செல்லும் எண்ணெய் முழுமையும் இவரே நாடோறும் ஊற்றி வந்தார். செல்வம் உள்ள காலத்திலே இப் பணி செய்வது எளிது; செல்வம் குறைந்து வறுமை வந்த காலத்திலும் இவர் இத் திருப்பணியை இடைவிடாது செய்து வருவார் என்பதை உலகத்தாருக்கு அறிவுறுத்துவதற்காக ஒற்றிப் பெருமான் இவருடைய செல்வமெல்லாம் நாளுக்கு நாள் குறைந்து போகும்படி கடைக்கணித்தான். கலியனாருக்குக் கலி வந்து சேர்ந்தது. கலி—வறுமை. வீட்டிலுள்ள இயங்கியற் பொருள் களையும், பிற நிலையியற் பொருள்களையும் கலியனார் மாறித் தம்முடைய மாறில்லாத திருப்பணியிலே தலைநின்றார்.

" திருமலிசெல் வத்துமுனி தேய்ந்தழிந்த பின்னையுந்தம்
பெருமைநிலைத் திருப்பணியிற் போராத பேராளர்
வருமரபி லுள்ளோர்பால் எண்ணெய்மாறிக் கொணர்ந்து
தருமியல்பிற் கூலியினால் தமதுதிருப் பணிசெய்வார்."

இங்ஙனம் கூறுகிறார் திருத்தொண்டர்புராண ஆசிரியர் சேக்கிழார்.

இளையான்குடி மாறன் நாயனார் புராணத்திலும் இக் கருத்தையே கூறிச் சேக்கிழார் விளக்குகின்றார் மெய்யடியார் தன்மையினை.

அப் பாடல்கள் வருமாறு.--

" செல்வ மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாடொறும் மாறி வந்து
ஒல்லையில் வறுமைப்ப தம்புக உன்னினார் தில்லை மன்னினார்,"

" இன்னவாறு வளஞ்சு ருங்கவும் எம்பிரான் இளையான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க வுள்ள கடன்கள் தக்கன கொண்டு பின்
முன்னை மாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார்."

நம்முடைய கலிய நாயனார் எண்ணெய் விற்றுக் கூலி பெற்று இப் பணியைச் செய்தார். இவரிடம் வறுமை முதிர்ந்து குடிபுகக் குடிபுக வணிகர்கள் இவரை நம்பாராயினர். அதனால் இவர் செக்காட்டும் பணி செய்து கூலி பெற்று அதனால் தம்முடைய திருவிளக்கேற்றும் திருப்பணியை இடைவிடாது செய்தார். செக்கிழுக்கும் பணிகூடக் கிடையாத நிலை வந்து எய்தியது. அந்நிலையில் அவர் தம் மனையாளை விலை கூறத் துணிந்தார். அவ்வம்மையை விலைக்கு வாங்க எவரும் முன்வரவில்லை.

அரிச்சந்திரன் தன் மனைவி சந்திரமதியையும் மகன் உலோகிதாசனையும் விற்றுப் பணம் பெற்றுக் கடமையைச் செய்தான். தரும

புத்திரன் தனக்கும் தன் தம்பிமார் நால்வருக்கும் மனைவியாகிய பாஞ்சாலியைப் பணயமாக வைத்துச் சூதாடித் தோற்றான்; நளன் என்னும் முடிமன்னன் சூதாடித் தன் நாடு, நகரங்களையெல்லாம் இழந்து பணயமாக வைப்பதற்கு வேறு பொருளின்றித் தயங்கினான். அப்போது அவனுக்கு எதிரியாக இருந்து சூதாடிய அவன் தம்பி புட்கரன் " உன் மனைவியைப் பணயமாக வை " என்று கூறுதலும், உடனே மானம் வந்த நளமன்னன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றான். நம் கலையரோ சிவனுக்குச் செய்யும் திருப்பணியிற் கொண்டிருந்த காதல் தம் மனைவியாரிடத்து வைத்திருந்த காதலை விஞ்சிவிட்டபடியால், அவ் வம்மையையும் விற்று அப்பொருளால் தம் திருப்பணியைச் செய்யத் தலைப்பட்டார். நல்லவேளை அவ்வம்மையை விலை கொடுத்து வாங்க எவரும் துணிந்தாரல்லர். அதனால் அவர் எண்ணெய்க்குப் பதில் தம் கழுத்தை அரிந்து இரத்தத்தை ஊற்றி விளக்கெரிக்கத் துணிந்தார். அப்போது சிவபெருமான் அது செய்யாது தம் திருக் கையால் அவர் கையைப் பிடித்துக்கொண்டு அவருக்குச் சிவபதம் அருளினான்.

" திருவிளக்குத் திரியிட்டு அங்குஅகல் பரப்பிச் செயல் நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்கீடா உடல் உதிரம் கொடு நிறைக்கக்
கருவியினால் மிடறுஅரிய அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி, "

" மற்றவர்தம் முன்னாக மழவிடைமேல் எழுந்தருள
உற்ற ஊறது நீங்கி ஒளி விளங்க உச்சியின் மேல்
பற்றிய அஞ்சலியினராய் நின்றவரைப் பரமர்தம்
பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க அருள் புரிந்தார். "

இங்ஙனம் மிடறு அரியத் தொடங்கிப் பேறு பெற்றார் மற்றோர் அடியார் அரிவாட்டாய நாயனார்; அவர் " நல்ல செங்கீரை, தூய மாவடு, அரிசி இவற்றைப் பெருமானுக்கு நாடோறும் படைத்துத் தாம் வறுமையாற் பட்டினியிருந்து தொண்டு செய்து வந்தார். ஒரு நாள் அவர் கீழே தள்ளாடி விழ அப்பொருள்கள் முன்னால் இருந்த கமரில் விழுந்தன. அதனால் அவர் அரிவாளினால் தம் ஊட்டியை அரியலுற்றார். அப்போதே சிவபெருமான் தன் திருக்கையால் அவர் கையைப் பற்றித் தடுத்துத் தம் சிவபதவியை அவருக்கு அருளினான்.

இங்ஙனமாகவே, முன் சிவபெருமானுடைய திருக்கை தம் கண்ணை அம்பினால் தோண்டத் தொடங்கிய கண்ணப்பர் கையை

“ நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப
என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப ”

என்ற அமுத வாக்குடன் பிடித்துத் தடுத்துப் பேரருள் செய்த பெருமை இங்கே சிந்திக்கத் தக்கது !

கலியநாயனார் திருவொற்றியூரிலே பிறந்து திருவிளக்குத் தொண்டு செய்து பெரும் பேறு பெற்றவர். இனி, இவ்வூருக்கு வந்து பாடிப் பேறு பெற்ற பெரியோர்களுடைய பேரன்பினைக் காணுவோம்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

காஞ்சிமா நகரில் அரசாண்டிருந்த பல்லவ மன்னர்களில் ஒப்பற்றவர் காடவர் கோன் என்பவர் ; ஐ—கடவுள் ; ஐஅடிகள் கடவுளுடைய திருவடிகள் ; அவைகளைத் தஞ்சம் என்று கண்டு அவைகளையே எண்ணி வாழ்ந்திருந்தனமயால் இம் மன்னர் பிரான் ‘ ஐயடிகள் காடவர் கோன் ’ என்ற புகழ்ப் பெயர் பெற்றார். இவர் அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர். அரசாளுவதினும் மெய்யின்பம் தருவது சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பதிகள் தோறும் சென்று வழிபடுவதே என்பதை இவர் மெய்யாக உணர்ந்து முடிதுறந்து திருத்தலங்கள் தோறும் சென்று பணிந்து பாடினார். அப்பாடல்கள் “ சேத்திர வெண்பா ” என்ற பெயருடன் பதினோராம் திருமுறையிற் சேர்க்கப் பெற்றுள்ளன. இத்தவப் பேரரசர் காடவர் கோன் திருவொற்றியூருக்கு வந்து பணி செய்திருந்து பாடிய திருவெண்பா இது—

“ தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின். ”

"மூவுலகும் அரசாளும் பெருமையைக் காட்டினும் பெரியது திருவொற்றியூரிற் பிச்சை எடுத்து உண்டு பெருமானைக் கும்பிட்டிருப்பது" என்பது காடவர்கோன் கண்ட உண்மை. இவரைப் போன்ற முடிமன்னர் சேரமான் பெருமாள் நாயனார் பெரும் புலமையும் பேரருளும் பெற்றுத் திருக்கயிலாய நாதர் மேல் "பொன் வண்ணத் தந்தாதி" பாடி அருள்பெற்றார். அந்நூல் பதினோராம் திருமுறையில் காடவர்கோன் வெண்பாவுக்கு அடுத்து அமைந்து திகழ்கின்ற பெருமையே பெருமை!

தேவாரம் பாடியருளிய மூவர் முதலிகளும் திருவொற்றியூருக்கு வந்து தங்கித் தேவாரம் அருளி உய்தி கண்டனர். அவர்தம்முள் முதியவராகிய திருநாவுக்கரசர் பெருமான் இங்கே எழுந்தருளினமையை முதற்கண் காண்போம்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் திருவான்மியூரிலும் திருமயிலாப்பூரிலும் உழவாரத் திருத்தொண்டுடன் தேவாரம் பாடும் திருத்தொண்டும் செய்திருந்து கடற்கரை வழியாகத் திருவொற்றியூருக்கு வந்து சேர்ந்தார். அவரை அவ்வூரார் எதிர்கொண்டு பணிந்தார்கள். திருவொற்றியூர் அழகு செய்யப் பெற்று விளங்கியது. கீழே வருவன திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் சேக்கிழார் திருவாக்கு :

"ஒற்றியூர் வளநகரத்து ஒளிமணி வீதிகள் விளக்கி
நற்கொடி மாலைகள் பூகம் நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள் தீபங்கள் பொலிவித்து
மற்றவரை எதிர்கொண்டு கொடுபுக்கார் வழித் தொண்டர்."

"திருநாவுக் கரசரும் அத் திருவொற்றியூர் அமர்ந்த
பெருநாகத் திண்சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப் புக்கு
ஒருஞானத் தொண்டருடன் உருகி வலம் கொண்டு அடியார்
கருநாமம் தவிர்ப்பாரைக் கைதொழுது முன் வீழ்ந்தார்."

" எழுதாத மறைஅளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதுஆர்வம் உறநிலத்தில் தோய்ந்து எழுந்தேஅங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்த மயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார். "

மேலே காட்டிய பாடல்கள் நாம் யாவரும் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்க முறையினை வலியுறுத்துகின்றன. நம் ஊருக்கோ வீட்டுக்கோ தக்கார் வரும்போது நம் வீட்டினையும், தெருக்களையும் சுத்தம் செய்து இயன்றவரை அழகு செய்தல் வேண்டும். கோவிலுக்குப் போகும்போது வீணருடன் வீண் பேச்சுப் பேசாமல் தொண்டருடன் கூடித் திருத்தொண்டு பேசி மனம் உருகிக் கோபுரத்தைக் கைதொழுது முன் வீழ்ந்து உடம்பெல்லாம் தரையிற் படும்படி கும்பிட்டு எழுதல் வேண்டும். அப்போது தன் வசம் இழந்து பரவசமாகி மயிர்க்கூச் செறிந்து தன் சிறுமையையும் ஆண்டவன் பெருமையையும் எண்ணி எண்ணி "அடியேனை ஆட்கொள்ள வேண்டும், ஆட்கொள்ளவேண்டும்" என்று கண்ணீர் மாலை மாலையாக வடிய விதிர்விதிர்ப்புற்று விம்முதல் வேண்டும். வார வழிபாடு செய்வதில் முதன்மையாக நிற்கும் அன்பர்களாவது இவ் வொழுக்க நெறியைப் பின்பற்றுதல் இன்றியமையாதது. தம்மைச் சிங்காரித்துக் கொண்டு கீழே விழுந்து கும்பிட்டால் சட்டையில் அழுக்குப் படிந்து விடுமோ என்று அஞ்சி நிமிர்ந்து செல்வாருக்குத் திருவருள் எங்ஙனம் கிடைக்கும் ?

" விளங்கு பெருந் திருமுன்றில் மேவுதிருப் பணிசெய்தே
உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள்திரு நேரிசைகள் பல்பாடிக் கைதொழுது
வளங்கொள்திருப் பதியதனிற் பலநாட்கள் வைகினார்."

திருநாவுக்கரசர் புராணம்—337.

திருநாவுக்கரசர் திருவொற்றியூரிற் பலநாட்கள் தங்கியிருந்து திருவிருத்தங்கள், திருக்குறுந்தொகைகள், திருநேரிசைகள் பல பாடிக் கைதொழுதார். மேலே கண்ட செய்யுளில் அவர் திருத்தாண்டகங்கள் பாடினார் என்பது குறிப்பிடப்படவில்லை. அப்ப மூர்த்திகள் தாண்டகச் செல்வர் ஆவாரே எனில் அவர் கோவிலிற்

புகுந்த முதல் நாளிலேயே திருத்தாண்டகம் பாடினார் என்று அப்பதிகத்தின் முதல் நினைப்பும் கூறுகிறார் சேக்கிழார் அடிகள்:—

"வண்டோங்கு செங்கமலம்' என எடுத்து மனம் உருகப்
பண்தோய்ந்த சொல் திருத்தாண் டகம்பாடிப் பரவுவார்."

'வண்டோங்கு செங்கமலம்" என்று தொடங்கும் பதிக முதற் பாட்டுப் பின்வருமாறு:—

"வண்டோங்கு செங்கமலக் கழுநீர்மல்கும்
மதமத்தம் செஞ்சடைமேல் மதியம் சூடித்
திண்தோள்கள் ஆயிரமும் வீசிநின்று
திசைநேர நடமாடிச் சிவலோகனார்
உண்டார் நஞ்சு உலகுக்கு ஓர் உறுதிவேண்டி
ஒற்றியூர் மேய ஒளிவண்ணனார்
கண்டேன் நான் கனவதனில் கண்டேற்கு என்றன்
கடும்பிணியும் சுடும் தொழிலும் கைவிட்டவே."
(திருத்தாண்டகம்)

"தலைவன் பிரிந்து சென்றான்; தலைவி தலைவனுடைய பிரிவை ஆற்றாமல் வருந்தியிருந்து, கனவினில் அவனைக் கண்டு மையல் மிகக் கொண்டாள், விழித்தாள், 'கனவும் இழந்தாள், "இந்த நிலையில் எழுந்தது இத்திருப்பாடல். 'கனவு இழந்து இரங்கல்' என்னும் அகப் பொருள் துறை நெய்தல் திணைக்கு உரியது.

"திருவிருத்தங்கள், திருக்குறுந் தொகைகள், திரு நேரிசைகள் பலபாடிக் கை தொழுது" என்று சேக்கிழார் அருளிச் செய்கின்றார். ஆனால் இன்று திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறைகளிலே காணப்பெறுவன அவைகளில் ஒவ்வொன்றே. திருநேரிசையில் மட்டும் மற்றும் ஒரு பதிகத்தில் இரண்டு திருப்பாடல்கள் காணக் கிடக்கின்றன. இவ்விரண்டினுள் ஒன்று,

"மனம் எனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றிச்
சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மதன் எனும் பாறை தாக்கி மறியும்போது அறிய ஒண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே!"
(திருநேரிசை)

கடற்கரையில் உள்ள திருவொற்றியூரில் தம்கண்முன் தோணி வலிக்கும் கோல், சரக்கு, கடல், தோணியைத் தாக்கும் பாறை ஆகிய இவைகளைக் கண்ட அப்ப மூர்த்திகள் அவைகளைத் தம் உலக வாழ்க்கையில் ஒப்பிட்டு ஓர் உண்மையைக் கூறுகிறார். பிறவி பெருங்கடல், அதிலே செல்லும் உயிருக்குத் தோணி மனம், அதனைச் செலுத்தும் கோல் அறிவு, தோணியில் ஏற்றிய சரக்கு சினம், அத்தோணியைத் தாக்கி அழிக்கும் பாறை காமம். "காமத் திறல் தாக்கி அழிந்து போகாமல் நான் உன்னை எண்ணி உய்யும் நல்லறிவை அடியேனுக்கு அருள வேண்டும்" என்று அப்ப மூர்த்திகள் வேண்டுவது எவ்வளவு பொருத்தம் பாருங்கள்!

திருவொற்றியூரைப் பற்றி அப்பமூர்த்திகள் கூறுவன பின் வருவன :

"அலைகொள் முந்நீர்
மல்லல் திரைச் சங்கம் நித்திலம் கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரை கொணர்ந்து எற்று ஒற்றியூர்,"

(திருநேரிசை)

"உரவுதிரை கொணர்ந்து எற்று ஒற்றியூர்."

(திருநேரிசை)

"பலவும் அன்னங்கள் பன்மலர்மேல் துஞ்சும்
கலவ மஞ்ஞைகள் கார்என வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு ஒற்றியூர்."

(திருக்குறுந்தொகை)

"திரையினூர் புடைசூழ் திருவொற்றியூர்."
"ஓமத்தால் நான்மறைகள் ஓதல் ஓவா ஒளி திகழும் ஒற்றியூர்."

(திருத்தாண்டகம்)

"விடுங்கலங்கள் நெடுங் கடலுள் நின்று தோன்றும்
திரை மோதக் கரையேறிச் சங்கம் ஊரும் திருவொற்றியூர்."

(திருத்தாண்டகம்)

" ஒல்லைதான் திரையேறி ஓதம் மீளும் ஒளி திகழும் ஒற்றியூர் "

(திருத்தாண்டகம்)

இவர் திருவொற்றியூரை முதலிற்பாடிய திருத்தாண்டகத்தில் ஆறும்பாட்டில், " மயிலாப்புள்ளே செடிபடு வெண்தலை ஒன்று ஏந்தி வந்து திருவொற்றியூர் புக்கார் " என்று குறிப்பிடுகிறார்" மயிலாப்பூர் என்பது ' மயிலாப்புள் ' என்று வழங்கியமை காண்க. மேலும் இவர் அத்தாண்டகத்தின் ஐந்தாம்பாட்டில்,

" ஒற்றமைந்த உத்திர நாள் தீர்த்தமாக நனிதிகழும் ஒற்றியூர் " என்று குறிப்பிடுவது அவ்வூரில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருநாளையே.

திருநாவுக்கரசு நாயனார் படம்பக்கநாதனையும், தியாகேசனையும் அம்மை வடிவுடை நாயகியையும் வணங்கிப் புறப்பட்டுத் திருப்பாசூரை அடைந்தார். இனி, திருஞான சம்பந்தப் பிள்ளையார் இத் திரு நகருக்கு வந்து வழிபட்டமையைக் கூறுவோம்.

திருஞானசம்பந்தர்

திருக்காளத்தியப்பரை வணங்கித் திருப்பதிகம் பாடியிருந்த திருஞானசம்பந்தர் திருவொற்றியூரைக் கும்பிடக் கருதிப் புறப்பட்டார்; வழியிலுள்ள திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய ஊர்களைப் பணிந்து திருவொற்றியூர் மக்கள் எதிர்கொள்ளஅவ்வூரை அடைந்தார்.

மிக்கதிருத் தொண்டர் தொழுது அணையத் தாமும்
  தொழுது இழிந்து ' விடையவன் ' என்று எடுத்துப்பாடி
மைக்குலவு கண்டத்தார் மகிழும் கோவில்
  மன்னுதிருக் கோபுரத்து வந்து தாழ்ந்து
தக்கதிருக் கடைக்காப்புச் சாற்றித் தேவர்
  தம்பெருமான் திருவாயிலூடு சென்று
புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு
  போற்றெடுத்துப் படியின்மேல் பொருந்த வீழ்ந்தார். "

சேக்கிழார்—சம்பந்தர் புராணம் 1031.

கோபுரத்தைக் கண்டவுடன் "விடையவன்" என்று தொடங்கிப் பதிகம் பாடிக் கோபுர வாயிலை அடைந்தவுடன் திருக்கடைக் காப்புச் சாத்தினார். இப்பதிகம் ஒன்றுதான் இவர் திருவொற்றியூரிற் பாடியது நாம் ஓதி இன்புற இன்றும் விளங்குகின்றது.

"பொன்திரள்கள் போல்புரிந்த சடையார் தம்பால்
பொங்கி எழும் காதல் மிகப் பொழிந்து விம்மிப்
பற்றி எழும் மயிர்ப்புளகம் எங்கும் ஆகிப்
பரந்திழியும் கண்ணருவி பாயநின்று
சொற்றிகழும் திருப்பதிகம் பாடி ஏத்தித்
தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்டரோடும்
ஒற்றிநகர் காதலித்து அங்கு இனிது உறைந்தார்
உலகுய்ய உலவாத ஞானம் உண்டார்."

சேக்கிழார்—சம்பந்தர் புராணம் **1032.**

பெருமான் திருமுன்பு பாடியதாக இங்கே கூறப்பட்ட திருப் பதிகம் கிடைத்திலது. அவர் பாடிய முற்கூறிய திருப்பதிகத்தின் பாடல்கள் மூன்று கீழே குறிப்பிடுவோம் :—

"விளிதரு நீரும் மண்ணும் விசும்போடு அனல் காலும் ஆகி
அளிதரு பேரருளான் அரனாகிய ஆதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய் கமழ்கொன்றையினோடு அணிந்த
ஒளிதரு வெண்பிறையான் உறையும் இடம் ஒற்றியூரே".

"பெற்றியால் பித்தன் ஒப்பான் பெருமான் கருமான் உரிதோல்
சுற்றியான் சுத்திசூலம் சுடர்க்கண்ணுதல் மேல்விளங்கத்
தெற்றியால் செற்று அரக்கன் உடலைச் செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றும் ஆள்வான் உறையும் இடம் ஒற்றியூரே."

"திருவினார் போதினானும் திருமாலும் ஓர் தெய்வமுன்னித்
தெரிவினாற் காணமாட்டார் திகழ் சேவடி சிந்தை செய்து
பரவினார் பாவமெல்லாம் பறையப் படர் பேரொளியோடு
ஒருவனாய் நின்ற பெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே."

இனி, சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு எழுந்தருளியமை கூறுவோம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

தென்கயிலை எனப்பெறும் திருக்காளத்தியில் கைதொழுது தமிழ்ப்பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் அங்கிருந்து புறப்பட்டு ஒற்றி யூரார் எதிர்கொண்டழைத்துவரத் திருவொற்றியூரை அடைந்து திருக்கோபுரத்தைக் கும்பிட்டுக் கோவிலின் உள்ளே புகுந்தார்.

"வானை அளக்கும் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்துவளர்
கூனல் இளவெண் பிறைச்சடையார் கோவில் வலம்கொண்டு எதிர்குறுகி
ஊனும் உயிரும் கரைந்துருக உச்சிகுவித்த கையினுடன்
ஆனகாதலுடன் வீழ்ந்தார் ஆரா அன்பின் ஆரூரர்."

சேக்கிழார் பெரியபுராணம்—3357.

கோவிலின் உள்ளே போவதற்கு முன் கோவிலை வலம் வந்து பெருமான் திருமுன்பு சென்றவுடன் ஊனும் உயிரும் கரைந்து உருக உச்சி மேற் குவித்த கைகளுடனே ஆரா அன்புடையவராகிய திருவாரூரர் கீழே விழுந்து கும்பிட்டார்; "பாட்டுப்பாடி" என்று தொடங்கும் பதிகம் பாடினார்.

"பாட்டுப் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோவில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றியூரே."

ஏற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றும் திரைவாய் ஒற்றியூரே."

பாடிய சுந்தரனார் அறிவு பரவசமாகி நின்றார்.

"பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடுவிருப்பில் பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர் போற்றத்
தேடும் அயனும் திருமாலும் அறிதற்கரிய திருப்பாதம்
கூடும் காலங்களில் அணைந்து பரவிக்கும்பிட் டினிதிருந்தார்."

பெரிய புராணம்—3359.

ஆலால சுந்தரரைக் காதலித்துச் சிவபெருமான் திருவருளால் ஏவப்பட்டுக் கயிலைமலை நீங்கி அனிந்திதையார் ஞாயிறு என்னும் ஊரிலே வேளாண்மரபிலே பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் முன்னை உணர்வோடு வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தார்.

இவ்வம்மையின் திருமணம் பற்றித்

" தாயரோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
ஏயும் மாற்றம் அன்று இது ; எம்பெருமான் ஈசன் திருவருளே
ஏய ஒருவர்க்கு உரியது யான், வேறு என் விளையும் ? என
வெருவுற்று
ஆய உணர்வு மயங்கி மிக அயர்ந்தே அவனிமிசை விழுந்தார்."

பெரிய புராணம்—3365.

" அம்மே ! என் இங்ஙனம் விழுந்தாய் ?" என்று பெற்றோர் வினவினர்.

" என்று தம்மை ஈன்றெடுத்தார் வினவ, மறைவிட்டு இயம்புவார்
இன்று என் திறத்து நீர் மொழிந்த இது என் பரிசுக்கு இசையாது
வென்றி விடையார் அருள் செய்தார்க்கு உரியேன்யான் இனிமேல்
சென்று திருவொற்றியூர் அணைந்து சிவனார் அருளிற் செல்வன்என "

மறுமொழி கூறினர் சங்கிலியார். பெற்றோர் அம்மையைத் திருவொற்றியூருக்கு அழைத்து வந்து கோவிலுக்கு அருகே கன்னி மாடத்தில் இருக்கச் செய்து விடைகொண்டு தம்மூருக்குச் சென்றனர்.

திருக்கயிலை மலைமேல் பூமாலை தொடுக்கும் பணி செய்திருந்த தன்மையை நினைந்து சங்கிலியார் இங்கும் மலர்ப்பூ மண்டபத்தில் திரை அமைத்து அதனுள்ளே இருந்துகொண்டு காலங்களுக்கு ஏற்ப, புற்றிடங்கொண்டார் திருமுடியிலே சாத்தத் திருமலர் மென்மாலை தொடுத்துக்கொடுத்து வணங்கியிருந்தார். சங்கிலியாரைச் சுந்தர மூர்த்திகள் திருமணம் செய்துகொள்ளும் காலம் நெருங்கியது. ஒருநாள் சுந்தரனார் திருக்கோவிலின் உள்ளே புகுந்தார். பெருமானைக் கும்பிட்டு வலம் வருவார் மண்டபத்திலே சங்கிலியாரைக்

கண்டார்; தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அப்பெண் யார் என வினவி அப் பெண்ணின் வரலாற்றை அருகிருந்தார் கூற அறிந்தார்.

"நான் கயிலாய மலையிலே பூந்தோட்டத்திலே கண்டு மையல் கொண்ட இரண்டு பெண்களின் காரணமாகவே இப்பிறவியை எடுத்தேன். வேறு ஒரு பெண்ணை யான் மணக்கப் போகும்போது அம்மணப் பந்தலிலே கிழவராக வந்து அப் பெண்ணை மணவாது தடுத்து பெம்மான் அடியேனை ஆட்கொண்டார். கயிலை மலைமேல் இருந்த பெண்களில் ஒருத்தி கமலினி திருவாரூரிற் பிறந்து பரவை என்னும் பெயரோடு வளர்ந்து என்னைப் புற்றிடங் கொண்டார் திருவருளால் மணந்து கொண்டாள். மற்றும் ஒரு பெண்ணாகிய அனிந்திதைதான் இந்தச் சங்கிலிபோலும்!" என்று தெளிந்தார் தெய்வத் தன்மை மாறாத சுந்தரனார்.

சுந்தரமூர்த்திகள் பெருமானை வேண்டினார்; 'இப் பெண் கிடைப் பாளோ?' என மயங்கினார். அப்போது;

"உம்பர் உய்ய உலகுஉய்ய ஓல வேலைவிடம் உண்ட
தம்பிரானார் வன்றொண்டர் தம்பால் எய்திச் சங்கிலியை
இம்பர் உலகில் யாவருக்கும் எய்தல் ஒண்ணா இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றோம், கொண்ட கவலைஒழி."
என்ன

"அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய ஆண்டு கொண்டருளி
ஒன்றும் அறியா நாயேனுக்கு உறுதி அளித்தீர் உயிர்காக்க
இன்றும் இவளை மணம்புணர்க்க என்று நின்றீர் எனப் போற்றி
மன்றல் மலர்ச் சேவடியிணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார் வன்
றொண்டர்."

ஏயர்கோன் புராணம்—235,236.

சிவபெருமான் சங்கிலியாருடைய கனவிலே தோன்றி, "தவத் தாற் சிறந்த சங்கிலியே! கேள்; திருவெண்ணெய் நல்லூரில் என்னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரன் உன்னை விரும்புகிறான்; நீ அவனை மணந்துகொள்" என்று கூறினான். அதற்கு அவ்வம்மை இசைந்து "திருவாரூரில் திருமண வாழ்க்கை உடையவர் ஆயிற்றே

அவர் !" என்று கூறினார். பெருமான், " அவன் உன்னைவிட்டுப் பிரியாதிருக்க அவனிடம் சபதம் வாங்கிக்கொள் " எனப் பகர்ந்தான்; பின் பெருமான் சுந்தரரிடம் சென்று, " அவள் உன்னை மணக்க இசைந்தாள். நீ அவளை விட்டுப் பிரியாதிருப்பதாகச் சபதம் செய்து கொடுத்தல் வேண்டும் " என்று கூறினான். பெருமான் எழுந்தருளியிருக்கும் ஊர்களெங்கும் சென்று கும்பிடும் கடப்பாடுடைய சுந்தரனாருக்கு இச்சூள் இடையூறாக இருக்குமல்லவா ? அதனால் அவர் பெருமான் திருவடிகளில் விழுந்து ஒரு வேண்டுதல் விடுக்கின்றார்:

" சங்கரர்தாள் பணிந்துஇரந்து தமிழ் வேந்தர் மொழிகின்றார்
மங்கையவள் தனைப் பிரியா வகை சபதம் செய்வதனுக்கு
அங்கவளோடு யான் வந்தால் அப்பொழுது கோவில்விடத்
தங்குமிடம் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டும் எனத் தாழ்ந்
தார்."

எயர்கோன் புராணம்—248.

அவ் வேண்டுதலுக்குச் சிவபெருமான் இசைந்தான். பின் சிவபெருமான், மறுபடியும் சங்கிலியாரிடம் வந்து " நங்காய் ! சுந்தரன் சூள் உரைக்க வருவான். அப்போது நமக்கு எதிரே சபதம் செய்வதற்கு இசையாமல் மகிழ மரத்தினடியினிலே சூள்கொள்க" என்று கட்டளையிட்டான். சங்கிலிநாச்சியாருக்குத் தூக்கம் வரவில்லை. அவர்தம் தோழியரை எழுப்பி நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட தோழியர் அச்சமும், அதிசயமும், மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்தார்கள்.

பொழுது விடியும் நேரமாயிற்று. திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் பணி மேற்கொண்டு சங்கிலியார் தோழிமாருடன் கோவிலுக்குச் சென்றார். அங்கே அவ்வம்மையார் வரவினை எதிர்பார்த்திருந்த சுந்தரர் அவர்களை நெருங்கிப் பெருமான் கட்டளையைக் கூற, அம்மை மறுமொழி கூறாது, நாணத்துடனே தம் தோழியரோடு, உள்ளே சென்றார். சுந்தரர் அவர்கட்குப் பின் சென்று " உன்னை

நான் என்றும் பிரியேன்' எனச் சூள் இயம்பப் பெருமான் திரு முன்பு வாருங்கள்" என்று கூற, சங்கிலியாருடைய கனவைக் கேட்டறிந்திருந்த தாதியர் பின்வருமாறு கூறினார்கள் :

" 'எம்பெருமான் இதற்காக எழுந்தருளி இமையவர்கள்
தம் பெருமான் திருமுன்பு சாற்றுவது தகாது' என்ன
நம் பெருமான் வன்தொண்டர் நாதர் செயல் அறியாதே
'கொம்பு அனையீர்! யான் செய்வது எங்கு?' என்று கூறுத
[லும் ;"

" மாதரவர் 'மகிழ்க்கீழே அமையும்' என, மனம் மருள்வார் ;
'ஈதுஅலர் ஆகிலும் ஆகும் இவர் சொன்னபடி மறுக்கில் ;
ஆதலினால் உடன்படலே அமையும்' எனத் துணிந்து, 'ஆகில்
போதுவீர்' என மகிழ்க்கீழ் அவர் போதப் போயணைந்தார்."

மகிழ மரத்தின்கீழ்ச் செய்த சபதம்

" தாவாத பெருந் தவத்துச் சங்கிலியாரும் காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம் வந்து
'மேவாது இங்கு யான் அகலேன்' என நின்று விளம்பினர்
பூவார் தண்புனற் பொய்கை முனைப்பாடிப் புரவலனார்."

" மேவியசீர் ஆரூரர் மெய்ச்சபத வினை முடிப்ப
காவியின் நேர் கண்ணாரும் கண்டு மிகமனம் கலங்கிப்
'பாவியேன் இது கண்டேன் தம்பிரான் பணியால்' என்று
ஆவி சோர்ந்து அழிவார் அங்கு ஒரு மருங்கு மறைந்து அயர்ந்
[தார்."

அன்றிரவு புற்றிடங் கொண்டார் திருவொற்றியூரில் வாழ்ந்து கொண்டிருந்த தொண்டர்கள் கனவில் தோன்றி, " நம் சுந்தர னுக்கு நம் சங்கிலியைக் கலியாணம் செய்து கொடுங்கள்" என்று கட்டளையிட்டார். திருமணம் திருவருளால் இனிது நிறைவேறியது. சுந்தரர், சங்கிலியாருடன் மகிழ்ந்து அமர்ந்து காலங்கள் தோறும் எழுத்தறியும் பெருமானைக் கும்பிட்டு இனிதிருந்தார்.

பொங்கு தமிழ்ப் பொதிய மலையிலே பிறந்து சந்தனத்தின் நறுமணம் கலந்து, குளிர்ந்த சாரலிலே வளர்ந்த கொழுமையான தென்றல் அங்கு வந்து வீசிற்று. அக்காலத்திலேதான் திருவாரூரில் வசந்த காலத் திருவிழா நடைபெறும். அதனை நினைந்தார் சுந்தரனார். அப்போது, திருவாரூர்த் தியாகேசன் ஆகிய வீதிவிடங்கப் பெருமான் திருவோலக்கத்தையும், அதன் இடையே நிகழும் பரவை நாச்சியாருடைய ஆடலையும், பாடலையும் அவர் எண்ணினார். " அந்தோ திருவாரூர்ப் பெருமானைப் பூங்கோவில் அமர்ந்தானைப் புற்றிடங் கொண்டிருந்தானை ஈங்கு நான் மறந்திருந்தேனே ! " என்று மனமிக உடைந்தார். உடனே அவர் திருவாரூர்ப் பெருமானை நினைந்து,

" பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோய் அது இதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினை மாமணி தன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே ?"

" எழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத்தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே ? "

" வங்கமலி கடல் நஞ்சை வானவர்கள் தாம் உய்ய
நுங்கி அமுது அவர்க்கு அருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோடு எனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்கு உலக்கப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே ? "

எனப் பதிகம் பாடி நெஞ்சு நெக்கு உருகினார். சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் இவர் மறுபடி திருவாரூரை நினைந்துகொண்டு ஆதிபுரி ஒற்றி கொண்டானைக் கும்பிட்டுத் திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டார். அவர் செய்த சபதத்தினால் காலை முன் எடுத்து வைக்கும் இடம் தெரியாது அவருடைய கண்கள் மறைந்தன ; அதனால் அவர் மூர்ச்சித்தார் ; சிறிது தெளிந்து செய்வது இன்னதென அறியாது திகைத்துப் பெருமூச்சு விட்டு, " நான் செய்த சூளுறவு

தவறியதால் இத் தீவினை வந்து, எய்தியது. ஆதலினால் இத்துயர் நீங்க எம்பெருமானைப் பாடுவேன் " எனப் பின்வருமாறு திருவொற்றியூர்ப் பெம்மானைப் பாடிமயங்கினார் :

" அழுக்கு மெய் கொடுஉன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலது ஒன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப் பெயர் அல்லால்
மற்று நான் அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே !"

" வழித்தலைப் படுவான் முயல்கின்றேன்
உன்னைப்போல் என்னைப்பாவிக்க மாட்டேன்
சுழித்தலைப்பட்ட நீரது போலச்
சுழல்கின் றேன்சுழல் கின்றதென் உள்ளம்
கழித்தலைப்பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீ அருளாயின செய்யாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே !"

" மானை நோக்கியர் கண் வலைப்பட்டு
வருந்தி யானுற்ற வல் வினைக்கு அஞ்சி
தேனை ஆடிய கொன்றையி னாய்உன்
சீலமும் குணமும் சிந்தியாதே
நானும் இத்தனை வேண்டுவது அடியேன்
உயிரொடும் நரகத் தழுந்தாமை
ஊனம் உள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றியூர் எனும் ஊருறைவானே ! "

" மகத்தில் புக்கது ஓர் சனி எனக்கு ஆனாய்
மைந்தனே மணியே மணவாளா
அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால்
'அழையேல், போ, குருடா!' எனத் தரியேன்

முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன்
முக்கணா ! முறையோ ? மறை ஓதீ !
உகைக்கும் தண்கடல்ஓதம் வந்து உலவும்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே !"

திருவொற்றியூருக்குச் சுந்தரர் வந்ததும், அங்கே சங்கிலியார் வந்திருந்ததும், இருவரும் ஒருவரையொருவர் கண்டதும், பெருமான் சபதம் செய்வித்ததும், திருமணம் நிகழ்ந்ததும், சுந்தரர் திருவாரூரை நினைந்து புறப்பட்டதும், அவருடைய கண்கள் அவிந்ததும் ஆகிய செய்திகள் மிக்க வியப்பாகவே இருக்கின்றன! அவைகளில் தெளிவு காணுவதற்குப் பெரிய புராணத்தை நாம் கண்டு அலசி ஆராய்தல் வேண்டும்.

பெரிய புராணம் என்பது சேக்கிழார் பெருமானால் " உலகெலாம் " என்று கூத்தப் பெருமானால் சிதம்பரத்தில் வைத்து அடியெடுத்துக் கொடுக்கப் பெற்றுப் பாடப் பெற்ற ஓர் தெய்வப் புராணம். இது " திருத்தொண்டர் புராணம் " என்றே ஆசிரியரால் பெயரிடப் பெற்றது ; அறுபத்து மூன்று நாயன்மார்களாகிய திருத்தொண்டர்களுடைய தெய்வ வரலாற்றைக் கூறுவதனால் இது திருத்தொண்டர் புராணம் ஆயிற்று. ஆனால் ஆராய்ந்து பார்க்கும்போது இப் பெரிய புராணம் பெரியார்களாகிய திருத்தொண்டர்களைப் பற்றிய வரலாறு கூறுவதோடு சுந்தரமூர்த்தி நாயனாராகிய பெரியாரைப் பற்றிய புராணமாகவே அமைந்திருக்கின்றது. அது சுந்தரமூர்த்தி நாயனாருடைய வரலாற்றில் அதாவது திருமலைச் சிறப்பில் தொடங்கி இடையிடையே அவரோடு தொடர்புடைய நாயன்மார்கள் வரலாறுகளிலும் அவர் வரலாறு கூறப்பெற்றுக் கடைசியில் அத் திருமலையாகிய கயிலைக்கு அவர் வெள்ளையானைமேல் எழுந்தருளிய வெள்ளானைச் சருக்கத்துடன் முடிகிறது. ஆதலின் பெரிய புராணம் சுந்தரர் புராணமே.

இந்நூலின் முதற்கண் திருமலை என்று புகழப் பெறும் திருக் கயிலாய மலைச் சிறப்புக் கூறப்பெறுகிறது. அம் மலைமேல் பெருமானுக்கு அணுக்கத் தொண்டராக இருக்கிறார் ஆலால சுந்தரர் ; அவர் வழக்கம் போல ஒருநாள் பூங்காவிற் சென்று பெருமானுக்குப் பூ எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே பார்வதி தேவியாரின்

அணுக்கத் தோழியராகிய அனிந்திதை, கமலினி என்பார் பூவெடுக்க வந்தனர். அப்போது அவர்கள் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர். பெருமானும், பெருமாட்டியும் அவர்களைப் வழியிற் சென்று பிறந்து மணந்து இன்பம் நுகர்ந்து வருமாறு கட்டளை யிடுகின்றனர்.

இந்த இடத்தில் நாம் ஒன்று ஆராய வேண்டியதிருக்கிறது; எத்தனை, எத்தனை காலமாக ஒரே இடத்தில் இருந்து வந்த அவர்கள் ஒருவரையொருவர் இதன் முன் காணாதிருந்தனரா? பலகாற்கண்டே யிருப்பர்; பழகியும் இருப்பர். ஆண்டவன் திருவருள் இப்போதுதான் அவர்கள் காதல் கொள்ளுமாறு தூண்டியது; ஏன்?

"அந்தமில் சீர் அனிந்திதை ஆய்குழற்
கந்தமாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசன் அருள் என;

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத் தொண்டத் தொகை தரப்
போதுவார் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியிற் கண்ணினார்."

திருமலைச் சிறப்பு 24,25.

அனிந்திதையும் கமலினியும் வானவர் ஈசனாகிய சிவபெருமான் திருவருள் என வந்து மலர் கொய்தனர்; அப்போது ஈசன் திருவருள் என அங்கே போதுவாராகிய சுந்தரருடைய மனத்தை ஈசன் திருவருள் அனிந்திதை கமலினிமேற் போக்கிட அப்பெண்க ளும் அக்காட்சியில் அமைந்தார்கள். பெண்கள் இருவரும் சுந்தரரைக் கண்டு காதல் கொண்டிருத்தல் கூடும்; ஆனால் ஒரு சமயத்தில் ஒரு பொருளின் மேலேதான் செல்லும் இயல்புடைய தம் மனத்தைச் சுந்தரர் இரு பெண்கள் மேலும் செலுத்தி இருவரி டமும் காதல் கொண்டனர் என்பது இயற்கைக்கும், நூல் மரபுக்கும் மாறுபட்டிருக்கின்றது. ஆதலின் ஈசன் திருவருளின் தூண்டுதலே இது என்பதனை ஆசிரியர் சேக்கிழார் திருவருள் காட்டக் குறிப்பிடு கின்றார். ஈசனார் அருள் இவர்கள் மண்மேற் சென்று காதல் இன்பம்

நுகர்வதற்காகவா தூண்டிற்று? இல்லை, இல்லை; தீதிலாத் திருத் தொண்டத் தொகையைச் சுந்தரர் வழியே தருவதற்கும்; அதனால் தென் திசை பெருவாழ்வு பெற்று உய்வதற்கும் ஈசன் திருவருள் சுந்தரர் மனத்தை அவ்விரு பெண்கள் மேலே செல்லுமாறு தூண்டியது. மாதவம் செய்தது தென்திசை; எந்நாட்டவருக்கும் இறைவனாகிய சிவபெருமான் தென்னாடு உடையவனாக . எழுந்தருளியிருக்கின்றான். தென்னாட்டிலுக்கு உரியதாகத் தோன்றிய பெரிய புராணமும் எந்நாட்டவர்க்கும் உரியதாகி அவர்களுக்கு முத்தி நெறியாகிய பத்தி நெறியினைக் காட்டுவது. பெரிய புராணத்துக்கு முதல் நூல் திருத் தொண்டத் தொகை; அது தோன்றியதனிலேயே பெரிய புராணம் தோன்றிற்று.

சுந்தரமூர்த்தி நாயனார் மூலமாகத் திருத்தொண்டத் தொகையை உலகத்துக்கு அருளி அனைவரையும் வாழ்விக்கவே சிவபெருமான் இக்காதல் நிகழ்ச்சியை அமைத்தருளினான்.

> " ஆதிமூர்த்தி அவன் திறம் நோக்கியே
> ' மாதர் மேல் மனம் வைத்தனை; தொல்புவி
> மீது தோன்றி அம் மெல்லிய லாருடன்
> காதல் இன்பம் கலந்து அணைவாய் ' என்றான். "

திருமலைச் சருக்கம்—27.

" பெண்கள் மேல் மனம் வைத்தாய்; ஆதலின் அவர்களுடன் தென்னாட்டிற் பிறந்து அப் பெண்களோடு காதல் இன்பம் கலந்து அடைந்து இங்கே அவர்களுடன் திரும்ப வந்து சேருவாய் " என்று சிவபெருமான் கட்டளையிட்டான். இதுகாறும் நீ தனியே எம்மை வழிபட்டாய். அவ்விருவருடனும் சேர்ந்து கணவனும் மனைவியுமாக எம்மீது காதலாகி அதனால் வரும் இன்பத்தை இருவருமாகக் கலந்து பெற்று இத்திருமலைக்குத் திரும்புவாயாக " என்று பெருமான் கூறினான் என்பது இதன் திரண்டபொருள். " கணவனும் மனைவியும் உடலோடு உறவு கொண்டு அடையும் இன்பம் சிற்றின்பம்; அது இம் மண்ணுலகத்தோடு சரி; அதுவும் அந்நொடியில் இன்பம்போல நின்று உடலில் தளர்வு, நோய் முதலிய துன்பம் தருவது. கணவனும் மனைவியும் உயிர் கலந்து இறைவன் மேல் காதல் கொண்டு பெறும் நிலையான இன்பமோ

அழியாத பேரின்பம். இந்த உண்மையினை உலகினுக்கு எடுத்துக் காட்டி நல்வழியைப் பற்றி மெய்யின்பம், அழியா இன்பம் பெறுமாறு செய்து வருக " என்பது இதன் விளக்கம்.

" கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்;
' செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்து ஆண்டருள் செய் ' என. "

திருமலைச் சருக்கம்—28.

சுந்தரனார் தாம் பெருமானைப் பிரிய நேர்ந்தது கண்டு கலங்கினார். " எம்பெருமான் திருவருள் மனத்தைப் போக்கினாலும் அதனையும் அவன் அருள் அறிவினாலே தடுத்து நிற்பதுதான் பெருமை. ' செயற்கு அரிய செய்வார் பெரியர் ' என்றார் திருவள்ளுவ நாயனார். " அவ் வருள்வழி இருந்தும் அதனைப் பயன்படுத்தாது மாதர் மேல் மனத்தைச் செலுத்தினேனே சிறுமையேன் " என்று கலங்கினார் சுந்தரர். " மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்து ஆண்டு அருள் செய் " என்று வேண்டுகின்றார் அவர்; அருட் கண்களை உடைய நாதனாகிய பெருமான் அவ்வேண்டுதலுக்கு இசைந்தருளினான்.

மண்ணுலகிற் பிறந்து வளர்ந்து பருவம் எய்திய நம்பியாரூரர் என்னும் சுந்தரனார் சடங்கவி சிவாசாரியாருடைய திருமகளாரை மணக்க அவ்வம்மை பக்கத்தில் மணவறையில் இருந்தபோது அவரைச் சிவபெருமான் கிழவனாகி வந்து தடுத்தாட் கொள்கின்றான். இங்ஙனம் தடுத்தாட் கொண்டது வரை நம்பியாரூரர் மையல் மானுடமாய் மயங்கினார். ஆண்ட உடனே அவர் தம் முன்னை நிலைமையினை உணர்கின்றார். சுந்தரருடைய வேண்டுதல், " அனிந்திதை, கமலினி யோடு மணந்து உடல் இன்பம் பெறும்போதும் மயங்கி அழிந்து விடாதபடி தடுத்தாட் கொள்ளல் வேண்டும் " என்பதுவே.

அனிந்திதை, கமலினி என்றமையால் முன் வைத்துக் கூறிய அனிந்திதை மூத்தவளாகவும் கமலினி இளையவளாகவும் இருத்தல் கூடும். ஆனால் கமலினியைத்தான் சுந்தரர் முதலில் மணக்கின்றார். சடங்கவி சிவாசாரியார் மகளை மணவாமல் தடுத்தாட்கொண்ட பெருமான் அவரை ஊரூராகச் சென்று தன்னைப் பாடும்படி கட்டளையிடுகிறான்.

சுந்தரர் பல தலங்களைக் கும்பிட்டுப் பாட்டும் பாடிச் சிதம்பரத்தைச் சேர்ந்து பாடும்போது பெருமான் அவரைத் திருவாரூருக்கு வருமாறு கட்டளையிடுகிறான். திருவாரூர் மக்கள் எதிர்கொள்ள நம்பியாரூரர் அப்பேரூரை அடைந்து பெருமான் திருமுன்பு சென்று கீழே விழுந்து கும்பிட்டு இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்று இன்னிசையோடு கூடிய தண் தமிழ் மாலை பாடினார்.

" வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவனார் அருளால் ஓர் வாக்குத்
'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்
நாம் முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்று நீ கொண்ட கோலமே
என்றும் புனைந்து நின் வேட்கை தீர
வாழி மண் மேல் விளையாடுவாய் ' என்று
ஆரூரர் கேட்க எழுந்ததன்றே. "

தடுத்தாட்கொண்ட புராணம்—127.

நம்பியாரூரர் திருவருளே துணையாகச் சைவ விடங்கின் அணி புனைந்து சாந்தமும் மாலையும் தாரும் ஆகி மெய்வளர் கோல மெல்லாம் புனைந்து மிக்க பெருந் தவ வேந்தர் போல நாடோறும் வன் மீக நாதனைக் கும்பிட்டு வந்தார். விடங்கு—அழகுசெய்த திருமேனி. ஒருநாள் திருவருளால் அங்கே முன்னரே வந்து பிறந்திருந்த கமலினியாகிய பரவையாரைக் கண்டார் சுந்தரனார். கண்டவர்,

" கற்பகத்தின் பூங் கொம்போ ! காமன்தன் பெருவாழ்வோ !
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ ! புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ !
அற்புதமோ ! சிவன் அருளோ ! அறியேன் " என்று
[அதிசயித்தார். "

தடுத்தாட்கொண்ட புராணம்—140.

பரவையாரைச் சுந்தரனார் சிவன் அருளாகவே காண்கின்றார். அவ்வம்மை மறைந்து வீடுசென்ற போதும் அவர் அவ்வம்மையின் காட்சியை "ஈசனார் அருள்" என்றே காண்கின்றார்.

"என் சிந்தை மயக்கிய
ஈசனார் அருள் எந் நெறிச் சென்றதே?"

"உம்பர் நாயகர்தம் கழல் அல்லது
நம்புமாறு அறியேனை நடுக்குற
வம்புமால் செய்து வல்லியின் ஒல்கி இன்று
எம்பிரான் அருள் எந்நெறிச் சென்றதே?"

தடுத்தாட்கொண்ட புராணம் **152–153.**

"எந்தையார் அருள் எந்நெறிச் சென்றதே?" என்று சுந்தரர் பரவையாரைத் தேடுகிறார். "பரவை" என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சுந்தரர் கூறுவதாக வரும் பாடல் சொல் ஆராய்ச்சியாளருக்கு ஒரு விருந்து—

தடுத்தாட்கொண்ட புராணம்—பாடல் **148.**

"பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பு அல்குல்
ஆர் பரவை அணி திகழும் மணி முறுவல் அரும் பரவை
சீர் பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர் பரவை இடைப்பட்ட என் ஆசை எழுபரவை."

ஒரு நாள் சுந்தரனார் பூங் கோவில் சென்று, "அடியார்க்கு அடியேன் ஆவேனோ?" என்று வேண்டி நிற்கப் பெருமான்,

"தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்.

"தம் பெருமான் கொடுத்த மொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம் பொருளால் திருத் தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தான் அருளும் உணர்வு பெற உலகு ஏத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடி அவர் எதிர்பணிந்தார்."

தடுத்தாட் கொண்ட புராணம்—**202.**

திருத்தொண்டர்களுடைய தொகையை விவரமாக அருளுவதற்காகவே சிவபெருமான் சுந்தரரைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பினார் என்று முன்னரே கூறினோம்; இப்போது அதற்கு ஏற்ற உணர்வையும் அருளினார்; அந்த அருள் உணர்வைப் பெற்று உலகெல்லாம் புகழ்ந்து கொண்டாடி நன்னிலை காணத் திருத்தொண்டத் தொகையைச் சுந்தரனார் பாடி முடித்தார்., தமிழ் நாட்டிற் சுந்தரர் வந்து பிறந்த காரியம் நிறைவு பெற்றது.

திருவாரூரிற் கமலினியாராகிய பரவையாரைச் சுந்தரர் மணந்த செய்தி கூறினோம்; அனிந்திதையாகிய சங்கிலியாரை மணந்த செய்தியையும் முன்னரே கூறினோம். சுந்தரருக்கு 'இப் பெண்களோடு சிற்றின்பத் திளைப்பிற் பட்டு அழிந்து போகாமல் தடுத்தாட் கொள்ள வேண்டும்' என்பதுவே நீங்கா எண்ணம். சங்கிலியாரைக் கண்ட போது,

"இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்தி இவள் மற்றையவளாம் என மருண்டார்."

முன்னை உணர்வுடனேயே அவர் வாழ்ந்து வந்தார். சுந்தரருக்காகப் பெருமான் சங்கிலியாரிடம் இருமுறை இரவில் தூது சென்றான்; முதல் முறை அவ்வம்மையைத் திருமணத்துக்கு இசையச் செய்ய; மறுமுறை மகிழின்கீழ்ச் சுந்தரரைச் சூளுரைக்கச் செய்ய. இங்ஙனமே திருவாரூரிலும் பரவையார்பால் நள்ளிரவில் இருமுறை தூது செல்கிறான் சிவபெருமான்.

'திருவாரூருக்கு வா' என்று பெருமான் சிதம்பரத்தில் அருளியமையால் திருவாரூரையே சுந்தரர் தம் முதன்மைப் பதியாகக் கொண்டார். இருந்தாலும் திருவாரூருக்கும் திருவொற்றியூருக்கும் பல பொருத்தங்கள் உள்ளன. முதலாவது ஆர் ஊர், இரண்டாவது ஒற்றி ஊர். பொருந்தியிருத்தல் என்ற பொருளையே ஆர் என்பதும் ஒற்றி என்பதும் தருவன. ஆரூரிலும் ஒற்றியூரிலும் இறைவன் புற்றிடங் கொண்டான், வன்மீகநாதன்; வன்மீகம்—புற்று. ஆரூரிலும் ஒற்றி யூரிலும் தியாகராசனே எழுந்தருள்மூர்த்தி. எம்பெருமான் இவ்வூர்களில் என்றும் பொருந்தியிருப்பவன்; ஊழிக் காலத்து வெள்ளம் வாராமல் தடுத்து ஆண்டவன் ஒற்றியிருந்த இடமே ஒற்றியூர்.

" மின்போல் மறையும் சங்கிலியார்தம்மை விதியாற் கண்ணுற்றார்." என்று கூறுகிறார் சேக்கிழார் பெருமான். (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் 226). சுந்தரர் விலகிட இருந்தாலும் இழுத்துக் கட்டும் சங்கிலி போன்றவர் ; சங்கிலியார் என்ற பெயர் மிகவும் பொருந்தும் பொருந்தும்! அந்தச் சங்கிலியிலிருந்து விரைவில் விடு படுவதற்காகவே சுந்தரனார் கள்ளச் சத்தியம் செய்யவும் ஆண்டவன் வழியாகவே முயல்கின்றார். அவர் தமக்குப் பரவையாரையும் சங்கிலி யாரையும் தந்தருளியவன் திருவாரூர் இறைவன் என்றே உணர்ந்து பாடுகின்றார். பின் வருவன முன்னமே காட்டப் பெற்றனவேனும் நினைவுக்காக மீண்டும் இங்கே குறிப்பிடப் பெறுகின்றன :

" ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே."

" வங்கமலி கடல் நஞ்சை வானவர்கள் தாம் உய்ய
நுங்கிஅமு தவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோடு எனைப் புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என் ஆரூர்இறைவனையே!"

(சுந்தரர் தேவாரம்)

இங்ஙனமே சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாரோடு கொடுங் கோளூர் சென்றிருந்தபோது திருவாரூரை நினைந்து பாடி உடனே புறப்படுகின்றார்:

" நாவலர்தம் பெருமானும் திருவாரூர் நகர் ஆளும்
தேவர் பிரான் கழல் ஒரு நாள் மிக நினைந்த சிந்தையராய்
'ஆவியை ஆரூரானை மறக்கலுமாமே' என்னும்
மேவிய சொல் திருப்பதிகம் பாடியே வெருவுற்றார்."

சேரமான்பெருமாள் புராணம்—156

" பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை" என்று தொடங்குகின்றது அப்பதிகம். திருவாரூர்தனை நினைந்து சென்று தொழுவேன் என்று தொண்டருடன் கொடுங்கோளூரை நீங்கி அவர் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார்.

புது மணப் பெண் சங்கிலியார் என்ன, பெரு நட்புப் பேரரசர் கவிச் சக்கரவர்த்தி சேரமான் பெருமாள் என்ன இவர்களுடைய கூட்டுற விலும் திருவாரூர்ப்பெருமானைக் கண்டு கும்பிடும் வாழ்வே பெரிது என்று கருதினார் சுந்தரர்.

தம்பிரானுக்குச் சுந்தரர் தோழரேயாயினும் தவறு செய்த போது தக்கவாறு தண்டிப்பதே தம்பிரானுடைய திருவருள். அதனால் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டிச் சுந்தரனார் காலை அடியெடுத்து வைத்தவுடன் தம்பிரான் அவருடைய கண்கள் இரண்டும் அவியுமாறு செய்தான். அந்த இடம் இன்றும் " காலடிப் பேட்டை " என்று வழங்கப்பெறுகிறது.

தாம் தவறு செய்தாலும் தம்மைத் தம்பிரான் மன்னித்து விடுவான் என்ற துணிவினாலேயே சுந்தரர் தவறு செய்தார். மேலும் திருமுல்லைவாயிற் பதிகத்திலே அவர்

" மற்று நான்பெற்றது ஆர்பெற வல்லார் ?
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணம்எனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன். "

என்று பாடித் தாம்படும் துயரங்களைப் போக்கியருள வேண்டுகின்றார்.

மேலும் அவர் திருவெண்பாக்கப் பதிகத்திற் பின் வருமாறு பாடுகின்றார் :

" பிழையுள்ளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய். "

(சுந்தரர் தேவாரம்)

சுந்தரர் தம்முடைய வேண்டுதலுக்கு இசைந்து ஒற்றியூர்ப் பெருமான் மகிழமரத்தின்கீழ் இருந்துகொண்டு அவரை அறி

யாமே. அச் செய்தியைச் சங்கிலியாரிடம் தெரிவித்த தன்மையை நினைந்து அத் திருவெண்பாக்கத்தில் பெருமானை நோக்கிப் பின் வருமாறு கூறுகிறார்:

“ பொன்நவிலும் கொன்றையினாய்! போய் மகிழ்க் கீழ் இரு என்று
சொன்ன எனைக் காணாமே சூளறவு மகிழ்க் கீழே
என்ன வல்ல பெருமானே! ”

(சுந்தரர் தேவாரம்)

பெருமான் சுந்தரருடைய கண்களை ஏன் அவித்தார்? கண்களே இந்த நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம். சுந்தரருடைய கண்களே அணிந்திதை கமலினியைக் கண்டு காமம் எழச் செய்தன; அப்பெண்களுடைய கண்கள் அவர்களுக்கு இவரிடம் காமம் எழச் செய்ததோடு இவருடைய கருத்தையும் கவர்ந்தன. ஆதலின் பெருமான் சுந்தரருடைய கண்மணியை மறைத்தனன். “ உலகத்தார் எவ்வளவு பத்தியுடையவரேனும், நாடோறும் பூசனை புரிபவரேனும் தவறு செய்தால் பெருமான் அவர்களை ஒறுத்தே தீருவான் ” என்ற உண்மையை அவர்களுக்கு அறிவித்துத் தவறு செய்யாது தடுக்கவே இங்ஙனம் பெருமான் திருவருள் நிகழ்ந்தது தம்பிரான் தோழரிடத்திலும்!

நிகழ்ச்சி இத் தன்மையது எனினும் பெருமான் செய்த இது தவறு என்பதுவே ஆராய்ச்சி அறிஞர் கருத்து. என்னை? சுந்தரனார், “ பெருமானே! மகிழின் கீழ் இருந்தருளும் ” என்று வேண்டியபோது பெருமான் அவரைக் கண்டித்திருத்தல் வேண்டும் அல்லவா? கண்டித்திருந்தால் சுந்தரனார் பொய்ம்மைக்கு ஆளாகிக் கண்ணிழந்திருப்பாரா? சுந்தரனாரே இதனைக் கூறுகிறார்:

“ விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்.
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண் தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே! ”

(தேவாரம்)

என்பது அவர் வாக்கு. இது காஞ்சியில் இடது கண்ணைப் பெற்றுத் திருவாரூரை அடைந்து வலது கண்ணைப் பெறுமாறு பாடியது.

“ சுந்தரருக்குத் தோழனுமாய் , அவர் செய்யும் துரிசுகளுக்கு உடந்தையாக இருந்து அவரைத் துன்பத்துக்குள்ளாக்குவது பெருமானுக்கு அழகாகுமா ? ” எனின் கூறுவோம்.

திருக்கயிலாயநாதன் அருட்கடல். அவன் ஆலால சுந்தரரைத் தென்னாட்டிலே பிறக்கச்செய்து முதன்மையாகத் திருத் தொண்டத் தொகையையும் அதனை உள்ளிட்ட தேவாரத்தின் ஏழாம் திருமுறையினையும் தமிழுலகத்துக்குத் தந்தருளுதல் வேண்டும் என்ற திருவருளால் இத் திருவிளையாட்டினை ஆடினான்; ஆலால சுந்தரருக்குத் தக்க காரணம் காட்டி மண்ணுலகிற் பிறக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவே அவர் அப்பெண்களையும், அவர்கள் அவரையும் கண்டு காதலிக்கச் செய்தருளினான்.

அப் பெண்களுக்குக் கணவராகிய சுந்தரர் உலக இன்பங்களை அடையச்செய்தல் வேண்டும் என்பது ஆண்டவனுடைய திருவருள் நோக்கம் அன்று ; அதனாலேயே “ திருமணப் பந்தலில் அவரை அடிமையென்று தடுத்தாண்டு, சிதம்பரத்திலிருந்து விரைந்து திருவாரூருக்கு வரச்செய்து அவருக்குப் பரவையாரைத் திருமணம் செய்துவைத்து, தேவாசிரியன் மண்டபத்தில் அடியார்களோடு விறன் மிண்ட நாயனாரையும் இருக்கச் செய்து அவருடைய இடையீட்டினாலே சுந்தரரைத் திருத்தொண்டத்தொகை பாடுமாறு செய்தருளினான் ” சிவபெருமான்.

பதினாறு வயதிலேயே திருமணம் செய்து கொண்டு அவ்வம்மையாரோடும் திருமணம் காண வந்தவர் அனைவருடனும் சோதியிற் கலந்தருளினார் திருஞான சம்பந்தர். சுந்தரமூர்த்தியும் பதினாறு வயதில் திருமண வாழ்க்கை தொடங்கிப் பதினெட்டு வயதில் திருக் கயிலைக்கு எழுந்தருளினார். இந்த இரண்டாண்டுகளிலும் சுந்தரர் தம் மனைவிமாருடன் வாழ்ந்திருந்த காலம் மிக மிகக் குறைவே. சங்கிலியாருடன் அவர் இருந்த காலம் மிகுதியானால் இரண்டு மாதங்களே இருக்கும் ; பரவையாருடன் எவ்வளவு காலம் அவர் உடன் உறைந்தார் என்பதை ஆராய்வோம்:

திருவாரூரில் பரவையாரைத் திருமணம் செய்து கொண்ட சுந்தரமூர்த்திக்குக் குண்டையூர்க் கிழார் ஆகிய பெருஞ் செல்வர் நாடோறும்

செந்நெல் அனுப்பி வந்தார்; ஒரு சமயம் பஞ்சத்தால் நெல் அனுப்ப முடியாது கிழார் கலங்க ஆண்டவன் அவருக்கு நெல் மலையை அருளினான். குண்டையூர்க் கிழார் இச் செய்தியைச் சுந்தரருக்குத் தெரிவிக்க அவர் திருக் கோலிலுக்குச் சென்று பதிகம் பாடினார். சிவபெருமான் அருள்செய்தான்; பூத கணங்கள் நெல்லைப் பரவையார் மாளிகையிற் சேர்த்தன. கோட்புலி நாயனார் அழைக்கச் சுந்தரர் திருநாட்டியத்தான் குடிக்குச் சென்று திரு வலிவலத்திற் பெருமானைப் பாடித் திருவாரூருக்குத் திரும்பினார். மற்றொரு வேளை திருப்புகலூர் சென்று அவர் பதிகம் பாடித் திருவருளால் செங்கல் பொன்கல்லாகப் பெற்றுத் திருப்பனையூர் கும்பிட்டுத் திரும்பினார். திருவாரூரில் தங்கியிருந்த காலத்தில் இத்தனை ஊர்களுக்கும் சென்று திரும்பிய சுந்தரனார் சிவபெருமானைப் பல தலங்களிலும் சென்று வணங்கப்புறப்பட்டார்.

புறப்பட்டவர் நன்னிலம், திருவீழிமிழலை, திருப்புத்தூர், திருக் குடமூக்கு (கும்பகோணம்), திருவையாறு, திருவானைக்கா முதலிய காவிரியின் இரு கரைகளிலுமுள்ள எண்ணற்ற தலங்களைக் கும் பிட்டுக் கொங்கு நாடு சென்று திருப்பாண்டிக் கொடுமுடி முதலிய தலங்களை வணங்கித் திரும்பி வருபவர் திருமுதுகுன்றில் வந்து பாடிப் பெருமான் அருளப் பன்னீராயிரம் செம்பொன் பெற்று ஆற்றில் அவைகளைப் போட்டுச் சிதம்பரம் முதலிய தலங்களை வணங்கித் திருவாரூர் திரும்பினார். பல மாதங்கள் கழிந்து அவர் திரும்பி வந்த படியால் பரவையார் அவரை நோக்கிப் பணிந்து "**எம்மையும் நினைந்தருளிற்று!**" என்று கேட்டார். திருமுது குன்றில் ஆற்றிற் போட்ட பொன்னை அவர் திருவாரூர்த் திருக் குளத்தில் எடுத்துப் பரவையாருக்குத் தந்தார்.

சிலநாட்களில் சுந்தரர் திரும்பவும் புறப்பட்டுத் திருநள்ளாறு, திருக்கடவூர், திருவெண்காடு, சீர்காழி முதலிய ஊர்களைக் கும் பிட்டுத் திருக்குருகாவூரிற் பெருமான் அருளிய பொதி சோற்றினை உண்டு, திருத்தில்லை, திருநாவலூர், திருக்கழுக்குன்று முதலிய எண்ணற்ற தலங்களில் தேவாரம்பாடி, திருக்கற்குடி ஆலக் கோவிலைக் கும்பிட்டு அங்கே பெருமான் பிச்சை யெடுத்து வந்து தந்தருளிய சோற்றினை உண்டு, காஞ்சிபுரம், திருக்காளத்தி முதலிய பெரும்பதிகளை வழிபட்டுக்கொண்டு ஆங்காங்கே பற்பல

நாட்கள் தங்கித் திருவொற்றியூருக்கு வந்தார்; அங்கே சங்கிலியாரைத் திருமணம் புரிந்து சில நாள் மட்டுமே தங்கியிருந்தார். அவர் திருவாரூரை நினைந்தருளிப் புறப்பட்டுக் கண்ணிழந்து திருமுல்லைவாயில், திருவெண்பாக்கம் முதலிய ஊர்களைத் தாண்டிக் காஞ்சியில் இடக்கண் பெற்று, திருவாவடுதுறை முதலிய பதிகளை வணங்கித் தம் உடம்பில் உண்டாகிய நோயினை ஆண்டவன் ஆணையால் திருத்துருத்தியில் வடகுளத்தில் முழுகித் தீர்த்துக் கொண்டு, திருவாரூரை அடைந்து பாடி வலது கண்ணையும் பெற்று மகிழ்ந்து பெருமான் இருமுறை நள்ளிரவில் தூது சென்று பரவையாருடைய ஊடலைத் தீர்த்தருள அவ்வம்மையின் திருமாளிகையிற் சென்று சில நாள் தங்கியிருந்தார். அப்போது பெருமானைத் தூதுவிட்ட சுந்தரரை இகழ்ந்தருளிய ஏயர்கோன் கலிக்காமநாயனாரைப் பெருமான் ஆணைப்படி அவருடைய ஊராகிய திருப்பெருமங்கலத்திற்குச் சென்று, சுந்தரரைக் காணக் கூடாது என்று தம் வயிற்றைக் கிழித்து மடிந்துகிடந்த அவரைப் பெருமான் திருவருளால் எழுப்பி அவருடைய நண்பராகித், திருப்புன்கூர் முதலிய பல பதிகளைக் கும்பிட்டுத் திருவாரூருக்குத் திரும்பினார்.

அந்நாட்களில் ஓர்நாள் சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூருக்கு வந்து சுந்தரரைப் பணிந்து அவருடன் சில நாள் தங்கியிருந்தார். பின் சுந்தரர் சேரமானுடன் புறப்பட்டுத் திருமறைக்காடு, திருநாகைக்காரோணம் முதலிய பற்பல பதிகளை வணங்கிக் கொண்டு சோழநாட்டைக் கடந்து, பாண்டிய நாட்டிற் புகுந்து திருப்புத்தூர், மதுரை, திருக்குற்றாலம், திருநெல்வேலி முதலிய பலபதிகளை வணங்கிப் பாடித் திரு இராமேச்சரத்திற்கு வந்து சில நாட்கள் தங்கி அங்கிருந்தே ஈழநாட்டுத் தலங்களைப்பாடி, பின், திருச்சுழியல், திருக்கானப்பேர் முதலிய தலங்களைக் கும்பிட்டுக் கொண்டு சேரமான் பெருமானுடன் திருவாரூருக்குத் திரும்பிச் சில நாட்கள் பெருமானைப் பாடி மகிழ்ந்திருந்தார்; அப்போது சேரமான் அவரைத் தம் நாட்டுக்கு அழைத்தார். உடனே சுந்தரர் அவருடன் புறப்பட்டார்; காவிரியின் தென் கரையிலுள்ள திருப்பதிகளைக் கும்பிட்டுத் திருவருளால் காவிரி வெள்ளம் வழிவிடத் திருவையாறு சென்று கும்பிட்டுக் கூத்தாடிக் கொங்கு நாட்டிற் புகுந்து மலைகளையும், ஆறுகளையும் தாண்டிக் கொடுங்கோளூரை

அடைந்து திருவஞ்சைக்களம் பாடிச் சிலநாள் தம் நண்பருடன் இன்புற்றிருந்தார். பின் சுந்தரர் திருவாரூரை நினைந்து பாடிக் கொண்டு திருமுருகன்பூண்டி முதலிய பலதலங்களையும் கும்பிட்டுக் கொண்டு திருவாரூருக்குத் திரும்பிவந்து புற்றிடங்கொண்ட புனித னையும் தியாகராயப் பெருமானையும் வணங்கிப் பாடிச் சிலநாள் தங்கியிருந்தார்.

ஒருநாள் சுந்தரர் திருவாரூர்ப் பெருமானைக் கும்பிட்டுப் பதிகம் பாடி அவ்வூரை விட்டுப் பல பதிகளையும் பாடிக்கொண்டு கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூர் அவிநாசியில் பல ஆண்டுகளுக்கு முன் முதலை உண்ட பாலன் ஒருவனைப் பெருமான்மேல் பதிகம் பாடி அழைத்துத் தந்து மலை நாடு சென்று கொடுங்கோளூரைச் சேர்ந்து சேரமான் பெருமாளுடன் சிலநாள் தங்கியிருந்தார். ஒரு நாள் திருவஞ்சைக்களப் பெருமானைச் சென்று பாடினார். அப் போது திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களை வெள்ளை யானையுடன் சிவபெருமான் அனுப்பியருள, அவர்கள் சுந்தரரை அடைந்து பணிந்து அவரை வெள்ளை யானையின்மேல் ஏற்றிக்கொண்டு திருக்கயிலையைச் சேர்ந்தார்கள். சேரமானும் குதிரையேறிச் சுந்தரருடன் திருக்கயிலையைச் சேர்ந்தார். அங்கே பெருமான் திருவருளால் சுந்தரர் ஆலால சுந்தரராகி, திருவருளால் கணநாதராகிய சேரமானுடன் தம் முன்னைத் திருத்தொண்டினை மேற்கொண்டனர். இத்தனை நிகழ்ச்சிகளும் இரண்டே ஆண்டு களில் நடைபெற்றன.

சமையாசிரியர் நால்வர் வயது

"அப்பருக்கெண் பத்தொன்று அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொல்ஞான சம்பந்தர்க்கு
அந்தம் பதினாறு அறி."

சந்திபிரித்து எழுதியுள்ள இந்தத் திருவெண்பாவினில் திரு நாவுக்கரசர் எண்பத்தொரு ஆண்டுகளும், மாணிக்கவாசகர் முப்பத்திரண்டு ஆண்டுகளும் சுந்தரர் பதினெட்டு ஆண்டுகளும்

திருஞான சம்பந்தர் பதினாறு ஆண்டுகளும் உலகில் வாழ்ந்திருந்தனர் என்பது புலனாகின்றது. திருநாவுக்கரசர் தேவாரம் பாடத் தொடங்கியதிலிருந்து ஏறத்தாழ அறுபது ஆண்டுகளில் நாற்பத்தொன்பதினாயிரம் பதிகங்கள் (49,0000 பாடல்கள்) பாடினார் என்றும், மூன்று வயதிற் பாடத் தொடங்கிப் பதினாறு வயது வரை தாம் இருந்த பதின்மூன்று ஆண்டுகளில் திருஞான சம்பந்தர் பதினாறாயிரம் பதிகங்கள்(16,0000 பாடல்கள்) பாடினார் எனவும், பதினாறு வயதிற் பாடத் தொடங்கி இரண்டே ஆண்டுகளில் சுந்தரர் முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள் (38,0000 பாடல்கள்) பாடினார் எனவும் திருமுறை கண்ட புராணத்தில் முறையே பதினைந்து, பதினான்கு, பதினாறு ஆகிய திருவிருத்தங்களில் சைவசமைய சந்தானாசிரியராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்துள்ளார். ஆதலின் சுந்தரனார் இரண்டாண்டுகளில் முப்பத்தெண்ணாயிரம் திருப்பதிகங்கள் அதாவது மூன்றிலக்கத்து எண்பதினாயிரம் திருப்பாடல்கள் நூற்றுக்கணக்கான திருப்பதிகளிற் சென்று பாடியருளினார் என்றால் அவர் பரவையாருடன் எத்தனை நாள்தான் இல்லறம் நடத்தியிருத்தல் கூடும் ?

புற்று மூடிக்கிடந்த அப்பதிகங்களில் இக்காலத்திற்கு வேண்டுவன மட்டும் செல் அரிக்காமல் இருந்தன. அவை இத்தனை என்பது திருமுறை கண்ட புராணத்தில் உள்ள இருபத்தைந்தாவது பாடலிற் கூறப்பெற்றுள்ளது. திருஞான சம்பந்தர் பதிகங்கள் முந்நூற்றெண்பத்து நான்கும் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பதிகங்கள் முந்நூற்றேழும் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகளாகவும், சுந்தரர் திருப்பதிகங்கள் ஒரு நூறும் ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றுத் தேவாரம் என்ற பொதுப் பெயருடன் விளங்குகின்றன. இனி, தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகளைச் சிந்தித்து, திருவொற்றியூரில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பட்டினத்துப் பிள்ளையாருடைய பெருமைகளை ஆராய்ந்து புற்றிடங்கொண்ட புனிதனின் திருவருளைப் பெற்று இன்புறுவோம்.

பட்டினத்துப் பிள்ளையார்

காவிரிப்பூம் பட்டினம் என்பது காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் இருந்ததோர் பெருந்துறைமுகம். இந்நகர் அரசிருக்கை

நகராகவும் இருந்துவந்தது. அதில் வணிகர் குலத்தில் சிவநேயப் பிள்ளைக்கும் ஞானகலை யம்மைக்கும் திருமகனுகப் பிறந்து திருவெண்காடர் என்னும் பெயருடன் ஒரு குழந்தை பலகலை களையும் ஓதிப் பெரும் புலமையும் பெற்று விளங்கியது. திரு வெண்காடருக்குத் திருமனைவியார் சிவகலையம்மையார்; இவர் பெருஞ் செல்வராகிப் பெரும்புகழுடன் இருந்தமையால் திருவெண் காட்டுப் பிள்ளையாகிய இவர் "பட்டினத்துப் பிள்ளை" என்று பேர்ற்றப் பெற்றார்.

இவருக்குக் குழந்தையே பிறக்கவில்லை. அதனால் திருவிடை மருதூர்ப் பெருமான் நாடோறும் தன்னை வழிபடும் சிவசருமன் என்னும் கோவிற் குருக்கள் வழியாக மருதவாணன் என்னும் பெயருடைய ஒரு சிறு குழந்தையை அனுப்பிப் பட்டினத்துப் பிள்ளை யிடம் கொடுத்துப் பொன்பெற்று வர அருளினன். அக் குழந்தை யாகிய மருதவாணன் வளர்ந்து கப்பலேறி வணிகம் செய்யத் தொடங்கினன். அவன் ஒருமுறை கடல் தாண்டிச் சென்றவன் திரும்பிவந்து ஒப்புயர்வு அற்ற மணியொன்றைப் பட்டினத்துப் பிள்ளையிடம் கொடுத்து, ஒரு சிறு பெட்டியை அம்மை சிவகலை யாரிடம் தந்து வெளியே சென்றவன் இறைவன் திருவருளால் மறைந்து போயினன். சிறு பெட்டியை வாங்கிப் பார்த்த பட்டினத் தார், காதற்ற ஊசி ஒன்றும், "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைத்தலைக்கே," என்று எழுதிய சிறு ஓலைச் சீட்டு ஒன்றும் அதனுள் இருப்பது கண்டு உடனே, "மெய்தான்! எவ்வளவு பெரிய செல்வராக இருந்தாலும், முடிமன்னரே ஆயினும், அவர்களுடன் காதற்ற ஊசி கூட வருவது இல்லை," என்று துணிந்து உடனே துறவு பூண்டார்.

இவர் சிறந்த ஐந்து நூல்களைப் பாடியிருக்கிறார்; அவை,

1. கோவில் நான்மணி மாலை.
2. திருக்கழுமல மும்மணிக்கோவை.
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.
5. திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்பன. இவைகளின் அருமை பெருமை இவை பதினோராம் திருமுறையில் ஒரு பகுதி யாகச் சேர்க்கப்பெற்றிருக்கின்றமையால் மலைமேல் வைத்த விளக்குப் போல விளங்கும்.

"பட்டினத்தார் பாடல்" என்று பாடல் திரட்டு ஒன்றும் வழங்குகின்றது. அதிலும் மனத்தைக் கரைக்கவல்ல பாடல்கள் இருக்கின்றன. இவர் திருவொற்றியூரில் வந்து பாடியனவாக உள்ளவற்றுள் ஒன்று பின்வருவது :—

"ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது ஒன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர் திருநீறும் இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே."

இத்தகைய பாடல்களுடன் தரக்குறைவான சில பாடல்களும் அவற்றுட் காணக்கிடக்கின்றன. அதனால், "அவை பட்டினத்துப் பிள்ளையாரால் பாடப்பட்டன அல்ல; "இடைச் செருகல்" என்று அறிஞர் கூறுவாராயினர். அவற்றுள் ஒன்று பின்வருவது:—

"சீதப்பனிக்கு உண்டு சிக்கெனக் கந்தை, தினம் பசித்தால்
நீதுய்க்கச் சோறுமனை தோறும் உண்டு, நினைவு எழுந்தால்
வீதிக்குள் நல்ல விலைமாதர் உண்டு, இந்த மேதினியில்
எதுக்கு நீ சலித்தாய் மனமே என்றும் புண்படவே."

அடிக்கடி புலவர்கள் எடுத்துக்காட்டும் நல்ல பாடல்களில் இரண்டு வருமாறு :—

"காலன் வருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பால் உண் கடைவாய்ப் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு."

"இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன், அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி."

இதுவன்றோ மெய்யான துறவு !

திருவொற்றியூரில் பட்டினத்தாரைப் பல காலம் வழிபட்டு வாழ்ந்திருந்த பட்டினத்துப் பிள்ளையார் கடற்கரையில் மாடு மேய்த்திருந்த பிள்ளைகளோடு விளையாடுவார்; மணலில் குழி தோண்டி அதிலே தம்மைப் புதைக்கும்படி செய்வார்; புதைத்த இடத்திற்கு அப்பாலிருந்து வெளியேறி வருவார்; ஒரு நாள் அவர் தாம் புதையுண்ட குழிமேல் சிவலிங்கமாக நின்று வீட்டின்பம் மேவினார். அந்த இடத்திலே திருக்கோவில் அன்பர்களாற் கட்டப்பெற்று இன்றும் "பட்டினத்தார் கோவில்" என்று கடற் கரையில் திகழ்கின்றது. திருவொற்றியூர்ப் புற்றிடங்கொண்டான் கோவிலுக்கு வடமேற்கே •இந்தப் பட்டினத்துப் பிள்ளையார் சமாதிக் கோவில் அரைமைல் தூரத்தில் இருக்கிறது.

திருவொற்றியூர்த் திருவிழாக்கள்

திருவொற்றியூரில் தியாகராசப் பெருமானுக்குப் பெருந் திருவிழா மாசிமாதத்தில் நடக்கிறது. பௌர்ணமியில் கடலினுக்குப் பஞ்சமூர்த்தி கள் எழுந்தருளி வந்து கடலில் தீர்த்தம் வழங்குகின்றனர்; இது நடப்பது திருவிழாவின் பத்தாம் நாள். ஒன்பதாம் திருநாளன்று சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சங்கிலி நாச்சியாருக்கும் மகிழமரத் தடியிலே இடப ஊர்தியிற் பெருமான் வந்து காட்சி காட்டும் விழா நடைபெறும். அகத்தியருக்குத் திருமணக் காட்சி காட்டும் விழா வும் அன்றே நடைபெறும். அறுபத்து மூன்று நாயன்மார்களும் அன்று பெருமானுடைய காட்சியைக் காண்பார்கள். திருவிழாவில் நாடோறும் தியாகராசப்பெருமான் திருவீதியில் எழுந்தருளி வருவான்.

இரண்டாம் நாளன்று நந்திகேசுவரருக்கும், மூன்றாம் நாளன்று முசுகுந்தச் சக்கரவர்த்திக்கும், நான்காம் திருநாளன்று ஆதிசேட னுக்கும், ஐந்தாம் திருநாளில் நான்முகனுக்கும், ஆறாம் திருநாளில் திருமாலுக்கும் உரோமசன்மருக்கும், எட்டாம் திருநாளன்று தேவேந்திரனுக்கும் திருவருள்பாலித்த காட்சிகள் திருநாளாக நடைபெறும். பத்தாம் திருநாளன்று தியாகராசப் பெருமானுடைய பதினெட்டு வகை நடனக் காட்சிகளைக் கண்குளிரக் கண்டு பேரின்பம் பெற்று உய்யலாம்.

திருவொற்றியூர்க் கல்வெட்டுக்கள்

திருவொற்றியூர்த் திருக்கோவிலில் கல்வெட்டுக்கள் எண்ணிறந்தன இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து ஒரு தனி நூலாகவும் எழுதலாம். அவைகளில் நமக்கு வேண்டுவனவற்றை மட்டும் சுருக்கி ஆராய்வோம்.

கல்வெட்டுக்களில் சிறுபான்மை 1911-லும் பெரும்பான்மை 1912-லும் கல்வெட்டுத் துறையினரால் எடுக்கப்பட்டன. அவைகளில் பெருமான் பெயர் ஆதிபுரீசர், திருவொற்றியூர் உடையவர், ஒற்றியூருடைய நாயனார், படம்பக்கநாதரீ, படம்பக்கநாயக தேவர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. அக் காலத்தில் அரசர்களும் இத் திருக்கோவில் வளர்ச்சியில் ஈடுபட்டுத் திருவிழாக்கள் காணுவதற்குக் கூட வந்திருக்கிறார்கள். சோழன் பரகேசரிவர்மன் என்ற திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவன் ஒரு சமயம் ஆனித் திருவிழாவினைக் காண இங்கே வந்து இக்கோவிலிலுள்ள இராசராசன் திருமண்டபத்தில் தங்கியிருந்தான். இராசகேசரிவர்மன் படம்பக்க நாயகர் கோவிலில் நடந்த பங்குனி உத்தர விழாவினை இங்கு வந்து கண்டு கும்பிட்டு இன்புற்றான்; அப்போது இங்கே ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் படிக்கப் பெற்றது; அதனைக் கோவில் நாயகன், சீகாரியம், சதுரானன பண்டிதர், வாகீசுவர பண்டிதர், இன்னும் பல்லோர் கேட்டு நலம் பெற்று மகிழ்ந்தார்கள். இங்கே குறிப்பிடப்பெற்ற சோழன் இராசகேசரிவர்மன் இப் பங்குனி உத்திரத் திருநாளுக்கு மறுநாள் தன் ஆட்சியின் இருபத்தெட்டாவது ஆண்டில் திருவிழாவின் சிறப்புக்குப் பணம் கொடுத்திருக்கிறான்; காவனூர் என்ற கமலசதுர்வேதி மங்கலம் பொதுச் சபையார் அப் பணத்தைப் (30 காசு) பெற்று ஆண்டு தோறும் 75 கலம் நெல் அவ் விழாவின் போது தருவதாக இசைந்தார்கள். இக் கல்வெட்டில் திருத்தொண்டத் தொகையும் அறுபத்துமூவர் திருவுருவங்களும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன.

இங்கே நாட்கதிர் கொள்ளும் விழா ஆண்டுதோறும் நடைபெற்றிருக்கிறது. மார்கழித் திருவாதிரை விழாவினுக்கு நகரத்தார் என்ற வணிக மக்கள் பணம் தந்து அதனைச் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறார்கள். மாசி மகத்திருநாளுக்குச் சிவவிட்டுணு சதுர்வேதி மங்கலம் என்ற மணலிச் சபையார் பணக்கொடை தந்திருக்கிறார்கள்.

திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாவது இராசராச தேவன் ஆட்சிப் பத்தொன்பதாவது ஆண்டில் 1234-ம் ஆண்டு சூலை மாதம் 30-ந் தேதி திருக்கோவிலில் நெல் குற்றுவதற்காக ஐந்து பெண்களையும் அவர்களுடைய வழித் தோன்றல்களையும் வயலூர் கிழவன் என்பவன் கொடுத்தான். நிரஞ்சன குரவர் மாணவர் சதுரானன பண்டிதருடைய ஏற்பாட்டால் இராசராச சோழன் மகன் முதலாவது இராசேந்திரன் (கி.பி. 1012–1043) பார்வையில் திருவொற்றியூர்ப் பெரிய கோவில் விமானம் வீரசோழன் என்ற இரவி என்னும் சிற்பியாற் கட்டப் பெற்றது.

ஆரியதேச மேற்காலபுரம் பிராமணர் பிரபாகர பட்டருடைய மனைவி ஆரிய அம்மை இக் கோவிலில் இராசேந்திர சோழன் என்னும் மடத்தைக் கட்டி அதில் மாகேசுர பூசை நடப்பதற்கு வீட்டுமனை, விளை நிலங்களை வாங்கினாள். கோவிலில் மாணிக்கவாசகருடைய திருவெம்பாவை, தேவாரத் திருப்பதிகங்கள் ஓதுவதற்கும், நட்டுவர் நாட்டியப் பெண்கள் பராமரிப்புக்கும் சோழன் முதலாவது வீரராசேந்திரன் (1063–1070) சிங்கவிட்ணு சதுர்வேதி மங்கலத்தில் அறுபது வேலி நிலத்தை வீரராசேந்திர வளாகம் என்ற பெயர் அமைத்து வழங்கினான். இராசேந்திரகுலோத்துங்க சோழன் ஆட்சி தொடங்கி ஏழாம் ஆண்டு 290-வது நாள் வீரராசேந்திரன் திருப்பள்ளியெழுச்சிப் பூசனைக்காக இராசராசன் மண்டபத்திலிருந்து கோவில் ஆட்சியாளர் கோவில் நடைமுறைகளை ஆராய்ந்து பணம் ஒதுக்கி வைத்தனர்.

திருவொற்றியூரில் செயசிங்க குலகாலப் பெருந் தெருவில் நெசவாளர்களாகிய வணிகர் குடியிருந்தார்கள். கோவிலிற் பலியிடச் சதுரானன பண்டிதர் பணம் கொடுத்தார். கேரள நாட்டு இராட்டிர கூட மன்னன் வல்லவனுக்கு இவர் நண்பர். இப் பண்டிதர் சோழ நாடு சென்று சோழன் இராசாதித்தியனுக்கு நண்பராயினார்; சோழனை இராட்டிரகூடன் கொன்று விட்டான். அப்போது இவர் துறவு பூண்டு நிரஞ்சன குருவால் தீக்கை செய்யப்பட்டுத் திருவொற்றியூருக்கு வந்தார். சூரசூளாமணிப் பெருந் தெரு என்பதும் திருவொற்றியூரில் இருந்தது. மாறவர்மன் அவனி சூளாமணியின் மகன் பாண்டியன் சயந்தன் காலத்தில் தோலா மொழித் தேவரால் கி. பி. 620-ல் சூளாமணி என்ற நூல் ஆக்கப்பெற்றது.

துர்க்கையாண்டி நாயக்கர் என்பவர் தாம் கோவிலில் வியாகரண தான வியாக்கியான மண்டபத்துப் பராமரிப்புக்குக் குலோத்துங்க சோழன் காவனூர் என்ற குளத்தூரில் எண்பது வேலி நிலம் வாங்கிக் கொடுத்தார். திரிபுவன வீரசந்தி என்ற பூசனைக்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரி மெய்கொண்டான் நிலங்கள் வாங்கித் தந்தான். மாணக்குடி இராசேந்திர மூவேந்த வேளார் என்ற பசுபதி திருவரங்க தேவர் படம்பக்க நாயகதேவர் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டினார். திருஞானசம்பந்தர் மடத்தில் மாகேசுர பூசைக்காக நிலக்கொடையும் ஆரியவர்த்தம் கொண்ட முதலியார் என்ற நந்திகேசுவரன் திருமடத்திற்கு நிலக் கொடையும் கல்வெட்டுக்களிற் குறிப்பிடப் பெறுகின்றன.

இதுகாறும் மிகப் பழமையும் முதன்மையும் ஆனதும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவர் முதலிகளாற் பாடப் பெற்ற பெருமை உடையதும் ஆகிய திருவொற்றியூர்ப் புற்றிடங் கொண்டார் திருக்கோவிலின் வரலாற்றுடன் அப் பெருமானை வந்து வணங்கி வாழ்வு பெற்ற பெரியாரின் வரலாறுகளையும் கண்டு இன்புற்றோம். இனி, திருமயிலாப்பூர்த் திருக்கோவிலைச் சென்று கும்பிடுவோம்.



கபாலிசுவரர்—பெரியகோபுரம்

(2) திருமயிலாப்பூர்—கபாலீசுவரர்

திருமயிலாப்பூர் என்பது சென்னை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தெற்கோரம், அடையாற்றுக்கு வடக்கே இருக்கிறது. அப் பகுதியில் மயில்கள் மிகுதியாக இருந்து ஆர்ப்பெருத் திருந்த காரணத்தால் இப்பதி மயில் ஆர்ப்பு என்று பெயர் பெற்றது. "மயிலார்ப்பு" என்பது 'மயிலாப்பு' என்னப்பட்டு, தேவாரத்தில் 'மயிலாப்புள்ளே' என்று வழங்குவதாயிற்று. அதுதான் இன்று மயிலாப்பூர், மயிலை என்று வழங்கப்பெறுகிறது. பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இதனைப் "பன்னு தொல் புகழ்த் திருமயிலாபுரி," "காயல் சூழ் கரைக் கடல் மயிலாபுரி," "ஆழி சூழ்த்திரு மயிலாபுரித் திருநகர்," "மாடம் ஓங்கிய மயிலைமா நகர்," "பழுதில் புகழ்த் திருமயிலைப் பதி," "மருவாரும் மலர்ச் சோலை மயிலாப்பூர்," என்று பலபடப் புகழ்ந்து பாடுகின்றார். பின்வரு வதும் சேக்கிழார் திருவாக்கு—

"சொல் விளங்கு சீர்த் தொண்டை நன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல் பெருங் குடிநீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயிலாபுரி."

'கபாலீசுவரம்' என்பது திருக்கோவிலின் பெயர். நான்முகனு டைய கபாலத்தைக் கையில் ஏந்தியிருக்கும் ஈசுவரர் கபாலீசுவரர். அவர் எழுந்தருளியிருக்கும் கோவில் கபாலீச்சுவரம் என்று ஆயிற்று. இங்கே உமாதேவி மயில் உருவெடுத்துப் பெருமானைப் பூசித்தனள். அதனால் இது மயிலாப்பூர் என்று பெயர் பெற்றது என்றும் இதற்குக் காரணம் கூறுகின்றார்கள் ஆராய்ச்சியாளர்.

திருநாவுக்கரசர் மயிலாப்பூருக்கு வந்து வழிபட்டுக் கடற்கரை வழி யாகவே வடக்கு நோக்கிச் சென்று திருவொற்றியூரைச் சேர்ந்தவர்

'வடிவுடைய மங்கையும் தாமும் எல்லாம்
வருவாரை எதிர்கண்டோம் மயிலாப்புள்ளே

என்று திருவொற்றியூர்த் திருத்தாண்டகத்திற் கூறுகின்றார். மயிலாப்பூர்த் தெருக்களிலேயும் உழவாரத் தொண்டு புரிந்து வந்த

அப்பர் பெருமான் மேலும் "மங்குல் மதிதவழும் மாட வீதி மயிலாப்பில் உள்ளார்", என்று புகழ்கின்றார். இதனால் அவர் காலத்தில் இவ்வூர் "மயிலாப்பு" என்றுதான் வழங்கி வந்தது போலும்! 'மயிலை' என்று கூறுகின்றார் திருஞான சம்பந்தர்.

மயிலாப்பூர் ஒரு பெரிய துறைமுகமாக இருந்திருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூரைப் பற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறுகிறார் :—

"துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித் தொல் மயிலை".

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்த கிரேக்க ஆசிரியர் தாலமி என்பவர் மல்லியார்பா (Malliarpha) என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறார். திருவள்ளுவ நாயனாருடைய நண்பர் ஏலேலசிங்கர் இங்கிருந்துதான் பெரிய கப்பல் வணிகம் செய்தார். திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைப் பற்றிப் பாடும் போது,

"தேனமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி" என்று திருவாய் மலர்ந்தருள்கின்றார். திருவல்லிக்கேணி என்ற பேரூர் அன்று மாடங்கள் மலிந்த பெரிய மயிலாப்பூரின் ஒரு பகுதியாக இருந்தது என்று ஆழ்வார் கூறுகிறார். கங்கபல்லவன் கம்பவர்மன் காலத்திய கல்வெட்டு ஒன்று மயிலாப்பூரில் அரசர் குடும்பம் இருந்தமை கூறுகின்றது. அண்மையில் மயிலையின் தென்கிழக்குப் பகுதியில் தெற்கே தள்ளி இப்போது ஊராக உருவாயிருக்கும் மந்தைவெளிப் பாக்கத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள நவாபுவின் அரண்மனை இப்போதும் இருப்பதனால் நவாபுகள் காலத்திலும் அரசர் தங்கும் இடமாகத் திருமயிலை இருந்ததென்பது இன்றும் வெளிப்படை. சென்னைக் கடற்கரைப் புகைவண்டி நிலையத்தின் அருகே இன்றும் இருக்கும் அரண்மனையில்தான் முன் சென்னை மாகாண உயர்நீதி மன்றம் இருந்தது; இப்போது அது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகமாக அமைந்திருக்கிறது.

திருக்கோவில் மேற்கே பார்க்க இருக்கிறது. கோவிலின் தலைவாயிலிலே நடுமண்டபத்தோடுகூடிய பெரிய திருக்குளம் ஒன்று

இருக்கிறது. இது கபாலி தீர்த்தம் என்று பெயர் பெறும். இதைப் பலரும் 'குளம்' என்றே அழைக்கிறார்கள். இது பார்ப்பதற்குப் பேரழகுடையதாகத் திகழ்கின்றது.

பெரிய சிவலிங்கத் திருமேனியோடு மேற்கே பார்க்க எழுந்தருளி யிருக்கின்றான் கபாலீச்சுவரன். பெருமானுக்கு வலது புறமாகத் தெற்கே பார்க்கத் தனிக்கோவிலில் எழுந்தருளியிருக்கின்றாள் கற்பக வல்லீத் தாயார். பெருமானுக்கு இடது புறமாக உள்ள கோவிலில் அமர்ந்திருக்கின்றான் சிங்கார வேலன். அம்மைக்கு நேர் தெற்கே மனக்கோவில் கட்டி வழிபட்டு உய்ந்த வாயிலார் நாயனார் திருக் கோவில் இருக்கிறது. கபாலிப் பெருமானுக்கு எதிரே தலைவாயிலின் வடபுறம் திருஞானசம்பந்தப் பெருமான் தாம் பதிகம் பாடி உயிர்ப் பித்த பூம்பாவையுடன் இருக்கின்றார். கோவிலின் வடக்கு வெளிச் சுற்றிலே தெற்கே பார்க்கச் சிவலிங்கப் பெருமானும் முன்னால் மயிலுருவுடன் வழிபட்டு நிற்கும் உமாதேவியாரும் இருக்கின்றனர். அங்கே கோவிலின் தலமரமாகிய புன்னை மரம் இருக்கிறது. பெரு மானுக்குப் பின்புறம் கிழக்கே பார்க்கக் கீழைக் கோபுர வாயிலில் கூத்தாடும் பிள்ளையார் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்.

இந்தத் திருக்கோவில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் புதிதாகக் கட்டப்பெற்றது என்றும், பழைய கோவில் சான்தோம் கடற்கரையில் இருந்தது என்றும் ஆராய்ச்சி அறிஞர் சிலர் கூறுகின்றார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் பின்வருவன:

" அருணகிரிநாதர் கி.பி. 1450-ல் இருந்தவர். அவர் இங்கே வந்து சிங்காரவேலவனுக்குத் திருப்புகழ் பாடி வாழ்த்தினார். திருப் புகழில் அவர் " கடலக் கரைத் திரையருகே சூழ் மயிலைப் பதிதனில் உறைவோனே " என்று கூறுகிறார். ஆதலின் அவர் காலம் வரையில் கோவில் கடற்கரையிலேயேதான் இருந்தது. கி.பி. 1561-ல் திரு மயிலை போர்த்துக்கேசியர் கையில் அகப்பட்டது. அவர்கள் அக்கோவிலைத் தகர்த்துத் தங்களுக்கு ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள் கி.பி. 1672-க்கு முன்பு இப்போதுள்ள கோவில் கட்டப் பெற்றதாதல் வேண்டும். அவ்வாண்டில் பிரெஞ்சுக் காரருக்கும் மூர்துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுக்காரர் இக்கோவிலில் ஒளிந்திருந்தார்கள்,

என்பது வரலாறு. செயின் தோம் கிருத்தவர் மாதா கோவில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பழுது பார்க்கப்பட்ட போது அங்கே தரை தோண்டப்பட்டது. பூமியின் கீழே சிவன் கோவில் தூண்களும் கல்வெட்டுக்களும் கண்டெடுக்கப்பட்டன. கல்வெட்டுக்கள் 1923-ல் கல்வெட்டுத் துறையினரால் பார்க்கப்பட்டு எண் 215–223 என்று குறிக்கப்பட்டுள்ளன. 215-வது கல்வெட்டில் கூத்தாடு தேவர்க்கு விளக்கு எற்றலும், 216-வது கல்வெட்டில் முதலாவது இராசராச சோழன் மெய்க்கீர்த்தியும், 217-ல் பூம்பாவையைப் பற்றிய குறிப்பும் உள்ளன. பழைய கோவிலின் கற்களையும், புதுக்கற்களையும் கொண்டு புதுக் கோவில் கட்டப்பட்டது. பழைய கல்வெட்டுப் பகுதிகள் ஏறத்தாழ ஐம்பது கற்களில் கற்பகவல்லியம்மை கோவிற் சுவர் களில், கீழ்மேலாகவும் முன் பின்னாகவும் முறை மாறி வைத்துக் கட்டப்பட்டுள்ளன. புதுக்கோவிலில் பெருமான் அம்மை கோவில் களிலும் பிறவற்றிலும் கருவறைச் சுவர்களிற் கல்வெட்டு ஒன்று கூட இல்லை. பழைய கோவிற் கற்கள் வரும்போது, கிருத்தவர் கல்லறைக் கற்கள் சிலவும் தவறி வந்து விட்டன. அவற்றுள் ஒன்று ஆறுமுகப் பெருமான் முகப்பு மண்டபத் தளவரிசையிலும், மற்றொன்று சனிபகவான் கோவிலுக்கு எதிரில் தளவரிசையிலும் உள்ளன. ஒன்றில் கி.பி. 1646 என்பது குறிக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1798-ல் அமைக்கப்பட்ட சென்னைப் படத்தில் திருக்குளம் இப் போது உள்ள இடத்திற் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆர்க்காடு நவாபு தந்த நிலத்தில் இக்குளம் தோண்டப்பட்டது என்றும் முகமதியர் முகரம் பண்டிகையில் தாச்சிகளை இக்குளத்தில் விடும் உரிமை பெற்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலே கண்ட குறிப்புக்கள் சிவக்கவிமணி கோ. க. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணப் பேருரையில் திருமயிலாப்பூர் தல விசேடம் என்ற பகுதியில் பல்லாண்டு சைவம் பெருக்கி வளர்த்த மா. பாலசுப்பிரமணிய முதலியார் உதவியனவாகக் குறிக்கப் பெற்றுள்ளன. திரு. கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார் தந்த குறிப்பிலும் மேலே கண்டனவே அமைந்திருக்கின்றன. திருமயிலைத் தலபுராணம் என்றதோர் நூல் கோவிலார் வெளியிட்டது. அதில் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன :

" தற்காலக் கோவிலிலுள்ள சிற்பங்களெல்லாம் விசய நகரத்து அரசர்களுடைய காலத்திற்கும் பிற்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை.

கடந்த மூந்நூறு ஆண்டுகட்குப் பிற்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கோவில்களில் கல் வெட்டுக்களே கிடையாது. மேலும் பெருமான் மேற்கே பார்த்திருப்பதும் இச் சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்கது. ஆதியில் தற்காலக் கோவிலில் இருந்தது கூத்தாடு விநாயகர் சன்னதியாம். அதன் பக்கத்திலிருக்கும் தெருவுக்குப் பொன்னம்பல வாத்தியார் தெரு என்ற பெயரே இருந்தது. அன்றியும் சாதாரண மாக எல்லாப் பெரிய கோவில்களிலும் ஆதிகாலத்தில் கோவிற் குளமானது கும்பிட வரும் அடியார்கள் கால் கழுவி உள்ளே போவதற்காகக் கோவில்களின் முன்புறமே அமைக்கப்பட்டிருக்கிறது. மயிலாப்பூர்ப் பெரிய குளம் கோவிலுக்குப் பின்புறம் வெட்டப் பட்டிருப்பது நமது ஆராய்ச்சிக்கு ஒரு முக்கிய ஆதரவாகும்.

"பழைய கோவில் தற்காலம் இருக்கும் சாந்தோம் மாதா கோவில் இருக்கும் இடத்திலோ அல்லது அதன் அருகிலோ இருந்திருத்தல் வேண்டும். நாகப்பட்டினம் முதல் சென்னை வரையில் இருந்த கோவில்களையெல்லாம் அழித்த போர்த்துக்கேசியர்கள் சாந்தோம் என்னும் பட்டினத்தில் தம் முதன்மையான நிலையத்தின் பக்கத்திலேயே ஒரு கோவிலை இருக்க விட்டிருக்கமாட்டார்கள் என்பது உறுதி. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் மயிலைக்கு எதிரிலிருக் கும் கடற்கரை சற்றே உள்ளே நோக்கி வந்தபோது அலைகள் மோதுத லினால் உடைபட்டு மணற்கரை கரைந்தபோது அங்குச் சிவன் கோவில்களுக்குரிய கற்றூண்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டன. ஆயினும், இது இன்னும் ஆராயத்தக்க பொருள். ஆகவே பழைய கோவில் எங்கிருந்தது என்பதைத் திட்டமாகக் கூறுவதற்கில்லை."

மேலே கண்டவைகளெல்லாம் இப்போதுள்ள கோவில் மூந்நூறு ஆண்டுகளுக்கு முன் புதிதாகக் கட்டப்பட்டது என்புதற்கு உரிய காரணங்கள். இவைகளை ஆராய்ந்து இப்போதுள்ள கோவிலே பழைய கோவில் என்பதற்கு ஆராய்ச்சி அறிஞர் வேறு பலர் தக்க காரணங்கள் கூறுகின்றார்கள். அவைகளைக் கீழே கூறுவோம்.

"கோவில் மேற்கே பார்த்த கோவில். இது கிழக்கே பார்த்து இருந்தது என்பதற்கு ஏற்ற காரணங்கள் இல்லை. இப்போதுள்ள கோவில் கடற்கரையில் இல்லையே என்று கூறுகின்றார்கள். இப்போதும் கடற்கரையில்தான் இருக்கிறது என்பதில் என்ன தடை? ஐம்பது ஆண்டுகளின் முன் இங்கே வந்து குடியேறியுள்ள பெரியார்கள்

சிலர் இன்றும் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு முதல்வர் திவான்பகதூர் ஆர். வி. கிருட்டிணயர். அவர் இங்கே வந்த காலத்தில் கடல் சான்தோம் மாதா கோவில் அருகே இருந்தது எனவும் இந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் மிகு தூரம் கிழக்கே கடல் தள்ளிப்போய் விட்டதென்றும் கூறுகிறார். ஆராய்ச்சி அறிஞர், "இப் பகுதிக்குக் கடல் கிழக்கேதான் தள்ளிப் போய்க்கொண்டிருக்கிறது. இராயபுரம் பகுதியில் கடல் உள்ளே வந்து கொண்டேயிருக்கிறபடியால் இப்போதுள்ள இராயபுரத்தார் அதனைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள்" என்று கூறுவது மறுக்க முடியாத உண்மை. ஆதலின் பண்டைக் காலத்தில் கடல் மேற்கே மிகவும் தள்ளி இப்போதுள்ள கோவிலுக்கு நெருங்கி இருந்திருத்தலும் கூடும். ஆதலின் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கடல் மேற்கே ஏறி மணலை அரித்ததென்பதும் அப்போது சிவன் கோவிலுக்கு உரிய தூண்கள் வெளிப்போந்தன என்பதும் நிகழ்ந்திருத்தல் முடியாது, திருவொற்றியூரும், திருவான்மியூரும் கடலை ஒட்டிய ஊர்களே. அங்கும் கடல் மேற்கே ஏறி இடையூறு செய்வதைக் காணவில்லை. கிழக்கே விலகியே போய்க்கொண்டிருக்கிறது; இராயபுரம் பகுதியில் மட்டும் மேற்கே ஏறுகின்றது. கடல் கிழக்கே விலகிப் போவதைக் கண்டபடியாலேதான் சாந்தோம் நகரமும், அதில் மாதா கோவிலும் வானளாவிய மாளிகைகளும், அப்பகுதியிற் புதியனவாகத் தோன்றி விளங்குகின்றன. இக் கோவிலில் பழைய கல்வெட்டுக்கள் இருந்ததும் போர்த்துக்கேசியர்கள் இத்திருக்கோவிலை இடித்ததும், இது திரும்பக் கட்டப் பெற்றதும் உண்மையாக இருக்கலாம். ஏனெனில், கோவிலை அவர்கள் இடித்ததும் மயிலை மக்கள் இக் கோவிலைப் பெரும்பாலும் அக்கற்களைக்கொண்டே திரும்பக் கட்டினார்கள். ஆத்திரத்துடன் கட்டிய அவர்கள் கல்வெட்டுக்களின் பெருமையை மறந்தவராகி விரைவு விரைவாக அதனைத் திரும்பக் கட்டினமையால்தான் அக்கல்வெட்டுக்களை ஒழுங்கு பெற அமைக்காமல் தாறுமாறாக வைத்துக் கட்டியிருக்கிறார்கள். கல்தளம் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆதலின் அதில் கிருத்தவர் குறிப்புள்ள இரண்டொரு கற்கள் கோவிலினுள் வந்திருத்தல் கூடும். ஆழ்வார்கள் காலத்தில் திருவல்லிக்கேணி மயிலாப்பூரின் ஒரு பகுதியாக இருந்தது என்பதற்கு அவர்கள் பாடியுள்ள திவ்வியப் பிரபந்தப் பாடல்களே சான்று பகர்கின்றன. அவர்கள் காலத்திலும் அப்பர், ஞானசம்பந்தர் காலத்திலேயும் திருக்கோவிலைச் சூழ மாடவீதிகள் இருந்தன. "மங்குல் மதி தவழும் மாடவீதி

மயிலாப்பி லுள்ளார்" என்ற அப்பர் அடிகள் திருவாக்கும், "தேன மர் சோலை மாட மாமயிலை" என்ற திருமங்கையாழ்வார் திருவாக்கும் இதற்குத் தக்க சான்றுகள்; திருஞான சம்பந்தரும் தெருவில் திருவிழாக்கள் நடைபெற்றமையைத் தம் தேவாரத்தில் கூறுகிறார்.

" வளைக்கை மட நல்லார் மாமயிலை வண்மறுகில்,
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள் "

என்றும்,

" மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலி விழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்."

என்றும் அவர் பாடுகின்றமை காண்க. கபாலிப் பெருமான் மேற்கே பார்த்திருப்பது இப்போதுள்ள கோவில் புதுக்கோவில் என்பதற்குக் காரணம் ஆகாது. திருவான்மியூர்க் கோவிலில் பெருமான் மேற்கே பார்த்துத்தானே இருக்கின்றான்! திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டத்தைச்சேர்ந்த சிவசயிலம் திருக்கோவிலில் பெருமான் சயிலப்பன் மேற்கே பார்க்கவே இருக்கின்றான். திருமயிலையில் மேற்கேதான் கொடி மரம், பலிபீடம், இடபம் இவை இருக்கின்றன. அவைகளின் முன் திருக்குளம் இயல்பாகவே இருந்திருத்தல் வேண்டும். அதிற் சூழக் கற்படித் துறைகள் இன்றைக்கு நாற்பது ஆண்டுகளின் முன்தான் கட்டி முடிந்திருக்கின்றன. மகமதியர்கள் தம்க்கு ஒரு மசூதியைக் கோவிலின் முன்பு இருந்த குளத்தின் தென்கரையிற் கட்டினார்கள். அது கண்ட அக்காலச் சைவ அமைச்ச ரும், மக்களும் ஆக இரவில் எண்ணற்றவர் கூடி அம்மசூதியை இடித்துத் தள்ளித் திரும்ப அந்த இடத்தில் மசூதியை எவரும் எழுப்ப முடியாதபடி திருக்குளத்தை மிகமிக அகலமும் ஆழமுமாக்கி வெட்டி விட்டார்கள் என்பதுவே உண்மை. மசூதியை இடித்துவிட்டு அது இருந்த இடத்தில் குளம் தோண்டிவிட்டபடியால் அக்காலம் நவாபு இத்திருக்குளத்தை முகரவிழாவில் ஒருநாள் முகமதியர்கள் பயன் படுத்தும் உரிமை வழங்கினான். கபாலி நாயகன் திருக்கோவிலில் கல்வெட்டு இல்லாமைக்குக் காரணம் சூழ உள்ள சுவர் கற்கட்டில் லாமல் செங்கற் கட்டாக இருப்பதும், சூழக் கூத்தப் பெருமான், அறுபத்து மூவர் ஆகிய இவர்கள் எழுந்தருளியிருத்தலுமே, பண்டைக் கோவில்கள் செங்கற் கோவில்களாகவே எழுந்தன என்பது ஆராய்ச்சி அறிஞர் கண்ட உண்மை. கடற்கரையிலிருந்தது ஒரு சமணர் கோவில்,

அதுதான் இடிக்கப்பட்டது. அதன் நொறுங்கிய கற்களை சான்தோம் மாதா கோவிற் பக்கம் தோண்டும்போது கிடைத்தன என்று அறிந்தார் கூறுகின்றனர். இத் திருக்கோவிலின் கோபுரம் அறுபது ஆண்டுகளுக்கு முன்னால்தான் கட்டப்பெற்றது. பெருமானுக்குமுன் தலைவாயிலில் அதனைக் கட்டுவதற்கு இடம் இன்மையால் கீழை வாசலில் 'அதுதான் தலைவாயிலோ' என்று பிற்காலத்தார் எண்ணும்படி பெரிய கோபுரம் கட்டிமுடிக்கப் பெற்றுள்ளது. திருச்செந்தூரில் முருகன் கிழக்கே பார்க்க இருக்க, இடம் இன்மையால், திருக்கோபுரம் மேலைவாயிலில் அமைந்துள்ளமை இங்கே காண்க. திருக்குளத்தின் மேற்குக் கரையில் வடமேற்குப் பகுதியில் அங்கம்பூம்பாவை மண்டபம் இருப்பதும், அங்கேயே பூம்பாவைத் திருவிழா நடைபெறுவதும், அஃச்திக் குட்டை (அஃச்தி-எலும்பு) என்று ஒன்று கோவிலின் தென் மேற்கில் இப்போதுள்ள இராமகிருட்டிணர் திருமடத்தின் அருகே இருப்பதும், அங்கே உள்ள மடத்து மருத்துவச்சாலை இன்றும் " அஃச்திக் குட்டை ஆசுப்பத்திரி " என்று வழங்கி வருவதும் அப் பகுதிதான் மயிலாப்பூரின் சுடுகாடாக இருந்தது, அதிலேதான் பூம்பாவையை எரித்து அவளுடைய அஃச்தியை (எலும்பை) எடுத்து வைத்தார்கள் என்பதும் ஆகியவை உண்மைகளை ஆராய்ச்சியாளருக்குப் புலப்படுத்துவன. கோவிலின் கிழக்கு வாயிலில் கூத்தாடும் பிள்ளையார் பிற்காலத்தில் தோன்றியவ ராதல் வேண்டும்; சித்திரக் குளத்தின் வடகரைத் தெருவிலே மிகவும் பழைய கூத்தாடும் பிள்ளையார் கோவில் இன்றும் இருப்பதை முன் கண்டோம்.

ஆதலின் இப்போதுள்ள திருக்கோவிலே எப்போதும் உள்ள திருக் கோவில்; அம்மை கோவில் இடையில் இடிக்கப்பட்டுப்பின் கட்டப் பெற்றது என்பது உண்மைதான் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

புராண வரலாறுகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் என்னும் குன்றக்குடி மடத்தைச் சேர்ந்த அமுதலிங்கத் தம்பிரான் இயற்றிய பழைய புராணம் ஒன்றும், திருமயிலை நாதமுனி முதலியார் அண்மையில் இயற்றிய தலபுராணம் ஒன்றும் உள்ளன. நாதமுனி முதலியார் புராணத்தில் வாயிலார் நாயனார் புராணமும், திருவள்ளுவ நாயனார் புராணமும் சேர்ந்துள்ளன. புராணத்தில்:

முதலிற் கூறப் பெறுவது அம்மை மயிலாகிப் பெருமானைப் பூசை செய்தது. தன்முன் காட்சி தந்தருளி நின்ற பெருமானை நோக்கி அம்மை, "நான் மயிலாகிப் பூசை செய்தபடியால் இவ்வூர் மயிலை என்று பெயர் பெறுதல் வேண்டும்," என்று வரம் கேட்கப் பெருமானும் இசைந்தருளினான்.

இரண்டாவது முருகவேள் கும்பிட்ட வரலாறு கூறப்பெறுகிறது. மன்மதனை எரித்தபோது சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தெறித்தன. அவையே ஆறுகுழந்தைகளாகிக் கங்கையாற்றிலுள்ள சரவணப் பொய்கையில் விளையாடியிருந்தன. அவைகளைக் கட்டி ஒன்றாக்கி ஆறுமுகங்களும், பன்னிரண்டு கைகளும் இரண்டு கால்களும் கொண்ட ஆறுமுக நயினாராக ஆக்கியருளினாள் உமாதேவியார். இக்குழந்தை சிவபெருமானின் வேறல்லர். இருந்தாலும் இவ்வரலாற்று முறையில் சிவகுமாரனாகிச் சிவவழிபாடு செய்தனன். சிவபெருமான் தன் மகனைப் பார்த்து, "நீ மயிலாபுரியைச் சேர்ந்து என்னை வழிபடுவாயாக. உனக்கு வெற்றிவேல் தருவேன். அதனைக் கொண்டு சூரபதுமனை வென்று உன்னை வழிபடும் மக்களுக்கு நல்லருள்புரிக" என்று திருவாய் மலர்ந்தருளினன். அங்ஙனமே முருகப்பெருமான் மயிலாப்பூரில் வந்து கபாலீசுவரரை வழிபட்டனன். அப்போது சிவபெருமான் ஒரு சத்திவேலைத் தந்தருளினன். வேல் சிங்காரமானது; அதனை உடையவன் சிங்காரவேலன் ஆயினான். பின் சிங்காரவேலன் தன் தமையனாராகிய கூத்தாடும் பிள்ளையாரைக் கும்பிட்டு அருள் பெற்றுச் சூரபதுமனைச் சத்திவேலால் இரு கூறாகப்பிளந்து வென்றான். ஒரு கூறு மயிலாகவும் ஒரு கூறு சேவலாகவும் ஆயிற்று. மயிலை வாகனம் ஆகவும் சேவலைக் கொடியாகவும் ஆக்கிய சிங்காரவேலன் தந்தை கட்டளைப்படி இங்கே திரும்பி வந்து வள்ளி தேவயானையாருடன் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றனன்.

மூன்றாவது, நான்முகன் பூசித்த வரலாறு கூறப்பெறுகிறது. திருமாலின் உந்திக்கமலத்திலிருந்து நான்முகனைப் படைத்தான் சிவபெருமான். அப்போது நான்முகனுக்கு ஐந்து முகங்கள் இருந்தன. சிவபெருமானுக்கும் ஐந்து முகம் இருப்பதால் நான்முகன் சிவபெருமானோடு தான் சமம் என்று எண்ணி அகந்தை கொண்டு நின்றான். அதனைக் கண்டு அவனுடைய நடுத்தலையைக் கொய்து

விட்டான் சிவபெருமான். அக் கபாலம் அதாவது மண்டையோட்டினைச் சிவபெருமான் தன் கையில் தாங்கி நின்றான். அதனால், (கபாலத்தைத் தாங்கியவன்) கபாலி என்ற பெயர் சிவபெருமானுக்கு அமைந்தது. நான்முகன் தான் அகந்தை கொண்டு மதியாது நின்றமையால் வந்த பாவம் நீங்க இங்கே மயிலையில் வந்து கபாலியைப் பூசித்துத் திருவருள் பெற்றான். அவன் கேட்ட வரத்தால் பெருமான் கபாலி என்று பெயர் பெற்றான். கோவில் கபாலீச்சரம் என்றும், திருக்குளம் கபாலி தீர்த்தம் எனவும் பெயர் பெற்றன.

நான்காவதாக, நான்மறை பூசித்த வரலாறு கூறப்பெறுகிறது. சோமுகன் என்ற அசுரன் நான்கு மறைகளையும் எடுத்துக்கொண்டு ஓடிக் கடலில் மறைந்து கொண்டான். சிவபெருமான் திருமாலை மீன் வடிவுடன் சென்று சோமுகனைக் கொன்று மறைகளை மீட்டுக்கொண்டு வருமாறு கட்டளையிட்டனன். அங்ஙனமே திருமால் மச்சமாகிச் சென்று சோமுகனைக் கொன்று மறைகளை (வேதங்களை) மீட்டு வந்தனன். மறைகள் இங்கே திருமயிலையில் வந்து கபாலிப் பெருமானை வழிபட்டன. இவ்வரலாற்றால் பெருமான் மீனேசுவரன் என்று பெயர் பெற்றான். மயிலை வேதபுரி எனப் பெயர் பெற்றது.

ஐந்தாவது, சுக்கிரன் வழிபட்டது. ஒரு கோவிலில் நெய்யில் ஊறிய திரியை எலியொன்று இழுத்தது. அதனால் விளக்கு நன்றாக எரிந்து ஒளி தருவதாயிற்று. அதனால் மகிழ்ந்த சிவ பெருமான் அந்த எலிக்குத் திருவருள் பாலித்தான். அந்த எலி மாஎலிச் சக்கரவர்த்தியாகி மூவுலகங்களையும் ஆளும் பெரு வாழ்வு பெற்றது. மாஎலிதான் மாபலி என்று வழங்கப்பெறுகிறது. மாபலி அசுரன். அவன், யார், யார் எதை எதைக் கேட்டாலும் வழங்கு வதாகக் கூறினான். அதனால் பொறாமை கொண்ட தேவர்கள் வேண்டு தலால் திருமால் குள்ளன் (வாமனன்) ஆகப் பிறந்து மாபலியினிடம் சென்று மூன்றடி மண் வேண்டி நின்றான். மாபலி அதனைத் தர இசைந்தான். ஆனால் அவனுக்கு ஆசிரியனாகிய சுக்கிராச்சாரி அவனைத் தடுத்து, “ வந்திருப்பவன் உன் உயிரை வாங்க வந்துள்ள திருமால்” என்று எச்சரித்தான். அதற்கு மாபலி இணங்காது, தாரை வார்த்துக் கொடுக்க எத்தனித்தான். அப்போது சுக்கிரன் வண்டுருவினை எடுத்துக் கொண்டு தாரையை விழவிடாமல் அடைத்தான். அதனை அறிந்த வாமனனாகிய திருமால் ஒரு குச்சியால் குற்றினான். அது சுக்கிரனுடைய

ஒரு கண்ணை அவித்தது. அதனால் துடிதுடித்த சுக்கிரன் மயிலைக்கு வந்து கபாலி தீர்த்தத்தின் தென்கிழக்கு மூலையில் ஒரு சிவலிங்கத்தை அமைத்து ஒரு தீர்த்தத்தையும் உண்டாக்கி நாடோறும் கபாலிப் பெருமானைப் பூசனை புரிந்திருந்து பாவம் தேய்ந்து நல்லருளைப் பெற்றான். அவனுடைய வேண்டுதலின் வண்ணம் அவ்வூர் சுக்கிரபுரி என்று பெயர் பெற்றது. சுக்கிரன் வழிபட்ட பெருமான் சுக்கிரேசுவரன் என்னும் பெயர் வழங்கப் பெறுவானாயினன். சுக்கிரனுடைய மறைந்து போன கண்ணும் நல்ல கண்ணாயிற்று.

ஆறாவது, இராமபிரான் பூசித்தது. இராவணேசுவரன் சடாயுவைச் சிறகரிந்து கொன்று சீதையம்மையைத் தூக்கிக்கொண்டு சென்று இலங்கையில் அசோக மரத்தடியிற் சிறை வைத்து விட்டான். இராமபிரான் அதுகண்டு கலங்கி, சடாயு கூற உண்மை தெரிந்து தம்பி இலக்குவனுடன் திருமயிலாப்பூருக்கு வந்து கபாலிப் பெருமானைக் கும்பிட்டு அன்புக் கண்ணீர் வடித்து நின்றனன். அப்போது கபாலி நாயகன் காட்சி கொடுத்து "எண்ணிய காரியம் வெற்றியாகும். சீதையை மீட்டு நலமாகத் திரும்பி இங்கு வருக" என்று திருவருள் பாலித்தனன். இராமபிரான் அங்ஙனமே இலங்கை சென்று இராவணனைக் கொன்று சீதையை மீட்டுக்கொண்டு அயோத்திக்குத் திரும்பி முடி சூடி அரசாட்சி செலுத்தி வந்தான். அப்போது ஒரு நாள் மயிலைநாதன் திருவாக்கினை நினைந்து இராமபிரான் உடனே மயிலைக்கு வந்து சிவலிங்கம் ஒன்று ஒரு குளக்கரையில் நிலைநாட்டி வணங்கிச் சில காலம் தங்கியிருந்தனன். அக்காலத்தில் இராமபிரான் ஐப்பசி மாதம் திருவோணத்திற் கொடியேற்றிக் கார்த்திகையில் தீர்த்தமும், திருவிழாவும் கபாலி நாதனுக்கு நடத்தித் திருகார்த்திகை, திருவாதிரைகளிலும் கும்பிட்டு, பின் தை மாதத்தில் சிங்காரவேலனுக்குத் திருவிழா நடத்திக் கண் குளிரக் கண்டு இன்புற்று அயோத்திக்குத் திரும்பி எழுந்தருளினன்.

ஏழாவது, திருஞானசம்பந்தப் பெருமான் எலும்பைப் பூம்பாவையாக்கின திருவிளையாடல். மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார் என்பவர் அளவிலா நிதிக்குத் தலைவராய்க் குபேரனைப் போல வாழ்ந்து வந்தார். சிவபெருமான் திருவடிக்கு இணையிலா அன்பும் அடியார்களிடம் ஆதரவும் கொண்ட அவருக்கு ஒரு பெண் பிறந்து

திருமகளே போலப் பூம்பாவை என்ற பெயருடன் வாழ்ந்திருந்தாள். சிவநேசர் திருஞான சம்பந்தருடைய திருவருட் செயல்களையெல்லாம் கேட்டு அவரிடம் மிக்க அன்பு பூண்டு அவருக்கு அடியவராயினர்.

"சுற்ற நீடிய கிளையெலாம் சூழ்ந்துடன் கேட்பக்
'கற்ற மாந்தர் வாழ் காழி நாடுடையவர்க்கு அடியேன்
பெற்றெடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்' என்று மொழிந்தார்."

பெரியபுராணம்—2951.

திருவருள் வேறு வகையில் நிகழுமாறு* செய்தது. பூம்பாவை பூக்கொய்யும்போது பூநாகம் ஒன்று அவளைக் கடித்துவிட்டது; அதனால் அவ்வம்மை இறந்தனள்; சிவநேசர் வருந்தி, பூம்பாவையைச் சுட்டு அவளுடைய எலும்பையும் சாம்பலையும் திரட்டி ஒரு மட்குடத்தில் அடைத்து அதனைக் கன்னிமாடத்து வைத்திருந்தார். திருஞான சம்பந்தர் திருவொற்றியூர் வந்திருக்கிறார் என்பதை அவர் அறிந்து மகிழ்ந்து திருவொற்றியூர் வரை நடைப்பந்தர் அமைத்து அவ்வூருக்குச் சுற்றம் சூழச் சென்று பணிந்து நிகழ்ந்தமை உரைத்தார். உடனே சம்பந்தர், 'ஆழி சூழ்' மயிலாபுரித் திருநகர் அணைந்தார்; அவர் பூம்பாவையின் எலும்புள்ள குடத்தைக் கபாலிப் பெருமான் திருமுன்பு* கொண்டு வந்து வைக்கச் செய்தார்; பின் திருவருளை நினைந்து பதிகம் பாடினர்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக, என உரைப்பார்;"

"மன்னுவார் சடையாரை முன் தொழுது 'மட்டிட்ட'
என்னுநற் பதிகத்தினில் 'போதியோ' என்னும்
அன்ன மெய்த்திருவாக்கு எனும் அமுதம் அவ் அங்கம்
துன்ன வந்து வந்து உருவமாய்த் தொக்கது அக்குடத்துள்;"

"தேற்றமில்சமண் சாக்கியத் திண்ணர் இச் செய்கை
ஏற்றதன்று என எடுத்துரைப்பார் என்ற போது
கோற்றொடிச் செங்கை தோற்றிடக் குடம் உடைந்து எழுவாள்
போற்று தாமரைப் போது அவிழ்ந்து எழுந்தனள் போன்றாள்."

பெரியபுராணம்—2985, 2986, 2988

திருமயிலாப்பூர்ப் பதிகத்தில் அக்காலம் கபாலீச்சரத்தில் நடைபெற்ற திருவிழாக்களை ஞான சம்பந்தப் பிள்ளையார் வரிசையாகக்கூறுகின்றார். 1. மயிலை என்பது மயில் உருவான உமையம்மை. அவ்வம்மையின் வேண்டுதலின் வண்ணம் பெருமான் எழுந்தருளி இருக்கின்றான். இங்கே எப்போதும் அடியார்களுக்கு உணவு வழங்கும் விழா நடைபெறும்; 2. ஐப்பசி மாதம் திருவோணத்தில் கொடியேறிக் கார்த்திகை முடிய நடைபெறுவது ஐப்பசி ஓண விழா. 3. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையன்று நடைபெறும் விளக்கீடு என்னும் விழா ; 4. மார்கழி மாதம் திருவாதிரைப் பெருவிழா ; 5. அடியார்க்கு நெய்யுணவுதரும் தைப் பூசத் திருவிழா; 6. மாசி மகத்தில் கடலாட்டு; அதன்பின் மகிழ்ந்து நடமாடுதல் ; 7. கலி நீங்கும்படி கொண்டாடும் விழா கலி விழா எனப்பெறும். அது பல்லியங்களும் முழங்க எட்டுத் திக்குகளிலும் பலியிட்டுக் கொண்டாடும் விழா. இது பலி விழா எனவும், ஒலி விழா எனவும் பெயர் பெறும்; இது பங்குனி உத்தரத் திருநாள். 8. வைகாசியில் நிகழும் வளர் பிறை அட்டமி விழா; 9. பொற்றூப்புவிழா, பொன் தாம்பு—பொன்னூஞ்சல், இது ஆனி, ஆடி மாதங்களில் நிகழ்ந்தது போலும்! 10. ஆவணியில் நிகழும் பெருஞ்சாந்தி விழா ; குடமுழுக்கு விழா. இது பவித்திரோற்சவம் என்று வழங்கி வருகிறது.

பூம்பாவை உயிர் பெற்றெழுந்தமை கண்டு அனைவரும் பெருவியப் பெய்தினார்கள். திருஞான சம்பந்தர் இப்பதிகத்தினைப் "பூம்பாவைப் பாட்டு" என்று திருக்கடைக்காப்பிற் கூறுகிறார். அப்போது அவருக்கு வயது பதினாறு ; இது பின் வரும் பெரியபுராணப் பாட்டால் நிலை பெறும்: (பாட்டு 3097) —

"எண்ணில் ஆண்டு எய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணும் நான்முகத்தாற் கண்டான் ; அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினாறு ஆண்டு பேர் பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார்."

"இம் மகளைக் கொண்டு நீர் வீடு செல்லும்" என்று சம்பந்தர் கூற, சிவநேசர், "அருமையாய் அடியேன் பெற்ற பாவையைத் தாம் திருமணம் புணர்ந்து அருள்செய்யும்" என்று வேண்டிக்

கொண்டார். புகலி வேந்தர்—புகலிவாணர்—ஞானசம்பந்தர். அப்போது ஞான சம்பந்தர், " நீர் பெற்ற பெண் பாம்பு கடித்து இறந்துவிட்டாள். அவளையான் கபாலிப் பெருமான் கருணையை உலகவர் அறிந்து உய்யுமாறு மறு பிறவி பெறச்செய்தேன். ஆதலின் யானும் மறு பிறவி பெற்றுள்ள அவளுக்குத் தந்தையாவேன். நீர் கூறும் உரை தகாது. " என்று மறுமொழி யருளினார். பூம்பாவை திருவருளைப் போற்றியிருந்து சிவத்தை மேவினாள். சில நாட்கள் மயிலையில் தங்கியிருந்த சம்பந்தர் சிவநேசருடைய வருத்தம் அகலும்படி அவருக்கு இனியன மொழிந்தருளி விடை பெற்றுப் பிறபதிகளை வணங்கத் திருமயிலையின் நீங்கினார்.

திருவிழாக்கள்.

பங்குனி மாதம் பௌர்ணமியில் பத்தாம் நாள் தீர்த்த வாரி நடைபெறும் மயிலைநாதன் பெருவிழாவும், வைகாசி விசாகத்தைப் பத்தாம் நாளாகக் கொண்ட திருஞான சம்பந்தர் திருவிழாவும் மயிலைமா நகரில் நடைபெறுகின்றன. பெருவிழாவில் ஐந்தாம் நாள் இடபவாகனம்; ஏழாம் நாள் திருத்தேர். சம்பந்தர் திரு விழாவில் மூன்றும் நாள் ஞானப் பால், நான்காம்நாள் முத்துச் சிவிகை பெறுதல், ஐந்தாம்நாள் சுரப்பிணி தீர்த்தலும் முத்துப் பந்தல் பெறுதலும், ஆறும் நாள் பாம்பு கடித்து இறந்தவனைத் திரு மருகலில் எழுப்புதலும் படிக்காசு பெறுதலும், ஏழாம் நாள் பாண்டியன் சுரம் தீர்த்தலும் வைகையாற்றில் ஏடு விடுதலும், எட்டாம் நாள் ஓடம் விடுதலும், ஆண்பனையைப் பெண்பனையாக்கியதும்,. ஒன்பதாம் நாள் பூம்பாவையை எழுப்புதல், பத்தாம் நாள் திருப் பெருமணமும் சோதியிற் கலத்தலும்; இங்ஙனமாக விழாக்கள் நடத்துவதால் பத்திப் பெருக்கு ஓடி மக்கள் உள்ளத்திற் பாய்ந்து நலம் விளைவிக்கும் என்பதில் தடையில்லை. சிங்காரவேலனுக்கு ஐப்பசி மாதம் கந்தர் சட்டித் திருநாள் நடைபெறுகிறது. தைப் பூசத்தில் தெப்பத் திருவிழா நிகழ்த்தப் பெறுகிறது. ஊழிக் காலத்தில் வரும் பெரு வெள்ளத்தில் பெருமான் தெப்பமாக மிதந்து அடியார்க்கு ஆதரவளிப்பான் என்பதை இவ் விழா குறிப்பிடுகிறது.

" கத்தித் திரி பிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித் தெப்பம் பார் வாழத் தந்த பிரான். "

நம்பியாண்டார் நம்பிகள்.

“ மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இது எனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக ! ”

பட்டினத்துப் பிள்ளையார்

“ இணையார் திரு அடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந் தொழிந்தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. ”

மணிவாசகர்.

புணை—தெப்பம், தோணி.

“ பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

திருவள்ளுவ நாயனர்.

வாயிலார் நாயனர்

இவர் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் திருமயிலாப்பூரிற் பிறந்து திருவருள் பெற்ற பெரியார். இவருடைய வரலாற்றைக் கூறும் முதல் நூல் திருத்தொண்டத் தொகை. அதில் சுந்தர மூர்த்தி நாயனர்:

“ துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன். ”

என்று கூறுகிருர். “ கடல் நடுவிலிருந்து அலைகள் கொண்டு வந்து கரையில் ஒதுக்கும் செம்பவளங்கள் ஒளி வீசி இருளைப் போக்கும் பழமையான திருமயிலையிற் பிறந்தருளிய வாயிலார் நாயனர் என்ற அடியார்க்கும் நான் அடியேன் ” என்று கூறுகிருர் சுந்தரனர், இந்நகரப் பெருமையை, ‘ கடல் ’ தன்பால் உண்டாகின்ற பவளம், முத்து முதலிய நிதிகளை வைப்பதற்குப் பெரிய சேம வைப்பு என்று கருதி மரக்கலமாகிய செப்பில் வைத்துத் திருமயிலையிற் கொண்டு வந்து சேர்க்கும் ’ என்று சேக்கிழார் பாடுகிருர். கப்பல்கள் பிற

நாடுகளிலிருந்து கொண்டு வந்து சேர்க்கும் யானைக்குட்டிகளும் முத்துக்களைக் கொழித்து ஒதுக்கும் கடலிற் பிறந்து சேர்கின்ற மேகங்களும் எருமைக் கன்றுகளும் தம்முள் நிறத்தாலும் பருமனாலும் ஒன்றை யொன்று ஒத்துத் திகழ்ந்தன. அப்படிப்பட்ட மயிலாப்பூரில் வாயிலார் நாயனார் தோன்றினார்.

"வாயிலார் என நீடிய மாக்குடித்
தூயமா மரபின் முதல் தோன்றியே
நாயனார் திருத் தொண்டின் நயப்புறு
மேயகாதல் விருப்பின் விளங்குவார்."

பெரிய புராணம்—4085.

"வாயிலார் என நீடிய மாக்குடித்
தூயமா மரபின் முதல் தோன்றியே"

என்ற மேலே கண்ட பெரிய புராணப் பாடற் பகுதியை ஆராயுமிடத்து "'வாயிலார்' என்பது வேளாளருள் ஒரு குடியின் பெயர்; அக் குடிக்கு ஒப்பில்லாத புகழைப் பெற்றுக் கொடுத்தமையினால் இந்த நாயனாருக்கு அக்குடிப் பெயரே பெயராயிற்று" என்ற உண்மை விளங்குகின்றது. சேக்கிழார் என்ற வேளாண் குடிக்குப் புகழ் தேடித் தந்தவர் "சேக்கிழார்" என்றே பெயர் பெற்றார். தொல்காப்பியக் குடிக்குப் பெரு விளக்குப் போலத் தோன்றிய பெரியார் "தொல்காப்பியர்" என்றே பெயர் பெற்றனர்.

இப் பெரியார் மாறா அருட்கடலாகிய கபாலிப் பெருமானைத் தம் மனக் கோவிலில் எழுந்தருள்வித்து, அப்பெருமானுடைய தணியாத திருவருள் என்னும் நெய்யினை வார்த்துத் திருவிளக்கினை ஏற்றி அகப் பூசனைக்குரிய கொல்லாமை, பொறுமை முதலிய மேம்பாடுடைய எட்டு மலர்களையும் சாத்தி, அன்பு என்னும் சத்தாகிய அமுதத்தினைப் படைப்பாகப் படைத்து வீடுபெற்றார்.

"மறவாமையான் அமைத்த மனக் கோவிலுள் இருத்தி
உறவாதிதனை உணரும் ஒளி விளக்குச் சுடர் ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பென்னும் அமுது அமைத்து அர்ச்சனை [செய்வார்."

பெரியபுராணம்—4086.

எப்பொழுதும் இடைவிடாது மனத்தினுல் எண்ணி எண்ணி வழி பாடு செய்து நெடுநாள் வாழ்ந்திருந்து கபாலிப் பெருமான் திருவடி நிழலை அடைந்து தொழுதிருந்த வாயிலார் நாயனர் திருவடி அடைந்தது மார்கழி மாதம் இரேவதி நாள். ஒவ்வொரு மாதத் திலும் இரேவதி நாளில் இவருக்கு இத்திருக் கோவிலில் திருநாள் நடைபெறுகிறது.

அரசகோபுரம்

அரச கோபுரம் கட்டி அறுபது எழுபது ஆண்டுகள் ஆயின. அரசூர்ப் பார்த்த சாரதி முதலியார் என்ற பெரியார் மிக மிக முயன்று ஒன்பது கலசங்களோடு கூடிய கோபுரத்தை, இரண்டிலக்க ரூபா சேர்த்துப் பேரழகு விளங்கத் திருத்தி அமைத்தார். கோபுரம் 1948-ஜூன் மாதம் 27-ம் தேதி நிறைவு பெற்றது. புராண வரலாறுகள், நாயன்மார்களுடைய அருட்செயல்கள் முதலிய பத்தியூட்டும் சித்திரங்கள் இக் கோபுரத்தில் அமைந்து காணுவார் உள்ளத்தைக் கவர்கின்றன.

அருணகிரிநாதர்

முருகப் பிரானுடைய திருப்புகழைப் பாடிய பெரியார் அருணகிரி நாதர். அவர் இங்கே வந்து சிங்கார வேலனுக்கு மூன்று திருப் புகழ்ப் பாமாலை பாடிச் சூட்டி, மனம் கசிந்து நின்றூர். முருகப்

பெருமானே திருஞான சம்பந்தராகப் பிறந்தார் என்று அறியார் சிலர் பேசி வருகின்றனர். அருணகிரி நாதர் இக் கூற்றினை ஏற்றுக் கொண்டு,

"அளகை வணிகோர் குலத்தில் வனிதை உயிர் மீளழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா!"

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். வணிகோர் குலத்தில் வனிதை—பூம்பாவை. பாடல் சொற்றவர் திருஞானசம்பந்தர். அம்மை அருளிய ஞானப்பால் குடித்து ஞான சம்பந்தப் பிள்ளையானார் சீர்காழித் தலைவர்; குமரேசரும் சிவபெருமானுடைய குமாரராகக் கருதி வழிபடப்பெறுகிறார். இந்த ஒற்றுமை பற்றிப் பரம் பொருளே ஆகிய முருகப் பெருமான் சீர்காழியில் வந்து தாயார் வயிற்றிற் பத்து மாதம் இருந்து பிறந்தார் என்று கூறுவது பெரும் பிழையேயாம். குமரனை முழுமுதலாக வழிபடுபவர் கௌமாரம் என்னும் சமையத்தினர்.

இனி, திருவான்மியூர் சென்று வழிபட்டு உய்திதேடுவோம்.



திருவான்மியூர்—மருந்தீசர்

பக்கம் 107

(3). திருவான்மியூர்—மருந்தீசர்

தொண்டை மண்டலத்தில் திருமயிலை, திருவொற்றியூர் ஆகிய தலங்களுடன் தேவாரம் பெற்ற திருப்பதிகள் முப்பத்திரண்டு. அவை களில் திருவான்மியூர் என்பது ஒன்று ; திருமயிலாப்பூருக்கு நான்கு மைல் தெற்கில் கடற்கரையில் இருக்கிறது. சென்னை மாவட்டத் திற்கு அடுத்த தென் பகுதியில் செங்கற்பட்டு மாவட்டம் சைதாப் பேட்டை வட்டத்தினைச் சேர்ந்தது என்றாலும் இந்தத் திருத்தலம் அஞ்சல் துறையினரால் சென்னை மாவட்டத்தோடு சேர்க்கப்பெற்றிருக் கிறது ; மேலும் இது திருமயிலாப்பூருடன் பலவகைகளில் தொடர்பு டையதாக உள்ளது. திருநாவுக்கரசர்பெருமான் இத்திருப்பதிக்கு வந்து சில நாள் தங்கி மருந்தீசனைப் பாடிக் கடற்கரை வழியாகத் திருமயிலாப்பூரைச் சேர்ந்தார் ; திருஞான சம்பந்தப் பெருமான் எலும்பினைப் பெண்ணுருவாக்கித் திருமயிலாப்பூரிலிருந்து புறப்பட்டுக் கடற்கரை வழியாகச் சென்று இவ்வூருக்கு வந்து சிலநாள் தங்கிப் பதிகங்கள் பாடித் திருவருளைப் பெற்றார். இக் காரணங்களினால் இந்நகர் சென்னை மாவட்டத்துடன் சேர்த்து ஆராயப் பெறுகின்றது. சென்னை மாநகரத்தில் சட்டக் கல்லூரிக்கு மேற்கே அருகிலுள்ள வெளியூர் செல்லும் வாடகை மோட்டார் வண்டி நிலையத்திலிருந்து பத்தொன்பதாம் எண்ணுள்ள வண்டியிற் போனால் பலகை வாராவதியை அடைந்து அரைமைல் தூரத்தில் உள்ள திருவான்மி யூருக்குள்ளே திருக்கோவிலருகிலேயே போய்ச் சேரலாம். திருப்போரூர் செல்லும் வண்டியிலும் ஏறிப்போகலாம் ; அப்படியானால் பலகை வாராவதியில் இறங்கிக் கைகாட்டி காட்டும் வழியே அரை மைல் தூரத்திலுள்ள திருக் கோவிலைச் சென்று சேரலாம். வாராவதி— பாலம்; பலகையினாற் போட்ட பாலம் ஆதலின் பலகை வாராவதி என்று பெயர் வழங்குகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் திருவான்மியூர் செயங்கொண்ட சோழமண்டலத்தின் புலியூர்க் கோட்டத்தில், கோட்டூர் நாட்டுத் தேவ தானமாக இருந்திருக்கிறது. இங்ஙனம் கூறுவன சோழ மன்னர்கள் காலத்திற் செதுக்கப் பெற்ற கல் வெட்டுக்கள்.

தேவாரத்தில் திருவான்மியூர் பின் வருமாறு புகழப் பெறுகிறது :—

" கரையுலாம் கடலிற்பொலி சங்கம் வெள்இப்பி வன்
திரையுலாம் கழிமீன் உகளும் திருவான்மியூர். "

" சந்துயர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டு தம்
சிந்தை செய்து அடியார் பரவும் திருவான்மியூர். "

" கானயங்கிய தண் கழிசூழ் கடலின் புறம்
தேனயங்கிய பைம் பொழில்சூழ் திருவான்மியூர். "

" மஞ்சுலாவிய மாடமதிற் பொலி மாளிகைச்
செஞ்சொலாளர்கள் தாம் பயிலும் திருவான்மியூர். "

" மண்ணினிற் புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ணெனப் புரிசைத் தொழிலார் திருவான்மியூர். "

" போதுலாவிய தண்பொழில் சூழ் புரிசைப்புறம்
தீதில் அந்தணர் ஓத்து ஒழியாத் திருவான்மியூர். "

" வண்டு இரைத்த தடம் பொழிலின் நிழற் கானல் வாய்த்
தெண் திரைக் கடல் ஓதம் மல்கும் திருவான்மியூர். "

" பொருது வார்கடல் எண்டிசையும் தரும் வாரியால்
திரிதரும் புகழ்ச் செல்வமல்கும் திருவான்மியூர். "

" மை தழைத்து எழுசோலையில் மாலைசேர் வண்டினம்
செய்தவத் தொழிலார் இசைசேர் திருவான்மியூர். "

" திரையார் தெண்கடல் சூழ் திருவான்மியூர். "

" செடியார் மாதவி சூழ் திருவான்மியூர். "

" செய்யார் செங்கயல்பாய் திருவான்மியூர். "

" திண்ணார் வண்புரிசைத் திருவான்மியூர். "

" சேதமில்லாத் திருவான்மியூர். "

" தேனார் சோலைகள் சூழ் திருவான்மியூர், "

"செறிவார் மாமதில் சூழ் திருவான்மியூர்,"

"திண்தேர் வீதியதார் திருவான்மியூர்."

"சென்றார்தம் இடர்தீர் திருவான்மியூர்."

மேலேகண்டன திருஞானசம்பந்தர் இவ்வூரிற் பாடிய இரண்டு திருப்பதிகங்களில் உள்ளன.

அப்பர்பெருமான் தேவாரத்தில், "வண்டுசேர் பொழில் வான்மியூர்" என்ற சொற்றொடர் இவ்வூரைப் புகழ்வது. "மணிமாட மேடை உயர் திருவான்மியூர்" என்றார் திருப்புகழில் அருணகிரிநாதர்.

கிழக்கே உள்ள கோபுரவாயிலுக்கு நேர் எதிரே முருகப்பெருமான் வள்ளி தேவயானையுடன் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றான். அப்பெருமானுக்கு வலது புறம் மூத்த பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். கோபுர வாயிலின் வழியாக உள்ளே நுழைந்தவுடன் வட கிழக்கு மூலையில் அம்மை திரிபுரசுந்தரி தெற்கே பார்க்க எழுந்தருளித் திருக்காட்சி யருள்கின்றாள். அம்மை சுந்தரியாதலின் சொக்க நாயகி என்றும் பெயர் பெறுவாள். பேரழகுதானே காண்பார் உள்ளத்தைக் கவர்ந்து சொக்கவைப்பது! அம்மை முன் இடபமில்லை; அதன் இடத்தில் சிங்கம் இருக்கிறது. இப்பக்கங்களிலுள்ள பழமையான திருக்கோவில்களில் அம்மை திருமுன்பு காளியம்மைக்கு ஊர்தியாகிய சிங்கமே வைக்கப் பெற்றுள்ளது. திரிபுரசுந்தரி யம்மையின் கருவறைச் சுவர்களிலேதான் ஏழு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை ஏழும் 1909-ல் கல்வெட்டுத் துறையினரால் பதிவு செய்யப்பெற்றன. அவைகளில், செயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர் நாட்டுத் தேவதானம் திருவான்மியூர் உடைய மாதேவனுக்குத் திருவிளக்கினுக்கு ஆடுகளும் கோவிற் பூசனைக்கு நிலங்களும் விடப்பெற்றமை குறிக்கப் பெற்றுள்ளது. பரகேசரிவர்மரான உடையார் இராசேந்திரர், இராசகேசரிவர்மரான இராசாதிராச தேவர் (கி.பி. 1001—1051) ஆகிய இச் சோழர்கள் காலம் குறிக்கப் பெறுகிறது.

அம்மை திருக்கோவிலுக்கு எதிரே நாலுகால் மண்டபம் இருக்கிறது. மார்கழி மாதம் பௌர்ணமியன்றும், பங்குனிப் பெருவிழாப் பந்தம் பறி விழாவின் முடிவிலும் தியாகராசப் பெருமான் திரு நடனம்

ஆடுவான். அந் நடனம் பதினெட்டு வகைப்படும். அந் நடனக் காட்சியை எண்ணிறந்த மக்கள் கூடிக் கண்டு இன்புறுவார்கள். இந் நாலுகால் மண்டபத்தின் மேற்கே இருக்கின்றான் தியாகராசப் பெருமான்.

தியாகராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் மாமண்டபத்திற் சென்று கும்பிட்டுக் கொண்டு வடபுறம் உள்ள திருவாயிலின் வழியாகவே மருந்தீசன்திரு முன்பு செல்லுதல் வேண்டும். அங்கே கருவறையில் மேற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றான் மருந்தீசன். அப்பெருமானுடைய திருமேனி உருகிக் கரைந்தது; பால்போல வெள்ளை நிறம் உடையது. அதனால் பெருமான் பால்வண்ணநாதன் என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றான். திருநெல்வேலி மாவட்டத்திலும் கரிவலம்வந்தநல்லூரிற் பால்வண்ண நாதன் எழுந்தருளியிருக்கின்றான். தலைவாசலுக்கு நேரே தென் முகமாக இருப்பவன் அம்பலவாணப் பெருமான். உட்சுற்றில் பிள்ளையார், வள்ளி தேவயானையுடன் முத்துக்குமரன், சமையாசிரியர் எழுந்தருள் மூர்த்திகள், சண்டேசுவரர், கங்காளநாதர், தென்முகக் கடவுள், அறுபத்து மூன்று நாயன்மார்கள் முதலியோர் எழுந்தருளியுள்ளார் கள். வெளிச்சுற்றில் பால்வண்ண நாதனுக்கு எதிரே நந்தி, பலிபீடம், கொடிமரம், மேலைக்கோபுரம், மேலைக்கோபுர வாசல் இவை வரிசையாக இருக்கின்றன. வடக்குச் சுற்றில் தல விரிச்சமாகிய வன்னிமரமும், வசந்த மண்டபமும், கோவில் அலுவலகமும் ஆகிய இவை உள்ளன. [விரிச்சம்—மரம்.]

கீழக் கோபுர வாயிலுக்கு எதிரே ஒரு சிறு தீர்த்தம் உள்ளது. மொட்டைக் கோபுரம், அதன் கிழக்கே பதினாறு கால்மண்டபம், அதற்கும் கிழக்கே பவனிமேடை ஆகிய இவை உள்ளன. இவை களுக்கு வடக்கே ஒரு திருக்குளமும் நீராழி மண்டபமும் இருக்கின்றன. இக்குளத்திற் பங்குனிப் பெருவிழாவில் பந்தம் பறியன்று தெப்பத் திருநாள் நடைபெறுகிறது. தீர்த்தவாரி கிழக்கே கடலில் நிகழ்கிறது; காமிகாகமப்படி நடப்பது கோவிற் பூசனை. கோவிலின் வடமேற்கு மூலையில் வான்மீகி முனிவர் கோவில் தெற்கே பார்க்க இருக்கிறது. இவருக்கு நேர் தெற்கே இருக்கிறார் ஒண்டி விநாயகர். பால் வண்ணர் எழுந்தருளியுள்ள இத் திருக்கோவில் பழுதடைந்திருந்ததை நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் 1913-ல் திருப்பணிபுரிந்து குடமுழுக்குச் செய்து பெரும் பேறு பெற்றார்கள். அண்மையில் 1961-ல் குடமுழுக்குச் செய்யப் பெற்றது.

தல புராண வரலாறு

அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் என்ற தமிழ்ப் பெரும்புலவர் இத்தலத்துக்கு ஒரு புராணம் பாடியிருக்கிறார். அது பத்தொன்பது படலங்களையும் ஓராயிரத்திருபத்திரண்டு பாடல்களையும் கொண்டு 1895-ல் அச்சிடப் பெற்றது. அதிலிருந்து சில கூறுவோம். இப்புராண ஆசிரியர் துறவு பூண்ட பின் கலியாணசுந்தர யதீந்திரர் என்று அழைக்கப் பெற்றார்.

1. வன்மீகம் என்பது புற்று; முனிவர் ஒருவர் வன்மீகத்துள் இருந்து தவம் செய்தபடியால் வான்மீகி என்று பெயர் பெற்றார். அவர் வடமொழியில் இராம கதையைப் பாடிய முதற் காப்பிய கருத்தர், முதற் கவி என்று புகழ் பெற்றார். அவரிடம் ஒருநாள் மார்க்கண்டேயர் வந்து ''சிவபூசனையினாலேதான் முத்தியடைதல் முடியும்'' என்று கூறினார். வான்மீகி அவரை வணங்கி '' நான் வழிபாடு செய்ய ஏற்ற இடம் இது என்று கூறியருள்க'' எனக் கேட்டார். அதற்கு மார்க்கண்டர் '' நீர் உலகினைச் சுற்றிப் போய்க் கொண்டிரும்; 'யாம் இங்கே இருக்கிறோம்' என்று ஓர் ஒலி உமக்குக் கேட்கும். அந்த இடத்தில் தங்கிச் சிவபூசனைபுரியும் என்று ஆணை தந்தார். அந்த ஏவலின் வழியே வான்மீகி முனிவர் சென்றார். ஓரிடத்தில் அவருக்கு '' யாம் இங்கே இருக்கிறோம்'' என்ற ஒலி கேட்டது, உடனே அவர் அங்கே தங்கிப் பூசனைபுரிந்தார். அங்ஙனம் அவர் தங்கிப் பூசனை புரிந்த இடம் இது; அதனால் இது 'வான்மீகியூர்' என்று பெயர் பெற்று 'வான்மியூர்' என மருவி வழக்கில் வந்துவிட்டது. முனிவருக்குப் பெருமான் பங்குனிப் பௌர்ணமியன்று வன்னி மரத்தடியிற் காட்சி கொடுத்து நடனக்காட்சியும் அருளினான். அதனாலேயே இவ்வூர்ப் பெருவிழா பங்குனி மாதம்பௌர்ணமியில் நடைபெறுகின்றது. வான்மீகியாருடைய வேண்டுதலினால் சிவபெருமான் ஐந்து நீர்த்துளிகளைத் தன் சடைமுடியிலிருந்து சிந்தினான்; அவைகளில் ஒன்று கிழக்கே பிறவி நாசனி என்றும், ஒன்று தெற்கே காமநாசனி என்றும், ஒன்று மேற்கே பாவநாசனி என்றும், ஒன்று வடக்கே ஞானதாயினி என்றும், மற்றொன்று இவைகளுக்கு நடுவே மோட்சதாயினி என்றும் பெயர்களுடன் தீர்த்தங்களாயின. வான்மீகியாரை இங்கேயே தங்கி வழிபட்டிருக்கும்படி பெருமான் அருளினான். அதனால் இங்கே அம்

முனிவருக்குத் திருக்கோவில் ஏற்பட்டுள்ளது. அவருடைய எழுந்தருள் திரு உருவம் இப் பெரிய கோவிலில் இருக்கிறது; தியாகராசருடைய திரு நடனம் காண அது அவருடன் எழுந்தருளி வரும்.

2. ஒரு நாள் நான்முகன் கொட்டாவிவிட்டான். அதிலிருந்து இரட்சசு என்ற வானரன் தோன்றினன். அவன் சத்தியலோகத்தில் கலியாண தீர்த்தத்தில் விழுந்து பெண்ணுருவை அடைந்தான். அப் பெண் குரங்கினைச் சேர்ந்து இந்திரன் வாலியையும், சூரியன் சுக்கிரீவனையும் பெற்றனர். பெண்ணாகியிருந்த இரட்சசு இங்கே வந்து பிறவிநாசனியில் முழுகி ஆண் உருப் பெற்று மருந்தீசனை வழிபட்டு உய்ந்தான்.

3. கண்ணபிரான் அருச்சுனனுக்குச் சாரதியானபடியால் பார்த்தசாரதி என்னும் பெயருடையவனாயினன். அருச்சுனன் போர்க்களத்தில் தன் சுற்றத்தாரையும் ஆசிரியரையும் எதிர்த்துப் போரிடத் தயங்குவது கண்டு கண்ணபிரான் அவனுக்குப் பகவத் கீதையினைக் கற்பித்துத் துணிவுண்டாக்கி உற்றார் உறவினரையும், ஆசிரியரையும் கொல்வித்து வெற்றி முழக்கிட்டனன். தருமபுத்திரனுக்கு முடி சூட்டித் துவாரகைக்குத் திரும்பும் வழியிற் கண்ணபிரான் உபமன்னியு முனிவரைக் கண்டான். அவர் "நீர் கீதோபதேசத்தில் 'சிவபூசை விவகாரத்துக்கு மட்டுமே' என்று சொல்லி வேதத்துக்குப் புறம்பு பேசிப் பாவத்துக் குள்ளானீர்" என்று சொல்லவும் கண்ணபிரான் அதற்குக் கழுவாய் கேட்டு நின்றனன். முனிவர் கண்ணபிரானுக்குச் சிவதீக்கை செய்து திருவான்மியூருக்குச் சென்று சிவபூசை புரியுமாறு ஆணையிட்டனர். பார்த்தசாரதி திருவான்மியூரில் பாவநாசனியில் முழுகிப் பால்வண்ண நாதனைப் பூசித்துப் பாவம் நீங்கப் பெற்றனன்.

4. அத்திரி முனிவரின் மகன் சந்திரன். அவன் தன் ஆசிரியர் பெருமானாகிய தேவாசிரியர் வியாழ பகவானுடைய மனைவி தாரை என்பவளுடன் கூடிப் புதன் என்ற பிள்ளையைப் பெற்றான். சந்திரனுக்குச் சயரோகம் வரும்படி வியாழன் சபித்தனன். அவன் நோய் தாங்க மாட்டாமல் வருந்தித் திருவான்மியூரில் காமநாசனி என்ற தீர்த்தத்தில் முழுகி மருந்தீசனையும் சொக்க நாயகியையும் கும்பிட்டுக் கொடும் பாவம் நீங்கப் பெற்று உய்ந்தான்.

5. நாடோறும் காலையில் மந்தேகம் என்னும் தீவிலுள்ள அறுபதினாயிரம் இராக்கதர் சூரியனை எதிர்த்துப் போரிட்டு வந்தனர். அத்துயரம் தாங்கமாட்டாமல் நாரதர் நல்லுரையால் சூரியன் தன் தம்பி அசனியைத் திருவான்மியூருக்கு அனுப்பிச் சூரிய தீர்த்தம் கண்டு முழுகி அருள் பெறச் செய்தான். அதனால் சூரியன் இராக்கதர் இழைத்துவந்த துன்பத்தினின்று நீங்கினான். சூரியன் இரவில் மேற்கேயிருந்து பெருமானைக் கும்பிட்டபடியால் பெருமான் மேற்குத் திசை நோக்கி எழுந்தருளியிருக்கின்றனன்.

6. அரக்கர் தொல்லைக்கு ஆற்றாது இந்திரன் பிருகு முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்து சரண் புகுந்தான் ; அவன் அங்கே தங்கி யிருந்தபோது முனிவருடைய மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டான். முனிவர் அவனை இராக்கதன் ஆகும்படி சபித்தார். அதன்படி இராக்கதனாகிய இந்திரன் திருவான்மியூருக்கு வந்து வழிபட்டுப் பாவம் நீங்கி முன்னைய உருவினைப் பெற்று விண்ணுல கடைந்து அரசாண்டான்.

7. ஒரு கற்பம் முடிந்து அதனோடு மறைந்து, மறு கற்பம் தொடங்கியபோது மறுபடி திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன் திருவான்மியூருக்கு வந்து பூசை செய்து படைக்கும் தொழில் புரிய ஆணைபெற்றுப் பங்குனிப் பௌர்ணமியில் முடியும் பத்து நாட் பெரு விழாவினை நடத்திப் பேறு பெற்றான்.

8. சோமுகாசுரனால் தூக்கிச் செல்லப்பட்ட வேதங்கள் மச்சமாகிய திருமாலினால் மீட்கப்பெற்று இங்கே வந்து பெருமானைப் பூசனை புரிந்து திருவருள் பெற்றன ; அதனால் இவ்வூர் ‘வேதபுரி’ என்றும் பெயர் பெற்றது. வேதங்கள் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்த இடம், வேதசிரேணி எனப்படும் ; அது இன்று வேளாச்சேரி என்று வழங்கப் பெறுகிறது.

9. வசிட்ட முனிவர் காமதேனுவை இந்திரனிடம் பெற்றுக் காசிக்குச் சென்று பூசை புரிந்திருந்தார். ஒரு நாள் காமதேனு மேய்ந்துகொண்டு போனது, கயிலை மலைச் சாரலை அடைந்து அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டது. அதனால் வெகுண்ட வசிட்டர் கடுஞ்சினம் கொண்டு அப்பசுவைக் “காட்டுப் பசு ஆக” எனச் சபித்தார். காமதேனு காட்டுப் பசுவாகி அலைந்து திரிந்து திருவான்மியூருக்கு

வந்தது. அப்போது அவ்வூர் காடாக இருந்தது. காட்டினிடையே ஒரு சிவலிங்கத்தைக் கண்டு அப்பசு பெருமகிழ்வு அடைந்து தன் மடியிலிருந்து பாலை அந்த இலிங்கத்தின் மேலே சொரிந்து சொரிந்து எந்நேரமும் கும்பிட்டிருந்தது. அக்காலத்தில் சதயூ என்னும் மன்னன் சைதாப்பேட்டையில் அரசாண்டிருந்தான். 'சதயூப் பேட்டை' தான் சைதாப்பேட்டை ஆயிற்று போலும்! அவன் ஒரு சிங்கத்தைத் துரத்திக்கொண்டு இக்காட்டிற்கு ஓடி வந்தான். அந்தச் சிங்கத்தைக் காமதேனு முட்டிக் கொன்றது. அப்போது அதன் குளம்பு பெருமான் சிரசின் மேலே தன்னை அறியாமற் பட்டுவிட்டது. அவ் வடுவினை இன்றும் நாம் பால் வண்ணர் உச்சியிற் காணலாம்.

10. பெருமான் பசுவுக்குக் காட்சி கொடுத்து, " உன் பூசையை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டோம். நீ பால் சொரிந்து வந்தமையால் பால் வண்ணம் ஆயினோம். உன் கால் மிதித்துப் பட்ட வடுவை உன் அன்புக்கு அடையாளமாக அமைத்துக் கொண்டோம். நீ காமதேனுவாகி விண்ணுலகடைந்து வாழ்க" என்று அருளினான். இதனைக் கண்ணாரக் கண்ட சதயூ மன்னன் அங்கே சிவலிங்கப் பெருமானுக்குத் திருக்கோவில் எடுத்துத் திருவிழா நடத்திப் பேறு பெற்றான்.

சிவபூசை செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயரை எமன் அணுகி அவர் தழுவிக்கொண்ட சிவலிங்கத்துடன் பாசக்கயிறு கொண்டு இழுக்க, பெருமான் சிவலிங்கத்தில் தோன்றி எமனை உதைத்துக் கொன்று மார்க்கண்டருக்கு என்றும் பதினாறு வயது அருளினான். திருவருளால் உயிர் பெற்றெழுந்த எமன் தான் செய்த குற்றத்தினின்றும் விடுபடுமாறு இங்கே வந்து மருந்தீசனைக் கும்பிட்டு மன்னிப்புப் பெற்றான்.

11. இராமபிரான் சீதையைத் தேடிச் செல்லும் வழியில் இங்கே வழிபட்டு இராவணனை வெல்லும் ஆற்றல் பெற்றான்.

12. அகத்திய முனிவர் இங்கே வந்து பூசனை புரிந்திருந்து பெருமானைக் கண்டு பற்பல நோய்களுக்குரிய மருந்துகளைக் கேட்டுத் தெரிந்து " பெருமானே! மருந்துகளைப் பற்றி அடியேனுக்கு அருளினமையால் தேவரீர்! இன்று முதல் 'மருந்தீசன்' என்னும் பெயரைத் தாங்கியருளுதல் வேண்டும்" என்று பணிந்து வேண்டினார்.

இமைய மலையிற் பார்வதியைச் சிவபெருமான் திருமணம் செய்து கொண்டருளிய திருமணக்கோலக் காட்சியினையும் இங்கே கண்டு விம்மிதம் எய்தினர் அம்முனிவர்.

13. பிருங்கி முனிவர் திருவான்மியூருக்கு வரும் வழியில் ஒரு மலையில் நைமிசாரணிய முனிவர்களுடன் தங்கிச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அம்மலை பிருங்கி முனிவர் தங்கியமையால் "பிருங்கி மலை" என்று பெயர் பெற்றது. அது இன்று பறங்கிமலை என்று வழங்கி வருகிறது. கிருத்துநாதருடைய மாணவர் தாமசு முனிவர் இங்கே வந்து தங்கியதால் இம் மலையினை செயின்ட் தாமசு மலை (**St. Thomas Mount**) என்று பிற்காலத்தார் அழைப்பாராயினர். செயின்ட் தாமசு வந்து தங்கிய படியால் செயின்தோம் என்ற பெயர் மயிலாப்பூரின் கடற்கரைப் பகுதிக்கு ஆயிற்று என்பதை முன்னர்க் கூறினோம். இங்ஙனமாகப் பல பெரியார்களுக்குத் திருவருள் பாலித்து விளங்கும் பால்வண்ணனாகிய மருந்தீசன் திருவடிகளைச் சிந்தித்துத் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் தேவாரம் பாடித் திருவருள் பெற்றார்கள். நாவரசர் பாடிய பதிகம் ஒன்றும், ஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் இரண்டும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

திருஞானசம்பந்தர் பெருமானிடம் சில வினவுகின்றார். "உலகு ஆளுடையீர் சொல்லீர் :(1) மடமாதுடன் ஆகிய மாண்பு? (2) அந்தியின் ஒளியின் நிறம் ஆக்கிய வண்ணம்? (3) ஆனை உரி போர்த்து அனலாடல் உகந்தது ? (4) வஞ்ச நஞ்சுண்டு வானவர்க்கு இன்னருள் வைத்தது? (5) பிறை செஞ்சடை வைத்த வியப்பு? (6) மூது எயில் ஒரு மூன்று எரியூட்டிய மொய்ம்பு ? (7) பண்டு இருக்கு ஒரு நால்வர்க்கு உரை செய்தது? (8) பக்கமே பல பாரிடம் பேய்கள் பயின்றது?(9) எருதுமேற் கொண்டு உழன்று உகந்து இல் பலி ஏற்றது ? (10) கைதவச் சமண் சாக்கியர் கட்டுரைக்கின்றது ? இவற்றின் காரணம் சொலீர்" என்று அவர் மருந்தீசனைக் கேட்கின்றார்.

இவ்வினா இருப்பது ஒரு பதிகத்தில். அடுத்த பதிகத்தில் திருஞான சம்பந்தர், "உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே" என்பதனை மகுடமாகக் கொண்டு பெருமானிடம் விண்ணப்பித்துக்கொள்கின்றார்.

திருநாவுக்கரசர் திருப்பதிகப் பாடல்கள் உண்மைபேசி உள்ளத்தை உருக்குவன ; எடுத்துக்காட்டாக இங்கே இரண்டு திருப்பாடல்களைக் காட்டுவோம்.

" பொருளும் சுற்றமும் பொய்ம்மையும் விட்டு நீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கு அறுத்து
அருளுமா வல்ல ஆதியாய் என்றலும்
மருள் அறுத்திடும் வான்மியூர் ஈசனே. "

" ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலம் செய்யில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே. "

[ஓட்டை மாடம்—உயிர் வாழும் உடம்பு ; அது ஒன்பது ஓட்டைகளை உடையது.]

இனி, திருவல்லிக்கேணி சென்று பார்த்தசாரதிப் பெருமாளைத் தொழுவோம்.



பார்த்தசாரதி கோவிலும் - திருக்குளமும்

பக்கம் 117

(4.) திருவல்லிக்கேணி-பார்த்தசாரதிப் பெருமாள்

சென்னை மாவட்டத்திலுள்ள பெருமாள் கோவில்களில் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோவில் மிகவும் புகழ் பெற்றது. திருவல்லிக்கேணி செயின்ட் சார்சுக் கோட்டையிலிருந்தும், புகை வண்டி நடு நிலையத்திலிருந்தும் இரண்டு மைல் தொலைவில் கடற்கரையில் இருக்கிறது. இது எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல். தென்னாட்டிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் வழி மேல் இருக்கின்றன• திருமயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும். மயிலாப்பூரின் ஒரு பகுதியாகவே இருந்திருக்கிறது திருவல்லிக்கேணி என்பது திருமழிசையாழ்வார் 'நான்முகன் திருவந்தாதி' முப்பத்தைந்தாம் பாசுரத்தில்,

"நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியின்" என்று கூறுவதனால் நிலைபெறும். இதற்கு மயிலையை அடுத்திருந்தது திருவல்லிக்கேணி என்று பொருள் கூறினும் குற்றம் ஒன்றும் இல்லை. திருமங்கையாழ்வாரும் திருவல்லிக்கேணியைப் பற்றி,

"மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி," (பாசுரம் 2) என்றும்,

"மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி" (பாசுரம் 9) என்றும்

பத்தில் இரண்டு பாசுரங்களிற் கூறியதோடு அமையாமல் பத்தாவது பாசுரத்திலும்,

"மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக் கேணி நின்றானை."

என்று கூறியருள்கின்றார். உரையாசிரியர், இதற்கு "மயிலாப்பூரைப் படை வீடாக உடைய திருவல்லிக்கேணி" என்று பொருள் கூறுகிறார். படைவீடு என்பது தலை நகரம். பாண்டிய மன்னன் குலத் தோன்றலாகிய தொண்டை நாட்டு மக்கள் தலைவனான தொண்டைமான் திருமயிலையைத் தலைநகராகக் கொண்டுள்ள திருவல்லிக்கேணி நின்றானுக்குத் திருக்கோவில் அமைத்தான்.

பிருகு, மரீசி, அத்திரி, மார்க்கண்டேயர், சுமதி, சப்தரோமர், சாலி ஆகிய ஏழு முனிவர்களும் இங்கே வந்து இத்திருக்கோவிலி லுள்ள ஐந்து தெய்வங்களையும் வழிபட்டார்கள் என்று பிரமாண்ட புராணம் கூறுகிறது. முதல் ஆழ்வார்களாகிய பேயாழ்வாரும் திருமழிசையாழ்வாரும், கடைசி ஆழ்வாராகக் கருதப்பெறும் திரு மங்கையாழ்வாரும் இங்கு வந்து பெருமாளைக் கண்டு பாடியிருக்கி றார்கள்.

இத் திருக்கோவிலின் தலைமையான தெய்வம் பகவத் கீதாசிரி யன் ஆகிய வேங்கடகிருட்டிணப் பெருமாள். ஏழுமலையான் ஆகிய திருவேங்கடநாதனைத் தனக்குக் 'கீதாசிரியனாகிப் பார்த்தசாரதியாக இருந்த திருக்கோலத்தைக் காட்டியருள வேண்டும்' என்று சுமதி மன்னன் இடைவிடாது வேண்டிக் கொண்டிருந்தான்; பெருமாள் அம்மன்னனுக்குக் கனவில் தோன்றி "நீ பிருந்தாரணியத்துக்கு வருவாயாக, அங்கே நீ விரும்பியவாறு காட்சியருளுவோம்" என்று மொழிந்தருளினான். அதே சமயத்தில் ஆத்திரேய மாமுனிவர் தம்முடைய குருநாதராகிய வேதவியாசரை நோக்கி, "அடியேன் தவம் புரிந்து ஈடேறுவதற்கு உரிய இடம் இது என அருள்க" என்று வேண்டிக் கொண்டார். வேத வியாசர், "நன்று கூறினீர். நீர் பிருந்தாரணியத்துக்குச் செல்வீராக, அங்கே திருவல்லிக்கேணிக் கரையில் துளசிகள் வனம் போல முளைத்திருக்கின்றன. அங்கே சுமதி மன்னனும் தவம் செய்திருக்கிறான்" என்று கூறி ஆத்திரேய முனிவரிடம் வலது கையிற் சங்கும் இடது கையில் ஞானமுத்திரை யும் உடைய ஓர் பேரழகுத் திருவுருவத்தைத் தந்தருளினார். அவ் வுருவச் சிலை பார்த்தசாரதியுடையது. ஆத்திரேய முனிவர் அந்தப் பார்த்தசாரதி விக்கிரகத்தோடு பிருந்தாரணியத்தில் சுமதி மன்ன னுடைய ஆச்சிரமத்தை அடைந்து தம் வரலாறு முழுதும் கூறினார். சுமதி மன்னன் பார்த்தசாரதியைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியுள் ஆழ்ந்தான். மன்னவன் வைகானச ஆகமப்படி பெருமாளுக்குச் சித்திரைத் திருவிழா நடத்தி இன்புற்றான்.

அல்லிக்கேணி என்பது அல்லிக் கொடி படர்ந்துள்ள கிணறு என்று பொருள்படும். அத்தகைய அல்லிக் கேணியின் மேற்குக் கரையிலே இருக்கிறது பார்த்தசாரதி திருக்கோவில்; அந்த அல்லிக் கேணிதான் இன்று மிகப் பெரிய திருக்குளமாக்கப்பட்டு நடு மண்ட

பத்தோடு திகழ்கிறது. அல்லிக்கேணி என்பது வடமொழியில் கைவரணி புட்கரணி என்று சொல்லப்படுகிறது. கைவரணி—அல்லி, புட்கரணி—குளம். இக் குளத்தில் மீன்கள் வாழ்தவில்லை.

திருக்கோவிலின் முன்பு சில மண்டபங்கள் இருக்கின்றன. அவைகளைக் கடந்து மாமரியாதை வாசல் என்னும் குடை வரு வாயிலுக்கு வருவோம். அத்திருவாயிலின் மேலேதான் பெரிய கோபுரம் இருக்கிறது. அது ஐந்து தட்டுக்களையுடையது. அதன் உச்சியில் எழு கலசங்கள் இருக்கின்றன. இதைத் தாண்டினல் இருப்பது தொண்டரடிப்பொடி வாசல்; தொண்டரடிப்பொடியாழ்வார் பெருமாளை வேண்டிப் பெற்ற படி அது. அதனையும் தாண்டிக்கொண்டு நேரே போனல் நாம் பார்த்தசாரதிப் பெருமாளைக் கும்பிடலாம். இத்திருக்கோவிலின் வழக்கம் " சுற்றியுள்ள தெய்வங்களைக் கும்பிட்டுக்கொண்டு சூழவந்துதான் பார்த்தசாரதியைக் காணுதல் வேண்டும் " என்பது. "நேரே இருக்கிற என்னை விட்டுச் சூழச் செல்கின்றீரே" என்று பெருமாள் கருதாதவாறு நாம் அவ்வரம்பினைத் தாண்டி நேரே பார்த்தசாரதிப் பெருமாளை வழிபடுவோம்.

திருக் கருவறை (மூலத்தானம்) யில் திருவேங்கடகிருஃச்ணசாமி எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு வலது புறம் உருக்குமினித் தாயாரும் இடதுபுறம் தம்பி சாத்தகியும் இருக்கின்றனர். உருக்குமினித் தாயாருக்கு வலதுபுறம் வடக்கே பார்க்கப் பெருமாளுடைய தமையனர் பலராமர் ஒரு கையில் தம் கலப்பையைத் தாங்கி இருக்கின்றார். பெருமாளுடைய மகன் பிரத்யும்னனும் பேரன் அநிருத்தனும் வடபுறம் தெற்கே பார்க்க அமர்ந்துள்ளனர். இந்த ஐந்து வீரர்களும் கண்ணபிரானுக்குத் தன் வாழ்நாளில் நேரிட்ட நிகழ்ச்சியை நினைவுறுத்துமாறு வைக்கப் பெற்றிருக்கின்றனர். கண்ணனுடைய வரலாறு கூறுவது பாகவதம். அதிற் பின்வரும் வரலாறு கூறப் பெறுகிறது.

உருக்குமினி தேவி கண்ணபிரானையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று இடைவிடாது அப் பெருமானையே தொழுது கொண்டிருந்தாள். ஆனல் அவளுடைய உடன் பிறந்தவன் உருக்குமின் என்பவன் அவளுடைய விருப்பத்திற்கு மாருக அவளைச் சிசு பாலனுக்குக் கொடுப்பதாக உறுதித் தாம்பூலம் வழங்கினன். சிசுபாலன்

கண்ணனுக்கு அத்தை மகன். திருமண நாள் வந்தது. அரசர்கள் குடும்ப வழக்கப்படி உருக்குமினி கௌரி தேவியை அவ்வம்மையின் கோவிலுக்குப் போய்க் கும்பிட்டு விட்டுத் திருவருள் பெற்று அரண் மனைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறாள். அவ்வேளை அக்குரூரன் வழியாகச் செய்த முன் ஏற்பாட்டின்படி கண்ணபிரான் அங்கே தேருடன் தோன்றினான்; உருக்குமினியைத் தூக்கித் தேர்மேல் தன் வலதுபுறம் வைத்துக்கொண்டான். கண்ணனுடைய அண்ணன் பலராமன் அவ்வம்மைக்கு வலதுபுறம் காவலாகத் தன் கலப்பை யாகிய ஆயுதத்தைத் தாங்கி அமர்ந்தான். கண்ணன் தம்பி சாத்தகி அவன் அருகே இடது புறம் இருந்து தேரினைச் செலுத்தினான். கண்ணபிரானுடைய மகன் பிரத்யும்னனும் பேரன் அநிருத்தனும் சற்றே இடது புறம் மரியாதையுடன் ஒதுங்கிப் பாதுகாவலாக அத் தேரில் நின்றனர். இந்த விதமான அமைப்புடன் கருவறையில் தன் சுற்றம் சூழப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் காட்சி வேறு எக்கோவிலிலும் இல்லை. கருவறை மேல் உள்ள விமானம் "ஆனந்த விமானம்" என்று பெயர் பெறும். இந்த விமானத் தின் ஒரு பகுதி தங்கமுலாம் பூசப் பெற்றுப் பார்ப்பவர் கண்களைக் கவர்கின்றது.

•

பார்த்தசாரதிப் பெருமாள் வலது கையிற் சங்கினை ஏந்தியிருக் கிறான்; இடது கை திருவடியைக் காட்டுகிறது. திருவடிக்கு அடிமை செய்தால் பெருமாள் திருவருளைப் பெற்று வெற்றிக்கு அறிகுறி யாகச் சங்கினை முழக்கலாம் என்ற அறிவுரையினையே இத்திருக் கோலம் விளக்குகின்றது. பகவத்கீதையின் ஆசிரியனான கண்ண னாகிய பார்த்தசாரதியின் நின்ற திருக்கோலம் சிரித்த முகத்துடன் கம்பீரமாகப் பார்த்தவருடைய உள்ளத்தைக் கவர்ந்து அவர்களை மெய்ம்மறந்து நிற்கச் செய்கின்றது. பார்த்தசாரதியின் வலது மார்பில் உயர்ந்த மணிகள் பதித்த அணிகலன்களுடன் விளங்கும் திருமகளின் தங்கத் திருமேனி பேயாழ்வார் பாடலின் பின்வரும் பகுதியை நினைவூட்டுகின்றது.

"எந்தை, ஒரு வல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான்."

மூலவர் இடுப்பில் மேல்புறம் விலைமதிக்க முடியாத பேரொளி வீசும் ஒரு வாள் தொங்குகின்றது. இது "போரில் ஆயுதம் எதுவும் தொடேன்" என்று கண்ணன் துரியோதனனுக்கு அளித்த வாக்கினுக்குப் புறம்பானதல்லவா? இல்லை, இல்லை. இது ஞானவாள். அடியார்களுடைய அகந்தையை அறுத் தெறிகின்ற ஞான ஒளி வீசும் வாள் இது.

பார்த்தசாரதிப் பெருமானுடைய எழுந்தருள் திருமேனி (உற்சவ மூர்த்தி) மேலும் மிக்க சிறப்புடையதாகவும், உள்ளத்தைக் கவர்வதாகவும் உள்ளது. எப்போதும் புன்முறுவல் பூத்த அதன் திருமுகத்தில் குருச்சேத்திரப் போர்க்களத்தில் வீடுமர் விடுத்த அம்புக் குறிகள் காணப் பெறுவன; அருகிலோ சற்றுத் தூரத்திலோ நின்று வழிபடும் அடியார்களுடைய கண்களுக்கு அத்திருமேனி பலப்பல மாதிரிகளாகக் காணப்பெறுகின்றது; பெருமானைத் திருமுழுக்கு ஆட்டியவுடன் அது தங்கம் பூசிய செம்பு நிறத்தையுடையதாகக் காணப் பெறுவது, ஒருமணி நேரத்திற்குள் நீலங் கலந்த கருமை நிறத்தை அடைந்து திருமுகப் பேரழகைப் பதின்மடங்கு மிகுவிக்கின்றது. நடுவே கருநீலமணி பதித்த வைரக் கற்களால் ஆகிய திலகம், மாசற்ற நீலவானிலே காணப் பெறும் முழுமதியை ஒத்து விளங்குகின்றது. பார்த்தசாரதிப் பெருமானுடைய எழுந்தருள் திருமேனியின் திருமுக மண்டலம் இங்ஙனம் நிறம் மாறுவதற்குக் காரணத்தைக் காணமுடியாது பொன்வகை ஆராய்ச்சிப் புலவர் திலகர்களும் திகைக்கின்றார்கள்.

மாதந்தோறும் பார்த்தசாரதிப் பெருமானுக்கு ஐம்பருவ விழாக்கள் நடைபெறுகின்றன. அவை தமிழ் மாதப் பிறப்பு, இரண்டு ஏகாதசிகள், அமாவாசை, பௌர்ணமிகளிலும் உரோகணி, திருவோண நாட்களிலும் நிகழ்வன. சித்திரை மாதத்தில் பெருவிழா மிக்க சிறப்புடன் நடக்கும். தங்கம் பூசிய விலையுயர்ந்த ஊர்திகளில் பெருமாள் காலையிலும் மாலையிலும் புறப்பட்டு வந்து திருவீதிகளிற் காட்சியருளுவான். மற்றைய கோவில்களில் நடைபெறும் வசந்தம் கோடை முதலிய விழாக்களும் இங்கே நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் வரும் மக நாளன்று பெருமாள் காலை எட்டு மணிக்குள் கருட ஊர்தியில் எற்றப்பெற்றுப் பெரிய குடைகள், கொடிகள்

முதலிய எடுபிடிகளுடன் கடலில் அலைகளின் இடையே தூக்கிச் செல்லப்பெறுவது கண்கொள்ளாக் காட்சி. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் மூலவருக்குத் திருமஞ்சனம் நடக்கும்.

இந்தத் திருக்கோவிலில் உள்ள சன்னதிகளில் மிகவும் பழமை யானது மன்நாதப் பெருமானுடையது. மன்நாதன் அரங்கநாதப் பெருமாள். திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் திருமாலின் திருமார்பினை விட்டு நீங்கித் திருமகள் இந்தப் பிருந்தாரணியத்தில் ஒரு சிறு குழந்தையாகப் பிருகு முனிவருடைய ஆசிரமத்தின் அருகே ஒரு சந்தன மரத்தடியிலே இருந்தனள். அக்குழந்தையை அந்த முனிவர் பெருமான் எடுத்து வேதவல்லி என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். பிருந்தம்—துளசி; பிருந்தாவனம்—துளசிக் காடு. அம்மை வேதவல்லி பேரழகுமிக்க பருவப் பெண்ணாக விளங்கியபோது திரு அரங்கநாதன் அங்கே வந்துதோன்றி ஓர் அரசிளங் குமரனைப் போலக் காட்சியருளினன். பெருமானைக் கண்டவுடன் வேதவல்லித் தாயரர் "இவனே நான் மன்னும் நாதன்" என்று கூறினாள். அதனால் பெருமாள் மன்நாதன் எனப் பெயர் பெற்றான். பிறகு முனிவர் மன்நாதனுக்கு அம்மையைத் திருமணம் முடித்துக் கொடுத் தார். அன்று மாசிமாத வளர்பிறைத் துவாதசி. தங்கள் திருமணம் நடந்த நாளினை நினைந்து அந்நாளில் வழிபடும் அடியார்களுக்கு இம்மை மறுமை இன்பங்களை அருளுமாறு உலகத் தாயாராகிய வேதவல்லி மன்நாதனாகிய திரு அரங்கப் பெருமாளிடம் வேண்டிக் கொள்கின்றாள். இப் பெருங் கோவிலினுள்ளே தென்பகுதியில் ஒரு தனிக் கோவில் இருக்கிறது. அதில் பெருமாள் கிழக்கே பார்த்த திருமுகத்தோடு பூதேவி, சீதேவியராகிய இருமனைவியாருடன் பாம் பணை மீது பள்ளிகொண்டிருக்கிறான். அவனுடைய உந்திக் கமலத்தில் நான்முகன் இருக்கிறான். இந்த அரங்கநாதனுடைய கோவிலில் வடபகுதியிலும் தென்பகுதியிலுமாக நரசிங்கப் பெருமாளும், வராகப் பெருமாளும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு எழுந் தருளியிருக்கிறார்கள்.

பார்த்த சாரதிப் பெருமாளுடைய கோவிலுக்கு வலதுபுறம் ஒரு தனிக்கோவிலில் வேதவல்லித்தாயார் கிழக்கே பார்க்க எழுந்தருளி யிருக்கின்றாள். வெள்ளிக்கிழமை தோறும் அம்மைக்கு விழா நிகழ் கின்றது. திருக்கோவிலின் உள்ளேயே அம்மை உலாவருகின்றாள். வைகாசி மாதம் பெருமாட்டிக்கும் பெருமாளுக்கும் வசந்த விழா

மூன்று நாட்கள் நடைபெறும். இது இரேவதி நாளில் முடிவு பெறும். இவ்விழா கோவிலினுள்ளே நடைபெறுவது. தவனவிழா மாசிமாதம் மூலநாளன்று கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் மணவாளமா முனிவருக்கும் விழா நிகழும். இங்கே புரட்டாசி மாதம் நவராத்திரி விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு இரேவதி நாளிலும் மாதந் தோறும் அரங்கநாதப் பெருமாள் மாட வீதி உலாவந்து காட்சியருள் கின்றனன். மாசிமாதத்தில் அரங்கநாதனுக்குத் தெப்பவிழா எழு நாள் நடைபெறுகிறது.

நரசிங்கரே தெள்ளிய சிங்கப் பெருமாள். பார்த்தசாரதி கோவி லுக்குப் பின் இப் பெருமாள் மேற்கே பார்த்த திருமுகமாக இருக் கின்றனன். அத்திரிமுனிவர் செய்த பெருந்தவத்துக்கு மகிழ்ந்து அவருக்குக் காட்சியருளி நரசிங்கப் பெருமாள் இங்கேயே கோவில் கொண்டிருந்து விட்டனர். ஆனி மாதத்தில் இப் பெருமாளுக்குப் பெருந்திருவிழாக் கொண்டாடப் பெறும். அத்திரி முனிவருக்குக் காட்சியருளிய சுவாதி நாள் தோறும் பெருமாள் நான்கு மாட வீதி களிலும் திருவோலக்கம் வருகின்றனன். தெப்பத்தில் பெருமாள் எழுந்தருளுவது மாசி மாதத்தில் ஆகும். வைகாசி வளர்பிறைச் சதுர்த்தசிதான் நரசிங்கப் பெருமாள் பிறந்தநாள். மூலவர் பெயர் யோக நரசிங்கப் பெருமாள்; எழுந்தருள் மூர்த்தி பெயர் அழகிய சிங்கர் அல்லது தெள்ளிய சிங்கப் பெருமாள்.

சக்கரவர்த்தி திருமகனாகிய இராமபிரான் தன் தம்பிமார்களாகிய பரதன், சத்துருக்கன், இலக்குவன், தன் மனைவி மைதிலியாகிய சீதை என்ற இவர்களோடு மதுமான் என்ற முனிவருக்குக் காட்சி யருளினன். அம்முனிவன் இராமபிரானையும், சீதையையும், தம்பிமாரையும் காணவேண்டும் என்று பிருந்தாவனத்தில் தவம் கிடந்தான். பாண்டாரம் என்னும் மலையில் சசிபதன் என்னும் முனிவன் தவம் செய்திருந்தபோது ஃஎலை என்னும் அப்சரப் பெண் அங்கே வந்தாள். அவளைக்கண்ட முனிவனுடைய தவம் கலைந்து அப்பெண்ணுடன் கலந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றான்; அங்கேயே அக்குழந்தையை விட்டுவிட்டு ஃஎலையும், சசிபத முனிவ னும் வேற்றிடம் போய்விட்டார்கள். அக்குழந்தை மரத்தின்மேல் இருந்த தேன் கூட்டிலிருந்து சொட்டிய மதுவைக் குடித்து வளர்ந் தது. அதனால் அப்பிள்ளை மதுமான் என்னும் பெயர் பெற்றது.

இந்த மதுமான் தவம்புரிந்து முனிவணங்கி வேண்டிக்கொள்ளவே இராமபிரான் இங்கே எழுந்தருளி வந்தனன். பார்த்தசாரதிகோவிலுக்குள் வடபுறம் தெற்கே பார்க்க ஒரு தனிக்கோவில் இருக்கிறது. இதற்கு எதிரே ஒரு சிறு கோவிலில் அனுமான் கல் திருமேனியுடனும் எழுந்தருள் திருமேனியுடனும் இருக்கின்றான். மார்கழி மாதம் வளர்பிறைத் திரையோதசி நாளில் அனுமான் பிறந்தான். புணர்பூசமே இராமன் பிறந்த நாள். அதனால் ஒவ்வொரு புணர்பூசத்திலும் நான்கு மாட வீதிகளில் இராமபிரான் எழுந்தருள் காட்சியருள்கின்றான். இராம நவமித் திருநாள் பங்குனி மாதத்தில் நடைபெறுகின்றது. மூன்றும் திருநாளன்று கருட வாகனத்தில் பெருமாள் வருகிறான்; மாசி மாதம் தெப்ப விழா நடைபெறுகிறது.

வைகானச ஆகமகப்படி சப்தரோம மாமுனிவர் பிருந்தாவனமாகிய இங்கே கசேந்திரவரதராசப் பெருமாளைப் பூசித்தார். கசேந்திரன்—யானைக்கரசு. ஓர் பெரிய யானை ஆயிரம் தாமரைப் பூக்களெடுத்து நாடோறும் திருமாலைப் பூசித்து வந்தது. ஒருநாள் அக் கசேந்திரன் ஒரு குளத்தில் பூப்பறிக்க இறங்கிய போது ஒரு முதலை அதனைப் பற்றித் தண்ணீரினுள்ளே இழுத்தது. யானைக்கரசு திருமாலை 'ஆதிமூலமே' என்று கூப்பிட்டு அலறிற்று. அப்போது திருமால் கருடன் மேல் ஓர் கையிற் சங்கும் ஒருகையிற் சக்கரமும் கொண்டு எழுந்தருளிச் சக்கரத்தால் முதலையைக் கொன்று யானையைக் காத்து முத்தியும் அருளினான். சங்கு சக்கரங்களோடு மூலவர் கருவறையில் கருடன் மேல் வீற்றிருக்கும் நிலையில் இருக்கின்றனர்; அனுட நாளையில் ஒவ்வொருமாதமும் பெருமாளை மாட வீதிகளில் எழுந்தருளச் செய்கின்றார்கள். பத்துநாள் பெருவிழா வைகாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. மாசியில் தெப்ப விழா நடைபெறும்.

பூதேவியின் தோற்றமாகிய ஆண்டாளுக்கும் ஒரு தனிக்கோவில் இருக்கிறது. ஆடிப் பூரத் திருவிழாவாகப் பத்து நாள் பெருவிழா நடைபெறுகிறது. ஆண்டாள் பிறந்த நாளாகிய ஆடிமாதம் பூரநாளில் திருவிழா முடிவடைகிறது. அன்று பார்த்தசாரதிப் பெருமாள் ஆண்டாளுடன் திருவீதியில் உலா வருகிறான். ஆண்டு தோறும் போகிப் பண்டிகையுடன் நிறைவு பெறும் நீராட்டு விழா ஒன்பது நாள் நடைபெறுகிறது. அன்று ஆண்டாளுக்கும் பார்த்தசாரதிப் பெருமாளுக்கும் திருக்கலியாணம் நிகழும்.

பன்னிரண்டு ஆழ்வார்களும் வைணவ ஆசிரியர்களும் இங்கே தத்தம் எழுந்தருள் செப்புத் திருமேனிகளுடன் அமர்ந்திருக்கின்றனர். திருமழிசை யாழ்வாருக்குக் கோவிலினுள்ளும், பேயாழ்வாருக்கும், நம்மாழ்வாருக்கும் கோவிலின் வெளியிலும் தனிச் சிறு கோவில்கள் உள்ளன. கோவிலின் முன்புள்ள திருவாய்மொழி மண்டபத்தில் ஆளவந்தார், இராமானுசர், மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர், திருக்கச்சி நம்பிகள் ஆகிய இவர்கள் தனித்தனிச் சன்னதிகளில் இருக்கின்றார்கள்.

வைகுண்ட ஏகாதசி மார்கழி மாதத்திற் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. ஏகாதசிக்கு முன் பத்து நாள் பகல் பத்து விழாவும், பின் பத்து நாள் இராப்பத்து விழாவும் கொண்டாடப்பெறுகின்றன. பகல் பத்து விழாவில் நாலாயிரத்தில் முதல் இரண்டாயிரம் பாசுரங்கள் ஓதப் பெறும். ஏகாதசியன்று காலையில் சுவர்க்கவாசல் என்பது திறக்கப்பட்டுப் பத்துநாள் மட்டும் திறந்திருக்கும்.

கி.பி. 1845-ல் தியாகராச சாமிகள் இங்கே பல கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு வைகுண்ட ஏகாதசியன்று வந்திருந்தார்; அவருடைய தூண்டுதலால் இராப்பத்தில் பிரபந்தம் ஓதிய பின் இசை விழா நடக்கிறது. பெரிய இசைவாணர்கள் இங்கே வந்து பாடிப் பார்த்தசாரதியின் திருவருளுக்குப் பாத்திரர் ஆகிறார்கள். தெப்ப விழா மாசி அமாவாசையில் தொடங்கி முதல் மூன்று நாள் பார்த்தசாரதிக்கும், மேலும் நான்கு நாள் மற்றைய மூர்த்தங்களுக்கும் ஆக ஏழுநாட்கள் நடைபெறுகிறது. மணவாள மாமுனிவர் கண்ட தென்னாச்சாரிய முறைப்படி வைகானச ஆகமத்தின் வண்ணம் இக்கோவிலில் பூசனைகள் நடைபெறுவன.

பதினேழாம் நூற்றாண்டில் இக் கோவிலின் முன்பகுதியில் தச்சுக்காரர் இருந்துகொண்டு பிரெஞ்சுக்காரர் ஆளுகையிலிருந்த சாந்தோமைத் தாக்கி வந்தார்கள். இத் திருக்கோவில் 1843-வரை கிழக்கிந்தியக் கம்பெனியாருடைய ஆளுகையில் இருந்து வந்தது. தச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், போர்ச்சுக்கேசியர் முதலிய பலரால் பல குழப்பங்களுக்கு ஆளாகியிருந்தது திருவல்லிக்கேணி. இருந்தாலும் இத்திருக்கோவிலில் எந்தவிதமான சீர்கேடும் உண்டாகாமலிருந்தது தெய்வத்திருவருளே.

கருவறைக்கு முன்னால் இருப்பன மாமண்டபமும் திருவாய் மொழிப் பிரபந்த மண்டபமும்; பல்லவர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் அவை கட்டப் பெற்றிருத்தல்வேண்டும் என்பதற்கு அவை களின் அமைப்பே சான்று பகர்கின்றது. திருவாய் மொழிப் பிரபந்த மண்டபத்தில் தெற்கே பார்க்க ஒரு தூணில் சரப மூர்த்தியின் திருவுருவம் இருக்கிறது. அதன் முகத்தைத் தவிர உடம்பெல்லாம் புதுமையான ஆடையால் மூடப்பட்டிருக்கிறது. கோவிலின் முன்னால் இருக்கிற கலியாண மண்டபம் விசயநகர மன்னர் ஆட்சியிற் கட்டப் பெற்றதென்பது தெரியவருகிறது. வேதவல்லித் தாயார் கோவிலும் கோவிலின் முன்னால் இருக்கிற முப்பத்தாறுகால் மண்டபமும் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் கட்டப் பெற்றன.

பார்த்தசாரதி கோவில் கருவறையை ஒட்டிச் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை 1903-ல் கல் வெட்டுத் துறையினராற் படி யெடுக்கப் பெற்றன. அவைகளிலிருந்து நந்திவர்மப் பல்லவன் (779–830) காலத்திலேயே இத் திருக்கோவில் இருந்தது என்பது புலனாகிறது. விசயநகர் வீரவேங்கடபதி தேவப் பேரரசர் (1586-1616) சகம் 1525-ல் திருமழிசையாழ்வாரை இத்திருக்கோவிலில் எழுந் தருளி நிலைபெறச் செய்த நிகழ்ச்சியும் குறிக்கப் பெறுகின்றது. விசயநகர மன்னன் முதலாவது அரங்கராய தேவர் பேரரசன் (1578–86) சகம் 1507–ல் செம்பியம், நெடும்பாறை என்ற ஊர்களைச் சேனைத்தலைவன் திருமலை நாயநிங்காரு கோவிலுக்கு நன் கொடை யருளிய செய்தி கேட்கப் பெறுகிறது. துளசிங்கப் பெருமாள், துளசிங்க நாயனார், என்று குறிப்பிடப் பெறுகிறார். விசய நகரப் பேரரசர் மாமண்டலேசுவரன் வீரப்பிரதாப சதாசிவ தேவன் காலத்தில் சகம் 1486-ம் ஆண்டு இரக்தாட்சியில் இத்திருக்கோவிலில் பள்ளிகொண்ட பெருமாள், கண்ணன், வேதவல்லி நாச்சியார் ஆகிய இவர்களை எழுந்தருள்வித்துத் திருவாய்மொழி மண்டபம், மடைப்பள்ளி, சுற்றுச் சுவர் ஆகிய இவைகளை ஒருவர் கட்டிய செய்தியும், கோவிலுக்குப் புதுப்பாக்கம், வேப்பேரி, வியாசர்பாடி ஆகிய மூன்று ஊர்களை நன்கொடையாகத் தந்த செய்தியும் குறிப்பிடப்பெற்றுள்ளன. சோழன் இராசராச தேவன் காலத்திற் கோவிலின் வேறு பல பகுதிகள் கட்டப்பெற்றமை குறிப்பிடப் பெறுகிறது.

இந்தத் திருக்கோவிலில் வந்து பாடி மங்களாசாசனம் செய்த பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை மன்னன் ஆகிய மூவரும் பின்வருமாறு இக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களைக் கூறுகின்றார்கள்.

பேயாழ்வார் பாடியது ஒரு பாட்டே. மூன்றும் திருவந்தாதி பதினாறும் பாசுரம் ஆகிய அதில் அவர், "தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன் திருவல்லிக்கேணியான்" என்று மட்டும் கூறுகிறார். திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதி முப்பத்தைந்தாம் பாசுரம் ஒன்றே பாடினார். அதில் "தாளால் உலகம் அளந்தமையையும்," "ஐந்தலை நாகத்து அணையிற் பள்ளிகொண்டமையையும்" கூறினார். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி இரண்டாம் பத்து மூன்றும் திருமொழி ஆகிய ஒரு பதிகம் பாடினார். அவர் கூறுவன பின்வருவன.

"பற்றலர் வீயக் கோல் கையிற்கொண்டு பார்த்தன் தேர்முன் [நின்றானை
சிற்றவை பணியால் முடிதுறந்தானை"

[சிற்றன்னை கைகேசி கட்டளையால் முடிதுறந்தான் இராமன்.]

"விஞ்சைவானவர் சாரணர் சித்தர் வியந்துதி செய்யப் பெண்ணுரு [வாகி
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானை."

[இதில் திருமால் மோகினியானமை காண்க.]

"இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானை."

[இந்திரன் சிறுவன்—அர்ச்சுனன்]

"பரதனும் தம்பி சத்துருக்கனும் இலக்குவனோடு மைதிலியும்
இரவும் நண்பகலும் துதிசெய்ய நின்ற இராவணாந்தகனை."

[இராமன் திருக்கோவில் இங்கிருப்பதனைக் கூறியது இது. மைதிலி—சீதை ; மிதிலையிற் பிறந்தவள் மைதிலி.]

பள்ளியில் ஓதிவந்ததன் சிறுவன்
வாயில் ஓராயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கு அதனுக்கு
ஒன்றுமே பொர் றுப்பிலன் ஆகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்ப,
பிறை எயிற்று அனல் விழிப் பேழ்வாய்த
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.''

(இதில் தெள்ளிய சிங்கர் குறிப்பிடப் பெற்றார்.)

''மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையினோடு சென்று இழிந்த
கானமர் வேழம் கை எடுத்து அலறக்
கரா அதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து சென்று
நின்று ஆழி தொட்டானைத்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண்டேனே.''

(இதில் கசேந்திர வரதன் குறிக்கப் பெற்றான்.)

''மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத்
திருவல்லிக் கேணி நின்றானைக்
கன்னி நன்மாட மங்கையர் தலைவன்
காமருசீர் கலிகன்றி
சொன்மாலை பத்துடன் வல்லார் சொன்ன
சுகம் இனிதாள்வர் வானுலகே.''

[இதில் இத்திருக்கோவிலைப் பாண்டியர் வழியில் வந்த தொண்டையர் கோன் கட்டியமை குறிக்கப் பெற்றது. இந்தப் பதிகத்தில் ''திருவல்லிக்கேணிக் கண்டேனே.'' என்பது மகுடம்.

இதுகாறும் சென்னை மாவட்டத்திலுள்ள முதன்மையான பிள்ளையார் கோவில்களையும், பாடல் பெற்றனவாகிய திருவொற்றியூர்ப் புற்றி

டங்கொண்டான், திருமயிலாப்பூர்க் கபாலீசுவரன், திருவான்மியூர் மருந்தீசன், திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப்பெருமாள் ஆகிய நான்கு திருக்கோவில்களையும் ஆராய்ந்தோம்; அங்ஙனமாகவே ஏனைய திருக்கோவில்களையும் ஆராய்வோம்.

சென்னை தொடக்கத்தில், மூன்று நூற்றாண்டுகளுக்குமுன், மிகச் சிறு சிறு ஊர்களைக் கொண்டிருந்தது. இப்போது அச் சிற்றூர்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே வளர்ந்து மிக்க பேரூராகிச் சென்னை மாநகரம் என்று பெயர் பெற்று விளங்குகின்றது. சென்னை மாநகரம் ஒரு மாவட்டமாகி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவருடைய ஆட்சியில் இருந்துவருகிறது. காலியாக இருந்த வெட்ட வெளிகளும் குளங்களும் வயல்களும்கூடத் தூர்க்கப்பட்டு மாடமாளிகைகள் அவ்விடங்களில் தோன்றியும், தோன்றிக்கொண்டும் இன்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது சென்னை. ஏனெனில் ஆட்சித் தலைநகரம் இது. தமிழ் நாட்டிலுள்ள பலப்பல துறைகளின் தலைமை ஆட்சி நிலையங்கள் இங்கேதான் இருக்கின்றன. அதனால் நாட்டின் பலப்பல இடங்களிலிருந்தும் மக்கள் இங்கே வந்து குடியேறி வாழ்கின்றார்கள். ஆதலின் சென்னையில் இடம் கிடைக்காதவர் சூழ இருக்கும் ஊர்களிலும் குடியிருந்துகொண்டு இத் தலைநகரத்தில் வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் பகலில் வந்துசேர்ந்து இரவில் வீடு சென்று மனைவி மக்களோடு தூங்கி மறுபடி காலையில் அலுவலுக்கு இங்கே வந்து விடுகிறார்கள். செங்கற்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய நெடுந்தொலைவிலுள்ள நகரங்களிலிருந்து இந்நகரத்திற்குத் தனிப் புகைவண்டிகள் அலுவலர்களுக்காகப் போய்வருகின்றன. காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டும் என்றால் குளிப்பு முதலியவைகளை முடித்துக்கொண்டு அதிகாலையிலேயே வண்டியேறுதல்வேண்டும்; திரும்ப மாலையிற்போய் வீடு சேரும்போதும் இரவு எட்டுமணி ஒன்பதுமணி கூட ஆகிவிடுகிறது. அதனால் பல சிறு குழந்தைகள் தம்மைப் பெற்றோருடன் அளவளாவிப் பேசி இன்புறும் பேறுகூட இல்லாமற் பலகாலம்வரை வளர்கின்றார்கள். தாய்மார்களும் அலுவலுக்கு வருகிறார்கள்; ஆகையால் பொதுப்படப் பெற்றோர்கள் என்று கூறினோம்.

முந்நூறு ஆண்டுகளில் சென்னை ஒரு மாவட்டமாக வளர்ந்திருக்கிறது. ஆங்கிலர்களால் நெசவாளர்களின் குடும்பங்கள் இங்கே

கொண்டுவந்து குடியேற்றப்பட்டும் தாமாகவே பிழைப்புக்காக வந்து குடியேறியும் உள்ள சிந்தாத்திரிப்பேட்டை, சைதாப்பேட்டை முதலிய பல பேட்டைகளும், பாக்கங்களும், நகரங்களும், ஊர்களுமாகச் சென்னை மாவட்டம் அமைந்துள்ளது. அங்கங்கே குடியேறிய மக்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் திருக்கோவில்களை அமைத்துக்கொண்டு வழிபட்டு இன்புறுவாராயினர். சிவன், முருகன், திருமால், பிள்ளையார், அம்மன் முதலிய தெய்வங்களை அவர்கள் பெரும்பாலும் வேறுபாடு காட்டாமற் கும்பிட்டு வாழ்ந்து வருகின்றார்கள். சிந்தாத்திரிப்பேட்டை, சென்னைப் பூக்கடை முதலிய இடங்களில் சிவன் கோவிலும் பெருமாள் கோவிலும் அடுத்தடுத்து இரண்டுக்கும் பொதுவானதொரு தெப்பக்குளத்தை உடையனவாகி விளங்குகின்றன. ஆதலின் நாமும் பேட்டை பேட்டையாகச் சென்று ஆங்காங்கே மிளிர்கின்ற திருக்கோவில்களை வழிபட்டுத் திருவருள் பெறுவோம். முதற்கண் திருமயிலாப்பூரைக் காணுவோம்.

வட்டங்களின் திருக்கோவில்கள்

திருமயிலாப்பூர்

மயிலாப்பூர் வடக்கு தெற்கு என இருபகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. இவ்வூரிலுள்ள கோவில்களைத் தனித் தனியே பிரித்து ஆராய்வோம்.

பிள்ளையார் கோவில்கள்

வடுகூர்ச் செங்கழுநீர் விநாயகர், செல்வ விநாயகர், சுந்தர விநாயகர், வரசித்தி விநாயகர், வினைதீர்த்த கற்பக விநாயகர், ஞானசோதி நர்த்தன விநாயகர், பிரசன்ன விநாயகர் ஆகிய கோவில்கள் வடக்கூரில் இருக்கின்றன. தென்கூர்ச் செல்வ விநாயகர், வரசித்தி விநாயகர், சுந்தர விநாயகர், சித்திரை விநாயகர், கூத்தாடும் பிள்ளையார், செங்கழுநீர்ப்பிள்ளையார் ஆகிய இவர்கள் தெற்கூரில் இருக்கின்றனர். இப் பிள்ளையார்கள் பெயரால் அமைந்த தெருக்கள் பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில் தெரு முதலியன.

சிவன் கோவில்கள்

மயிலாப்பூரில் மட்டும் ஏழு சிவன் கோவில்கள் இருக்கின்றன. அவற்றுள் ஐந்து வடக்கூரிலும் இரண்டு தெற்கூரிலும் உள்ளன. வடக்கூரில் உள்ளவற்றை முதலில் வழிபடுவோம். அவை :—

1. தீர்த்த கபாலீசர் கோவில்.
2. காரணீசுவரர் கோவில்.
3. மல்லீசர் கோவில்.
4. விரூபாக்க ஈசுவரர் கோவில்.
5. வாலீசுவரர் கோவில் என்பன.

1. தீர்த்த கபாலீசர் கோவில்

இத்திருக்கோவில் கடலிலே தீர்த்தம் கொடுக்கச் செல்லும் கபாலீசர் வந்து தங்குமிடம். அந்த இடத்தில் ஏற்பட்டதொரு கோவிலே தீர்த்த கபாலீசர் கோவில். தீர்த்தம் பாலிக்கும் ஈசுவரர் என்று சொல்லி இப்பெருமானைத் தீர்த்தபாலீசுவரர் என்றும் கூறுகின்றார்கள்.

இத்திருக்கோவில் திரு..ச்ஞும்பேட்டையில் அம்பட்டன் வாரா வதிக்கு அருகே இருக்கிறது. வாராவதி என்பது பாலம். இந்தப் பாலத்தை ஆமில்டன் என்ற பொறிவல்லவர் கட்டினார். அதனால் அது ஆமில்டன் பாலம் என்று பெயர் பெற்றது. பொது மக்கள் சொல்லத் தெரியாமல் ஆமில்டன் என்பதை நாளடைவில் அம்பட்டன் ஆக்கிவிட்டார்கள். அதனால் அது அம்பட்டன் வாராவதி என்று அழைக்கப்படுவதாயிற்று. அதனை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் Barber's Bridge என்று கூறுகிறார்கள். ஆமில்டன் அம்பட்டன் ஆக்கப்பட்டான். [Barber–பார்பர்–அம்பட்டன்.]

அம்மை திரிபுரசுந்தரி தெற்கு நோக்கியிருக்கின்றாள். தமிழ் முனிவர் அகத்தியனார் இங்கே பெருமானைப் பூசித்தார். இராம பிரானும் இங்கே வந்து பூசித்திருக்கிறான், இராவணனைக் கொல்லப் போகும் வழியில்; அப்போது அகத்தியர் இராமனுக்கு ஆதித்திய இருதயத்தைக் கற்பித்தார். ஆதித்திய இருதயம் என்பது ஆதித் தனைப் பற்றிய புகழ்மாலை; அதனை ஓதுகின்றவர்கள் ஆதித்தனுடைய திருவருளைப் பெற்று எடுத்த காரியங்களிலெல்லாம் வெற்றி பெறு வார்கள். இராமனும் இராவணனை வென்று சீதையை மீட்டனன். இத்திருக்கோவிலுக்குப் பின்னால் ஒரு திருக்குளம் இருக்கிறது.

2. காரணீசுவரர் கோவில்

தீர்த்த கபாலீசுவரர் கோவிலை வணங்கிக் கொண்டு சிறிது தெற்கே வருவோம். அங்கே கிழக்கே கடற்கரையை நோக்கிச் செல்கிறது ஒரு தெரு. அது காரணீசர் கோவில் தெரு என்று பெயர் பெறும். அதன் மேற்கோரத்தில் தென்வடலோடிய பெரிய தெருவைப் பார்க்கக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார் காரணேசுவரர். காரணன் என்ற சொல் கடவுளையும் சிவனையும் உணர்த்தும். காரணவன் எல்லாவற்றுக்கும் மூலகாரணனாகிய முதற் கடவுள்.

காரணீசுவரன் கிழக்கே பார்க்க இருக்க, பெருமானுக்கு இடதுபுறம் வடகிழக்குப் பகுதியில் தெற்கே பார்க்க அம்மை பொற்கொடியாள் எழுந்தருளியிருக்கின்றாள். அம்மை வடமொழியில் 'சுவர்ண லதாம்பிகை' என்னப்பெறுவாள். இப்பெருமானுக்கு எதிரே இருத்த லினாலேதான் இத்தெரு காரணீசர் கோவில் தெரு என்னப் பெற்றது. இத் திருக்கோவிலை அடுத்து வடபுறம் இருப்பது மல்லீசர் கோவில்.

3. மல்லீசர் கோவில்

காரணீசர் கோவிலை அடுத்து வடபுறம் இருப்பது மல்லீசர் கோவில் என்று கூறினோம். அதுவும் தென்வட லோடிய தெருவின் மேற்குப்புறம் மேற்கே தள்ளி மல்லீசர் கோவில் தெருவின் மேலோரம் கிழக்கே பார்க்க இருக்கிறது. மல்லீசருக்கு இடதுபுறம் வடகிழக்குப் பகுதியில் தெற்கே பார்க்க அம்மை மரகதாம்பாள் இருக்கின்றாள். மல் என்பது வளமை; வழிபடும் அடியார்களுக்கு வளமையை அருள்பவன் மல்லீசன்.

காரணீசர் கோவில் தெருவின் வடபுறம் தென் வடல் தெருவை யொட்டி இருப்பது விருபாக்கி ஈசுவரர் கோவில்.

4. விரூபாக்கி ஈசுவரர்

விரூபாக்கி ஈசுவரர் கிழக்கே பார்க்க இருக்கிறார். அவருக்கு எதிரே சிவகங்கை என்ற திருக்குளம் இருக்கிறது. அம்மை விசாலாட்சி தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள். காரணீசர் கோவில் தெருவிலிருந்து இக்கோவிலுக்கு வடக்கே பார்க்க ஒரு சிறு சந்து போகிறது. இது விரூபாக்கி ஈசுவரர் கோவில் தெரு என்னப் பெறும். இந்தச்சந்தின் வழியாகச் சென்றால் கோவில் தலைவாயி லுக்கு நேரே இருக்கிறார் கூத்துடைப் பெருமான் சிவகாமியம்மை யுடன்.

விரூபாட்சி என்பது விரூபாக்கி என்றும் கூறப்பெறுகிறது. அட்சம் —அக்கம்—கண். விரூபம் இயற்கைக்கு மாறானது ;. அதனால் இது நெற்றிக்கண்ணை உணர்த்தும். விரூபாக்கி ஈசுவரன்—நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்.

இப்பெருமானுடைய பெயரைத் தாங்கிய விரூபாக்கன் என்பவன் இராவணனுடைய சேனைத் தலைவருள் ஒருவன் ; பத்துக்கோடி வீரரைக் கொண்ட சேனைக்குத் தலைவன். விரூபாக்கதேவர் என்பவர் வீரசைவ கணேச புராணத்தைப் பாடிய பெரும் புலவர்.

காரணீசர் கோவில் தெருவின் நடுவே தென்சிறகில் இருப்பது வாலீசர் கோவில்.

5. வாலீசர் கோவில்

வாலி பூசித்த ஈசர் வாலீசர்; இவர் கிழக்கே பார்க்க இருக்கிறார்; அம்மை பெரியநாயகி தெற்கே பார்க்க இருக்கின்றனள். இக் கோவிலை ஒட்டி ஒரு குளம் இருந்தது. அது அண்மையில் தூர்க்கப்பட்டு அவ்விடத்தில் வீடுகள் தோன்றியுள்ளன.

வால் என்பது இளமை, பெருமை; இவைகளையுடையவன் வாலி. மிருகங்களுக்குப் பின்புறம் நீண்டு தொங்கும் உறுப்பும் வால் எனப் படும்; அதனையுடையவன் வாலி எனப்பட்டும் இவன் வால்வைக்கப் படுகிறான்.

தென்காசித் தலபுராணத்தில் அதன் ஆசிரியர் வாலியைப் பற்றி விரிவாகக் கூறுகிறார்; அதன் சுருக்கம் பின்வருமாறு:—

"கிட்கிந்தை மன்னன் வாலி. அவன் தென்காசியிலுள்ள வாலியம் பொற்றையை அடைந்து, அங்குள்ள குகையில் தங்கி, முக்கூடலில் முழுகி வாலிநாதனை நிறுவிக் காசி விசுவநாதனையும் வழிபட்டு ஆறுமாதம் தவம் இருந்து 'உன்னை எதிர்த்தவர் பலத்திற் பாதி உனக்கு எய்தும்' என்று பெருமானிடம் வரமும் பெற்றான். பின் அவன் பிரமதேசம் என்னும் ஊரின் வடமேற்கில் கடனையாற்றங்கரையில் வாலீச்சுவரம் கண்டு வழிபட்டு, கடலாட எண்ணிக் கடற்கரையில் உள்ள உவரி என்னும் ஊரை அடைந்து 'தான்தோன்றி நாதனை' வணங்கி இலங்கேசனாகிய இராவணனுடைய நட்பைப் பெற்றுக் கிட்கிந்தையை அடைந்தான்." வாலிவரம் பெற்ற படலம் என்ற இந்தப் பகுதியில் புராண ஆசிரியர் வாலியைப்பற்றிக் கூறும் குறிப்புக்கள் ஆராய்ச்சி அறிஞரால் கவனிக்கற்பாலன. அவர் கூறுவன:—

"வாலி ஒரு சைவன்; புலால் உண்ணும் வடநாட்டார் அவனைப் புலால் உண்ணாத காரணத்தால் குரங்கு என்று இகழ்ந்தனர். வாலியின் துணைவனாகிய சாம்புவந்தன் புலால் உண்பவன்; அதனால் அவனைக் கரடி என்று இகழ்ந்தனர். வாலி என்ற பெயரைக் கொண்டு வாலையுடையவன் என்று கூறுவது பொருந்தாது. வாலி என்ற பெயரை உடையவன் கண்ணபிரானுக்கு அண்ணனாகிய பலராமன்; அவனுக்கு வால் உண்டா? வால் என்பது அறிவு; அதனை உடையவன் வாலி. வாலிக்குக் கோவிலில் வால் வைத் திருப்பது அறிவீனம்."

இங்ஙனமாகிய அறிவுரைகள் புதைந்த தென்காசித் தல புராணம் அறிஞருக்கு ஒரு விருந்து ; நேரிற்படித்து இன்புறுவாராக.

கிட்கிந்தை மன்னனாகிய வாலியை வெல்ல வேண்டும் என்று ஆர்வம் மிக்கவனாகி இராவணன் கிட்கிந்தையை அடைந்தான். அப்போது வாலி எழுகடல்களிலும் சென்று நீராடி ஆங்காங்கே சிவபூசை செய்யும் வழக்கமுடையவன் என்பதை அறிந்து வாலி இருக்கும் இடம் தேடிப் பாய்ந்தான் இராவணன். ஒரு கடற்கரையில் சிவபூசையில் ஈடுபட்டுத் தன்னை மறந்து நின்றான் வாலி ; அவனை அப்போது பிடித்துக் கட்டுவது எளிது என எண்ணிய இராவணன் அவன் மேல் பாய்ந்தான். வாலியின் வால் இராவணனைச் சுற்றிக் கட்டி உயரத் தூக்கி நிறுத்திற்று. இராவணன் தன் வாலில் தொங்கக் கிட்கிந்தையைச் சேர்ந்த வாலி இராவணனைக் கீழே இறக்கிவிட்டு " வந்தது ஏன் ? " என்று வினவினான். வாலி, " உன்னைப் போரில் வெல்ல எண்ணிவந்து உன் வாலிற் கட்டுண்டு வழியெல்லாம் மரங் களிலும் பாறைகளிலும் மோதப்பட்டுத் துன்புற்றது போதும். உன்னுடைய நட்பே எனக்கு வேண்டும் " என்று பணிந்து கூறினான், வாலியின் வல்லமையை அறிந்தே இராமன் அவன்முன் சென்று போரிடாமல் மறைந்து நின்று அவன்மேல் அம்பெய்து கொன்றான்.

வாலி சென்னைக் கடற்கரைக்கு வந்து கடலாடிப் பூசனை புரிந்த பெருமானே வாலீசர். வாலி வந்து பூசனை செய்த காலத்தில் கடல் இத்திருக்கோவிலின் அண்மையில் இருந்தது போலும்! இப்போது நெடுந்தூரம் கிழக்கே விலகி நிற்கிறது. வட குரங்குஆடுதுறையில் வாலி சென்று வழிபட்டான். அதனைப் புகழ்ந்து வடகுரங்காடு துறைக்குச் சென்றபோது திருஞானசம்பந்தர் பின்வருமாறு பாடு கின்றார் :

" கோலமா மலரோடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார். "

" நீலமாமணி நிறத்தரக்கனை இருபது கரத்தோடு ஒல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட. "

இராமாயணத்தில் வால் என்றே கம்பர் கூறுகின்றார். தேவாரத்தில் ' வாலினாற் கட்டிய " என்பதற்குத் தன் அறிவாற்றலால் இராவணனை ' வென்ற ' என்ற உரையும் பொருந்துமே !

வடக்கு மயிலாப்பூரில் உள்ள ஐந்து சிவன் கோவில்களையும் கண்டு இன்புற்றோம். இனி, தெற்கு மயிலாப்பூருக்கு வருவோம். இங்கே உள்ள இரண்டு திருக்கோவில்களில் ஒன்று கபாலீசர் கோவில்; மற்றொன்று சுக்கிரனால் பூசிக்கப்பெற்றது.

6. கபாலீசுவரர் கோவில்

பாடல்பெற்ற பெருமையை உடைய இதனை முன்னரே கும்பிட்டு மகிழ்ந்தோம். மற்றொன்றைப் பற்றியும் முன்னரே புராண வரலாற்றிற்குறிப்பிட்டிருக்கிறோம்; அதனை விரிவாக ஆராய்வோம்.

7. வெள்ளீசுவரர் கோவில்

வெள்ளி—சுக்கிரன்; இவன் அசுரகுரு, வியாழன்—தேவகுரு. மா எலி ஒன்று சிவன்கோவில் விளக்குஒன்றில் திரியைத் தூண்டி அதனாலே மாபலிச் சக்கரவர்த்தியாகியதும், யார் யார் எதனை எதனைக் கேட்டாலும் கொடுப்பேன் என்று முரசறைந்து மாவேள்வி செய்ததும், திருமால் வாமனனாகி (வாமனன்—குள்ளன்) வந்து மூன்று அடி மண் வேண்டியதும், மாபலி தர இசைந்ததும், சுக்கிரனாகிய அசுரகுரு அவனைத் தடுத்ததும், மாபலி தாரை வார்த்த கெண்டியைச் சுக்கிரன் வண்டாகித் துவார வாயினுள்ளே சென்று அடைத்ததும், வாமனன் தருப்பையால் குத்தச் சுக்கிரன் கண்ணிழந்ததும், கொடுப்பதைத் தடுத்தலாகிய பெரும் பாவத்தைத் தொலைத்துக் கண் பெறச் சுக்கிரன் இங்கே குளத்தின் தென்கிழக்கில் சிவபெருமானை நினைந்து பெருந்தவம் கிடந்து கண் பெற்றதும் ஆகிய வரலாறுகள் முன்னரே குறிப்பிடப் பெற்றன. இங்ஙனம் வெள்ளி நிலைபெறுத்தி வணங்கிய ஈசுவரன் வெள்ளீசுவரன். அம்மை காமாட்சித்தாய் பெருமானுக்கு இடதுபுறம் வடகிழக்கே தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள்.

இத்திருக்கோவில் கபாலிநாதனுடைய தெற்குத் தேர்த்தெருவில் வடசிறகில் மேலோரத்தில் இருக்கிறது. வைகாசி மாதம் பௌர்ணமியில் தீர்த்தம் தரும் பெருவிழா இங்கே நடைபெறுகிறது.

தலைவாசலுக்கு நேரே உயரே இருப்பவர் சித்தி புத்தி விநாயகர். அவருக்குச் சிறிது கீழே இருப்பவர் தெற்கூர்ச் செல்வ விநாயகர். ஆதலின் இது தெற்கூர்ச் செல்வ விநாயகர் கோவில் என்றும் பெயர் பெறுகிறது.

8. அப்பர்சாமி கோவில்

இது வடக்கு மயிலாப்பூரில் இராயப்பேட்டைப் பெருஞ்சாலையில் ஆஞ்சனேயர் கோவிலுக்கு அருகே எதிர்வரிசையில் இருக்கும் ஒரு பழைய கோவில். இலிங்கத்துக்கு அப்பர்சாமி என்றும் காசி விசுவநாதர் என்றும் பெயர். அம்மை விசாலாட்சி தெற்கே பார்க்க இருக்கின்றாள். பிள்ளையார், முருகன், கூத்தப்பெருமான் திருவுருவங்களும் இருக்கின்றன. பெருஞ்சாலையிலிருந்து அப்பர்சாமி கோவில் தெரு என்றதோர் தெரு மேற்கே செல்கின்றது.

பெருமாள் கோவில்கள்

வடக்கு மயிலாப்பூரில் மாதவப்பெருமாள் கோவிலும் தெற்கு மயிலாப்பூரில் கேசவப்பெருமாள் பேயாழ்வார் கோவிலும், சீனிவாசப் பெருமாள் கோவிலும் ஆக மூன்று பெருமாள் கோவில்கள் மயிலாப்பூரில் இருக்கின்றன. அவைகளைச் சென்று வணங்குவோம்.

1 மாதவப் பெருமாள் கோவில்

வடக்கு மயிலாப்பூரில் மாதவப்பெருமாள் கோவில் தெரு என்றே இப்பெருமாள் பெயரால் ஒரு தெரு இருக்கிறது. திருக்கோவில் தெருவின் மேற்குக் கோடியில் அண்மையிற் கட்டிய அழகான கோபுரத்துடன் காட்சியளிக்கின்றது. கோவிலின்உள்ளே மாதவப் பெருமாள் சிலைத் திருமேனியுடன் கருவறையில் வீற்றிருந்தருள்கின்றான். முன்னால் சீதேவி பூதேவியுடன் பெருமாளின் எழுந்தருள் திருமேனி இருக்கிறது. பெருமாளுக்கு இடதுபுறம் அமுதவல்லித் தாயார் திருக்கோவிலும் வலது புறம் ஆண்டாள் திருக்கோவிலும் இருக்கின்றன; வடக்குச் சுற்றில் பேயாழ்வாரும் இராம பிரானும் எழுந்தருளியிருக்கின்றனர்.

கோவிலின் தென்மேற்குப் பகுதியில் சந்தான புட்காணி என்ற திருக்குளமும் அதற்குக் கிழக்கே பூந்தோட்டமும் இருக்கின்றன. இந்தப் பூந்தோட்டமே பிருகு முனிவருடைய தவச்சாலை. அவர் திருமாலை வணங்கிப் போற்றினார். அப்போது திருமகள் "முனிவரே! மிக மகிழ்ந்தேன். உம்முடைய தவச்சாலைக்கு நான் கன்னியாக வருவேன். நீர் என்னை உம்முடைய மகளாகக்கொண்டு வளர்த்து மகிழ்ச்சியடைவீர்" என்று கூறியருளினாள்.

உலக நலம் காரணமாகத் திருமகள் திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டிருக்கும் மாதவனை விட்டுப் பிரிந்து பிருகு முனிவருடைய தவச்சாலையை அடைந்தாள். அன்று வெள்ளிக்கிழமை. முனிவர் அம்மையைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்து அமுதவல்லியம்மை என்று பெயரிட்டுத் தம்முடைய திருமனைவியாராகிய கியாதியிடம் ஒப்புவித்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தார். திருப்பாற் கடலில் ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையை விட்டு மாதவன் யோக உறக்கத்திலிருந்து நீக்கிப் பிருகு முனிவருடைய தவச்சாலையை அடைந்தான். பிறகு முனிவர் மாதவப் பெருமாளைக் கண்டு வணங்கி அமுதவல்லித் தாயாரைத் திருமணம் செய்து கொடுத்தார். அது முதல் மாதவப் பெருமாள் இங்கே கோவில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்றனன்.

அமுதவல்லியம்மை இங்கு வந்து சேர்ந்ததற்கு வேறொரு காரணமும் கூறப்படுகிறது. தருமசேனன் என்ற மன்னவன் இந்தச் சந்தான் புட்கரணிக் கரையிற் கடுந்தவம் புரிந்திருந்தான். பலவிதமான சோதனைகளினாலும் அவன் மனம் கலங்கவில்லை. அம்மை அவனுக்குக் காட்சியருளி அவனுடைய வேண்டுதலினால் இங்கே எழுந்தருளியிருக்கின்றனள்.

சந்தானம் என்பது பிள்ளைப் பேறு; அதனைத் தன்னிடம் மூழ்கி ஆண்டவனைத் தொழுகின்றவர்களுக்கு அருளும் குளம் இது. புட்கரணி—திருக்குளம். இதில் மூழ்கியே சுமதி என்ற மன்னன் மக்கட் பேறு பெற்றான்; விசுவாமித்திர முனிவரும் அப்பேற்றினை அடைந்தார்.

2. பேயாழ்வார்

சிவனடியார்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய வாயிலார் நாயனார் திருமயிலையிற் பிறந்தருளியது போலவே திருமால் அடியார்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களில் மூன்றாவதவராகிய பேயாழ்வார் இங்கே தோன்றினார். இவர் இப்போது அருண்டேல் தெரு என்று வழங்கப் பெறும் தெருவில் உள்ள செங்கழுநீர் ஓடை என்று சொல்லப் பெறும் அறுபதடி ஆழக் கிணற்றில் தோன்றினார். அவருடைய காலத்தில் இருந்த திருக்கோவில் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோவிலே; ஆதலின் அவர் அதனைப் பாடியருளினார்.

வைகாசி மாதம் திருவோணத்தில் தொடங்கி இங்கே பெரிய திருவிழா நடைபெறுகிறது. பங்குனி மாதம் வளர்பிறை நவமி முடிய இராமபிரான் பிறந்தருளிய திருவிழா நடக்கிறது. பேயாழ்வார் திருவிழா ஐப்பசி மாதம் சதய நாளில் நிகழ்கின்றது.

கபாலி சிவபெருமான் ; சிவபெருமானுக்குக் கபாலி என்ற பெயர் வந்த காரணம் கபாலத்தைக் கையில் வைத்திருந்ததே. சிவபெருமானைப் போலவே இப்போது நான்முகனாக இருக்கும் பிரமனும் ஐந்து திருமுகங்கள் உடையவனாக இருந்தான். ஒரு நாள் பிரமனைக் கண்டு பார்வதி தன் கணவனாகிய சிவபெருமானோ என்று ஐயுற்றாள், அதனால் சிவபெருமான் பிரமனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளி விட்டான். அந்தத் தலையானது அவன் கையில் ஒட்டிக்கொள்ளக் கபாலியாயினன்; கபாலியின் கையிலிருந்த கபாலத்தில் அமுதவல்லித்தாயார் பிச்சையிட்டனள். உடனே கபாலம் சிவபெருமானுடைய கையிலிருந்து அகன்றுவிட்டது. அதனாலேயே கபாலி மயிலையில் கோவில் கொண்டிருக்கின்றான் என்று கூறுகிற இந்த வரலாறு இத்திருக்கோவிலிற் சிறப்பாகச் சொல்லப்படுகிறது ; இனி, தெற்கூரிலுள்ள இரண்டு கோவில்களையும் சென்று வழிபடுவோம்.

3. ஆதிகேசவப்பெருமாள், பேயாழ்வார் கோவில்

தெற்கு மயிலாப்பூரிலுள்ள சித்திரக் குளத்தின் தென்கரையில் இருக்கிறது இத்திருக்கோவில். இது வடக்கூர் மாதவப்பெருமாள் கோவிலைப் போலவே அமைந்திருக்கிறது. பெயர்மட்டும் மாறியிருக்கிறது. அங்கே மாதவப் பெருமாள், இங்கே ஆதிகேசவப் பெருமாள். இரண்டு கோவில்களிலும் பெருமாள் கிழக்கே பார்க்க இருக்கின்றனன். அங்கே அமுதவல்லித் தாயார் பெருமாளுக்கு வலதுபுறம் இருக்கின்றனள் ; இங்கே மயூரவல்லித் தாயார் இருக்கின்றனள். வடக்குப்புறம் அங்கும் ஆண்டாள், இங்கும் ஆண்டாள். ஆதிகேசவப் பெருமாளை ஒட்டியே வலதுபுறம் பேயாழ்வாரும் இராமபிரானும் தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார்கள்.

இங்கும் தலைவாயிலில் அழகான திருக்கோபுரம் இருக்கிறது ; இந்த எழுநிலைக் கோபுரம் 10—10—1955-ல் அடிகோலப்பெற்று

23—5—1958-ல் ஓரிலக்கத்து இருபத்தாறுயிரம் ரூபாய்ச் செலவிற் கட்டி முடிக்கப்பெற்றது. இக் கோவிலில் 2—10—1955-ல் திருமழிசை யாழ்வார் நிலைபெறுத்தப் பெற்றார்.

மயூரவல்லி (வேதவல்லி) பிருகு முனிவருடைய திருமகளாய் வளர்ந்து வரும் நாளில் கபாலிக்குப் பிரமகபாலத்தில் பிச்சையிட்டு அதனை அகற்றினாள். ஆதிகேசவப் பெருமாள் இங்கே வந்து அம்மையை மணம் செய்துகொண்டு இங்கேயே எழுந்தருளியிருக் கின்றான்.

கேசவன் என்ற சொல்லுக்குப் பின்வருமாறு பொருள் கூறுகின் றனர் :—

" க :—ஈச :— வன் ; " க :— நான்முகனுக்கும், ஈச :—சிவபெருமா னுக்கும், வன்-பெரியவன். கேசி என்ற அசுரன் குதிரை உருவெடுத்துக் கண்ணனைக் கொல்ல வந்தான் ; கண்ணன் கேசியைக் கொன்றான் ; அதனால் கேசவன் என்று பெயர் பெற்றான். கேசம்-கூந்தல். அழகிய கேசத்தை உடையவன் கேசவன் ; யசோதை அவனைக் கேசவன் என்று அழைத்தாள்.

இக்கோவில் தென்கலை முறையினை உடையது. பங்குனி மாதம் நடைபெறும் பெருவிழா திருவோணத்தில் நிறைவுபெறும். பேயாழ்வாருக்குத் திருநாள் ஐப்பசி மாதம் சதயத்தில் முடிகிறது. சித்திரக் குளத்தின் கீழே கல் தளத்தில் சித்திரங்கள் காணப் பெறு வதால் அது சித்திரக் குளம் என்று பெயர் பெற்றது.

சிவன் கோவில்களில் திருமுன்பு காளை (இடபம்) சிவபெரு மானைப் பார்த்துக்கொண்டு அமைந்திருக்கும் ; இங்கே பெருமாள் கோவில்களில் கருடாழ்வார் (பெரியதிருவடி) இருப்பார். இனி, வடகலை யார்களுடைய ஆதிக்கத்தில் இருப்பதும் இந்த ஆதிகேசவப் பெருமா னுடைய சன்னதிக்குத் தென்புறம் அமைந்திருப்பதுமாகிய சீனிவாசப் பெருமாள் கோவிலைக் காணுவோம்.

4 சீனிவாசப்பெருமாள் கோவில்

இது தேசிகர் கோவிலாக இருந்தது; பின் ஐம்பது ஆண்டுகள் திருமடம் ஆக இருந்து இப்போது அண்மையில்தான் சீனிவாசப்பெருமாள் கோவிலாயிற்று என்று கூறுகிறார்கள். கிழக்கே பார்க்கப் பெருமாளும் பெருமாளுக்கு வலதுபுறம் அலர்மேல்மங்கைத் தாயாரும் இடதுபுறம் ஆண்டாள் அம்மையும் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றனர்.

5 ஆஞ்சனேயர் கோவில்

இது வடக்கு மயிலாப்பூரில் இராயப்பேட்டைப் பெருஞ்சாலையில் அப்பர்சாமி கோவிலுக்கு எதிரே இருக்கிறது. இதில் அநுமாருடன் இராமன், சீதை, இலக்குவனும் இருக்கிறார்கள். இக்கோவிலுடன் சுந்தரவிநாயகர், செல்வ விநாயகர் கோவில்களும் சேர்ந்துள்ளன. இனி நாம் மயிலாப்பூரில் வணங்கவேண்டுவன அம்மை கோவில்களும் வீரபத்திரசாமி கோவிலும், அடியார் கோவில்களுமே.

அம்மை கோவில்கள்

அம்மை என்பது சத்தி; அதனை உடைய ஆண்டவன் சத்தன். சிவபெருமானுடைய சத்தி பார்வதி, உமாதேவி முதலிய பெயர்களை உடையவள். இமைய மலையரசன் மகளாக ஆயினள் உமாதேவி. மலை—பருப்பதம்; பருப்பதத்தின் மகள் பார்வதி அம்மை; தக்கனுக்கும் மகளாகியிருந்தாள்; அப்போது தாக்காயணி (தாட்சாயிணி) என்று பெயர் பெற்றாள்.

தக்கன் நான்முகனுக்கு மகன்; அவன் பெருந்தவம் புரிந்து பெருமை பல பெற்றான். அதனால் அவன் உமையம்மையைத் தனக்கு மகளாகப் பெற்று எங்கும் நிறைந்த தேவாதி தேவனாகிய சிவபெருமானைத் தனக்கு மருமகனாக அடைந்து தேவர்கள் அனைவரும் தன்னை வணங்கி வாழ்த்தப் பெருவாழ்வு வாழ எண்ணினான். சூரபதுமன் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகமாக ஆளும் பேறு பெற்றான்; அப்பேறும் பெரும்பேறேயாயினும் அதனால் வரும் இன்பம்

சிற்றின்பந்தானே என்பதை உணராமல் அகந்தைக்கு அடிமையாகி அழிந்தார் பலர் ; அவருள் தக்கனும் ஒருவன். அவனுக்கு மகளாக வந்த தாக்காயணியைத் தக்கனிடம் கேளாமலே உடனழைத்துக் கயிலைக்குச் சிவபெருமான் சென்று விட்டனன் ; இருந்தாலும் தன் மகளைக் காணவேண்டும் என்று கயிலைக்குச் சென்றான் தக்கன். அங்கும் அவனுக்குச் சரியான மரியாதை கிடைக்கவில்லை. ஏன் ? அவன் அகந்தைக்கு அடிமையானானேயொழிய ஆண்டவனுக்குத் தான் அடிமை என்பதை மறந்துவிட்டானே !

ஆகையால், தக்கன் சிவபெருமானை மதிக்காமல், சிவபெருமானுக்குரிய வழிபாடுகளைச் செய்யாமல், ஒரு பெரிய வேள்வியைச் செய்தான். அந்த வேள்வியை அழித்து அவனுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி நன்னெறி காட்ட எண்ணினான் சிவபெருமான். யானைமுகனை (கயமுகன்) வெல்வதற்காகப் பெருமான் யானைமுகக் கடவுளாகத் தோன்றினான் ; சூரபதுமனை வெல்வதற்காக முருகப்பெருமானாகி வந்தான் ; இங்கே தக்கனுடைய கொட்டத்தை அடக்குவதற்காகப் பெருமான் வீரபத்திரனாகி வந்தான். முருகன் தோன்றியது போல வீரபத்திரனும் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்தவனே ! அவனுடைய சத்தி காளியாகி வந்தனள். இருவரும் சென்று தக்கன் வேள்வியை அழித்தனர். வீரபத்திரக் கடவுள் வரலாறு காணுவோம்.

வீரபத்திரர்

வீரபத்திரனுடைய தோற்றத்தைப்பற்றி மாதவச் சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்திற் பின் வருமாறு கூறுகிறார் :— (தக்கீசப் படலம் 31, 32).

“இருள் குடியிருந்த கூந்தல் இறைவிதன் மாற்றம் கேளா
தெருள் குடியிருந்த சிந்தை தைவரச் சிவந்த நோன்றாள்
அருள் குடியிருந்த பெம்மான் அழிதகைத் தக்கன் நெஞ்சில்
வெருள் குடியிருத்தும் மொய்ம்பின் வீரபத்திரனைத் தந்தான்.”

‘எண்ணரும் உலகம் ஈன்ற சிற்றகட்டு எம்பிராட்டி
வண்ணவார் புருவம் மீப்போய் நெரிப்ப வாய்துடிப்பப் பொங்கிக்
கண்ணறு சினம் மீக்கொண்டு பத்திரகாளி என்னும்
பெண்ணணங்கு அரசை ஈன்றாள் பிறங்கு எரிசிதறும்
[கண்ணாள். ’’

இங்ஙனமாகச் சிவபெருமான் தக்கன் நெஞ்சில் அச்சத்தைக் குடியிருத்தும் பேராற்றலைப் படைத்த வீரபத்திரனைப் பெற்றான்; பார்வதி பத்திரகாளியைப் பெற்றாள். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் 333, 334-ல்—

"அன்று வானவர் உய்ய ஐயர் மிடற்று அடக்கிய ஆலமே
சென்று வானவர் உயிர்கொளத் திருவுள்ளம் வைத்தமை தெரியவே"

"காலை நெற்றியின் அகிலமும் சுடும் கனலி குறைபட இறைவர்தம்
மேலை நெற்றி விழிக்க வந்து பணிந்து நின்றனன் வீரனே."

மாதவச் சிவஞான முனிவர் "வீரபத்திரனைத் தந்தான்" என்று மட்டும் கூற, ஒட்டக்கூத்தர் "நெற்றி விழிக்க வந்து பணிந்து நின்றனன் வீரனே" என்று பாடுகிறார். தக்கயாகப் பரணி உரையாசிரியர் "இந்த அவசரத்திற்கு மாதேவர் திருமுன்னே வந்து நின்றார் மகா வீரபத்திரதேவர் என்னும் கணநாதர்" என்று கூறுகிறார். முன்னாலேயே கணநாதராக இருந்த வீரபத்திரர் பெருமான் திருமுன்பு வந்து நின்றார் என்பது உரையாசிரியர் கருத்துப் போலும்! சிவபெருமானே வீரபத்திரனாகி நின்றான் என்று கொள்ளுதலே சிறந்த பொருள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவுசாத்தானத் தேவாரத்திலே சிவபெருமானே தக்கனுடைய வேள்வியை ஒரு நொடியில் அழித்தான் என்று கூறுகிறார்:—

"தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தம் கனா ஆக்கினான் ஒருநொடி
காமனார் உடல்கெடக் காய்ந்த எம்கண்ணுதல்
சேமமா உறைவிடம் திருஉசாத் தானமே."

கண்ணி 596 உரையில் "மா காளியான பரமேசுவரி" என்கிறார் தக்கயாகப் பரணி உரையாசிரியர். கண்ணி 613-ல் ஒட்டக்கூத்தர்.

"ஆளிஏறி அகிலாண்ட நாயகி
வாளியேவி உலகை வளைப்பவே"

என்று கூறுகின்றார். இதனால் சிவபெருமானே வீரபத்திரனாகவும் பார்வதி தேவியே வீரமாகாளியாகவும் வந்தனர் என்பதற்குத் தடையே இல்லை.

வீரபத்திரனும் வீரமாகாளியும் தக்கனுடைய வேள்வியை அழித்த வரலாற்றை மாணிக்கவாசகப் பெருமான் திருவுந்தியாரிற் பன்னிரண்டு கலித் தாழிசைகளாகப் பாடியருளினர். ஒரு நொடிப் பொழுதிலே தக்கன் வேள்வியைத் தகர்த்தான் பெருமான் என்றதில், ஒரு நொடியில் நிகழ்ந்தவை யாவை ?

" சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக்கு உந்தீபற. " (5)

' உருத்திர நாதனாகிய சிவபெருமானே வேள்வியைச் சாடினன்' என்பதும், 'தேவர்கள் போகும் இடம் தெரியாமல் ஓடினார்கள்' என்பதும் இதன் பொருள்.

" வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீபற
கலங்கிற்று வேள்வி என்று உந்தீபற " (7)

வெய்யவனாகிய அங்கி; அக்கினி பகவான்—வீரபத்திரன் வருவது கண்ட இந்திரன் குயிலாகி ஒரு மரம் ஏறினன்.

" புரந்தரனார் ஒரு பூங்குயில் ஆகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
வானவர்கோன் என்றே உந்தீபெற". (9)

காஞ்சிப் புராணம் கலைமகள் பட்ட பாட்டைப் பின் வருமாறு கூறுகின்றது.—(தக்கீசப் படலம்—38.)

" குலவு வாணி தன்னிடத்து வீங்கு கொங்கை மூக்கு அரிந்து
உலகம் ஈன்ற அன்னை ".

" உலகம் ஈன்ற அன்னை " என்று கூறுவதால் பார்வதியே தான் மாகாளியாக வந்தவள் என்பது வெளிப்படை. வாணி கலைமகள் ; நான்முகனுடைய மனைவி. அவளுடைய கொங்கை,

மூக்கு இரண்டும் அறுபட்டன என்று புராணம் கூறக் கொங்கையைக் கூருது விடுத்து மூக்கை மட்டும் கூறினார் மாணிக்க வாசகனார்.

" நாமகள் நாசி சிரம் பரமன் படச்
சோமன் முகம் நெரித்து உந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற." (13)

சூரியன் பட்டபாடு பின் வருவது—

" சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீபற
மயங்கிற்று வேள்வி என்று உந்தீபற." (15)

தக்கன் பட்டபாடு இது—

" தக்கனார் அன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீபற
மடிந்தது வேள்வி என்று உந்தீபற." (16)

தக்கன் மக்கள் வேண்டிக் கொள்ள மனம் இரங்கிய பெருமான் தக்கனுக்கு ஆட்டுத் தலையை வழங்கினார்.

" ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டியவாபாடி உந்தீபற
கொங்கை குலுங்க நின்று உந்தீபற." (11)

தக்கன் தனக்கு மகளாக வந்த தாக்காயணி தன்னைத் தந்தை என்று மதியாதிருந்தாள் என்பதனால் அம்மை மீது மிக்க சினங் கொண்டான்; அதனால் அவளை மிக நிந்தித்தான்.:

" பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே ? ஏடி உந்தீபற
பணை முலை பாகனுக்கு உந்தீபற' (8)

" அவிப் பாகம் உண்டான் திருமால்; அவன் மட்டும் சாவாதிருந்தான்; என்னே வியப்பு! " என்கிறார் மாணிக்க வாசகர்

" ஆ ஆ ! திருமால் அவிப்பாகம் கொண்டு அன்று
சாவாதிருந்தான் என்று உந்தீபற
சதுர் முகன் தாதை என்று உந்தீபற." (6)

" திருமால் சிவ பெருமானுடைய நான்கு சத்திகளில் ஒருவன்; ஆதலின் சாவாதிருந்தான்" என்று கூறினார் மாணிக்க வாசகர்,

தக்கன் சிவபெருமானை மதியாமல் வேள்வி செய்தான்; வேள்வி நல்ல செயலே ஆனாலும், திருமால் முதலிய தேவர்களைக் கொண்டு செய்யப்பட்டதே ஆனாலும், சிவபெருமானை மதியாது செய்ததனாற் பெரும் பாவச் செயலே ஆகி அதிற் கலந்து கொண்டவர் அனைவருக்கும் வீரபத்திரனாற் கேடு தந்தது. சண்டேசர் சிவ பூசையிற் பதிந்த உள்ளம் உடைமை காரணமாகப் பூசைக்கு இடையூறு செய்த தம்முடைய உடலைப் பெற்ற தந்தையின் காலை வெட்டி மாபாதகம் செய்தார்; அது சிவனார் திருவடிக்கு அன்பு காரணமாகச் செய்தமை பற்றிப் பெரும் புண்ணியமாகி அவருக்குக் கிடைப்பதற்கு அருமையான பெரிய சண்டேசுவர பதவியைத் தந்தது. இதனை அருணந்திசிவம் சிவஞான சித்தியாரில் [பிரமாண இயல் (29)]

" அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரன் அடிக்கு அன்பில்லாதார் புண்ணியம் பாவம் ஆகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தே."

என்று கூறினார். பாலன்—சண்டேசுவர நாயனார்.

திருமால் முதலிய தேவர்கள் வீரபத்திரனை அனுப்பித் தங்களைத் தண்டித்து நல்வழிகாட்டிய சிவபெருமானை நோக்கித் துதிக்கின்றார்கள்—

" இன்று எமை ஒறுப்ப வீரன் போந்தது உன் ஏவலாக
அன்று எமை ஒறுப்பப் போந்த விடமும் உன் அருளே என்று
மன்ற யாம் தெளிந்தேம்; இந்நாள் இடித்து எமை வரை நிறுத்தல்
என்றும் நின் கடனே அன்றோ? ஈறிலாக் கருணை வாழ்வே!"

" அன்று உனை மதியாது ஆழி கடைந்ததூஉம் அன்றி எம்மேல்
சென்று அடர்வதனுக்கு அஞ்சிச் செல்வ! நீ அமுது செய்யக்
கொன்றிடும் நஞ்சம் காட்டிக் குற்றமேற் குற்றம் செய்தேம்
இன்று உனை இகழ்ந்தது ஒன்றோடு ஒழிதலின் உய்ந்தோம்,
[எந்தாய்!"

" அளவறு காலம் தீவாய் அன்ளலில் குளித்தும் தீரா
வளரும் இச்சிவத் துரோகம் வயப்புகழ் வீரன் தன்னால்
எளிதினில் தவிர்த்தாய் அன்றே ! இப்பெருங் கருணைக்கு [எந்தாய் !
தெளிவிலாச் சிறுமை யேங்கள் செய்ந்நன்றி எதிர்ப்பை என்னே."

வயப்புகழ் வீரன்—வீரபத்திரக் கடவுள்.

சிவபெருமான் தேவர்கள் செய்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு கடைக்கணித் தருளினன்.

வீரபத்திரர் கோவில்

இது வடக்கு மயிலாப்பூரில் மாதவப் பெருமாள் கோவில் தெருவில் மாதவப் பெருமாள் கோவிலுக்குத் தென் கிழக்கே பரிபூரண விநாயகருக்கு முன்னால் இருக்கிறது. பெருமான் வடக்கே பார்க்க அபயாம்பாளுடன் எழுந்தருளியிருக்கின்றான்.

முண்டகக் கண்ணி அம்மன் கோவில்

அம்மை கிழக்கே பார்க்க, எழுந்தருள் அம்மையுடன், இருக்கின்றாள். இக் கோவில் மாதவப் பெருமாள் கோவிலுக்குப் பின்புறம் இருக்கிறது. முண்டகம்—தாமரை. முண்டகக்கண்ணி—தாமரை மலர் போன்ற கண்களையுடைய அம்மை. இவ்வம்மையை அறியாதார் 'முண்டக்கண்ணி' என்று தவறாகக் கூறுகின்றனர். இவ்வம்மை பெயரான் அமைந்தது முண்டகக் கண்ணியம்மன் கோவில் தெரு என்பது பலரும் அறிந்த புகழுடையது.

இவ்வம்மை மாரியம்மைதான் என்று அப் பக்கத்தார் கூறுகின்றனர்.

தருமராசர் கோவில்

கிழக்கே பார்க்க இக்கோவிலில் அம்மை திரௌபதியம்மாள் எழுந்தருளியிருக்கின்றாள். தருமபுத்திரர், வீமன், விசயன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவருக்கும் தேவி அழியாத பத்தினியாள் திரௌபதி தேவி. அவ்வம்மையின் கோவிலே இது. பாண்டவர்

ஐவர் திருவுருவங்களும் வரிசையாக இருக்கின்றன ; இதனுடன் பாண்டவர் தூதுவன் கண்ணபிரானும் இருக்கின்றனன். ஆண்டு தோறும் இக்கோவிலின் முன் பூக்குளி விழா நடைபெறுகிறது. பூ என்பது தீ. தீயில் இறங்கிக் குளித்தல் இது. அம்மையை நேர்ந்து கொண்டு நோய் நீங்கினால் பலர் தீக்குளிப்பர். திரௌபதியம்மனுக்கு எதிரே பரிபூரண விநாயகர் தெரு இருக்கிறது.

பிடாரி கோவில்

காரணீசர் கோவில் தெருவில் தென் சிறகிலிருக்கும் வாலீசர் கோவிலுக்குத் தென் மேற்கில் அம்மை பிடாரி வடக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள். இவ்வம்மையே கோலவிழியம்மன். கோலம்—அழகு.

இவள் ஊர்க்காளி. இங்கே வந்து பூசனை புரிந்து விழாச் செய்து தான் கபாலி கோவிலில் திருவிழாத் தொடங்கப் பெறும்.

அம்மை கோவில்கள் பல

துலுக்க நாதம்மன், எல்லையம்மன், பேயாண்டியம்மன், திருவீதியம்மன் முதலிய பல அம்மன்களுடைய திருக்கோவில்கள் திருமயிலையில் இருக்கின்றன. துலுக்கம் என்பது செவ்வந்திப் பூவில் ஒரு வகை ; எல்லை வழக்காளருக்கு எல்லை காட்டிய அம்மன் ; பேயோடு ஆடுகின்ற சிவபெருமான் பேயாண்டி. திருவீதியில் வந்து வழிபட வருவார் அனைவரையும் பாதுகாத்தருளும் அம்மை திருவீதியம்மை.

இனி; அடியவராகிய திருவள்ளுவ நாயனார் திருக்கோவிலுக்குச் சென்று வழிபடுவோம்.

திருவள்ளுவ நாயனார் திருக்கோவில்

முண்டகக் கண்ணியம்மன் கோவில் தெருவின் வட கோடியில் இருக்கிறது திருவள்ளுவ நாயனார் திருக்கோவில். திருவள்ளுவ நாயனார் கருவறையிற் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அர்த்தமண்டபத்தில் வள்ளுவனார் அவருடைய திருமனைவியாராகிய

வாசுகியம்மை ஆகிய இவர்களுடைய எழுந்தருள் திருவுருவங்கள் இருக்கின்றன. அடுத்துள்ள மாமண்டபத்தில் தென்புறம் வலம்புரி விநாயகரும், வடபுறம் கலைமகளும் எழுந்தருளிக் காட்சி தருகின்றனர்.

அடியவராகிய திருவள்ளுவ நாயனாரை வணங்குவதற்கு முன் உலக நாயகனாகிய சிவபெருமானையும் அம்மையையும் வழிபடுதல் வேண்டாமா ? அதனாலேயே வள்ளுவர் திருக்கோவிலுக்குப் போவ தற்கு முன்னாலேயே வழியில் சிறிது தெற்கே தள்ளி ஒரு சிறு கோவிலிலே ஏகாம்பர நாதர் கிழக்கே பார்க்கச் சிவலிங்கத்திரு மேனியுடன் அமர்ந்திருக்கின்றனர் ; அம்மை காமாட்சி தென்முக மாக இருக்கின்றனள் ; பெருமானுக்கு வலதுபுறம் யானைமுகப் பெருமானும் இடது புறம் முருகப் பெருமானும் காட்சியருள்கின்ற னர். நந்தி நடுநாயகமாகச் சிவலிங்கப் பெருமானை நோக்கி இருக் கின்றது. ஏகாம்பரர் திருக்கோவிலுக்கு வெளியே வடபுறம் சண்டே சுர நாயனார் சின்னஞ்சிறு கோவிலில் எழுந்தருளியிருக்கின்றார், தென்முகமாகச் சிவபெருமானுடைய திருவருளை எதிர் பார்த்துக் கொண்டு.

இச்சிறு கோவில் அமைப்பு நமக்கு ஒரு பெரிய உண்மையை உணர்த்துகின்றது. காளை—பசு, அதாவது உயிர் ; சிவலிங்கம் பதி; பதியை அடைவதுதான் பசுவுக்குக் கிடைக்கும் பெரும் பேறு ; அது தான் அழியாத குறையாத நிரம்பிய பேரின்பப் பேறு. பசுபதியை அறிய வொட்டாது அடிக்கடி மறைப்பது பாசம் ; அதனை உதறி யெறிந்து எப்போதும் பதியையே பார்த்து, “பெருமானே ! ஏழை யேன் ; புன்மையேன். புன்மை தவிர்த்து ஆட்கொண்டருளும்” என்று இடைவிடாது எண்ணிக் கொண்டிருப்போமானால் அவனுடைய திருவருள் சித்திக்கும். அப்போது தாய், தந்தை, மனைவி, மக்கள், செல்வம் என்ற உலகப் பாசமெல்லாம் நம்மை விட்டு விட்டு ஓடிவிடும். நம்முடைய கை, கால், கண். என்ற உணர்ச்சிகூட நம்மை விட்டுவிட்டு மறைந்துவிடும். தம்முடைய மனைவியாயிற்றே என்று சிறிதும் எண்ணாமல் அவ்வம்மையைத் தம்மைச் சோதிக்க வந்த பெருமானுடன் அனுப்பினார் இயற்பகை நாயனார் ; தம்முடைய பெறற்கருஞ் செல்வக் குழந்தையை அறுத்துக் கறிசமைத்து அடி யாருக்கு ஊட்டினார் சிறுத்தொண்ட நாயனார் ; தம்முடைய உடலுக்குத் தந்தையாரல்லரோ முன் நிற்பவர் என்று சிறிதும்

எண்ணுமல் தாம் உயிர்த் தந்தையாகிய பசுபதிக்குச் செய்யும் சிவ பூசைக்கு ஊறு செய்த தந்தை காலை வெட்டினார் சண்டேசுவர நாயனார்; தம்முடைய கண்ணுயிற்றே என்று கொஞ்சமும் சிந்தியாமல் தம் கண்ணைப் பிடுங்கி அப்பினார் திருக்காளத்தியப்பருக்குக் கண்ணப்ப நாயனார். இத்தகைய தீவிரதர பக்குவத்தாற் பெருமானுடைய திருவருளைப் பெற்று உய்ந்த இவர்களில் சண்டேசுவர நாயனாரை எடுத்துக் காட்டாக இங்கே பெருமான் அருகே வெளிப்புறத்தில் அமைத்து வைத்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள், அவர்தம் வழித் தோன்றல்களாகிய நாம் உண்மை அறிவு பெற்றுக் கடைத் தேறும் படிக்காக. நிற்க, திருவள்ளுவர் திருவழிபாட்டுக்கு வருவோம்.

திருக்கோவிலின் மேற்குச் சுற்றின் வடக்கோரம் வாசுகியம்மையார் திருக்கோவில் இருக்கிறது. வடக்குச் சுற்றில் இருக்கிறது வள்ளுவர் பிறந்து விளையாடிய இடமாகக் கூறப்பெறும் இலுப்பை மரம். ஆராய்ச்சி அறிஞர் இப்போதிருக்கும் ஏகாம்பரர் கோவிலே அக்காலத்தில் வள்ளுவர் பிறந்த குடிசை இருந்த இடம் என்று கூறுகிறார்கள்.

உண்மை இங்ஙனம் இருக்க ஆதி என்ற புலைச்சிக்கும், பகவன் என்ற பார்ப்பனருக்கும் பிறந்த பிள்ளை திருவள்ளுவர் என்று சில பேதை மக்கள் கதை கட்டி விட்டிருப்பது இழிவான பேச்சு. இச் சிறுமைப் பேச்சுக்கு எடுத்துக் காட்டாக அவர்கள், " திருக்குறளில் வள்ளுவனார் ஆதி பகவன் என்று தம் தாய் தந்தையர் பெயரைக் குறிப்பிட்டிருக்கின்றதே தக்க சான்று " என்று கூறி மேலும் தம் அறியாமையைப் புலப்படுத்துவர். " அகரமுதல எழுத்தெல்லாம் " என்ற உவமையில் அகரம் என்ற ஒன்றை மட்டும் கூறிவிட்டு அதற்கு உவமேயமாக இரண்டினை ஆதியையும், பகவனையுமா கூறுவார் வள்ளுவர் ?

மண்ணுலகத்தில் மக்கள் முதலில் தோன்றிய இடம் தமிழகமே. அது தான் உயிர்கள் இயற்கை வாழ்க்கையை இனிது மேற்கொண்டு ஒழுகுவதற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை இயல்பாக அமைந்து திகழ்கின்றது. தமிழகத்தில் தோன்றிய மனிதரே பூமியின் ஏனைய பகுதிகளிலும் பல்கிப் பரவினர் என்பது அறிஞர் கண்ட முடிவு.

முதன் முதல் மக்கள் பேசிய மொழி என்றும் குன்ற இளமைத் தாகிய பைந்தமிழே. ஆதலின் உலகத்தாரனைவருக்கும் தாய் மொழியாவது தமிழ் மொழியே என்பது மிகையாகாது.

தமிழ் மக்கள் எண்ணிறந்த நூற்றுண்டுகளிற் பழகிய வாழ்க் கையின் பயனாக ஒப்புயர்வற்ற நாகரிகத்தைப் பெற்றார்கள். அதனால் அவர்தம்முள் பல பேரறிஞர் தோன்றி அருந்தமிழ் நூல்கள் இயற்று வாராயினர். அவ்வறிஞருள் முதன்மையாக வைத்து எண்ணத் தகுந்த மேன்மையாளர் திருவள்ளுவர் என்பார். அவர் இயற்றி யருளிய தெய்வ நூல் திருக்குறள்.

திருக்குறள் வழக்க முறை கூறும் நூல். அதிற் கூறப்பெறும் சட்டங்கள் உலகத்தார் அனைவராலும் சாதி, சமைய, நிற வேறு பாடுகளை ஒழித்துக் கைக்கொள்ளத் தக்காங்கு அழகுபெற அமைந்திருக்கின்றன. அதனால் திருக்குறள் தமிழ் நாட்டினர் ஒழுக்க நெறியை வெளிப்படுத்தும் நூலாக இருந்தாலும், அதனை உலகினர் அனைவரும் தத்தமக்கு ஏற்ற பொதுமறை என்று தழுவிக் கொண்டு தம்தம் மொழிகளிற் பெயர்த்து எழுதிப் போற்றுவான் தொடங்கியுள்ளார்கள். இங்கிலாந்து நாட்டுப் பேரரசி காலஞ்சென்ற விக்டோரியா அம்மையார் தமது பேரறிவு நூல் நிலையத் திலே திருக்குறளை முதன்மை நிலைமையில் வைத்துப் போற்றினார் என்பது அப்பேரரசியாருக்கு ஒப்பற்றதொரு பெரும் புகழே. உலகப் பொது மொழியாம் தனித் தீந்தமிழிலே உலகப் பொது மறையாம் திருக்குறள் நூல் அமைந்து விளங்குவது மிகமிகப் பொருத்தமே யல்லவா ?

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு."

என்பது எட்டையபுரம் பெருங்கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதி யாருடைய பொன் மொழியல்லவா ?

திருவள்ளுவ நாயனார் தெய்வப் புலவர் ; அவருடைய மனைவி யாராகிய வாசுகி அம்மையார் தெய்வக் கற்பினார். வள்ளுவனார்,

" தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் "

என்று கூறுவதற்கு எடுத்துக் காட்டாக ஒழுகிய பெருந்தகையார் வாசுகியார். அதனால் அவ்வம்மையும் திருக் கோவிலில் வைத்து வழிபடப் பெறுகின்றார்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய இனிய திருக்குறளை எடுத்துக் கொண்டு சங்கப் புலவர்களிடம் அதனை அரங்கேற்றுவதற்கு மதுரையை அடைந்தார். அங்கே புலவர்கள் இருப்பதற்கு ஒரு பலகை இருந்தது. அது சங்கப் பலகை என்று பெயர் பெறும். ஒரு புலவர் இருந்தால் அவருக்கு மட்டுமே அதில் இடம் இருக்கும். சீரொப்ப உள்ள புலவர் வந்தால் மட்டும் அது விரிந்து இடம் தரும், அங்ஙனமாக அப் பலகை நாற்பத்தொன்பது புலவர்களுக்கு மட்டுமே இடம் தந்திருந்தது. அவர்கள் திருக்குறளின் தகுதியை அளப்பதற்கு அதனைச் சங்கப் பலகையில் வைக்கச் சொன்னார்கள். வள்ளுவனார் அதனை வைத்தபோது அப்பலகை சுருங்கி அந்தத் திருக்குறள் ஏட்டுக்கு மட்டுமே இடம் தந்தது என்பர். அதாவது அது நாற்பத்தொன்பது புலவர்களுடைய புலமையையும் விஞ்சித் திகழ்ந்ததென்பது வெள்ளிடை மலைமேல் வைத்த விளக்குப் போல் விளங்குகின்றது.

திருக்குறள் ஒழுக்கம் கூற வந்த நூல்; அது பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களைப்பற்றியும் திட்பமாகக் கூறுகிறது. இவ்வுண்மையை ஆராய்வோம்.

திருவள்ளுவ நாயனார், "கடவுள் ஒருவரே; உயிர்கள் எண்ணிறந்தன; உயிர்கள் இறைவனை அறிய வொட்டாது தடைபுரியும் உலகமாகிய பாசப் பொருள் ஒன்று உண்டு" என்ற கொள்கையாளர்.

"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு."

என்ற அருமை முதற் குறளை எடுத்துக் கொள்வோம். "எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அது போல உலகம் ஆதி பகவனாகிய முதலையுடைத்து." என்பது இதன் பொருள். எழுத்துக்கள் உயிர், மெய் என இரு வகையின; உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் பிறப்பிடமாக இருந்து அவைகளெல்லாவற்றுள்ளும் கலந்து உயிர்க்குயிராய் நிற்பது அகர உயிரே. அதுபோல இறைவனும் எல்லா உயிர்களுக்கும் அவை வாழிடங்களாகிய உலகங்களுக்கும் பிறப்பிடமாகி அவைகளனைத்துள்ளும் கலந்து உயிர்க்குயிராகி நிற்கின்றான். இதனால் "இறைவன் ஒருவனே;

அவன் உயிர்களையும் உலகங்களையும் தோற்றுவித்து நிலை பெறுத்து பவன்; உயிர்கள் பல; அவை வாழிடமே உலகம்" என்பது பெற்றும். மாதவச் சிவஞான முனிவரும் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில், இதனையே

" சீர்கொளிறை ஒன்றுண்டு அத் தெய்வம் நீ என்று ஒப்பால்.
சோர்வில் அடையால் தெளிந்தோம் சோமேசா—ஓரில்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

என அருளியதும். இதனையே ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழி மரபு 13–ம் சூத்திர மாகிய " மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்பதற்கு உரை காணுமிடத்து, "இறைவன் இயங்கு திணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரம் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது. அகர முதல என்னும் குறளால் அகர மாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அது போல இறைவ னாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமைகூறிய வாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யான்' எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க" எனக் கூறியதும் அது.

கடவுள்

'கடவுள்' ஆதி பகவன். 'ஆதி' என்பது முதன்மையுலகத்தைத் தோற்றுவித்த முதல்வன் கடவுள். அதனால் அவனை "உலகி யற்றியான்" என வள்ளுவனார்,

" இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"

[இரவச்சம் 2]

என்ற திருக்குறளிற் கூறினார். அக் குறளுரையிற் பரிமேலழகர், " மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய

உண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தாற் கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்குமன்றே" என உரைக்கின்றனர். பழவினைக்குத் தகுந்தபடி வாழ்நாளும் உண்டியும் செய்தொழிலும் பகுப்பவன் இறைவனே ஆனதால் அவன் பகவன் எனப்பட்டான். அதனால் கடவுள் 'விதி' என்றும் பெயர் பெறுவான். மற்றும் இதனையே மற்றோர் திருக்குறளில் நாயனார்,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" [ஊழ்—7]

என அருளினார். பரிமேலழகரும் அதன் உரையில், "ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோ ருயிரின்கட் செல்லாமல் அவ் வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தான் என்றார்" என உரை வகுத்தனர்.

அகர உயிர்போல எங்கும் சிவணி உலகத்தைப் படைத்து உயிர்களுக்கும் அவ்வகைகளின் வினைக்கேற்ப வகுக்கும் ஆதிபகவன் கடவுள் வாழ்த்தில் நாயனாரால் "வாலறிவன்," "மலர்மிசையேகினான்," "வேண்டுதல் வேண்டாமையிலான்," "இறைவன்," "பொறிவாயிலைந்து அவித்தான்," "தனக்குவமை இல்லாதான்," "அறவாழி அந்தணன்," "எண்குணத்தான்" என்ற பல காரணப் பெயர்களாற் குறிக்கப் பெற்றான். 'வாலறிவன்' என்பது கடவுள் மெய்யுணர்வுடையவன் என்பதை உணர்த்தும்; 'மலர்மிசை ஏகினான்' என்பது அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவொடு விரைந்து செல்லுபவன் அவன் என்பதைப் புலனுறுத்தும்; எங்கும் தங்குதலாகிய இறைமைக் குணமுடையவன் இறைவன்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளை வாயிலாக உடைய ஐம்புலன்களையும் அறுத்தவன் இறைவன் என்பதைப் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பது விளக்கும்; அவன் பொறிவாய் இல்லாமலே ஐந்தவித்தமையும் இதனான் விளங்கும்; அதாவது இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் அவன்; அவன் உடலெடுத்து ஐந்தவித்தவன் அல்லன்; அதனால் அவன் தனக்கு ஒராற்றானும் நிகரில்லாதவன். இதனையே நாயனார் 'பற்றற்றான்' (துறவு—10) எனக் கூறி நிலைநாட்டினார். எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே பற்றற்றவன் இறைவன். கடவுள் பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவன், ஆதலால் 'அறவாழி அந்தணன்' என்னப்

பெற்றான். அவனுக்குத் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என எண் குணங்கள் உள; அதனால் அவன் எண்குணத்தான் எனப்பெற்றான்.

இங்ஙனமாய அளவற்ற குணங்களையுடைய கடவுள் அழியாத மெய்ப்பொருள் ; அதுவே உள்ளது ; செம் பொருள். இதனை மெய் யுணர்தல் என்ற அதிகாரத்தில் நாயனார்,

" கற்றீண்டு **மெய்ப்பொருள்** கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" என்றும், [6]

" ஓர்த்துள்ளம் **உள்ள(து)** உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" எனவும், [7]

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" என்றும் [8] கூறினார்.

இச் சொற்றொடர்களுக்குச் சிறப்புரை கூறுமிடத்துப் பரிமேலழகர் " தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லா வற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான் றும் ஒரு தன்மைத் தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்றார். மேல் 'மெய்ப்பொருள்' எனவும் 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இது பற்றி என உணர்க," எனக் குறித்தனர்.

மனமொழி மெய்களைக் கடந்த பொருள் கடவுள் ; அதுவே அறம் என்னும் பெயராலும் அழைக்கப் பெறும். மேல் ' அறவாழி அந்தணன் ' என்றதற்கேற்ப நாயனார் :

" அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு " (தீவினையச்சம்—4) எனக் கூறினார். அப்பொருளே தெய்வம் என்றும் குறிக்கப்பெறும். அதனை " தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் " (குடி செயல் வகை—3) என்பதனான் அறிக. மற்றும் அதுவே சார்பு எனவும் " சார்புணர்ந்து " (மெய்யுணர்தல்—9) என்றதனாற் குறிக்கப்பெற்றது.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் இறைவன் தான் ஏனைய உயிர்ப் பொருள்களுக்கெல்லாம் சார்பாகி, அவை தன்னைச் சாரும்போது அவற்றைப்பற்றி விடாத இடும்பையாகிய பிறவிக்கடலை வேரறுத்துத் தன் திருவடி இன்பத்துட் நிலை பெறுத்தியருளும் அழியாத மெய்ப் பொருள் என்பது பெற்றாம். நித்தனாகிய செம்பொருளைச் சேர வேண்டுவனவாகிய உயிர்களைப்பற்றி நாயனார் யாது கூறுகின்றார் என்பதை இனி ஆராய்வோம்.

உயிர்கள்

உயிர்கள் எண்ணிறந்தன, இறைவனைப் போலவே அவைகளும் அழிவற்றனவே. வள்ளுவனார் அருளுடைமை (4) யில் "மன்னுயிர் ஓம்பி" என்றும், இன்னா செய்யாமை (8) யில் "மன்னுயிர்க்கின்னா செயல்" எனவும், படர் மெலிந்திரங்கலில் (8) "மன்னுயிரெல்லாம் துயிற்றி" என்றும் கூறுகின்றமையால் அவைகளின் அழியாத் தன்மை விளங்கும். பரிமேலழகரும் அச் சொற்றொடர்களுக்கு உரை வழங்கும்போது ஒவ்வோரிடத்தும் "நிலைபேறுடைய உயிர்கள்" எனக் குறிப்பதோடு மன்னுயிர் ஓம்பி என்ற குறளில் சிறப்புரையாக "உயிர்களெல்லாம் நித்தமாகலின் மன்னுயிர் என்றார்" எனவும் விளக்கினார்.

உயிர்கள் மும்மலங்களின் வயப்பட்டுப் பேதைமையால் மீட்டும் மீட்டும் பிறவிக் கடலில் விழுந்து துன்புறுகின்றன. அதனின்றும் அவை கரையேறுவதற்குப் புணையாவன இறைவன் திருவடிகளே. "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" அவ்வுயிர்கள். மலங்களின் விடுபடுதலே வீடு.

மலங்கள்

மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்று. அவை உயிர்களைப்பற்றி இறைவனை அறிய விடாதபடி தடை செய்யும். அப் பாசத்தின் விடுபட்டு இறைவன் திருவடியடைதலே வீடுபேறு.

பிறப்பிற்கு முதற்காரணம் பேதைமை. அதுதான் சகச பந்தமான மூலமலம்; அதுவே ஆணவமலம் என்றும் சொல்லப்படும். ஆணவமலம் பேதைமையை விளைவிக்கும். வள்ளுவர் இதனை (மெய்யுணர்தல்—8),

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

எனக் கூறினார். நிலைபெற்றதாகிய செம்பொருளைக் காணுதலாவது உயிர் தன் பேதைமை கெட்டு மெய்ப்பொருளை, அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல்.

பிறப்பு அநாதியாய் வருவது. ஆதலின் உயிரால் எண்ணற்ற பிறவிகள் தோறும் ஈட்டப்பட்ட வினைகள் சார்ந்து அளவற்ற துன்பங்களை விளைவிக்கும். துன்பங்களுக்குச் சார்பாக இருப்பது வினையே. ஒருவன் அச்சார்புகெட மெய்ச்சார்பாகிய மெய்ப் பொருளை உணர்ந்து ஒழுக வல்லனாயின் அப்போது கரும மலமாகிய சார்பு துன்பஞ் செய்யாது கெடும். இதனையே வள்ளுவனார்,

(மெய்யுணர்தல்—9).

" சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின், மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் " என்றார்.

மாயா என்பது மாய்வதற்கும் ஆவதற்கும் இடமாக இருப்பது. மாய் + ஆ=மாயா. அதிலிருந்து தோன்றுவனவே தனு கரண புவன போகங்கள். அவைகளைப் பற்றியே உயிரினிடத்துக் காமம், வெகுளி, மயக்கம் இவை நிகழ்வன. ஆதலின் இவைகளை ஒழித்தலே மாயாமல வீடாம். நாயனாரும் மெய்யுணர்தலில் (10),

" காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக் கெடு நோய் " என அருளினார்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அழியாதன. ஆதலினாலேயே நாயனார், " பேதைமை நீங்க " என உரைத்தார். ' கெட ' என்றதும் நீங்க என்ற பொருளே தரும். இறைவன் மாயா மலத்திலிருந்து தனு கரண புவன போகங்களைப் படைக்கின்றான். அதனாலேயே அவன் ' உலகியற்றியான் ' எனப் பெயர் பெற்றான்.

இனி, உயிர்கள் மலத்தின் நீங்கி இறைவன் திருவடியடைதலாகிய வீடு பேற்று வழியினை ஆராய்வோம்.

வீடு பேறு

கடவுள் வாழ்த்தில் உயிர்கள் இருவினைப் பயனாக அடைகின்ற துன்பங்களின் நீங்கிப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்கு வழி 'இறைவன் மாணடி சேர்தல்' என்பது கூறப்பெறுகிறது. நாயனார் இதனை மிகவும் வற்புறுத்தி "மாணடி சேர்ந்தார்" (3), "அடி சேர்ந்தார்" (4), "தாள் சேர்ந்தார்" (7), (8), "அடி சேராதார்" (10) எனப் பல இடங்களிற் கூறியதோடு அடி சேர்தலாவது அவனது திருவடிகளை வணங்குதலே என, "தாளை வணங்காத்தலை", (9) "நற்றாள் தொழாஅ ரெனின்" (2) என்று இரண்டிடங்களில் நிலைநாட்டுகிறார். அதுதான் "இறைவன் பொருள்சேர் புகழ் புரிதல்" (4); அதுவே அவன் "பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல்" (5).

இந்நெறிக் கூடுதலை நாயனார் துறவற இயலில் விளங்க விரித்துரைத்துள்ளார். வீடு கருதி முயல்வானுக்கு அந்தக்கரணங்கள் தூயனவாதல் வேண்டும், அதற்கு அவன் அருளுடையனாய்ப் புலால் மறுத்து, உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை யாகிய தவமேற்கொண்டு கூடா ஒழுக்கத்தினையும் களவினையும் நீத்து, வாய்மை மேற்கொண்டு, சினம் கடிந்து, இன்னா செய்யாது தன் உயிர் நீப்பினும் தான் பிறிது இன் உயிர் நீக்கும் தீயவினையைச் செய்யாமையாகிய விரத ஒழுக்கத்தினில் வழுவாது நிற்கப் பழகி வெற்றி பெறுதல் வேண்டும்.. பின் அவன், "தோன்றுவன எல்லாம் மறையும் தன்மையன; ஆதலால் யாக்கையும் செல்வமும் நிலையா" எனத் தெளிந்து, ஐம்புலன்களை அடக்கி, யான் எனது என்னும் செருக்கறுத்து, பற்றற்றவன் பற்றினைப்பற்றி, ஞான தேசிகரை யடைந்து அவரருளால் உண்மையைக் கற்று, ஈண்டுச் செம்பொருள் கண்டு. ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களின் நீங்கி, இடையறாது மெய்யுணர்வின் நிலைத்து நின்று ஒரு காலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை நீக்குவானாயின் அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பை அடைந்து களிப்புக் கவற்சிகளும் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களும் இன்றி வீடுபெற்று நீடுவாழ்வான்.

"ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்."

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?" திருக்குறள்.

முடிவுரை

இதுகாறும் ஆராய்ந்த இதனால் அழியாப் பொருள்கள் மூன்றென்பதும், அவை உயிர்க்குயிராம் இறைவனும், உயிர்களும், மும்மலங்களுமாம் என்பதும், உயிர்கள் மும்மலங்களின் நீங்குவதற்கு இல்லாளுடன் இல்லறம் இனிது நடத்திப் பற்றற்று ஞானசிரியனை யடைந்து மெய்ப்பொருள் தெளிந்து துறவெய்தி அவாவறுத்தலே வழியாம் என்பதும் பெற்றாம்.

இங்ஙனமாக, உலகப் பொதுமறை ஆகிய திருக்குறளை ஆக்கி உலகினுக்குத் தந்தருளிச் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்து இன்புற்றுத் தாம் பிறந்து விளையாடிய இடத்திலேயே உலகம் வணங்கும் தெய்வமாகச் சிறப்பனைத்தும் பெற்று விளங்கும் திருவள்ளுவ நாயனார் திருவடிகள் வாழ்க, வாழ்க!

இனி பண்டைக் காலத்தில் திருமயிலாப்பூரின் ஒரு பகுதியாக இருந்த திருவல்லிக்கேணியிலுள்ள திருக்கோவில்களை வணங்குவோம்.

2. திருவல்லிக்கேணி

இங்கே நாம் பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலை முன்னரே கண்டு கும்பிட்டோம். சிறுசிறு சிவன் கோவில்களும், பெருமாள் கோவில்களும் பல திருவல்லிக்கேணியில் இருக்கின்றன. அவற்றுள் நாம் இங்கே முதன்மையாகக் கும்பிடவேண்டியவர் காலகாலகாமேசுவரரும், பாண்டுரங்கனும் ஆவர்.

காலகால காமேசுவரர் கோவில்

காலகாலன் சிவபெருமான்; தன்னுடைய அடியவராகிய மார்க்கண்ட முனிவரைச் சிவலிங்கத்தோடு இழுத்த காலனைத் தன் காலால் உதைத்துக் கொன்றான் சிவபெருமான். பின் பூமிதேவி பாரம் தாங்கமாட்டாமல் தவம் செய்யக் காலனைப் பெருமான் எழுப்பி

யருளினன். அதுபோலவே காமனுக்கும் காலன் ஆயினன் பெருமான். காமன்—காமத்தை உண்டுபண்ணுபவன். அவன் திருமாலுக்குத் திருமகன் ; ஆதலின் திருமாலைப் போலவே நீலநிறம் உடையவன் ; கட்டழகன்.

சூரபதுமனால் துன்புற்ற திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானிடத்திலே முருகப்பெருமானைப் பெற்றுச் சூரபதுமனை ஒழிக்கவேண்டும் என்று பெருமானை அடைந்தார்கள். அப்போது சிவபெருமான் கல்லால் மரத்தின் கீழே தெற்கே பார்க்க இருந்துகொண்டு சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்கள் நால்வருக்கும் ஞானம் உணர்த்திக் கொண்டிருந்தான். அப்போது திருமால் முதலியோர் சிவபெருமானுக்குக் காம உணர்ச்சியை எழுப்பவேண்டும் என்று கருதினர். அதற்கு ஏற்றவன் காமனே ; அவனே மன்மதன் எனவும் படுவான். மிக்க பேரழகு படைத்த அவன் மனைவி இரதி. ஆனால் ஆண்கள் உள்ளத்திலும் பெண்கள் உள்ளத்திலும் காமத்தை உண்டுபண்ணும் கடவுள் அவனே; அவனைத் தேவர்கள் அனைவரும் " சிவபெருமான் திருவுளத்திற் காம உணர்ச்சி எழுமாறு செய்க " என்று வேண்டி நின்றனர். காமன் தெற்கணாமூர்த்தியாக இருந்த சிவபெருமான் திருமுன்பு சென்று தன்னுடைய கரும்பு வில்லை வளைத்து மலர்களாகிய அம்புகளைத் தொடுத்தான். அவன் தொடுத்தன மலர்களே ; ஆனால் அவன் கெட்ட எண்ணத்தோடு அவைகளைச் சிவபெருமான் மேல் எவினான். அதனால் சிவபெருமான் சினம்கொண்டு தன் நெற்றிக் கண்ணைத் திறந்தான் ; உடனே காமன் எரிந்து சாம்பலானான். அவன் சாம்பலாகப் போனாலும் அவனே இன்றும் காமத்துக்குத் தலைவன் என்று கூறப்படுகிறான். அவன் எரிந்துபோனபடியால் அனங்கன், அங்கமில்லாதவன் என்ற பெயர் அவனுக்கு ஆயிற்று. அவன் மனைவி இரதிதேவி வந்து அழுது பெருமானை வேண்டிக்கொள்ள ' அவளுக்கு மட்டும் உருவம் உடையவனாகவும் மற்றவர்களுக்கு உருவமில்லாதவனாகவும் காமன் இருப்பான், என்று பெருமான் அவளுக்கு வரம் அருளினான். இங்ஙனம் காமனுக்குக் காலன் ஆகியமையாலே காமகாலன் என்னும் பெயரைப் பெற்றான் சிவபெருமான். பின் விண்ணவருக்கு இரங்கி ஆறுமுகத்துடன் நின்ற சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின; அவை ஆறும் கங்கை

யாற்றில் அங்கியங்கடவுளாற் சேர்க்கப் பெற்றுச் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு பிள்ளைகள் ஆயின. அந்த ஆறு பிள்ளைகளையும் பார்வதிதேவியார் அணைத்தபோது ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் ஓர் உடலும் கொண்டதொரு பிள்ளையாகி ஆறுமுகப்பெருமான் காட்சியருளினான். இங்ஙனமாகக் காமனுக்குக் காலனாகிய பெருமான் ஆறுமுகக் கடவுளைத் தோற்றுவித்த தந்தையுமாயினான். தேவர்கள் எண்ணம் ஈடேறியது.

காமகாலன் காமேசுரனாகவும் இருக்கிறான். இயல்பாகவே காமத்திலிருந்து விடுபட்ட புகழுடையவன் சிவபெருமான். வேள் என்ற சொல் விருப்பம் என்று பொருள்படும் ; அதனால் விருப்பத்தைச் செய்கின்ற மன்மதன் வேள் என்று பெயர் பெற்றான். அவன் கருவேள், அதாவது கரியநிறமாக இருந்து பார்ப்பவர் நெஞ்சிலே வேட்கையை உண்டு பண்ணுபவன்; அவனை அழித்தபோது தோன்றினான் செவ்வேள். சிவந்த நிறத்தோடு தோன்றித் தன்னை பார்ப்பவர் அனைவர் உள்ளத்திலும் முத்தி வேட்கையை உண்டுபண்ணுகிறான் செவ்வேள். செவ்வேள் சிவபெருமானுடைய மற்றொரு தோற்றந்தானே ! அதுபோலவேதான் வேட்கையிலிருந்து இயல்பாகவே நீங்கிய சிவபெருமான் பார்த்தவர் நெஞ்சுள்ளே தன்னைச் சேரவேண்டும் என்ற காமத்தை உண்டுபண்ணும் பெருங் கருணைத்தடங்கடல் ; ஆதலின் காமேசுவரன் என்னும் பெயரைப் பெற்றான்.

காலகால காமேசுவரன் திருக்கோவில் இராசா அனுமந்தலாலா தெருவிலிருக்கிறது. காசியிலிருந்து கொண்டுவரப்பெற்று நிலைபெறுத்தப்பெற்ற படிகலிங்கமே இங்குள்ள சிவலிங்கம். அம்மை காமகால காமேசுவரி, அவள் சிவகாமி, சிவபெருமானையே காமித்திருப்பவர். பிள்ளையாரும் முருகப்பெருமானும் இக்கோயிலில் இருக்கின்றனர்.

அம்மை வடிவம் திரிபங்கி வடிவம் ; அம்மையின் தலை மேற்கே சரிந்திருக்கிறது ; இடுப்பு கிழக்கே சரிந்திருக்கிறது; வலதுகால் மேற்கே சரிந்திருக்கிறது. இங்ஙனம் மூன்று விதமாகச் சாய்ந்திருக்கும் வடிவமே திரிபங்கி வடிவமாம். இங்கே திருநாள் இல்லை ; அதனால் எழுந்தருளி திருமேனிகளும் இல்லை. இரண்டு காலங்களில் மட்டும் பூசனை நடைபெறுகிறது.

பாண்டுரங்கன் கோவில்

இத்திருக்கோவில் வேங்கடாசல செட்டி தெருவிலிருக்கிறது. கோபாலகிருட்டிணன்தான் பாண்டுரங்கன். வடநாட்டிலுள்ள பண்டரி புரத்தில் பாண்டுரங்கன் வழிபாடு மிக்க சிறப்புடன் கொண்டாடப்படு கிறது. நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் அங்கே சென்று வழிபாடு செய்து திரும்புகின்றனர்கள். அக்கோவிலை நினைந்து அன்பர் ஒருவரால் இங்கே கட்டப்பட்ட கோவிலே இது.

இத்திருக்கோவிலில் தன் இடதுபுறம் உருக்குமிணிதேவியுடன் மூலவர் பாண்டுரங்கன் இருக்கிறான். எழுந்தருள் திருவுருவங்கள் (உற்சவ மூர்த்திகள்) பின் வருபவர்களுக்கு உள்ளன :—பாண்டு ரங்கன், உருக்குமிணி, சத்தியபாமை, இராமன், சீதை, இலக்குவன், அனுமார்.

கருடனோடு பிள்ளையாரும் இக்கோவிலில் உள்ளனர். அத்திரி முனிவருக்கு அனசூயையிடத்துத் திருமால் அம்சமாகப் பிறந்த தத்தாத்திரேயருடைய சன்னதியும் இங்கே இருக்கிறது.

இனி, திருவல்லிக்கேணியை அடுத்துள்ள புதுப்பாக்கம், திருவேட்டீ சுவரன்பேட்டை, சேப்பாக்கம், சாம்பசார் ஆகிய இடங் களிலுள்ள கோவில்களையும் மயிலாப்பூரை ஒட்டியுள்ள இராயப் பேட்டை, தேனாம்பேட்டை, மந்தைவெளிப்பாக்கம், அடையாறு ஆகிய பேட்டைகளிலுள்ள கோவில்களையும் சென்று வழிபடுவோம்.

3. திருவேட்டீசுவரன் பேட்டை

திருவேட்டீசுவரன் கோவில்

திருவல்லிக்கேணியின் ஒரு பகுதியே திருவேட்டீசுவரன் பேட்டை. இப்பேட்டை திருவேட்டீசுரன் கோவிலை ஒட்டி எழுந்தபடியால் அக்கோ விலின் பெயரைப் பெற்று விளங்கு கின்றது.

சேப்பாக்கத்தில் அரண்மனையிலிருந்த ஆர்க்காட்டு நவாபு ஊர் உண்டாக்கிக் காட்டை அழிக்கும்போது அழித்த பணியாளருள் ஒருவன் கானே முளைத்தெழுந்த இச் சிவலிங்கத்தின்மேல் வெட்டிவிட்டான்.

சுயம்புலிங்கப்பெருமான் உச்சியின்மேல் அவ்வெட்டு இன்றும் காணப் பெறுகிறது. அதனால் பெருமான் வெட்டீசுவரன் என்னப் பெயர் பெற்றான். இதனை அறியாதார் சிலர் வேடனாக வந்த அருச்சுன னுடைய ஈசன் வேட்டீசுவரன் (வேடன்+ஈசுவரன்) என்று கூறு வார்கள்.

தன்னை அறியாது வெட்டுச் சிவலிங்கப் பெருமான் மேல் விழுந்து விட்டதைக் கண்ட அப் பணியாளன் ஓடிச்சென்று அங்கே காடு வெட் டினைப் பார்வையிட வந்திருந்த சமுத்திர முதலியாரிடம் தெரிவித் தான். பூவிருந்தவல்லியாராகிய முதலியார் நவாபுக்கு மந்திரி. அவர் ஓடோடியும் வந்து வெட்டுப்பட்ட சிவலிங்கப் பெருமானைக் கண்டு அலறி அழுதும் ஆனந்தக் கூத்தாடியும் விழுந்து விழுந்து கும்பிட்டார். அரசர் நவாபுவிடம் செய்தியை உரைத்தார். அரசர் நவாபும் மந்திரி வேண்டுதலுக்குச் செவிசாய்த்தார். இத்திருக் கோவில் சமுத்திரத்தை ஒட்டிய அவ்விடத்தில் சமுத்திர முதலியாரால் செங்கற்களாற் கட்டப்பெற்றது.

சிவலிங்கப் பெருமான் பேரழகு மிக்க சிறிய திருமேனியுடையவன். அவனைப் போலவே அம்மை செண்பகாம்பாளும் மிகச் சிறிய பேரழகுத் திருமேனி படைத்தவள். செண்பக மரத்தடியிலே தோன்றியமை யால் அம்மை செண்பகாம்பாள் என்று பெயர் பெற்றாள். பெருமான் கிழக்கே பார்க்கவும் அம்மை தெற்கே பார்க்கவும் எழுந்தருளியிருக் கின்றனர். மேலை உட்சுற்றில் தெற்கிலிருந்து வடக்காகப் பின்வரும் வரிசையில் பின்வரும் மூர்த்தங்கள் எழுந்தருளியுள்ளன; 1. பிள்ளை யார், 2. வீரபத்திரர், 3. பாலசுப்பிரமணியர், 4. சமையகுரவர் நால்வர், 5. சேக்கிழார், 6. பரவையாரும், சங்கிலியாரும் இருபுறமும் இருக்கச் சுந்தரமூர்த்தி நாயனார், 7. சந்தானாசிரியர் நால்வர், 8. முத்துக்குமார சாமி, 9. திருமகள், கலைமகள், விசுவேசர், பரமேசர்.

வடக்கு உட்சுற்றின் மேற்கோரத்தில் தெற்கே பார்க்க நீலகண்ட சிவாசாரியாரும் கீழோரத்தில் வயிரவரும்இருக்கின்றனர். கோவில் வாசலில் கொடிமரம், பலிபீடம், இடபம் இவை இருக் கின்றனர்.

இத் திருக்கோவிலைச் சூழ வடபுறம் திருக்குளமும், மேல்புறம் திருநந்தவனமும் உள. வெளிச் சுற்றைச் சூழ நான்கு புறமும் வலுவான திருமதில் அமைந்திருக்கிறது. அதில் தென்மேற்கு

மூலையில் விசாலாட்சியம்மையுடன் காசிவிசுவநாதர் இருக்கின்றார். வடமேற்கு மூலையில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவயானை யுடன் அமர்ந்திருக்கின்றான். இவ்விடத்தில் தெற்கே பார்க்க இராம லிங்க அடிகளார் திருவுருவம் இருக்கிறது. வடகிழக்கு மூலையில் அழகான மண்டபம் அமைந்துள்ளது. தலைவாசலுக்குத் தென் புறம் அதிகார நந்தியும் வடபுறம் வயிரவரும் அமர்ந்துள்ளனர். "உள்ளே ஒரு வயிரவர் இருக்க இந்த வெளி வயிரவருக்கு இடம் இல்லையே!" என்றால் வெளிச் சுற்றும் திருமதிலும் பின்னால் தோன்றியன என்பதை இந்நிலை வலியுறுத்துகின்றது. உட்கோவிலி னுள் வடக்குச் சுற்றில் அறுபத்துமூன்று நாயன்மாரும், துர்க்கை யம்மையும் இருக்கின்றனர். அங்கே பள்ளியறையும் இருக்கின்றது.

இத் திருக்கோவில் ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் செங்கற் பணியாகக் கட்டி முடிக்கப்பெற்றது. இக்கோவிலுக்குத் திருவேட்டீசு வரன்பேட்டை, புதுப்பாக்கம், முகலிவாக்கம் ஆகிய மூன்றூர்களையும் அரசர் உரிமையாக்கினர். முகலிவாக்கம் சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ளது.

4. சேப்பாக்கம்

இது திருவல்லிக்கேணியின் வடகிழக்கு ஓரமாக இருக்கும் கடற் கரைப் பகுதி. இங்கேதான் கலச மகால் நவாபுவின் அரண்மனை கடற்கரையிலே இருக்கிறது. அதில் இப்போது வருவாய்த்துறை (Board of Revenue) அலுவலகம், கூட்டுறவுத்துறை இயக்குநர் அலுவலகம் முதலிய பல அலுவலகங்கள் அமைந்திருக்கின்றன.

அரசடிக் கற்பக விநாயகர் கோவில்

இப் பகுதியில் ஓர் அரசமரத்தடியில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. கிழக்கே பார்க்கப் பிள்ளையார் இருக்கிறார். பிள்ளையார் சதுர்த்தி தொடங்கி இவருக்குப் பத்துநாள் விழாக் கொண்டாடப் பெறுகிறது. இவர் திருக்கோவிலினுள்ளே முருகப் பெருமான் வள்ளி தேவயானையுடன் எழுந்தருளி யிருக்கின்றான்.

கேட்டதெல்லாம் தரும் கற்பக மரம்போல இப் பிள்ளையார் தம்மை வழிபடுகிறவர்களுக்குக் கேட்ட வரமெல்லாம் விரைந்து தந்தருளும் அருள் வரதர்.

5. புதுப்பாக்கம்

இது புதிதாக உண்டான பாக்கம். பாக்கம் என்பது ஊர். ஊர், பேட்டை, நகர், பாக்கம், பட்டு என்பன ஒரு பொருட் சொற்கள். புதுப்பாக்கம் திருவேட்டீசுவரன் பேட்டையையடுத்த ஊர்.

செல்லப்பிள்ளையார்

இங்கே வடக்கே பார்க்கச் செல்லப் பிள்ளையார் எழுந்தருளி யிருக்கிறார். அவர் பெயரால் அவர் இருக்கும் பெரிய தெரு அமைந்திருக்கிறது.

6. சாம்பசார்

புதுப்பாக்கத்தை ஒட்டித் தென்னண்டை இருக்கிறது சாம்பசார். இதில் சுந்தர விநாயகர், பிரசன்ன விநாயகர், எல்லியம்மன் ஆகிய இவர்களுடைய சிறு கோவில்கள் இருக்கின்றன.

சுப்பிரமணியசாமி கோவில்

சாம்பசாரின் தெற்கே இருக்கிறது நெசவாளர் தெரு. அவர்கள் செங்குந்த மரபினைச் சேர்ந்தவர்கள்.

முருகப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கிறான். பெருமானுக்கு வலது புறம் வள்ளியம்மையும் இடது புறம் தேவயானை யம்மையும் கிழக்கு நோக்கிக் கோவில்கொண்டிருக் கின்றனர். பெருமான் ஒரு கையில் வச்சிரப் படையும் மற்றொரு கையில் அபய முத்திரையும் கொண்டிருக்கின்றான்.

உட்சுற்று வருவோம். தெற்குச் சுற்றின் கீழோரம் கற்பகப் பிள்ளையார் இருக்கின்றார். அதனை ஒட்டி மேல்புறம் உள்ள அறையில் இளமுருகன், வீரவாகு, பிள்ளையார், அத்திரதேவர் ஆகிய இவர்களுடைய எழுந்தருள் திருமேனிகள் உள்ளன. இதற்கு நேர் வடபுறம் தெற்கே பார்க்க வள்ளி தேவயானையுடன் முருகப்பெருமான் எழுந்தருள் திருமேனியில் இருக்கின்றனன்,

இத்திருக்கோவில் தோன்றி நூறாண்டுகள் இருக்கும். மூன்றாண்டுகளுக்கு முன் இது பலவாறு அழகு செய்யப்பெற்றுள்ளது. இங்கே கந்தர் சட்டி விழா ஐப்பசி மாதம் சிறப்பாக நடைபெறுகிறது.

இனி, மயிலாப்பூரை ஒட்டியுள்ள பேட்டைகளாகிய இராயப்பேட்டை, தேனும்பேட்டை, மந்தைவெளிப்பாக்கம் என்னும் இவைகளிலுள்ள திருக்கோவில்களை வழிபடுவோம்.

7. இராயப்பேட்டை

புதுப்பேட்டைத் தோட்டத் தெருப் பிரசன்ன விநாயகர் கோவிலைத் தவிர இராயப்பேட்டையில் உள்ள கோவில்கள் அனைத்தும் வருவாய் கொண்டு பார்க்கும்போது சிறு சிறு கோவில்களே; பிள்ளையார் கோவில்கள் பல; அம்மன் கோவில்கள் சில.

கோபாலபுரம் வேணுகோபாலசாமி கோவிலும், முத்து முதலி தெரு சீனிவாசப் பெருமாள் கோவிலும் கூட எளிய கோவில்களே. வேணு—புல்லாங்குழல்; கோபாலன்—பசுக்களை மேய்ப்பவன்; புல்லாங் குழல் ஊதும் நேரத்தில் கண்ணன் வேணுகோபாலன்.

8. தேனும்பேட்டை

இதில் பாலசுப்பிரமணியர் கோவில், ஆலையம்மன் கோவில், இராமலிங்கேசுவரர் என்ற சிவன் கோவில் இம் மூன்றும் ஒரு தொகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. திருமால் கோவிலாகக் கிருட்டிண சாமிப் பெருமாள் கோவில் இப் பேட்டையில் இருக்கிறது.

சிவன் கோவிலும், பெருமாள் கோவிலும், முருகன் கோவிலும், அம்மன் கோவிலும் ஒவ்வொரு பேட்டையிலும் அமைந்திருப்பது தமிழ் மக்கள் சமையப் பொறுமையுடன் வழிபாடு செய்து வருகிறவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகின்றது.

இராவணனைக் கொன்ற பாவம் தீர இராமபிரான் பூசித்த சிவலிங்கம் இராமலிங்கேசுவரர்; இராமீச்சுவரக் கோவிலை நினைந்து இங்கே தோன்றிய கோவிலே இது. கிருட்டிணசாமிப் பெருமாள் உருக்குமினி சத்தியபாமாவுடன் கூடிய கண்ணபிரான்.

9. கோட்டூர்

வேங்கடேசப் பெருமான் கோவில்

மயிலாப்பூருக்கு அடுத்த தென்பால் வெட்டவெளியாக இருந்த இடம் இப்போது மந்தைவெளிப்பாக்கம் என்ற பெயருடன் பெரிய நகரமாக இருக்கிறது. அதையடுத்தது அடையாறு. அதற்கும் மேற்கே உள்ளது கோட்டூர். அதிலுள்ள மாரி செட்டி தெருவில் வேங்கடேசப் பெருமான் கோவில் திகழ்கின்றது. மக்கள் கூடிச் சென்று பெருமாளைக் கும்பிட்டு நலம் பல பெற்று வருகின்றார்கள்.

10. அடையாறு

மலையிலே தோன்றுமனும் இடையிலே தோன்றிக் கடலை அடையாமலும் உள்ள சிற்றாறுகள் பல. சென்னையை இருகூறாகப் பிரிப்பதும் அரசுத் தலைமை அலுவலகமாம் கோட்டையருகிற் கடலைச் சேர்வதுமாகிய ஆறு கூவத்தில் தோன்றிக் கூவம் என்று பெயர் பெறுகிறதென்று முன்னே சொன்னோம். அடையாறு என்பது திருஞானசம்பந்தப் பெருமான் மயிலாப்பூரிலே எலும்பைப் பெண்ணுருவாக்கித் திருவான்மியூருக்குப் போகும் வழியில் சிறிது நேரம் அடியார்களுடன் தங்கி இளைப்பாறிய ஆறு ஆதலின் அடியார் ஆறு என்று பெயர் பெற்று அடையாறு என்று இப்போது பெயர் மருவி வழங்குகின்றது, என்பர் ஆராய்ச்சி அறிஞர் சிலர். அக்காலத்தில் இது கடற்காடாக இருந்தது. மந்தைவெளிப் பாக்கத்துக்கு அடுத்த தென்பால் இருந்த இக்காடு இப்போது மாடமாளிகைகளுடனே பொலிவுற்று விளங்குகின்றது.

ஆற்றின் வடகரையில் பச்சை வழிச்சாலை (Green Ways Road) என்பது தியாகராய நகரிலிருந்து கடற்கரை வரை வருகிறது. அதன் தென்புறம் ஆற்றங்கரையிலே பெரிய பெரிய மாளிகைகள் இருக்கின்றன. அடையாற்றைக் கடப்பதற்கு மயிலாப்பூரிலிருந்து வரும் சாலையிலிருந்து தென்கரை வரை ஓர் அருமையான வண்டிப்பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தைத் தாண்டியவுடன் கீழ்புறம் தென்

கரையில் இருப்பது பிரமஞான சங்கம் (Theosophical Society); இது பல சமைய ஒருமைப்பாட்டுச் சங்கம்; உலகம் எங்கணும் இதன் கிளைகள் இருக்கின்றன.

இந்தச் சாலை நெடுகச் சைதாப்பேட்டைக்குப் போகிறது. சைதாப்பேட்டை செல்லும் இச்சாலைக்கு வடபுறம் இருப்பது 'காந்திநகர்' தென்புறம் இருப்பது 'கத்தூரிபாய் நகர்'. இவைகள் இரண்டும் மிக்க அண்மையில் தோன்றிய நகரங்களே. இந்த நகரங்கள் அடங்கிய அடையாற்றில் சிறு சிறு பிள்ளையார், அம்மன் கோவில்கள் இருக்கின்றன. அவற்றுள் சிறிது பெரியதாக விளங்குவது அண்மையில் அமைக்கப்பெற்ற பத்மநாபசாமி கோவில். இது சில ஆண்டுகளில் மிகப் பெரியதாகிப் பல்லாயிர மக்களுக்குப் பயன்பெறும்.

11. சைதாப்பேட்டை

அடையாற்றிலிருந்து வடமேற்காக இருக்கிறது சைதாப்பேட்டை; வரும் வழியில் மேல் புறமாக இருக்கிறது ஆளுநர் (Governor) வாழும் கிண்டி. சைதாப்பேட்டையில் ஆசிரியப் பயிற்சி கல்லூரி இருக்கிறது. சைதாப்பேட்டைக்குத் தென்புறமாக அடையாறு ஓடி வருகிறது. அதன் மேல் நல்ல வண்டிப்பாலம் இருக்கிறது. அதற்குச் சிறிது மேல்புறம் புகைவண்டிப் பாலம் அமைந்திருக்கிறது. சைதாப்பேட்டை செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு வட்டம். தனி நகராட்சியாக இது இருபத்தைந்து ஆண்டுகளின் முன் இருந்து வந்தது. பின்னரே சென்னைமா நகராட்சியில் சேர்க்கப்பெற்றதோடு சென்னை மாவட்டத்திலும் ஒன்றுயிற்று.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் ஆங்கிலேயர் இங்கே நெசவாளர்களைக் கொண்டுவந்து குடியேற்றினுர்கள்; அவர்களுக்கு வேண்டும் வசதிகளையும் செய்து கொடுத்தனர். அங்ஙனம் குடியேறிய மக்கள் தெய்வ நம்பிக்கை மிகுதியும் உடையவர்கள். ஆனதால் பிள்ளையார் கோவில், சிவன் கோவில், பெருமாள் கோவில், அம்மன் கோவில்களைத் தங்கள் பேட்டையிற் கட்டிக்கொண்டு வழிபாடு செய்து இம்மை மறுமை இன்பங்களை அடைந்து வந்தார்கள்; அத்திருக்கோவில்களே இன்று வாழும் மக்களுக்கும் திருவருள் பாலிக்கின்றன.

"சதயூமன்னன் ஆண்ட பேட்டை சதயூப்பேட்டை; அது சைதாப்பேட்டை" என்று கூறினோம்.

"சைதாப்பேட்டை என்பது நவாபு சையது இருந்த பாத்து என்று கூறப்படுகிறது. சையது பாத்து என்பது சைதாபாத்து; அது சைதாப்பேட்டை என மாறிவிட்டது என்பர் சிலர். இது புகை வண்டிச்சாலைக்கு மேற்கேயிருக்கிறது. கிழக்கேயிருப்பது பெரிய பேட்டை என்று கூறப் பெறுகிறது. இவைகளிலுள்ள திருக்கோவில்களைக் காணுவோம்.

காரணீசுவரர்

புகைவண்டி நிலையத்தின் அருகே வடமேற்கில் இருக்கிறது காரணீசுவரர் திருக்கோவில். இங்கே பூசனை நடக்கும் ஒலி கூடப் புகைவண்டி நிலையத்திற்கு நன்றாகக் கேட்கிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இடியும் மின்னலும் ஏற்படுகிறது; அப்போது கோவில் ஒளிமயமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இங்ஙனம் பெருமான் தன் பெருமையை வெளிப்படுத்தும் காரணத்தால் இவர் காரணீசுவரர் என்று பெயர் பெற்றார் என்று இவ்வூரார் கூறுகின்றார்கள். எல்லாப் பொருள்களுக்கும் ஆதிகாரண மூர்த்தி இவர் ஆனதால் காரணீசுவரர் என்ற பெயர் இவருக்கு வழங்கப் பெறுகிறது. பெருமான் உளிப்பட்ட கிரியாமூர்த்தியே.

அடிகோலப் பெற்ற கோபுரத்துடன் விளங்குவது தெற்குத் திருவாசல். அதற்கு நேர் எதிரே தெற்கே பார்க்க விளங்குகின்றார் கூத்துடைப் பெருமான். காரணீசுரர் கிழக்கே பார்க்கச் சிவலிங்க வடிவமாக எழுந்தருளியிருக்கிறார். எதிரே இடபம், பலிபீடம், கொடி மரம் இருக்கின்றன.

அம்மை சுவர்ணாம்பிகை. இங்கே சித்திரை மாதம் சித்திரை நாளில் பத்தாம் நாள் தீர்த்தவாரி நடைபெறும் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. திருக்கோவிலுக்கு வடபுறம் தெப்பக்குளம் இருக்கிறது. அதில் ஆண்டுதோறும் தெப்பவிழா நடைபெறும். இப்பகுதி மாவனம் என்று பெயர் பெறும். மாமரங்கள் நெருங்கியிருந்தமையின் இது இப்பெயர் பெற்றது. இங்கே சிவசைதன்னிய முனிவரும் ஆதொண்டச் சக்கரவர்த்தியும் வழிபட்டுவந்தார்கள். இக் கோவிலைப் பேணுபவர்கள் திருக்காரணி செங்குந்த சபையார்.

சிவசுப்பிரமணியசாமி

இது மேற்கே சுப்பிரமணிய முதலி தெருவில் இருக்கிறது. பெருமான் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றான். வடக்கே பார்க்க இருக்கிறது குடைவரு வாசல்.

மாசி மகத்தில் பெரிய திருவிழா இக் கோவிலில் நடைபெறுகிறது. இது பதின்மூன்று நாள் நடைபெறும். கந்தர்சட்டித் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடக்கிறது.

பிரசன்ன வேங்கடேச நரசிங்கப்பெருமாள்

இத் திருக்கோவில் இருக்கும் இடம் பெருமாள் கோவில் தெரு. இது ஆதியில் இராமன் கோவிலாக இருந்தது. இப்போது தனிக் கோவிலாக இருந்துவரும் அனுமார் கோவில் இதனுடன் இணைந்திருந்தது. சிறிய திருவடியாகிய அனுமாரைப் பிரித்துவிட்டு இராமருக்குப் பதிலாக நரசிங்கத்தை அமைத்துப் பிரசன்ன வேங்கடேச நரசிங்கப் பெருமாள் என்ற திருமேனியை நிலைபெறுத்தி விட்டார்கள்.

நரசிங்கப் பெருமாளுக்கு வலது புறம் அலமேலு மங்கைத் தாயாரும், இடதுபுறம் ஆண்டாளும் எழுந்தருளியுள்ளார்கள். இங்கே ஆண்டுக்கொருமுறை திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் எழுந்தருளி வருகின்றார். இக்கோவிலில் மாசி மாதம் திருவோணத்தில் பத்தாம் நாள் தீர்த்தவாரியோடு முடிவுறும் பெரிய திருவிழா நடைபெறுகின்றது.

சவுந்தரேசர் கோவில்

இது பிராமணத் தெருவில் இருக்கிறது. இதுதான் சைதாப்பேட்டையில் மிகப் பழமையான கோவில் என்பது புலனாகின்றது.

திருவாசல் தெற்கே பார்க்க உள்ளது. அதற்கு நேரே இருக்கிறாள் அம்மை திரிபுரசுந்தரி; சவுந்தரேசப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளியுள்ளான். பெருமானுக்குப் பின்னால் மேற்கே தெருவைப் பார்க்க வரசித்தி விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார்.

இது வருவாய் மிகுதியாக இல்லாத கோவில்; அதனால் இங்கே திருவிழா இல்லை.

சைதாப்பேட்டை—பெரியபேட்டை

சைதாப்பேட்டையில் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே உள்ள பகுதி பெரியபேட்டை என்று கூறினோம். இப்பகுதியிலிருக்கும் திருக் கோவில்களைக் கும்பிடுவோம்.

சுப்பிரமணியசாமி கோவில்

இது வடக்கே பார்த்த திருவாசலை உடையது. ஆனால் முருகப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றனன்; வலதுபுறம் வள்ளியம்மையும் இடதுபுறம் தேவயானையும் தனிக்கோவில்களில் இருக்கின்றனர். வடக்கு உட்சுற்றில் தெற்கே பார்க்க வள்ளி தேவயானையுடன் ஆறுமுகப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றனன். தெற்கு உட்சுற்றில் வடக்கே பார்க்க எழுந்தருள் திருமேனிகள் இருக்கின்றன.

முருகப் பெருமானுக்கு முன்னால் மயிலும் கொடியும் பலிபீடமும் இருக்கின்றன. கோவிலுக்கு வெளியே தென்புறம் பழனியாண்டவரும் வடபுறம் அருணகிரியாரும் இருக்கின்றனர்.

வெளிச் சுற்றில் தென்மேற்குப் பகுதியில் உள்ளது திருமண மண்டபம். அதன் வடகிழக்கே உள்ள சிறு கோவிலில் காசிவிசுவ நாதரும் விசாலாட்சியும் இருக்கின்றனர். வடகிழக்கு மூலையில் அலங்கார மண்டபம் இருக்கிறது.

மாசி மகத்தில் பெரிய திருவிழா பதின்மூன்று நாள் நடக்கிறது; கந்தசட்டித் திருநாளும் உண்டு.

12. மேட்டுப்பாளையம்

சைதாப்பேட்டையில் பிரசன்ன வேங்கட நரசிங்கப் பெருமாளுடைய கோவில் ஆதியில் இராமர் கோவில் என்று சொன்னோம். இராமபிரான் இரகுநாதன் அல்லனா? இரகுநாதன் எழுந்தருளியிருந்த ஊர் இரகுநாதபுரம் என்று பெயர் பெற்றிருந்தது. இதற்கு வடக்கே இருக்கிறது மேட்டுப்பாளையம். மேடான இடம் ஆனதால் இப்பகுதி மேட்டுப்பாளையம் எனப் பெயர் பெற்றது. இதில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார் பிரசன்னவேங்கடேசப் பெருமாள்.

உடையவர், பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோவில்

பெருமாள் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அம்மை அலர்மேல் மங்கைத் தாயார் இருந்த கோலத்திலும், ஆண்டாள் நின்ற கோலத்திலும் காட்சியருள்கின்றனர்.

வடகிழக்குப் பகுதியில் உள்ள மண்டபத்தில் திருமங்கை ஆழ்வார், திருக்கச்சி நம்பி, சேனை முதலியார், நம்மாழ்வார், உடையவர், மணவாளமாமுனி ஆகியோர் எழுந்தருளியிருக்கின்றனர்.

இங்கே மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியன்று கருடசேவை உண்டு.

13. மாம்பலம் என்ற மாபள்ளம்

மேட்டுப்பாளையத்திற்கு அடுத்துக் கீழ்புறம் இருப்பது மாபள்ளம். மாபள்ளம் மிகப் பள்ளமான குளங்களோடு இருந்தது. அது மாபல்லம் ஆகி இப்போது மாம்பலமாகி மருவி வழங்குகின்றது. மாபள்ளம்—பெரியபள்ளம், இது ஆதியிற் செட்டிக்குப்பம் என்று வழங்கிவந்தது.

கோதண்ட இராமசாமி கோவில்

இது அறுபது ஆண்டுகளின் முன்பு கட்டப் பெற்ற புதுக் கோவில். ஃவ்காயல குப்பையச் செட்டி இதனை 30—4—1927-ல் கட்டி முடித்தார். புதுக் கோவில் கட்டுவதற்கு முன் இது பட்டாபிராமர் கோவில் என்று பெயர் பெற்றிருந்தது. அப்போது கோவிலில் இராமன், சீதை, பரதன், சத்துருக்கன், இலக்குவன், அனுமார் இவர்கள் மூலவர். இப்போதிருக்கும் கோதண்டராமரே அப்போதும் எழுந்தருள் மூர்த்தியாக இருந்தார்.

கோவிலில் கருவறையில் கோதண்டராமரும் வலதுபுறம் சீதையும் இடதுபுறம் இலக்குவனும் கிழக்கே பார்க்க இருக்கின்றனர். கருவறையின் தென்புறம் அரங்கநாதரும் வடபுறம் யோக நரசிங்கரும் உளர். கருவறையை அடுத்தது அந்தராள மண்டபம். அதற்கு முன் இருப்பது

மாமண்டபம். அதில் வடபுறம் மேற்கோரம் பள்ளியறை இருக்கிறது. கீழ்புறம் இராமானுசர், நம்மாழ்வார், கலியன், உடையவர், மணவாளமாமுனி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். மாமண்டபத்தைத் தாண்டிப் பெருமாளுக்கு எதிரே கருடனும், கொடிமரமும், பலிபீடமும் உள்ளன. இவைகளுக்கு நேர் தென்புறம் அரங்கநாயகித் தாயாரும் வட புறம் ஆண்டாளும், கோவில் திருமுன்வாசல் உட்புறம் தென்சார்பில் ஆஞ்சனேயரும் இருக்கின்றனர்.

கோவில் உட்சுற்று வடகிழக்கு மூலையில் வேள்விச் சாலையும் திருமண மண்டபமும் இருக்கின்றன.

கோவிலின் தென்புறம் நாற்புறமும் அழகான படித்துறையினை உடைய திருக்குளம் இருக்கிறது. அதன் பெயர் அனுமதீர்த்தம். அது வெட்டிக் கட்டி முடிக்கப்பெற்றது. சென்ற கீலக ஆண்டு தை மாதம் பதினைந்தாம் நாள் வியாழக் கிழமை அசுபதியன்று.

கோவிலில் தென்கலையார் ஆதிக்கத்தில் வைகானச ஆகமப்படி பூசனை நடைபெறுகிறது. பஞ்சபேரருக்கும் ஆராதனை நடக்கின்றது. பஞ்சபேரர் ஆவார்—

1. கௌதிகர்—பட்டாபிராமர்.
2. திருவபேரர்—கோதண்டராமர்.
3. உற்சவபேரர்—எழுந்தருள் மூர்த்தி
4. சயனபேரர்.
5. பலிபேரர்—செல்வர்.

சாந்திரமான வைசாகச் சுவாதியில் பத்தாம் திருநாள் தீர்த்தம் உடைய பத்துநாள் பெருவிழா நடைபெறுகிறது; எழாம் திருநாளன்று திருத்தேர்.

தட்சிண பத்திராசலம்—மாபில சேத்திரம் இது என்று இதனைக் கூறுகின்றனர். மா—சிதேவி, பில—வாழ்கின்ற, சேத்திரம்—தலம். சிதேவி வாழ்கின்ற தலம். மாபிலம் என்பது மாம்பலம் ஆயிற்று என்று இப்பக்கத்தார் கூறுகின்றனர். பிலம் என்பது பாதலம் என்று பொருள் தருகிறது. அது கீழ்பூமி, கீழ் அறை. ஆதலின் மாபள்ளம் என்பதனை இக் கூற்றும் உடன்படுகின்றமை காண்க.

காசிவிசுவநாதர் கோவில்

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சிவன் கோவில் இது. காசி விசுவநாதர் பெயரை இங்கு அமைந்த சிவலிங்கப் பெருமானுக்கு இட்டு வழங்கி வருகின்றனர். இக் கோவில் குப்பையாச் செட்டி தெருவில் மேற்கு வரிசையில் கிழக்கே பார்க்க இருக்கிறது. கிழக்கே பார்த்து எழுந்தருளியிருக்கின்றார் சிவலிங்கப்பெருமான். அம்மை விசாலாட்சி தெற்கே பார்க்க அமர்ந்திருக்கின்றாள். அம்மைக்கு முன் தெற்கு வாசல் இருக்கிறது. அதற்கு முன்னால் இருக்கும் தெரு ஈசுவரன் கோவில் தெரு என்று பெயர் பெறுகிறது.

கோவிலின் வெளியே வெளிச்சுற்றிற் பெருமானுக்கு எதிரே நந்தியும் பலி பீடமும் கொடிமரமும் உள.

இக்கோவிலார் இதனை மாபில்வசேத்திரம் என்று கூறுகின்றார்கள். பில்வம்—வில்வமரம். மாபில்வம் என்பது திரிந்து மாபலம் ஆயிற்று என்பது இவர்கள் கூற்று.

மாபாடியக்காரர் ஆதிசென்னகேசவப் பெருமாள் கோவில்

இத்திருக் கோவில் 'உடையவர் கோவில்' என்று வழங்கி வருகிறது. உடையவர்—இராமானுசர். இது தென்கலையார் ஆதிக்கத்தில் உள்ளது.

ஆதிகேசவப் பெருமாள் கருவறையில் வலதுபுறம் சீதேவியும், இடது புறம் பூதேவியும் இருக்க மூலவராக எழுந்தருளியிருக்கின்றார். அவர்களுக்கு முன் அவர்களுடைய எழுந்தருள் திருமேனிகள் உள்ளன. கோவிலுக்கு வெளியே புறச்சுற்றில் தென்புறம் செங்கமல வல்லித் தாயாரும் வடபுறம் ஆண்டாளம்மையும் தனிக் கோவில் களில் காட்சியருள்கின்றனர்.

எழுந்தருள் திருமேனிகளின் பீடத்தில்

1. மயிலைகேசவன், **2.** மயிலை மாம்பலம் செங்கமலத் தாயார் என்று எழுதியிருப்பதால் இது மயிலாப்பூர்க் கேசவப் பெருமானை நினைந்து தோன்றிய திருக்கோவில் என்பதை அறியலாம்.

14. தியாகராயநகர்

சிவவிட்டுணுகோவில்

இதுகாறும் மாபள்ளமாகிய மாம்பலத்தில் உள்ள திருக்கோவில்களை வணங்கினோம். மாம்பலம் என்ற பெயரோடு புகைவண்டி நிலையம் சைதாப்பேட்டைக்கும் கோடம்பாக்கத்துக்கும் இடையே இருக்கின்றது. இந்தப் புகைவண்டிச்சாலைக்கு மேற்கே இருப்பது தான் மாம்பலம் என்ற ஊர். புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே ஒரு பேரூர் நாற்பது ஆண்டுகளுக்கு இடையே தோன்றி வளர்ந்து சென்னை மாவட்டத்திலேயே முதன்மை பெற்றுத் திகழ்கின்றது. இது தோன்றிய பின் மாம்பலம் பழைய மாம்பலம் என்றும் புதியதாகத் தோன்றியிருப்பது புதுமாம்பலம் என்றும் அழைக்கப்பெறுகின்றன. புத்தூரும் பள்ளமானதுதான்; குளமாக இருந்தது என்பதைப் பலரும் அறிவர். மழை பெய்தால் தெருக்களில் வெள்ளம் மிகுதியாக ஓடுவதை இன்றும் காணலாம்.

புதிய ஊர் தியாகராய நகர் என்ற பெயரை உடையது. இது தோன்றிய காலத்தில் ஆட்சி நடத்தித் திகழ்ந்த நீதிக்கட்சி (Justice Party) யின் தலைவராக இருந்தவர் தியாகராயச் செட்டியார்; அவருடைய பெயரையே இந்நகருக்கு இட்டு வழங்கினர் அரசினரும், மாநகராட்சியினரும். இங்கே தோன்றி விளங்கும் பூங்கா பனகால் பூங்கா என்று அப்போது நீதிக்கட்சியின் முதன் மந்திரியாக இருந்தவர் பெயரைப் பெற்று வழங்கி வருகிறது. இவ்வூரில், புகைவண்டி நிலையத்தின் அருகே புதிதாகத் தோன்றித் திகழ்கின்றது சிவவிட்டுணு திருக்கோவில்.

1935–36-ல் இங்கே பிள்ளையார் கோவில் தோன்றியது. அது இன்றும் சிவவிட்டுணு கோவிலின் வடகிழக்கு மூலையில் இருக்கிறது. "மாம்பலம் சன்மார்க்க சம்வர்த்தனி சபா" வினால் 1945-ல் இத்திருக்கோவில் கட்டி முடிக்கப் பெற்றுக் குடமுழுக்குற்றது.

கிழக்கே பார்த்த திருவாசல் மகம்மது ஊசுமான் தெருவின் இடது சிறகில் இருக்கிறது. இந்தக் கோவில் சிவவிட்டுணு கோவில் என்று பெயர் பெற்றாலும் முதன்மையான தெய்வமாக எழுந்தருளியிருப்பவன் வள்ளிதேவயானையோடு கூடிய முருகப்பெருமானே.

அவனுக்கு நேரே மயில் இருக்கிறது. முருகனுக்கு அடுத்த தென் புறம் சித்திபுத்தி விநாயகர் திருமணக் கோலத்தோடு காட்சியருள் கின்றார்; அவருக்குத் தெற்கே இருப்பவர் சீனிவாசப் பெருமாள். அவருக்கு நேர்கிழக்கில் இருக்கிறது கருடன். அவருக்குத் தெற்கே அலமேலுமங்கைத் தாயாருக்குத் திருக்கோவில் கட்டப்பெறுகிறது.

முருகப் பெருமானுக்கு வடபுறம் இருக்கிறார் சிவலிங்கப்பெருமான் கேதாரீசுவரர். அவருக்கு வடபுறம் சிறிது கிழக்கே தள்ளித் தெற்கே பார்க்க அம்மை பார்வதித்தாயாரும் அவருக்கு அடுத்த கீழ்புறம் கூத்துடைய பெருமானும் எழுந்தருளியிருக்கின்றார்கள்.

எழுந்தருள் மூர்த்திகளாக இராமர், சீதை, இலக்குவன், கை கட்டி வாய்பொத்தி நிற்கும் நிலையில் அனுமார் இவர்கள் இருக்கின்றனர். திருவிழா இன்னும் ஏற்படவில்லை. மாசி மாதம் சிவராத்திரியில் மக்கள் பெருங்கூட்டமாகக் கூடிக் கேதாரீசுவரரையும் பார்வதியம்மையையும் வழிபட்டுப் பெரும் பேறு பெறுகின்றார்கள்.

சிவவிட்டுணு கோவில் என்று இங்ஙனம் அமைந்திருப்பது சைவ வைணவ ஒருமைப்பாட்டுக்கு அடிப்படை. சென்னை மாவட்டத்தில் மிகப் பெரிய கோவில்களோ வடபுறம் சிவபெருமானும், தென் புறம் திருமாலுமாக அமைந்து ஒரே பொதுத் தீர்த்தக் குளத்துடன் விளங்குகின்றமை ஆங்காங்கே விளக்குவாம். இத்திருக் கோவிலில் வடபுறம் சிவபெருமானும், தென்புறம் திருமாலுமாக இருத்தலோடு நடுநாயகமாக வள்ளி தேவயானையோடு கூடிய முருகப் பெருமானை எழுந்தருளச் செய்திருப்பது மிகமிகப் பொருத்தமே!

15. நுங்கம் பாக்கம்

தியாகராய நகருக்கு அடுத்த வடபுறம் இருப்பது நுங்கம் பாக்கம். இதன் வடக்கு எல்லையாக இருப்பது கூவம் ஆறு. நுங்கம்பாக்கம் புகைவண்டி நிலையத்துக்கு அடுத்த வடபுறம் கூவம் ஆற்றின் மேற் புகைவண்டி போகும் பாலமும் கிழக்கே தள்ளி ஒரு வண்டிப் பாலமும் இங்கே அமைந்திருக்கின்றன. இந் நகரின் தென்மேற்கு மூலையில் நுங்கம்பாக்கம் பெரிய ஏரி ஒன்று இருந்தது.

நுங்கம்பாக்கம் பெருஞ்சாலையில் இந்து அற நிலையங்களின் தலைமை ஆட்சி அலுவலகம் உள்ளது. மாகாணக் கல்வி இயக்குநர் அலுவலகம் கல்லூரிச் சாலையில் கூவம் ஆற்றின் தென்கரையில் இருக்கிறது.

அகத்தீசுவரர் கோவில்

இத்திருக்கோவில் நுங்கம்பாக்கம் காவலர் நிலையத் (Police Station)தின் மேற்கே ஒரு திருக்குளத்தின் மேலைக் கரையில் அமைந்திருக்கிறது. அகத்தீசுவரப் பெருமான் கிழக்கே பார்க்கத் திருக்குளத்தைப் பார்த்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார். பெருமானுக்கு இடதுபுறம் உட்சுற்றிற் கூத்துடைப் பெருமானும் அவருக்கும் கிழக்கே அம்மை அகிலாண்டேசுவரியும் எழுந்தருளியுள்ளனர். அம்மை திருமுன்பு தெற்குத் திருவாசல் இருக்கின்றது.

மேற்கு வெளிச்சுற்றில் ஆறுமுகப்பெருமான் வள்ளி தேவயானையுடன் மயில் மீது ஒரே கல்லில் பிரபையுடன் அமைந்திருக்கும் காட்சி கண்கொள்ளாத பேரழகுடையது. இவ்வூருக்குக் கிராம தேவதை சேத்துப்பட்டில் இருக்கும் கருக்காத்த அம்மன்; அந்த அம்மையின் எழுந்தருள் திருமேனி இத்திருக் கோவிலில் இருக்கின்றது. கருக்களைக் காத்தருளும் அம்மை இவள்.

பிரசன்ன வேங்கடேசப் பெருமாள்கோவில்

நுங்கம்பாக்கம் ஆதியில் பொம்மராசபுரம் என்று பெயர் பெற்றது. பெருமாளுக்கு ஆதிப்பேர் வைகுண்டப்பெருமாள். இங்கே பொம்மராசர் என்பார் அரசாண்டிருந்தார்; அதனால்தான் இவ்வூர் பொம்மராசபுரம் என்று பெயர் பெற்றது. இந்த அரசருக்குப் பெருமாள் கனவிலே தோன்றி எழுந்தருள் மூர்த்தி இருந்த இடத்தைக் கூறினார். அரசர் அப்படியே சென்று எழுந்தருள் பெருமானை எடுத்துவந்தார்; அதனாலேயே பெருமாள் பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் என்று அழைக்கப்பெறுகிறார். திருவேங்கட மலையிலிருக்கும் வேங்கடேசப் பெருமாள் பெயரால் எழுந்த கோவில் இது. பெருமாள் கிழக்கே பார்க்க இருந்தாலும் முகப்புத் திருவாசல் தென்புறமே இருக்கிறது. திருவாசலுக்கு முன் இருப்பது வரசித்திவிநாயகர் கோவில் தெரு.

பெரிய திருவடியாகிய கருடாழ்வார் முன்னால் இருக்கக் கிழக்கே பார்த்து எழுந்தருளியிருக்கிறார் பெருமாள் சீதேவி பூதேவியுடன். அம்மை பதுமாவதித் தாயார் தனிக்கோவிலில் இருக்கின்றாள். மேற்கோரம் அரசமரம் நாகருடன் இருக்கிறது. இக் கோவிலிற் செல்வர், சக்கரத்தாழ்வார், நம்மாழ்வார், பேயாழ்வார், வேணுகோபாலன், தாண்டவக் கண்ணன் ஆகியோர் இருக்கின்றனர். இக் கோவிலில் அனுமார் முதன்மையானவர்.

16. கோடன் பாக்கம்

தியாகராய நகரத்துக்கும் நுங்கம்பாக்கத்திற்கும் இடையிற் போகிறது கோடன்பாக்கம் பெருஞ்சாலை. இச்சாலை மேற்காகப் போய்ப் புகைவண்டிச் சாலையைக் குறுக்கிடும் இடத்தின் சிறிது தூரத்தில் தெற்கே இருக்கிறது கோடன்பாக்கம் புகைவண்டி நிலையம். இதனை அடுத்துக் கிழக்கே இருக்கும் ஊர் தியாகராய நகரின் வட பகுதி. மேற்கே இருக்கும் நகரம் கோடன்பாக்கம். கார்க்கோடகன் என்றும் கார்க்கோடன் எனவும் பெயர் பெறுவது எட்டு நரகங்களில் ஒன்று ; அது வழிபட்ட ஊர் இது. கோடகன் நல்லூர் என்பது நெல்லை மாவட்டத்தில் தண்பொருந்தப் பேராற்றின் வடகரையில் இருக்கிறது ; மேலைக்கல்லூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு ஒரு மைல் தெற்கே உள்ளது. இது கோடன்பாக்கம்.

காஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட பல்லவ மன்னர்கள் தம் நாட்டை இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரித்து அரசாண்டு வந்தார்கள். கோட்டம் என்பது கோட்டையோடு கூடியது ; கோடு அதாவது, வரம்பு கட்டிப் பெரிய மதில்களை எழுப்பி அமைத்திருப்பது கோட்டை. இந்தப் பகுதி புலியூர்க் கோட்டம் என்று பெயர் பெறும். இங்கே கோட்டை இருந்த அடையாளங்கள் இருக்கின்றன. இது புலியூர் என்று வழங்கப் பெற்றது ; அதற்குக் காரணம் புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) இங்கே வந்திருந்து சிவலிங்கப் பெருமானைக் கண்டு பூசித்திருந்தமையே. அந்தக் கோவிலை ஒட்டி எழுந்த ஊருக்குப் புலியூர் என்றும், பெருமானுக்குப் புலியூர்ப் பெருமான் (வியாக்கிரபுரி ஈசுவரர்) எனவும் பெயர்கள் அமைந்தன.

வியர்க்கிரபுரீசுவரர் கோவில்

இது ஆர்க்காட்டுக்குச் சென்னையிலிருந்து போகும் பெருஞ் சாலையில் தென்புறம் அமைந்துள்ள அழகு திகழும் திருக்கோவில். சாலைக்குத் தென்புறம் திருக்குளமும் அதனை அடுத்துத் தெற்கே திருக்கோவிலும் உள.

வியாக்கிரம்—புலி—வேங்கை என்பன ஒரு பொருட் சொற்கள். வியாக்கிரம் பூசித்திருந்த ஊர் வியாக்கிரபுரி ; புலி பூசித்திருந்த இடம் புலியூர்; வேங்கை பூசித்த ஈசர் வேங்கீசர். இங்கே புலி என்பது

புலிக்கால் முனிவரையே உணர்த்தும். அவர் சிதம்பரத்திலே பெருமானை நோக்கித் தவம் இருந்தார். ஏன்? 'தமக்குப் புலிக்கால் அருள வேண்டும் என்று.' எதற்காக? "சிவ பூசைக்கு விடிந்தவுடன் பூக்களை எடுத்தால் எடுப்பதற்குள் வண்டுகள் வந்து மொய்த்துப் பூக்களை அழுக்காக்கிவிடும்; அதனால் விடிவதற்கு முன் பூக்களை எடுத்தல்வேண்டும். விடிவதற்கு முன் மரம் ஏறப் புலிக்கால் இருந்தால் ஏறிவிடலாம். நகக் கண்களால் முகக்கண் கொண்டு பார்ப்பது போலப்பார்த்து நல்ல மொட்டரு மலர்களை எடுத்து வருவதற்கு வாய்ப்புண்டாகும்." பெருமான் திருவருள் பாலித்தான்; அதனால் முனிவர் புலிக்கால் முனிவராயினார். அவர் பூசித்தபடியால் இவ்வூர் புலியூர் ஆயிற்று. இதன் பெருமையை அறிந்த பல்லவ மன்னர்கள் இங்கே கோட்டையும் கட்டிப் புலியூர்க் கோட்டம் என்றும் பெயர் சூட்டி இதனை அரசிருக்கை (தலைநகர்)யாகவும் ஆக்கினார்கள்.

திருக்கோவிலில் கிழக்கே பார்க்க வியாக்கிரபுரீசர், வேங்கீசர், புலிநாதர் சிவலிங்கத் திருவுருவில் கருவறையில் எழுந்தருளியிருக்கின்றார். அம்மை சாந்தநாயகி தெற்கே பார்க்கத் தனித் திருக்கோவிலில் அமர்ந்திருக்கின்றாள். தென்மேற்கு மூலையிற் பிள்ளையாரும் வடமேற்கு மூலையில் வள்ளி தேவயானையுடன் திருமுருகப் பெருமானும் எழுந்தருளியிருக்கின்றனர்.

வேங்கீசப் பெருமானுடைய மேலை மாடவீதியில் சுந்தரராசப் பெருமாள் சுந்தர வல்லித் தாயாருடன் திருக்கோவில் கொண்டிருக்கின்றார்: இது பெருமாள் கோவில்.

பாரத்துவாசேசுவரர்

கோட்டத்தை ஒட்டி எழுந்த பாக்கம் கோட்டம் பாக்கம் என்றாகி, கோடம்பாக்கம் என வழங்கி வருகின்றது என்று சொல்வதும் இயற்கைக்குப் பொருத்தமான காரணமாகவே இருக்கிறது. புலியூர்க் கிராம தேவதை முப்பாத்து அம்மன். இது கல் வெட்டினால் தெரிய வருகிறது.

கோட்டை இருந்ததாகத் தெரியும் இடத்துக்கு நேர் வடக்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது பாரத்துவாசேசுவரர்

திருக்கோவில். பாரத்துவாச முனிவர் பூசித்த பெருமான் பாரத்து வாசேசுவரர் எனப் பெயர் பெற்ருர். காஞ்சியிலிருக்கிற அருளாளப் பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் பல்லவர்கள் தம்மைப் பாரத்துவாசர் கோத்திரம் என்று வழங்கி வந்தமை தெரிகிறது. அதனுல் இங்கே தாம் கண்ட கோவிலுக்குப் பாரத்து வாசேசுவரர் கோவில் என்று பல்லவர்கள் பெயர் வைத்திருத்தலும் கூடும் எனச் சிலர் கூறுகிருர்கள். இத்திருக்கோவில் அமைந்தது இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் என்பது ஆராய்ச்சி அறிஞர் கண்ட முடிவு.

பாரத்துவாச முனிவர் இங்கு வந்து பூசை பண்ணிய பின்னரே பெருமான் பாரத்துவாசேசுவரர் ஆனுர். அதற்குமுன் இங்கே வாலி வந்து பூசை செய்ததாகத் தெரிகிறது. வாலி பூசித்த நாதர் திருமயிலாப்பூர்க் கடற்கரையில் திருக்கோவில் கொண்டிருப் பதைக் கண்டோம். வாலி இங்கேயும் வந்து பூசித்தமையால் திருவாலீசுவரர் என்றும் இப்பெருமான் பெயர் வழங்கப் பெறுகிருர்.

பெருமான் எழுந்தருளியிருக்கும் கருவறை சதுரமாக இருக்கிறது; அதனுல் சிவலிங்கப் பெருமானும் சதுரமாக அமைந்திருக்கிருர். கருவறை விமானம் வட்டமாக யானையின் பின்பாகம் போல (கசப் பிருட்டம்) அமைந்திருத்தலினுல் இக்கோவிலைக் கட்டியவர்கள் சோழர்களாக இருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர்.

பாரத்துவாசேசுவரப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளி யிருக்கின்ருர். அம்மை சுவர்ணாம்பிகை தெற்கே பார்க்கக் காட்சி யருள்கின்ருர். தெற்கு வாசலே முதன்மையான வாசலாகப் பயன் பெறுகின்றது. பிள்ளையார், சோமாஃச் கந்தர், அம்மை, வள்ளி தேவயானையோடு முருகப் பெருமான் திருவுருவங்கள் இக்கோவிலில் இருக்கின்றன. மாணிக்க வாசகர் இருக்கிருர்; ஆனுல் கூத்துடைப் பெருமான் இல்லை. இக்கோவிலினுள் ஆஞ்சனேயர் இடம் பெற்றிருப்பது சமையப் பொறுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.



வடபழநியாண்டவர்—தெப்பம்

பக்கம் 181

வடபழநியாண்டவர் கோவில்

பாரத்துவாசேசுவரர் கோவிலுக்கும் வேங்கீசர் கோவிலுக்கும் இடையே நடுநாயகமாக விளங்குகின்றது வடபழநியாண்டவர் திருக்கோவில். கோவில் இருக்கும் இடம் சாளக் கிராமம் என்று பெயர் பெறும்.

அண்ணுசாமி நாயகர் என்ற பெரியார் முருகப் பெருமானிடத்திலே அளவற்ற பற்றுடையவராக விளங்கினூர். அவர் குடியிருந்த வீடே இப்போது வடபழநியாண்டவர் திருக்கோவிலாகக் காட்சியருள்கின்றது. அவர் ஏறத்தாழ நூறுண்டுகளுக்கு முன்பு இருந்தவர். அவர் ஒரு சமயம் பழநிக்குப் போயிருந்தபோது அங்கே விற்ற பழநியாண்டவர் படம் ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து இங்கே சாளக் கிராமத்தில் தம் வீட்டில் வைத்துப் பூசனை புரிந்து வந்தார். நாயகர் திருவருள் கொண்டு ஆடுவதும் பாடுவதும் குறி சொல்லுவதுமாக இருந்தார். தேனும்பேட்டை இரத்தினவேலுச் செட்டியார் என்பவரும் இவருக்குத் துணையாக வந்து சேர்ந்தார். இவர் கூறும் குறிக்குப் புகழ்மிகுந்து வருவாயும் மிகுதியாயிற்று. அதனைக் கொண்டு நாயகர் செங்கற்கட்டிடமாகக் கோவில் ஒன்று கட்டி இப்போதுள்ள பழநியாண்டவரையும் அதில் நிலைபெறுத்தினூர். பின்னுல் பாக்கிய லிங்கத்தம்பிரான் என்பவர் இத்திருக்கோவிலில் வந்திருந்து திருப்பணிகள் பலபுரிந்திருந்தார்.

கருவறையில் பழநியாண்டவர் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றூர். அவரைக் கும்பிட வருமுன் தென்புறம் உள்ள வரசித்தி விநாயகரையும் அவருக்கு மேல் பால் உள்ள சொக்கநாதரையும் கும்பிட்டுக்கொண்டு உள்ளே புகுவோம். ஆண்டவர் திருவுருவம் கண்ணைக் கவர்வது ; அதனைத் தணிகைமணி செங்கல்வராய பிள்ளை பின்வரும் பாடலிறுற் புகழ்கின்றூர்:

" கண்டார்தம் மனம் கவரும் முண்டிதமாம்
சிரத்தழகும், காணக் காணக்
கொண்டாடத் தக்கதிரு நீற்றழகும்,
கண்டிகையின் கோலச் சீரும்,
பண்டாய நான்மறைக் கோவணச் சீரும்,
கொண்டு வட பழநி மேவும்
தண்டாயுதப் பெருமான் திருவடிக்கே
அகம் குழைந்து தழைந்து வாழ்வோம். "

திருக்கோவிலின் தெற்கு உட் சுற்றில் மாணிக்கவாசகரும் அருணகிரியாரும் இருக்கின்றனர். மேற்குச் சுற்றில் பிள்ளையாரும் விசாலாட்சியுடன் காசிவிசுவநாதரும், வள்ளி, தேவயானையுடன் ஆறுமுகரும், காளியம்மையுடன் வீரபத்திரரும், வடக்குச் சுற்றில் வீரபாகு தேவரும், வயிரவரும், கூத்தரும் இருக்கிறார்கள். வடகிழக்கே மீனாட்சியம்மை எழுந்தருளியிருக்கின்றாள்.

கார்த்திகை, மாதாந்த வெள்ளி முதலிய சிறப்பு நாட்களில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் வந்து வடபழநியாண்டவரை வணங்கித் திருவருள் பெற்றுத் திரும்புகிறார்கள். 1942-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16-ம் தேதியில் குடமுழுக்கு மிக்க சிறப்புடன் நடைபெற்றது. இத்திருக்கோவிலில் இருக்கும் எழுந்தருள் மூர்த்திகள் வள்ளி தேவயானையுடன் ஆறுமுகப் பெருமான், கூத்துடையார், சிவகாம சுந்தரி, மாணிக்கவாசகர், அருணகிரியார், இளமுருகன் ஆகியோர்.

பழநியில் இருக்கும் பெருமான் இத்திருக்கோவிலை நோக்கும் போது தென் பழநியாண்டவர் எனப் பெயர் பெறுதல் வேண்டும்; இவர் வடக்கே இருத்தலால் வடபழநியாண்டவர் என்பது தெளிக.

17. எழும்பூர்

பலதுறைகளிலும் எழுந்தோங்கும் ஊரானதால் எழுமூர் என்று இவ்விடத்திற்குப் பெயர் அமைத்தனர். அஃது இன்று எழும்பூர் என வழங்கி வருகிறது. சிந்தாத்திரிப்பேட்டையும் கோமளேசுவரன் பேட்டையும் இதனைச் சேர்ந்த பகுதிகள்.

சென்னை மாநகரத்திலிருந்து தெற்கே எங்கே போக வேண்டுமானாலும் இவ்வூரிலிருந்து புகை வண்டிகள் புறப்படுகின்றன. பெரும்பாலும் வெளியூர்களிலிருந்து வருகிற வண்டிகள் அதிகாலையில் இங்கே வந்து சேர்கின்றன; வெளியூருக்குப் போகிற வண்டிகள் மாலையிலே புறப்படுகின்றன.

எழும்பூரில் இலக்குமி நாராயணப் பெருமாள் கோவில் தெரு என்பது புகை வண்டி நிலையத்திலிருந்து மேற்கே அரை மைல் தொலைவில் உள்ளது. அதில் சீனிவாசப் பெருமாள் திருக்கோவில் இருக்கிறது. சீனிவாசப் பெருமாளே இலக்குமிநாராயணப் பெருமாள்.

பெருமாள் கருவறையில் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கின்றார். அம்மை பதுமாவதித் தாயார், காசிபர், அத்திரி, பாரத்துவாசர், விசுவாமித்திரர், கௌதமர், சமதக்கினி, வசிட்டர் ஆகிய எழு முனிவர்களுக்கும் இப்பெருமாள் காட்சி கொடுத்துத் திருவருள் பாலித்திருக்கிறார். அதனால் இந்த இடம் சப்த இருடிச் சேத்திரம் என்றும் பெயர் பெறும். இத்திருக் கோவில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பது தெரிய வருகிறது. இலக்குமி நாராயணர் என்பதே இவர்க்கு ஆதிப்பெயர். இப்போது பெரும்பாலோரால் சீனிவாசப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். பதுமாவதியே அலர்மேல் மங்கைத் தாயார். பதுமம்—தாமரை, அலர்—பூ; பூ எனப்படுவ பொறி வாழ் பூவே ; பொறி—திருமகள், இலக்குமி ; ஆதலின் அடை கொடாது பூ என்றோ அலர் என்றோ சொன்னால் அது தாமரை மலரையே உணர்த்தும்.

இந்தத் திருக்கோவிலுக்குத் தீர்த்தம் கூவம் ஆறுதான். அது விருத்தச் சீரநதி என்று வடமொழியிற் சொல்லப்படுகிறது. இந்த ஆறு திருக்கோவிலுக்கு அருகே இருக்கிறது. இக்கோவில் விமானம் சாயா விமானம். புரட்டாசி மாதத்தில் திருவோணம் காலையில் பன்னிரண்டு நாழிகை வரையிருக்கும் நாளை ஒன்பதாவது திருநாளாகக் கொண்ட பெருவிழாப் பத்து நாள் நடைபெறுகிறது. வைகானச ஆகமமே இந்தக் கோவிலுக்கு விதி.

18. சிந்தாத்திரிப்பேட்டை

இனி, இதற்கடுத்த கீழ்புறமுள்ள சிந்தாத்திரிப்பேட்டைத் திருக் கோவில்களை வழிபடுவோம். ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டு களுக்கு முன் நெசவாளர்களை ஆங்கிலேயர் இவ்விடத்திற் கொண்டு வந்து குடியேற்றினார்கள். கூவத்துக்கு அருகே கெயிட்டி, காசினோ, எல்பின்ச்டன் என்று வழங்கும் படமாளிகைகளுக்கு வடக்கு, மலைச் சாலைக்கு மேற்கு, எவரெஃசுட்டு என்ற விடுதிக்குத் தெற்கு; எழும் பூருக்குக் கிழக்கு இந்த நான்குமாலுக்கு உட்பட்ட இடம்தான் சிந்தாத் திரிப்பேட்டை. இது சிந்தாத்திரி என்ற ஒருவருக்கு உரிமையாக இருந்தது. அந்த இடத்தில் எழுந்த பேட்டையானதனால் இதற்கு சிந்தாத்திரிப்பேட்டை என்ற பெயர் அமைந்தது.

அங்காளம்மன் கோவில்

இக்கோவில் வேங்கடேச கிராமணி தெருவில் இருக்கிறது. திரு வாசலுக்கு நேராகக் கருவறையில் வள்ளி தேவயானையோடு கூடத் திருமுருகன் எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு வலது பக்கத்தி லுள்ள திருக்கோவிலில் சிங்க ஊர்தியின்மேல் அங்காளம்மன் எழுந்தருளியிருக்கின்றாள். இடதுபுறம் இருக்கின்ற மண்டபத்தில் சிவபெருமான், பார்வதி, பிள்ளையார், முருகன், சண்டேசுவரர் முதலி யோர் எழுந்தருள் திருமேனிகள் இருக்கின்றன. இவர்களுடைய கோவில்களுக்கு முன்னால் தென்புறமுள்ள ஒரு சிறு கோவிலில் நடுவே சிவலிங்கப் பெருமானும், வலது புறம் பிள்ளையாரும், இடது புறம் முருகனும் எழுந்தருளியிருக்கின்றனர். வடக்கோரத்தில் கூத்துடைப் பெருமானும் அங்காள அம்மையும் மேற்குப் பகுதியில் வள்ளி தேவயானையோடுகூடிய முருகனும் வீரவாகு தேவரும் எழுந் தருளியிருக்கின்றார்கள். கபாலியை அணையும் போது அம்மை அங்காள பரமேசுவரி என்று பெயர் பெறுகிறாள்.

சுப்பிரமணியசாமி கோவில்

இது ஐயாமுதலி தெருவில் கிழக்கு வரிசையில் மேற்கே பார்க்க இருக்கிறது.

இதில் கருவறையில் வள்ளியம்மை தேவயானையுடன் சுப்பிரமணிய சாமி எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு வலது புறம் சிவலிங்கப் பெருமான் மேற்கே பார்க்கவும் எதிரே வடக்கோரம் பார்வதிதேவி தெற்கே பார்க்கவும் எழுந்தருளியிருக்கின்றனர். அம்மைக்கு வலது புறம் கூத்தரும் அவருக்கு வலதுபுறம் பிள்ளையாரும் தனி அறைகளிலே தெற்கே பார்க்க அமர்ந்தருளியிருக்கின்றனர். முருகப் பெருமானுக்கு இடது புறம் எழுந்தருள் மூர்த்திகள் இருக்கிறார்கள். இந்தத் திருக் கோவிலுக்கு வெளிச் சுற்றும் இருக்கிறது. அதில் தெற்குச் சுற்றில் கிழக்கோரம் சண்டேசுவரர் அருள் பாலிக்கின்றார்.

ஆதிபுரீசுவரர் கோவில்

ஆதிபுரீசுவரர் கோவில் நைநியப்ப நாயக்கன் தெருவிலிருக்கிறது. இதற்குத் தென்புறம் ஆதிகேசவப் பெருமாள் கோவில் கொண்டிருக் கிறார். இவ்விரண்டு திருக்கோவில்களுக்கும் பொதுவாகத் தெருவை யொட்டி ஒரு திருக்குளம் இருக்கிறது.

முன் மண்டபத்தையும் அதற்கப்பால் உள்ள கொடிமரம் பலிபீடம் இடபம் ஆகியவைகளையும் தாண்டிக் கோவிலினுள்ளே சென்று கருவறையிற் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கும் ஆதிபுரீசுவரரைக் கும்பிடுவோம். அவருக்கு வலது புறமுள்ள மண்டபத்தில் எழுந்தருளும் மூர்த்திகள் இருக்கின்றன. மேற்குச் சுற்றில் தென்மேற்கே பிள்ளையாரும், நடுவில் சமையாசிரியர் நால்வரும், பழநியாண்டவரும், வடமேற்கே வள்ளி தேவயானையோடுகூடி ஆறுமுகப் பெருமானும் இருக்கின்றனர். வடக்குச் சுற்றில் கீழ்பக்கம் தெற்கே பார்க்கக் கூத்தரும் அவரை யடுத்து அறுபத்து மூவரும் அம்மை திரிபுரசுந்தரியும் அமர்ந்திருக்கின்றனர். வடகிழக்கு மூலையில் திருமண மண்டபம் வேள்விச் சாலையுடன் இருக்கிறது.

அம்மை திருமுன்பு தெற்குச் சுவரில் ஒரு திருவாசல் உள்ளது. அங்கே இடபமும் பலி பீடமும் ஒரு தூணும் இருக்கின்றன. அவைகளுக்கு மேற்கே தென்முகக் கடவுள் எழுந்தருளியிருக்கின்றார். அவரை வணங்கிக் கொண்டு ஆதிபுரீசுவரர் தெற்கு வாயிலுக்கு முன்புள்ள ஆதிகேசவப் பெருமாள் கோவிலின் வடக்கு வாசல் வழியாகப் பெருமாள் கோவிலுக்குள் வந்து விடலாம்.

ஆதிகேசவப் பெருமாள் கோவில்

ஆதிகேவசப் பெருமாள் கருவறையில் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு வலது புறம் உள்ள மண்டபத்தில் மதுரகவியாழ்வார், நம்மாழ்வார், நாதமுனிகள் ஆகிய மூவரும் இருக்கிறார்கள். அம்மண்டபத்துக்குக் கீழ்புறம் குலசேகர ஆழ்வாரும் அதற்குக் கீழ்புறம் திருக்கச்சி நம்பியும் உள்ளனர்.. பெருமாளுக்கு இடது புறம் உடையவரும் ஆழ்வார்களும் இருக்கிறார்கள். பெருமாள் திருமுன்பு பெரிய திருவடியும் கொடிமரமும் பலிபீடமும் இருக்கின்றன. தலைவாசலின் தென்புறம் பெருமாளைப் பார்க்க அனுமான் இருக்கின்றான். அனுமானுக்குச் சற்றுத் தெற்கே ஆதிசேடன் இருக்கிறான். அவனுக்கு நேர் மேல்புறம் ஆதிலக்குமித்தாயார் காட்சியருள்கின்றார். அம்மைக்கு இடதுபுறம் பொய்கையார், பூதத்தார். பேயார் ஆகிய ஆதி ஆழ்வார்கள் மூவரும் அமர்ந்திருக்கின்றனர். தாயாரை மறுபடியும் கும்பிட்டுக் கொண்டு கோவிலின் வடமேற்கு மூலைக்கு வருவோம். அங்கே பெரியாழ்வாரும் ஆண்டாளம்மையும்

கிழக்கே பார்க்கக் காட்சியருள்கின்றனர். அதனை அடுத்துத் தெற்கே பார்க்கத் திருவரங்கப் பெருமாள் ஆதிசேடன்மேற் பள்ளிகொண்டிருக்கும் திருக் காட்சியைக் கண்டு கும்பிடுவோம். பெருமாள் கோவிலில் பங்குனி அத்தத்தில் தொடங்கித் திருவோணத்தில் முடியும் திருவிழாவும், மார்கழி மாதம் பகற்பத்து இராப்பத்து விழாக்களும் நடைபெறுகின்றன.

பெருமாள் திருமுன்பு வடக்குச் சுவரில்

" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே ",

என்ற திருவடிகளும்,

" அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்
ஒத்து ஒவ்வாத பல்பிறப் பொழித்து நம்மை ஆட்கொள்வான் "

என்ற திருவடிகளும் எழுதப் பெற்றுள்ளன. இதனால் இங்கே ஆதிபுரீசுவரராகவும் ஆதிகேசவப் பெருமாள் ஆகவும் இருவேறு திருமேனிகள் கொண்டு சைவம், வைணவம் ஆகிய வேறு வேறு சமையக் கடவுளர் போலக் காட்சியளித்தாலும் இருவரும் ஒருவரே. ஒருவனே தேவனும் என்பதைக் காண்க. மேலும், இத்திருக் கோவில்களை அமைத்த பெரியார்கள் ஆதிபுரீசுவரர் ஆகிய பெருமானை வடபுறமும் ஆதிகேசவர் என்ற பெருமாளைத் தென்புறமும் அடுத்தடுத்து அமைத்திருப்பதன் கருத்து வடபுறம் இருப்பவன் பெருமான் தென்புறமிருப்பவள் பெருமாள் என்ற அம்மையப்பன் கருத்தினைக் கொண்டே அமைத்தார்கள் போலும்! " அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே " என்றார் திருநாவுக்கரசர்.

ஆதிகேசவப் பெருமாளுக்கு ஆதிலக்குமி தேவியைத் திருமனைவியாராக அமைத்து நாம் வழிபட்டாலும் பெருமாள் சிவபெருமானுக்குள்ள நான்கு சத்திகளில் ஒருவரே. அவருடைய திருவயிற்றில் ஒரு செந்தாமரையில் தோன்றினான் நான்முகன். ஆதியில் ஆதிபுரீசுவரருடைய திருவருளால் திருபாற்கடலிலிருந்து தோன்றிய அமுதத்தைப் பெருமாள் மோகினித் திருவுருவந்தாங்கிப் பங்கிட்டுக் கொடுத்தான். அங்கே காளை மீது காட்சியருளிய சிவ பெருமானருளால் அரிஅரபுத்திரன் என்ற ஐயனார், சாத்தனார் என்ற பெயர்களையுடைய

ஐயப்பனூர் தோன்றினார் என்பர். ஆதலின் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பதை உணர்ந்து நன்றே நினைந்து நாளும் வழிபடுவோமேயானால் பெருமான் நம்மை

" அத்தனாகி அன்னையாகியாளும் எம்பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல் பிறப் பொழித்து நம்மை யாட்கொள்வான். "

ஆதி பொன்னி யம்மன் கோவில்

சிந்தாத்திரிப்பேட்டையில் முருகவேள் என்ற குமரவேள் கோவில், பழநியாண்டவர் கோவில், தருமராசர் கோவில் முதலிய பல சிறு கோவில்கள் இருக்கின்றன. அவைகளும் நாம் வழி பட்டுய்யும் பெருமையுடையன.

இப்போது இப்பெரு நகருக்குக் குலதெய்வமாகி விளங்கும் அம்மை ஆதிபொன்னியம்மை. இவ்வம்மை சிந்தாத்திரிப்பேட்டையின் மேற் கெல்லையில் அழகியதொரு விமானத்தையுடைய கருவறையில் எழுந் தருளியிருக்கின்றாள். கோவிலினுள் வடமேற்குப் பகுதியில் அம்மையின் எழுந்தருள் திருமேனி இருக்கிறது. வடகிழக்கே பிள்ளையார் இருக்கின்றார். தலைவாயிலிற் சிங்கமும் பலிபீடமும் இருக்கின்றன. அம்மை திருவருள் முன்னிற்பதாக.

19 கோமளேசுவரன்பேட்டை

கோமளேசுவரர்

எழும்பூரின் தெற்குப் பகுதியே கோமளேசுவரன்பேட்டை. அதன் தென்கிழக்குப் பகுதியில் கோமளேசுவரர் கோவில் கொண்டு எழுந் தருளியிருக்கின்றார். அத்திருக்கோவிலைச் சூழ எழுந்தமையினாலேயே இப் பகுதி கோமளேசுவரன்பேட்டை எனப் பெயர் பெற்றது. கோமளம் என்பது கண்டவர்களுடைய உள்ளத்தைக் கவரும் பேரழகு. இத்திருக் கோவிலில் பேரழகு படைத்த கோமளப் பெருமாட்டி யோடு கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான் கோமளக் கொழுந்து.

"ஒருவனே போற்றி ! ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி ! எங்கள் கோமளக் கொழுந்து போற்றி !
வருக என்றென்னை நின்பால் வாங்கிடவேண்டும் போற்றி !
தருக நின் பாதம் போற்றி ! தமியனேன் தனிமை தீர்த்தே."

(திருவாசகம், திருச்சதகம் 68)

இங்ஙனம் சிந்தை உருகிக் "கோமளக் கொழுந்தே ! அடியேனை ஆட்கொண்டருளவேண்டும்" என்று மணிவாசகப் பெருமானார் விண்ணப்பித்துக் கொள்கின்றார். மேலும்,

"குணங்களும் குறிகளும் இல்லாக் குணக்கடல்
கோமளத் தொடுங் கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண்டருளிய
அற்புதம் அறியேனே"

என அம்மையையும் **கோமளம்** என்றே புகழ்கின்றார் மணிவாசகர். இங்கேயுள்ள கோமளேசுவரர் சுயம்பு மூர்த்தி, உளிபடாத திருமேனி. இப்பகுதி காடாக இருந்தபோது ஒரு பசு இச் சுயம்பு மூர்த்தியை வழிபட்டிருந்தது. இம் மூர்த்தியின் திருமேனியில் இப் பசுவின் குளம்பு பதிந்த அடையாளம் இன்றும் காணப் பெறுகிறது. சந்திரகிரி மன்னனால் இத் திருக்கோவில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றது.

20. அமைந்தகரை (அமிஞ்சிக் கரை)

சென்னை மா நகரத்திலிருந்து மேற்கேயுள்ள பூவிருந்தவல்லிக்கு ஒரு நெடுஞ்சாலை போகிறது. பூவிலிருந்த அம்மை திருமகள். அவ்வம்மை பெயரால் அமைந்த அவ்வூர் உலக வழக்கின் மருவிப் பூந்தமல்லியாகிவிட்டது ; அது மேலும் மருவிப் பூனமல்லியும் ஆயிற்று. அதனால் அந்தச்சாலை வழக்கில் பூனமல்லி நெடுஞ்சாலை யென்றே பேசப்படுகிறது. அந்தச் சாலையின்மேல் சென்னை மாநகரத்தின் மேற்கெல்லையாக அமைந்திருக்கிறது அமைந்தகரை என்ற இப்பேட்டை. கரையென்பது எல்லையென்றும் எல்லையைக் குறிக்கும் மேடு என்றும் பொருள்படும். இது இன்று அமிஞ்சிக்கரையென்று ஒரு பொருளும் விளங்காமல் வழங்கி வருகிறது.

அமைந்தகரை என்ற பெயர் இதற்கு எப்படி வந்தது ? கூவம் ஆறு இவ் வழியே ஓடி வருகிறது. அதன் வடகிழக்குப் பகுதியிலே ஒரு பெரிய குளம் இருக்கிறது. கூவம் ஆற்றுக்கும் இப்பெரிய குளத்துக்கும் இடையே இயல்பாக அமைந்த கரைபோல இவ்விடம் உள்ளது. அதனால் இவ்விடத்தில் தோன்றிய ஊர் ' அமைந்தகரை ' யென்று பெயர் பெறுவதாயிற்று.

கூவம் என்ற ஆறு தொடங்கும் இடம் வடக்கே சரிவாக மேற்கே யுள்ள கூவம் என்ற ஊருக்கு மூன்று மைல் மேற்கேயாம். அது அப் பகுதியிலுள்ள பல குளங்களின் கழிவு நீரைப் பெற்று ஓடி வருகிறது. அது ஆறாகத் தொடங்கும் இடத்திலே இருக்கும், கூவம் என்ற ஊர் திருவிற்கோலம் என்று பெயர் பெறும். அங்கே எழுந் தருளி யிருக்கின்ற பெருமான் திரிபுராந்தகர் ; அம்மை திரிபுரசுந்தரி. திரிபுரம் எரிக்கச் சிவனார் சென்றபோது இத்தலத்தில் தேரின் கூவரம் அதாவது தேரின் ஏர்க்கால் ஒடிந்தமையால் விற்கோலமாகச் சிவ பெருமான் காட்சியளித்தான். அதனால் இத்தலம் " விற்கோலம் " என்றும் 'கூவரம்' என்றும் பெயர் பெறும். கூவரமே கூவம் என மருவிற்று. இப்பகுதியில் தோன்றுகிற ஆறும் கூவம் என்று பெயர் பெற்றது. அது கூகம் எனத் திருஞானசம்பந்தர் காலத்தில் வழங்கி வந்ததென்பது அவருடைய தேவாரத்திலிருந்து தெரிகிறது. திருவிற்கோலப் பதிகத்தில் :

" கொந்துலா மலர்ப் பொழிற் கூகம் மேவினன் "(பாட்டு 5)
" வளர் பொழிற் கூகம் மேவினன் . . . .
உறைவிடம் திருவிற்கோலமே " (பாட்டு 6)

எனவும் அருளியமையால் விளங்கும். கூகம் என்பதே இப்பொழுது கூவம் என மருவிற்று. கூவம் ஆறு பழம் பாலாறு • (விருத்தச் சீர நதி) எனவும் பெயர் பெறும்.

ஏகாம்பரேசுவரர் கோவில்

பூவிருந்தவல்லிப் பெருஞ்சாலையின் தென்புறம் பெரியதோர் ஆலமரம் நின்றது. அதன் அருகே நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் அச்சிற்றூர்த் தலைவர் அம்மரத்தடியிற் காமாட்சி அம்மையுடன் ஏகாம்பரேசுவரரை நிலைபெறுத்திக் கும்பிட்டுவந்தார். அச்சாலை வழிச்செல்லும் வண்டிகளை அம்மரத்தடியில் ஒதுக்கி நிறுத்திப் போவாரும் வருவாரும் பெருமானையும் பெருமாட்டியையும் வழி

பட்டுச் செல்வராயினர். சில ஆண்டுகளில் முதியதாக இருந்த அந்த ஆலமரம் பட்டுப்போயிற்று. அதுகண்ட அமைந்தகரை அன்பர்கள் அவ்விடத்தில் ஒரு சிறு கோவில் கட்டிக் காமாட்சி அம்மையையும் ஏகாம்பரேசுவரரையும் அதில் நிலைபெறுத்தினார்கள். அக்கோவில் நாளடைவில் வளர்ந்து இன்றுள்ள, நிலையை 'உயரிய நிலையினை' அடைந்தது.

பெருமான் கருவறையில் கிழக்கே பார்க்க எழுந்தருளியுள்ளார். காஞ்சிபுர ஏகாம்பரநாதரை எண்ணி அமைந்த மூர்த்தி இவராதலின் இவருக்குப் பின்னால் கோவிலில் ஒரு மாமரத்தை வைத்துக் கோவிலார் வளர்த்து வருகின்றார்கள்.

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்காற்கண் டஞ்சாமுன் —விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது."

(ஒருமாவின் கீழர்—ஏகாம்பரநாதர்)

அவருடைய திருப் பெயரைச் சாவதற்குமுன் ஒரு முறையாவது சொல்லி உள்ளங் கசிந்து "பெருமானே! அடியேன் ஏழையேன் காலன் வாய்ப்படு முன்னே காத்தருள் புரியும்" என்று வேண்டி நின்றால் இறைவன் திருவருள் கைகூடும் என்பதில் தடையே யில்லை. மேலே கண்ட திருப்பாடலைப் பாடிய பெரியார் காளமேகப் பெரும் புலவர். அங்ஙனங் கருதி முறையிட்ட பெரியாராலேயே ஆதியில் இத்திருக் கோவில் தோற்றுவிக்கப்பெற்றது.

[மேலே கண்ட வெண்டாவில் முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை ஆகிய எண்ணுப் பெயர்கள் வரிசையாக வந்துள்ளமை காண்க.]

அர்த்த மண்டபத்தில் வட பகுதியில் தெற்கே பார்க்கக் கூத்தப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்றார். தென் பகுதியில் சமைய குரவர் நால்வரும் பெருமானைக் கும்பிட்டுக்கொண்டு நிற்கின்றார்கள். மாமண்டபத்தின் பகுதியாகவே உள்ள கருவறையில் அம்மை காமாட்சித் தாய் தெற்கே பார்க்கக் காட்சியருள்கின்றாள். இத் திருக்கோவிலிற் பெருவிழா இல்லை. பங்குனி உத்தரத்தில் திருமண விழாவும், மார்கழியில் திருவாதிரை விழாவும், ஐப்பசியில் கந்தசட்டி விழாவும் ஒருநாள் விழாவாக நடக்கின்றன.

பிரசன்ன வரதராசப்பெருமாள் கோவில்

இது தென்கலையார் கோவில். இது அறுபது ஆண்டுகளுக்குமுன் படம் வைத்துப் பாடும் மடமாக இருந்தது. பின் ஒரு சிறு கோவில் தோன்றி வைகானசப்படி பூசை நடந்து வந்தது. இப்போதைய கோவில் கட்டிமுடிந்து 1951 தைத் திங்கள் அத்தநாளில் திருக்குட முழுக்கு நடைபெற்றது. அப்போது இப் பெருமானுக்குச் சிறப்பு மிகும்படி பாடல்பெற்ற திருநின்றவூர்க் கோவிலிலுள்ள பக்த வத்சலப் பெருமாளை இங்கே எழுந்தருளச் செய்து இரு பெருமாள் களுக்கும் ஒரு சேரப் பூசனை செய்வித்து இத் திருக்கோவிலுக்கு ஏற்றம் விளையச் செய்தார்கள் அன்பர் குழாத்தினர். அதனால் இது அபிமானத் தலமாகப் போற்றப் பெறுகிறது. இப்போது இத் திருக்கோவிலில் பாஞ்சராத்திரப்படி பூசனை நடைபெறுகிறது.

இனி, திருக்கோவிலினுள்ளே சென்று கும்பிடுவோம். கிழக்கே பார்க்க இருக்கிறது திருக்கோவில். கருவறையில் நின்ற கோலத்தில் வரதராசப் பெருமாள் மூலவராக எழுந்தருளியிருக்கின்றார், அவருடன் கலியனும், செல்வரும், சக்கரத்தாழ்வாரும் இருக்கின் றனர். மூலவருக்கு முன்னால் எழுந்தருள் மூர்த்தி வரதராசர் சீதேவி பூதேவியாருடன் எழுந்தருளியிருக்கின்றார். மாமண்ட பத்தின் தென்பகுதியில் ஆண்டாளைத் தவிரப் பதினொரு ஆழ்வார் களும் சேனை முதலிகளும் மூலவராகவும் உற்சவராகவும் காட்சி தருகின்றனர். வடபகுதியில் நாதமுனிகள், ஆளவந்தார், திருக்கச்சி நம்பி, உடையவர், கூரத்தாழ்வார், மணவாளமாமுனி ஆகிய இவர்கள் மூலவராகவும் உற்சவராகவும் உள்ளனர். மாமண்டபத்தைத் தாண்டி னால் வெளியில் பெரியதிருவடியாகிய கருடாழ்வார் இருக்கிறார். அவருக்குக் கிழக்கே கொடிமரமும் பலிபீடமும் இருக்கின்றன. பெருமாளுக்குத் தென்புறம் திருக்கோவிலில் பெருந்தேவித்தாயார் மூலவராகவும் உற்சவராகவும் இருக்கின்றார். அதைப் போலவே பெருமானுக்கு வடபுறம் ஆண்டாள்அம்மை மூலவராகவும் உற்சவ ராகவும் விளங்குகின்றார். பெருந்தேவித் தாயாருக்கு நேர் கிழக்கே திருமதிலை ஒட்டி அனுமார் அம்மையைச் சேவித்துக்கொண்டு நிற்கிறார்.

இத் திருக்கோவிலில் வைகாசித் திருவோணத்தை ஒன்பதாம் நாளாகக் கொண்டு தீர்த்தம் வழங்குகின்ற பெருவிழா நடைபெறு

இன்றது. இவ் விழாவின் ஏழாம் நாள் திருத்தேர். தேரில்லாமை யால் சப்பரம் பயன்படுகின்றது. சித்திரை மாதம் திருவாதிரை முடியப் பத்து நாள் எம்பெருமான், உடையவர் என்று போற்றப் பெறும் இராமானுசருக்குச் சாத்துமுறை விழா நடைபெறுகிறது; ஆடிமாதம் பூரணையன்று கசேந்திர மோட்சம் கருட சேவை விழா கொண்டாடப்பட்டுவருகின்றது.

21. அயனாபுரம்

அமைந்தகரைக்குச் சிறிது கிழக்கே சரிவாக வடபுறம் இருக்கிறது அயனாபுரம். இது அயனாவரம் என்றும் பெயர் பெறும். அயன் — நான்முகன். நான்முகன் சிவபெருமானை நோக்கிப் பூசை செய்து வரம் பெற்ற இடம் அயனாவரம்; இது சிலரால் அயன்வரம் என்றும் வேறு சிலரால் அயன்புரம் என்றும், பொதுமக்களால் அயனாவரம் என்றும் அழைக்கப்படுகிறது. அயனாபுரத்திற்கு வாடகை மோட்டார் வண்டிகள் அடிக்கடி செல்கின்றன; அவை எழும்பூர், புரசைப்பாக்கம், கீழ்ப்பாக்கம் இவைகளைத் தாண்டி அயனாபுரத்தின் ஒரு பகுதியாக அண்மையில் தோன்றியிருக்கிற வேங்கடேசபுரத்தையும் தாண்டி அயனாபுரத்தை அடைகின்றன. வில்லிவாக்கம் செல்லும் சாலையில் திரும்பி மேலோரம் சென்றால் அச்சாலைக்கு அண்மையில் சிறிது தெற்கே இருக்கின்றன அயனாபுரம் திருக்கோவில்கள்.

பரசுராமலிங்கேசுவரர் கோவில்

பரசுராமலிங்கேசுவரர் கோவில் தெரு என்பது தென் வடலோடிய தெரு, அதிலே கிழக்கே பார்க்க இருக்கிறார் பரசுராமலிங்கேசுவரர். சிவலிங்கப் பெருமானைப் பரசுராமர் வழிபாடு செய்தார். இப் பெருமான் தானாகவே முளைத்தெழுந்த சுயம்புலிங்கம். பெருமானுக்கு வலது புறம் அம்மை பருவதாம்பிகை தனிக் கோவிலில் கிழக்கே பார்த்து அமர்ந்திருக்கின்றனர். சித்திரை, வைகாசியில் பெருவிழா நடைபெறுகிறது. மார்கழித் திருவாதிரை ஒருநாள் விழா.

கரிய மாணிக்கப் பெருமாள் கோவில்

பரசுராமலிங்கேசுவரர் திருக்கோவிலை ஒட்டித் தென்புறம் இருக்கிறது கரியமாணிக்கப் பெருமாள் கோவில். பெருமாள் கனக வல்லித் தாயாருடன் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். கருவறைமேல் இருக்கும் விமானம் கும்பாகாரமானது. மார்கழி மாதம் இங்கே பகற்பத்து இராப்பத்து விழா நடைபெறுகின்றது.

பெருமானும் பெருமாளும் வலம்இடமாக எழுந்தருளி அயனுக்குக் காட்சியருளியிருக்கின்றனர். இரண்டு கோவில்களுக்கும் முன்னால் தெரு; அந்தத்தெருவிற்குக் கீழ்புறம் ஒரு தீர்த்தக்குளம் இருக்கிறது. அது பிரம தீர்த்தமென்று பெயர் பெறுகிறது.

காசிவிசுவநாதர்

இந்தத் திருக்கோவில்களுக்கு வடகிழக்கே சாலை மேற்கே திரும்புகிற இடத்தில் இருக்கிறது காசி விசுவநாதர் திருக்கோவில். அம்மை விசாலாட்சியுடன் பெருமான் கிழக்குத் திருமுகமாகக் காட்சியருள்கின்றான்.

பிரமதீர்த்தத்தின் தென்கிழக்கிற் செல்லியம்மனும் அதற்குச் சிறிது தெற்கே தள்ளி முத்தியம்மனும் எழுந்தருளியிருக்கின்றனர்.

22. கீழ்ப்பாக்கம்

கீழ்ப்பாக்கம் என்பது பள்ளமான பகுதி என்று பொருள்படும். கீழ் என்பது பள்ளப் பகுதியை உணர்த்தும், மாபள்ளம் என்பது போல. இங்கேதான் இருக்கிறது பைத்தியக்காரர் மருத்துவச்சாலை இது மனக்கோளாறு பற்றிய நோய் ஆனதால் மன நோய் மருத்துவச்சாலை (Mental Hospital) என்று இதனை அழைக்கிறார்கள்.

தருமராாசர் கோவில்

இது கீழ்ப்பாக்கம் தோட்டச்சாலையில் இருக்கிறது. தருமராாசர் பாண்டு மாமன்னனுடைய மகன், பாண்டு மன்னவனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் குந்திமாதேவி. குந்திமாதேவி பெற்ற வரத்தின் பயனாக அவளிடம் எமதருமராசனுக்குத் தரும புத்திரனும், வாயுபகவானுக்கு வீமசேனனும், தேவேந்திரனுக்கு அருச்சுனனும் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். இளையவள் மத்திரதேச மன்னன் மகள் மாத்திரி. மாத்திரி தேவிக்கு அசுவினி தேவர்கள் வழி நகுலனும், சகாதேவனும் பிறந்தார்கள். ' இவ்வைந்து பேருமே பாண்டு புத்திரர்கள். இவர்கள் பஞ்சபாண்டவர் எனப் பெயர் பெறுவர். வனவாசஞ் செய்யுங் காலத்தில் குந்திமாதேவியின் கட்டளைப்படி ஐவரும் பாஞ்சால மன்னன் திருமகள் திரௌபதியைத் திருமணஞ் செய்துகொண்டார்கள்.

இத்திருக்கோவில் திரௌபதியம்மன் கோவிலே. உபசாரமாக இவ்வம்மையின் கணவன்மார்களில் மூத்தவராகிய தருமராசருடைய திருக்கோவில் என்று அழைக்கப்படுகிறது. பஞ்சவர் ஐவர், பாஞ்சாலி ஆகிய இவ்வறுவரும் திருக்கோவிலில் அமர்ந்திருக்கிறார்கள்.

இப்பகுதியில் வேம்படியம்மன், குளத்தம்மன், செல்லி அம்மன் கோவில்களும் இருக்கின்றன.

23. சேத்துப்பட்டு

சேத்துப்பட்டு என்பது (சேத்து—வயல் ; பட்டு—சிற்றூர்) வயல் சூழ்ந்த சிற்றூர். சிலர் சேறு பட்டு என்று பிரித்து சேறு சூழ்ந்த சிற்றூர், சேற்றுப்பட்டு ; அது சேத்துப்பட்டு என மருவியது எனவும் கூறுவர்.

சுப்பிரமணிய சாமி கோவில்

எழும்பூரிலிருந்து புகைவண்டியிற் புறப்பட்டால் தென் மேற்கே முதலில் இருப்பது சேத்துப்பட்டு. இங்கே மூன்று சுப்பிரமணிய சாமி கோவில்கள் இருக்கின்றன. ஒன்று பூவிருந்தவல்லிப் பெருஞ்சாலையிலிருப்பது. அதில் முருகப் பெருமான் மூலவராக

மட்டும் இருக்கிறான். மற்றொன்று சுப்பராய கிராமணி தெருவில் இருக்கிறது. இது எழுந்தருள் மூர்த்தி (உற்சவர்) கோவில் என்று பெயர் பெறுகிறது. மூலவரும் எழுந்தருள் மூர்த்தியும் வேறு வேறிடங்களில் இருப்பதை நோக்கின் மூலவர் இருக்கிற இடத்திலிருந்த உற்சவர் ஏதோ காரணத்தால் பிரிந்து வந்து வேறொரு தெருவில் இடங் கொண்டார் என்பது ஊகித்தறிய இருக்கிறது. மற்றொரு சுப்பிரமணிய சாமி கோவில் ஒருவருக்குத் தனி உரிமையாகி அறநிலையச் சட்ட ஆட்சியிலிருந்து விலக்கப்பட்ட கோவிலாக இருக்கிறது.

24. பெரிய மேடு

அங்கே மாபள்ளத்தையும் அதனை ஒட்டி மேல்புறமிருக்கிற மேட்டுப் பாளையத்தையும் பார்த்தோம்; இங்கே மேல்புறம் கீழ்ப்பாக்கமும், கீழ்புறம் பெரிய மேடும் இருப்பதைக் காண்கிறோம். இந்தப் பகுதியிலே பூங்கா நகரும் (Park Town) புகை வண்டி நடுநிலையமும் (Central Station) இருக்கின்றன.

ஆஞ்சநேயர் கோவில்

பெரியமேட்டிலுள்ள கற்பூர முதலி தெருவில் இருக்கிறது ஆஞ்சநேயர் கோவில் (ஆஞ்சநேயர்—அனுமார்). இவரே சுக்கிரீவனுக்குத் தோழமையானதோடுகூட, சுக்கிரீவனுக்கும் இராமபிரானுக்கும் நட்பு உண்டாக்கி இராமபிரானுடைய தூதுவனாகி இலங்கைக்குச் சென்று அந்நகரைத் தீக்கு இரையாக்கிச் சீதையைக் கண்டு ஆறுதல் கூறி இராமபிரானை வானரப் படையோடு இலங்கைக்கு அழைத்து வந்து இராவணனைக் கொன்று சீதையை மீட்டுச் சென்று அயோத்தியில் இராமபிரான் முடிசூடுவதற்குப் பெருந்துணையாக இருந்தவர்; அதனால் இவர் சிறிய திருவடி என்று புகழப் பெறுகிறார். இவர் வாயு பகவானுக்கு அஞ்சனாதேவியிடத்திற் பிள்ளையாகப் பிறந்து சாகா வரம் பெற்றவர். இவருடைய திருக்கோவிலுக்குப் பக்கத்திலேயிருக்கிறது பிரசன்ன கோதண்டராமசாமி பசனை மந்திரம்.

பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோவில்

இத்திருக் கோவில் தொப்பாப் பிள்ளை தெருவில் இருக்கிறது. சிலருக்குக் காட்சியருளிக் கட்டளையிடுதலினாலும் விளக்கமான அருள் விளங்கும் தோற்றமுடைமையினாலும் வேங்கடேசப் பெருமாள் பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் என்று பெயர் பெற்றார். இவர் அலர்மேலு மங்கைத் தாயாருடன் இப் பகுதியினருக்குத் திருவருள் பாலித்து வருகிறார்.

இப் பகுதியில் பரசித்தி விநாயகர், வேதவிநாயகர், முத்து விநாயகர் முதலிய பிள்ளையார் கோவில்களும் சில அம்மன் கோவில் களும் இருக்கின்றன.

25. புரசைப்பாக்கம்

கங்காதரேசுவரர் கோவில்

புரசு மரங்கள் நிரம்பியுள்ள காட்டில் தோன்றிய ஊர் இது. ஆகையால் புரசைப்பாக்கம் எனப் பெயர் பெற்றது. புரசை மரத்திற்கு வேறு பெயர்கள் பலாசம், முருக்கு, கிஞ்சுகம் என்பன. பெருமான் கிழக்கே பார்க்கப் புரசை மரத்தடியில் எழுந்தருளியிருக்கின்றார். பகீரதனுக்காக ஆகாச கங்கையைச் சடை முடியில் தாங்கிப் பூமியில் விட்ட பெருமான் இவர். ஆதலின் கங்காதரன் எனப் பெயர் பெற்றார். இதற்கு அறிகுறியாக இத்திருக் கோவிலினுள்ளே யிருக்கும் கிணற்றில் நீர் எப்பொழுதும் ஓடிக் கொண்டேயிருக்கிறது. பெருமானுக்கு முன்னால் கூத்தப் பிரானும் அவருக்குக் கிழக்கே அம்மை பங்கசாட்சியும் (கமலக் கண்ணியும்) தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார்கள். கோவிலுக்கு வடபுறம் ஓர் அழகான திருக்குளம் இருக்கிறது. இங்கே பெருந் திருவிழா வைகாசி மாதம் நடைபெறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் திருநாட்டுத் தொகையில் பின்வருமாறு பாடுகிறார்.—

"தென்னூர் கைம்மைத் திருச் சுழியல் திருக்கானப்பேர்
பன்னூர் புக்குறையும் பரமர்க்கிடம் பாய் நலம்
என்னூர் எங்கள் பிரான் உறையும் திருத்தேவனூர்
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே."

புரிசை என்பது புரசைப்பாக்கம் என்று இவ்வூரார் கூறுகிறார்கள். புரிசை என்பது திருவண்ணாமலையின் அருகிலுள்ளதோர் பதி. புரசைப்பாக்கம் என்பது புரிசை என்று மருவாதே ? புரசை என்று தானே மருவும். ஆதலின் சுந்தரர் கூறியது புரசைப்பாக்கம் ஆகாது என்று ஆராய்ச்சி அறிஞர் முடிவு கூறுகின்றனர்.

இத் திருக் கோவிலைச் சோழ மன்னர் ஒருவர் கட்டினார். அவர் குலோத்துங்க சோழர். ஆஞ்சனேயரும், பகீரதச் சக்கரவர்த்தியும் இங்கே பெருமானைப் பூசித்தார்கள்.

இத் திருக் கோவிலின் முன்னுள்ள தெரு கங்காதரேசுவரர் கோவில் தெரு என்று பெயர் பெறும். இத் திருக்கோவிலுக்கு நேர் எதிரே கோதண்ட இராமசாமி கோவிலும், ஆஞ்சநேயர் கோவிலும் இருக்கின்றன. சோலையம்மன் கோவில் தெருவிலே சோலை அம்மனும் வரதராசப் பெருமாளும், வேளாளர் தெருவிலே சீனிவாசப் பெருமாளும் கோவில் கொண்டிருக்கின்றனர். சீனிவாசப் பெருமாள் கோவில் மிகச் சிறியதுதான்.

26. குயப்பேட்டை

கந்தசாமி கோவில்

குயவர்கள் கூடி வாழ்ந்த பேட்டை இது. இது குசப்பேட்டை யென்றும் வழங்கப்படுகிறது. இங்கே மொட்டை அம்மன் திருக் கோவிலோடு கந்தசாமி திருக்கோவிலும் சேர்ந்திருக்கிறது. வள்ளி தெய்வயானையுடன் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இப்பேட்டையில் செல்வ விநாயகர், வேம்படி விநாயகர், வினை தீர்த்த விநாயகர் முதலிய பல பிள்ளையார் கோவில்களிருக்கின்றன. சின்ன மொட்டையம்மன், முத்துமாரியம்மன், எல்லையம்மன் முதலிய சில அம்மன் கோவில்களும் உள.

27. சூளை

சூளை வைத்த இடம் சூளையென்றும் சூளைமேடென்றும் வழங்குகிறது. இது புரசைப்பாக்கத்திற்குக் கிழக்கே இருக்கிறது.

சுந்தரராசப் பெருமாள் கோவில்

சுந்தரராசப் பெருமாள் அம்மை அலர்மேலு மங்கைத் தாயாருடன் எழுந்தருளியிருக்கின்றார்; ஆஞ்சநேயரும் உடன் தொழுது நிற்பதோடு தன்னை வணங்கும் அன்பர்களுக்கும் அருள் பாலிக்கின்றார் பக்கத்திலுள்ள அங்காளம்மன் கோவில் தெருவில் ஆஞ்சனேயர் தனிக் கோவிலில் எழுந்தருளி நிற்கின்றார். அவருக்கு அருகே வேணுகோபாலசாமியும் தனிக் கோவிலில் இருக்கிறார். உபாத்தியாயர் கந்த பிள்ளை தெருவில் சீனிவாசப் பெருமாள்கோவில் ஒன்றும் இருக்கிறது. இங்ஙனமாக இப் பேட்டையில் மூன்று பெருமாள் கோவில்கள் தனித்தனியே இருக்கின்றன. அவதானம் பாப்பையர் தெருவில் சிதம்பரேசப் பெருமான் கோவில் இருக்கிறது. வேறொரு தனிக் கோவிலில் கோதண்ட இராமசாமி இருக்கிறார். சாத்தன்ன நாயக்கன் தெருவில் அங்காள பரமேசுவரி கோவில் இருக்கிறது. காசிவிசுவநாதப் பெருமான் ஒரு தனிக் கோவிலில் இருக்கின்றார்.

28. பிரம்பூர்

இது அக்காலத்தில் மூங்கிலடர்ந்த இடமாக இருந்திருத்தல் கூடும்; அதனால் பிரம்பூர் என்ற பெயர் அமைந்தது போலும்! இதில் சிறு சிறு கோவில்களே இருக்கின்றன. பல பிள்ளையார் கோவில்கள், இலக்குமி அம்மன் என்றொரு அம்மை கோவில் இருக்கிறது. அத்தெரு அவ்வம்மை பேரால் அமைந்திருக்கிறது.

29. வியாசர்பாடி

இரவீசுவரர் கோவில்

பாடி என்பது சிற்றூர். இது வியாசர் பேரால் அமைந்தது. இதில் கரபாத்திர சிவப்பிரகாச முனிவர் மடம் இருக்கிறது. இரவி-சூரியன். சூரியன் கும்பிட்ட ஈசுவரன் இரவீசுவரன், இரவீசுவரர் கோவில் ஒன்று இங்கே மூர்த்தி ஐயங்கார் தெருவிலிருக்கிறது.

30. வண்ணாரப்பேட்டை

அருணாசலேசுவரர் கோவில்

இத்திருக்கோவில் திருவொற்றியூர் போகும் பெருஞ்சாலையில் மேற்கு வரிசையிற் கிழக்கே பார்க்க இருக்கிறது. கருவறையில் அருணாசல ஈசுவரர் சிவலிங்க வடிவமாக எழுந்தருளியிருக்கிறார். தெற்குச் சுற்றில் பிள்ளையாரும் சமையகுரவர் நால்வரும் இருக்கிறார்கள். தென்மேற்கு மூலையில் பெருமான் பெருமாட்டி முதலியோருடைய எழுந்தருள் மூர்த்திகள் இருக்கின்றன. வடது புறம் அம்மை திருக்கோவில் இருக்கிறது. அதில் அம்மை அபீதகுசாம்பாள் காட்சியருள்கின்றாள். அம்மைக்கு முன் சிங்கமும் பலிபீடமும் இருக்கின்றன. வடபுறம் தெற்கே பார்க்கச் சிவகாமியம்மையுடன் கூத்துப் பெருமான் கூத்துக் காட்சி அருள்கின்றான்; மாணிக்கவாசகர் அருகிலிருக்கின்றார்.

இங்கே பெருந்திருவிழா திருகார்த்திகைத் திருவிழா; அது பத்து நாள் நடைபெறுகிறது.

பக்தவத்சலப் பெருமாள் கோவில்

இத் திருக்கோவில் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் இருக்கிறது. பக்தவத்சலப் பெருமாள் நடுநாயமாகக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார். அடியார்களிடத்தில் மிக்க பேரன்புடைவர் இவர். அவர் திருமுன்பு கருடாழ்வார் அவரைப் பார்த்துக் கொண்டே நிற்கிறார். அவரையடுத்துக் கீழ்புறம் கொடிமரமும் பலிபீடமும் இருக்கின்றன. பெருமாளுக்கு வலதுபுறம் சீவத்சவல்லித் தாயார் அமர்ந்திருக்கின்றாள். இத்திருப் பெயரின் பொருள் "என்னைப் பெற்ற தாயார்" என்பது. பெருமாளுக்கு வடபுறம் ஆண்டாள் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கின்றாள். பங்குனி மாதம் திருவோணத்தில் ஒன்பதாம் திருநாளாகக் கொண்டு பெருவிழா நடைபெறுகிறது இத்திருக்கோவிலில்.

இப்பேட்டையில் நல்லப்ப வாத்தியார் தெருவில் கசேந்திர வரதராசப் பெருமாள் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்.

கசேந்திரன்—யானைக்கு அரசு. அது பெருமாளைப் பூசிக்கத் தாமரை மலர் கொண்டு வருவதற்காக ஒரு குளத்தில் இறங்க, பெரிய முதலை யொன்று அதன் காலைக் கௌவிக் குளத்தினுள்ளே இழுத்தது; யானை "ஆதிமூலமே" என்று அலறிற்று. பெருமாள் கருடன் மீது ஓடோடியும் வந்து தம் சக்கராயுதத்தை ஏவி முதலையைக் கொன்று யானையைப் பாதுகாத்தார்.

இப்பேட்டையில் பல பிள்ளையார் கோவில்களும் அம்மன் கோவில் களும் இருக்கின்றன.

31. இராயபுரம்

அங்காள பரமேசுவரி கோவில்

இத் திருக் கோவில் ஆதாம்சாகிபு தெருவில் இருக்கிறது. அம்மை அங்காள பரமேசுவரி கிழக்கே பார்க்க அருள் ஒழுகும் திருமுகத் துடன் அடியார்களுக்குக் காட்சியருள்கின்றாள். அம்மை திருமுன் சிங்கமும், பலிபீடமும், கொடிமரமும் இருக்கின்றன. உட்சுற்றில் தென்மேற்கு மூலையில் பிள்ளையாரும், வடமேற்கு மூலையில் வள்ளி தேவயானையோடு முருகப் பெருமானும், தென் கிழக்கு மூலையில் வீரபத்திரரும் இருக்கின்றனர். மேற்குச் சுற்றில் அம்மைக்கு நேர் பின்புறம் ஆதிசத்தி இருக்கின்றாள். கோவிலுக்குத் தென்புறம் வெளிச்சுற்று வருவதற்கு ஒரு வாசல் இருக்கிறது. அதன் எதிரே காசி விசுவநாதப் பெருமான் விசாலாட்சியுடன் எழுந்தருளியிருக் கின்றார். வெளிச் சுற்றில் வடமேற்கு மூலையில் பாவாடைராயன் இருக்கிறான். வடக்குச் சுற்றில் கீழ்புறமாக ஒருசிறு திருக்குளம் இருக்கிறது.

பத்திரகாளி அம்மன் வீரபத்திரசாமி

கிருத்தவ ஆசிரியர் ஒருவர் இராயப்பர் என்ற பெயரோடு பொது மக்களுக்குப் பெருந்தொண்டு செய்து இப் பேட்டையில் வாழ்ந்திருந் தார். அதனால் இப்பேட்டை அவர் பெயரால் இராயப்பபுரம் என்று

பெயரிடப்பெற்றது ; அது இன்று இராயபுரம் என்று வழங்கி வருகிறது. சென்னை மாவட்டத்தின் மற்றொரு பகுதி இவர் பெயரால் இராயப் பேட்டை என்று அழைக்கப்பெறுகிறது.

வீரபத்திரரையும், பத்திரகாளி அம்மையையும் பற்றி முன்னால் விவரமாக எழுதியிருக்கிறோம். அவர்கள் இருவரும் கணவனும் மனைவியுமாவர். தக்கனுக்குத் துணையாக இருந்த தேவர்களை அடித்து நொறுக்கிக் கசக்கிப் பிழிந்து தகர்த்துத் தக்கன் வேள்வியைச் சிதைத்த வீரர்கள் இவர்கள் ; ஆதலின் வீரபத்திரர் வீரமாகாளி என்று புகழ்ப் பெயர் கொண்டனர். இத்திருக்கோவில் குமாரசாமி சந்தில் இருக்கிறது.

சிவசுப்பிரமணியசாமி கோவில்

இத் திருக்கோவில் கிழக்கு மாதா கோவில் தெருவில் இருக் கிறது. முருகப் பெருமான் வள்ளி தேவயானையுடன் எழுந்தருளி யிருக்கின்றார். இவர் கலியுக வரதர்.

32. கொருக்குப்பேட்டை

சீனிவாசப்பெருமாள் கோவில்

இது இப்பேட்டையில் கோகிரேன் பேசின் தெருவில் இருக்கிறது. இங்கே அலர்மேலு மங்கைத் தாயாருடன் சீனிவாசப் பெருமாள் காட்சியருள்கின்றார். இது ஒரு சிறு கோவில்.

33. முத்தியாலுப்பேட்டை

கச்சபேசுவரர் கோவில்

இலிங்கச் செட்டித் தெரு வடகோடியிலுள்ள தருமராசர் தரும விநாயகர் கோவிலில் முத்தியாலு அம்மன் மிக்க புகழுடன் எழுந்தருளியிருக்கின்றாள். அவ்வம்மை பெயராலேயே இப்பேட்டை அமைந்திருக்கிறது. இதில் அரண்மனைக்காரத் தெருவில் கச்சபேசுவரர் சௌந்திராம்பிகையுடன் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்.

சென்னையில் கிழக்கிந்தியக் கும்பெனியாருக்கு மொழி பெயர்ப்பாளராக இருந்தார் தளவாய் செட்டியார் என்னுஞ் சிவனடியார். அவர் நாடோறும் காஞ்சியம்பதிக்குச் சென்று அங்கே பலாச மரத்தின் கீழே தானே முளைத்தெழுந்த கச்சபேசப் பெருமானைச் சுந்தரத் தாயாருடன் கும்பிட்டு வந்தார். பலாசம் என்பது புனமுருக்க மரம். பகலிற் பணி புரிவது சென்னையில் ; இரவிற் கும்பிடுவது காஞ்சிக் கச்சபேசுரரை. ஒருநாள் காஞ்சியிற் பெருமானைக் கும்பிட்டுக் கொண்டிருந்தபோது பெருமழை பிடித்து விடிய விடியக் கொட்டிற்று. செட்டியார் "சென்னைக்குச் செல்ல முடியவில்லையே, காத்தருளும் பெருமானே" என்று உள்ளம் உருகிப் போற்றினார். பெருமான் அவர் கனவிலே தோன்றி, "அஞ்சாதிரு" என அருள் மொழி தந்தார். மறுநாள் செட்டியார் கச்சபேசுவரரை வணங்கிக் கொண்டு சென்னைக்கு வந்து அலுவலகம் சென்றார். இவரைக் கண்ட பெரிய அதிகாரிகள் யாரும் இவர் முந்திய நாள் ஏன் வரவில்லை என்று வினவினாரல்லர். செட்டியார் தாம் அலுவல் பார்க்கும் இடத்திலே சென்று அமர்ந்தார் ; தாம் நாடோறும் எழுதும் கணக்குச் சுவடியை விரித்தார் ; அதில் சென்ற நாள் தாம் இருந்து எழுதியதுபோல யாரோ ஒருவர் தம் கணக்குகளை ஒழுங்காகப் பதிந்திருப்பதைக் கண்டார் ; இன்பக் கண்ணீர் வடித்தார், "கச்சபேசப் பெருமானே ! அடியேன் மிக மிகச் சிறு தொண்டன் ! ஒன்றுக்கும் பற்றாத ஏழை; உம்முடைய திருவருளை எப்படிப் புகழ்வேன் ? இச் சிறுவனைப் போலத் திருவுருக்கொண்டு இங்கே எழுந்தருளிவந்து ஏழையேன் செய்யவேண்டிய பணிகளையெல்லாம் செய்தமைத்தீர்போலும்!" என்று உள்ளம் கனிந்து உருகினார். கும்பெனி அதிகாரிகளும் நிகழ்ந்த செய்திகளை அறிந்து பெரிதும் வியப்படைந்தார்கள். அன்றிரவு பெருமான் செட்டியாருடைய கனவிலே தோன்றி, "அன்பனே ! நீ இங்ஙனம் நாள்தோறும் காஞ்சிக்கு வருவது எளிதல்லவே ; ஆதலின் சென்னையிலேயே ஒரு திருக்கோவில் அமைத்து என்னை வழிபடுவாயாக" என்று கூறி மறைந்தருளினார். செட்டியார் எழுந்தார் ; தாம் கண்ட கனவைத் தம் திரு மனைவியாரிடமும் உற்றார் உறவினரிடமும் தெரிவித்து ஆடினார் பாடினார் இரவெல்லாம். விடிந்ததும் இச் செய்தியைக் கும்பெனிப் பெரிய துரையிடம் அறிவித்தார். துரை மிக்க அன்புடன் வேண்டுவன எல்லாம் செய்வதாக வாக்குரைத்தார். உடனே செட்டியார் மகிழ்ந்து அவருக்கு நன்றிகூறி நல்ல நாள் பார்த்து அரண்மனைக்காரத் தெருவில் கச்சபேசப் பெருமான் திருக்

கோவிலைக் கட்டத் தொடங்கினர். கி.பி. 1725-ல் தொடங்கியது திருப்பணி. தக்க சிற்பிகளுடைய துணையினால் கருவறை, அர்த்தமண்டபம் மாமண்டபம் இவை சிற்பநூல் முறைப்படி கட்டப்பெற்று கி.பி. 1728-ல் நிறைவு பெற்றன. அப்போது செட்டியார் "இத்திருக் கோவிலில் நிலைபெறுத்துவதற்குச் சிவலிங்கம் வேண்டுமே பெருமானே! தக்கதொரு இலிங்கத் திருமேனியை அடியேன் பெறும் வகை அருள் செய்யும்" என்று சிந்தித்திருந்தார். அப்போது அவர் எதிர்பாராதவண்ணம் அந்தண முனிவர் ஒருவர் அவரிடம் மாசற்ற மரகதப் பாண லிங்கம் ஒன்றைக் கொடுத்து மறைந்தருளினர்: செட்டியார் உவகைக் கடலில் மூழ்கி அந்த மரகத இலிங்கத்தை இத்திருக் கோவிலில் நிலைபெறுத்திக் கண்களைப் பெற்றதனாலாய பயனைப் பெற்றார்.

கச்சபம்—ஆமை. திருமால் ஆமை உருக்கொண்டு பூசித்த ஈசன் கச்சபேசன். திருமால் ஆமை உருக் கொண்டு சிவபெருமானைப் பூசித்த வரலாற்றைக் காஞ்சிப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது:

மாயன் வழிபட்டது

"முன்னொரு பிரம கற்பத்திடை நாரணன் மூரிநீர்
மன்னு மந்தரமலை ஆமையாய்த் தாங்கி வார்கடல் கடைந்(து)
இன்ன முதஞ் சுரர்க் கீந்தபின் வெஞ்செருக் கெய்தியாங்(கு)
அன்னமுந்நீர் முழுதுழக்கினன் உலகெலாம் அஞ்சவே."

"அச்ச நீத்தாருயிர் உய்வகை அருள்சுரந்தாங் குறீஇக்
கச்சபத்தின் உயிர்செற்றதன் ஓட்டினைக் கதுமென
நச்சிய வெண்தலை மாலிகை நடுவுறக் கொண்டனன்
பச்சிளங் கிள்ளைபால் வீற்றிருந்தருளிய பண்ணவன்."

"இப்பெரும் பிழைதவிர்ந் துய்யுமா நாரணன் எம்பிரான்
வைப்பெனுங் காஞ்சியிற் சோதிலிங்கத்தினை வழிபடூஉ
மெய்ப்படும் அன்பினால் இரந்திரந் தேத்தலும் விடைமிசைத்
துப்புறழ் செஞ்சடைத் தோன்றல் அங்கவன் எதிர்தோன்றினன்"

"காண்டலுங் கண்கள் நீர்வார்தரக் கரையறு காதலிற்
பூண்ட பேரன்பினால் வீழ்ந்து வீழ்ந்திறைஞ்சினன் போற்றினான்
ஆண்தகாய்! ஆருயிர்த் தலைவனே! அங்கணா! அடியனேன்
வேண்டுவ யாவையும் தந்தருள் என்றெதிர் வேண்டினான்."

(மாதவச் சிவஞான முனிவர் திருவாக்கு—கச்சபேசப்படலம்)

இத்திருக்கோவிலில் சிவலிங்கப் பெருமானுடைய திருவமைப்பும் அம்மை திருவுருவக் காட்சியும் ஏனைய அமைப்புக்களும் நேரிற் சென்று கண்குளிரக் கண்டு இன்புறும் பெருமையன. இத்திருக் கோவிலிற் புதிதாக அமைந்துள்ள சிற்பக் காட்சிகளிற் சிலவற்றைக் கூறுவோம். ஆளுடைய நம்பிகள் திருவெண்ணெய் நல்லூரில் ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்டு ஆட்கொண்ட பெருமானைக் கொண்டே இரு மணத்தைக் கொண்டருளிய அற்புதமும், வெங்கரா உண்ட பாலனை வரவழைத்தருள் புரிந்ததும், வெள்ளை யானையின் மீது சென்ற நம்பியாரூரரைத் தொடர்ந்து குதிரையின்மீது சேரமான் பெருமாள் கயிலைக்குச் சென்று ஞான உலாப் பாடிய காட்சியும்; சிவனடியே சிந்திக்குந் தவமுதல்வர் திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பாலுண்டு அருள்பெற்ற காட்சியும், இருள்நீங்கி அருள்சுரக்கும் திருநாவுக்கரசர் திலகவதியார் தொண்டின் சிறப்பும், தக்கிண கைலாச தரிசனக் காட்சியும், சுத்த மொழியான மணிமாலை சாத்திய ஆளுடைய அடிகளுக்கு மாணிக்கவாசகர் என்னும் நாமம் சூட்டிப் பெருமான் அருள்புரிந்த காட்சியும்; பஞ்சபூத சேத்திர தெரிசனமும், காசி, இராமேசுவர நவலிங்க தரிசனமும், அபய குலசேகர சோழ மாமன்னர் திருநாரையூரிற் பிள்ளையார் திரு வருள்பெற்று விளங்கிய நம்பியாண்டார் நம்பி வழியாகச் சிதம்பரம் மேலைக் கோபுரவாயிலில் ஏழு திருமுறைகளையும் மூவர் கையடை யாளத்துடன் எடுத்ததும், திருமுறையைப் பண் வகுத்துத் தந்ததும், அல்லல் தீர்ந்து உலகுய்ய மறையளித்த திருவாக்காற் பெருமான் தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று அடியெடுத்துக் கொடுப்பச் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை பாடியருளிய அற்புதக் காட்சியும், திருக் கயிலைக் காட்சியும், சைவசந்தானாசாரியர் திருவுருவங்களும் முதலிய இன்னும் பல அற்புதச் சித்திரங்களும் நேரிற்கண்டு களித்து இன்புறுக என அனைவரையும் வேண்டுகின்றோம்.

இத் திருக்கோவிலிலுள்ள ஒன்பது கோள்களின் (நவக்கிரக) காட்சி கண் கொள்ளாப் பெருமையது.

இவ்வகைச் சிற்பக் காட்சிகளை அமைத்துத் திருக்குடமுழுக்கு நடைபெற்றது சுபகிருது ஆண்டு ஆனி மாதம் 24-ம் தேதி (8–7–1962) ஞாயிற்றுக்கிழமை. இங்ஙனமாகிய திருப்பணி செய்தமைத்தவர் சாம்பசிவ சிவாசாரியார்.

இக் கோவிலின் உள்ளே கச்சியப்ப சிவாசாரியார், அரதத்த சிவாசாரியார் முதலிய பெரியார் திருவுருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தருமராசர், தரும விநாயகர் கோவில்.

இந்தத் திருக்கோவில் இலிங்கச்செட்டித் தெருவின் வடகோடியி லிருக்கிறது. தருமராசர் கண்ணபிரானுடனும், திரௌபதிதேவி யுடனும் இத்திருக்கோவிலில் இருக்கின்றார். இத் திருக்கோவிலோடு சேர்ந்திருக்கும் பிள்ளையார் தரும விநாயகர் எனப்பெறுவார். தரும புத்திராதியர் ஐவரும் நடந்துகொண்ட முறையும், பாஞ்சாலியின் கற்பு நிலையும், கண்ணபிரான் அவர்களுக்குச் செய்த துணையும், அப்பிரான் தன் தோழனாகிய அர்ச்சுனனைத் திருக்கயிலைக்கு அழைத்துச்சென்று சிவபரம்பொருளை நோக்கித் தவமிருந்து பாரதப்போர் முடிப்பதற்கு முதன்மையான பெருந்துணையாக இருந்த பாசுபத அத்திரத்தைத் திருவருளோடு பெறச்செய்த சீலமும் உலகத்தார் அறிந்து நலம் பெறுமாறு தருமர் கோவில் ஆங்காங்கு அமைந்து விளங்குகின்றது. சென்னை மாவட்டத்தில் பல பேட்டைகளில் தருமர் கோவில் இருக் கிறது. இக் கோவிலில் தரும விநாயகர் எழுந்தருளியிருப்பதும் இப்பேட்டைக்குப் பேர் தந்தருளிய முத்தியாலு அம்மன் கோவில் கொண்டிருப்பதும் மிகமிகப் பொருத்தமே. இத்திருக்கோவிலில் திருவாயிலுக்கு நேரே காட்சி அருள்பவர் வள்ளி தேவயானையோடு கூடிய முருகப்பெருமான். அவருக்கு வடபுறம் மீனாட்சி அம்மையோடு சொக்கலிங்கப்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இதில் வைகாசி மாதம் பெருவிழா நடைபெறுகிறது.

மல்லிகேசுவரர் கோவில்

இலிங்கச் செட்டித் தெருவில் தருமராசர் கோவிலுக்குத் தென் புறம் இருப்பது மல்லிகேசுவரர் கோவில். இது இலிங்கச்செட்டித் தெருவினைப் பார்த்து அமைந்து அத்தெருவின் நெடும்போக்கைத் தடுத்துக் கிழக்கே திரும்பிப் பின் வடக்கே கோவிலை ஒட்டிப் போகும்படி செய்து விட்டது. சந்நிதி விநாயகர் என்பவர் கோவிலின் முன்பு மேற்குப் புறம் இருக்கிறார். அதனையடுத்துப் பதினாறுகால் மண்டபம் இருக்கிறது. அதற்கு அப்புறம் இருப்பது திருக்கோபுரம். சந்நிதி விநாயகர் கோவிலும் பதினாறுகால் மண்டபமும் 1897 ஏவிளம்பி ஆண்டு கார்த்திகை மாதம் பத்தொன்பதாம் தேதி மாணிக்கஞ் செட்டியாரால் கட்டப்பெற்றன. கோபுரத்தின் அடிநிலை கட்டத் தொடங்கியது 1876 சனவரி 28. அடிநிலை கட்டிமுடிந்தது 1888 சனவரி 28. இதனைக் கட்டிய அம்மையார் புட்டாளம்மாள் என்ற வேதவல்லி அம்மை. இந்தக் கோபுரத்தை எழுநிலைக் கோபுரமாகக் கட்டி 1923 சூலை 5-ம் தேதி நிறைவுபெறச் செய்தவர் மாங்காடு வேங்கடாசலம் செட்டியார் மகன் எல்லப்பச் செட்டியார். கோவில் மண்டபங்கள் அனைத்தும் பல அன்பர்களாற் கட்டப்பெற்றன. கோபுரத்துக்கு நேரே காட்சி தருபவர் கூத்துடைப் பெருமான். மல்லிகேசுவரர் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு முன்னால் வெளியிலிருக்கும் சிறு மண்டபத்தையும் பெரிய கதவையும் 1925-ல் புட்டம்மாள் என்பவள் கட்டினாள்.

மரகதவல்லித் தாயார் தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள். இங்கே புதிதாகக் கோவிலின் உள்ளே தென்கிழக்கு மூலையிலே ஒன்பது கோள்கள் அமைந்துள்ளன. கோளரசனாகிய சூரியன் கிழக்கே பார்க்க அருணன் ஓட்டும் எழு குதிரைத் தேரில் நடுநாயகமாக எழுந்தருளியிருப்பதும் அவனைச்சூழ ஏனைய எட்டுக் கோள்களும் அமைந்திருப்பதும் மிக அரிய காட்சி. இதனைவிடச் சிறப்பாக ஒன்பது கோள்கள் அமைந்திருப்பது நாம் மேலே கண்ட கச்சபேசுரர் திருக்கோவிலில்தான். இக்கோவிலின் தென்மேற்கு மூலையில் நான்கு புறமும் படிகள் அமைந்த திருக்குளம் இருக்கிறது. இங்கே பங்குனி உத்தரம் பூரணையில் ஆராட்டு நடைபெறும் எழு நாட் பெருவிழாக் கொண்டாடப் பெறுகிறது.

இந்த இடம் முன்பு மல்லிகை வனமாக இருந்தது. மல்லிகைச் செடியின் கீழே முளைத்தெழுந்த பெருமானுதலால் மல்லிகேசுவரர் என்ற திருப்பெயரை இப்பெருமான் பெற்ருர்.

வேணுகோபாலசாமி கோவில்

இத் திருக்கோவில் இலிங்கச் செட்டித் தெருவில் இருக்கிறது. மூலவர் கண்ணபிரான் கிழக்கு முகமாக எழுந்தருளியிருக்கிருர். அவருக்கு வலதுபுறம் உருக்குமினி தேவி திருக்கோவில் இருக்கிறது. கோவிலுக்கு மேல்புறம் இருப்பது திருக்குளம். வடமேற்கு மூலையில் பூதேவி சீதேவியாருடன் சீனிவாசப்பெருமாள் மூலவரும் எழுந்தருள் மூர்த்தியுமாக இருக்கிருர். அவருக்குத் தென்புறம் ஆண்டாள் இருக்கிருள். அதற்குத் தென்புறம் சீதை இலக்குவரோடு இராம பிரான் மூலவரும் எழுந்தருள் மூர்த்தியுமாக இருக்கிருர். இங்கே சித்திரை மாதம் உரோகிணியில் தொடங்கிப் பத்து நாள் பெருவிழா நடைபெறுகிறது. எழாம் நாள் திருத்தேர்.

சண்முகப்பிள்ளையார் கோவில்

சண்முகப் பிள்ளையார் மூலவராக எழுந்தருளியிருக்கிருர். அவர் கோவிலை ஒட்டி வடபுறம் சண்டேசுவரர் இருக்கிருர். கோவிலின் தென் புறம் பதினுறுகால் மண்டபம் இருக்கிறது. தென்மேற்கு மூலையில் வள்ளி தேவயானையோடு முருகப்பெருமானும் அவரையடுத்து வடபுறம் தனவிருத்தி அம்மையோடு வில்வநாதப் பெருமானும் எழுந் தருளியிருக்கிருர்கள். வடபுறம் தெற்கே பார்க்க இருக்கும் மண்டபத்தில் பின்வரும் எழுந்தருள் மூர்த்திகள் இருக்கின்றனர் :—

1. சிவபெருமான் அம்மையோடு.
2. வள்ளி தேவயானையோடு முருகன்.
3. சித்தி புத்திகளோடு பிள்ளையார்.
4. சிவகாமி மாணிக்கவாசகருடன் கூத்தர்.
5. சூலமும் அங்காளம்மனும்.

திருவாயிலுக்கு வடபுறம் சமயகுரவர் நால்வரும் திருக்கோவில் கொண்டிருக்கின்றனர்.

நடராசர் கோவில்

இலிங்கச் செட்டித் தெருவில் மேற்கே பார்க்கச் சிவகாமி அம்மை யுடன் கூத்தப்பெருமான் கருவறையில் மூலவராக எழுந்தருளியிருக் கின்றார். வடமேற்கு மூலையில் நடராசர், சிவகாமி, பிள்ளையார், வள்ளி தேவயானையோடு முருகன் இவர்கள் எழுந்தருள் திருமேனிகள் இருக்கின்றன. அதற்குக் கிழக்கே சிவலிங்கப் பெருமான், நால்வர் இருக்கிறார்கள்.

தென்மேற்கு மூலையில் பள்ளி கொண்ட அரங்நாதனும் பண்டரி நாதரும் வள்ளி தேவயானையோடு கூடிய முருகப்பெருமானும் எழுந்தருளியிருக்கின்றார்கள்.

காளிகாம்பாள் கமடேசுவரர் கோவில்

இத் திருக்கோவில் மேற்கே பார்க்க அரமனைக்காரத் தெருவி லிருக்கிறது. கமடம்—ஆமை. திருவாயிலுக்கு நேரே கமடேசுவரி இருக்கிறாள். இவ்வம்மை காளி தேவியே. வடபுறம் கமடேசுவரர் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளியிருக்கிறார். ஆமையாகித் திருமாலினால் வழிபடப் பெற்ற மூர்த்தி இவர். வடமேற்கு மூலையில் முருகப்பெருமான் வள்ளி தேவயானையுடன் எழுந்தருளியிருக்கிறார். அவருக்குமுன் நல்ல விரிவுரை மண்டபம் இருக்கிறது. தென் மேற்கு மூலையில் பிள்ளையார் இருக்கிறார். மேற்கு நோக்கி எழுந் தருளியிருக்கின்ற அம்மை கமடேசுவரியின் தென்பால் அம்மை இராசேசுவரி கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள். அம்மைக்கு முன் நந்தியும் பலி பீடமும் கொடிமரமும் உள. இவ்வம்மைக்குப் பெருந்திருவாசல் தம்புச் செட்டித் தெருவிலிருக்கிறது.

இருட்டிணன் கோவில்

பவளக்காரத் தெருவில் இருக்கிறது இத் திருக்கோவில். கண்ண பிரான் சிறப்புறக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். மார்கழி மாதம் இராப் பத்தும் பகற் பத்தும், பிற மாதங்களில் உரிய திருவிழாக்களும் இங்கே முறையே நடக்கின்றன.

34. கொத்தவாற் சந்தை

கன்னிகாபரமேசுவரி கோவில்

இத் திருக்கோவிலில் முதன்மைத் தெய்வம் கன்னிகா பரமேசுவரி. இந்த அம்மை ஒரு வைசிய குடும்பத்திலே பிறந்திருந்தாள். அவளுடைய பேரழகைக் கண்டு விட்டுணு வர்த்தனன் என்ற அரசன் அவ்வம்மையைத் திருமணம் செய்துகொள்ள ஆசைகொண்டு வற்புறுத்தினன். அம்மை அதற்கிணங்காமல் தீயிற் குதித்துத் தெய்வமாயினார். அம்மை சினத்தால் அரசன் அழிந்தான். அது முதல் அம்மை கன்னிகா பரமேசுவரி என்ற தெய்வமாக வழிபடப் பெறுகிறாள். அம்மை வரலாற்றைக் குறிக்கின்ற முப்பது படங்கள் அழகாக எழுதப்பெற்றுக் கோவிலில் வைக்கப்பெற்றிருக்கின்றன.

இவ்வம்மையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்: முன் கிருத யுகத்தில் இவ்வம்மையே மகிடாசுரனைக் கொன்றாளென்றும், திரேதாயுகத்தில் அரச குலத்தை அழித்த பரசுராமனுக்கு இவ்வம்மை இரேணுகாதேவி என்ற பெயரோடு தாயாயினாள் என்றும், துவாபர யுகத்தில் கம்சனைக் கொன்ற கண்ணனுக்குத் தங்கையாக யசோதை வயிற்றிற் பிறந்த காளிகாதேவி யென்றும் இக் கலியுகத்தின் குசும்பச் செட்டியின் வீட்டில் வாசவகன்னிகையாகப் பிறந்து கொடுங்கோல் நடாத்திய விட்ணு வர்த்தன மன்னனைக் கொன்று கயிலைக்கு எழுந்தருளின பரமேசுவரி கன்னிகா பரமேசுவரி என்றும் வரலாறு கூறப் பெறுகிறது.

ஒன்பது கோள்களின் அருகேயுள்ள கல்வெட்டில் இத் திருக்கோவில் கி.பி. 1769-ல் கட்டப்பெற்றது என்ற குறிப்பு இருக்கிறது. அதற்கு முன் இவ்விடம் கோமுட்டி தோட்டம் என்றும் கொத்தவால் சாவடி என்றும் காய்கறித் தோட்டம் என்றும் பெயர் பெற்றிருந்தது. இக் கோவிலின் ஆட்சியைப்பற்றி 1895-ல் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி ஆரியவைசிய இனத்தார் எழுவருடைய ஆட்சியிலிருந்து வருகிறது.

அம்மைக்கு விசயதசமித் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. மரகத லிங்கம் ஒன்று இங்கே இருக்கிறது. அதற்கு உருத்திராபிடேகம் நடந்து வருகிறது. மேலும் கந்த சட்டித் திருநாளும் இராமநவமி விழாவும் நடைபெறுகின்றன. இத் திருக்கோவிலுக்கு ஆண்டுக்கு மூன்று இலக்கம் ரூபாவுக்கு மேல் வருவாய் வருகிறது.

35. பெத்துநாய்க்கன்பேட்டை

ஆதிகேசவப் பெருமாள் கோவில்

இப் பேட்டையிலுள்ள ஆச்சாரப்பன் தெருவில் இக் கோவில் இருக்கிறது. ஆதிகேசவப் பெருமாள் சீதேவி பூதேவியுடன் எழுந் தருளியிருக்கின்றார். இங்கே உடையவரும் இருக்கிறார். இதற்கு மேல் புறமிருக்கிற வரதாமுத்தியப்பன் தெருவில் மேற்கே பார்க்கப் புது வரதராசப் பெருமாளும் புது உடையவரும் காட்சியருள் கின்றார்கள். வைகானச ஆகமப்படி பூசை நடைபெறுகின்றது. பெருமாளுக்குச் சைத்திரா திருவோணத்தில் தீர்த்த வாரியாகும் ஒன்பது நாள் திருவிழாவும் உடையவருக்குப் பத்தாம் நாள் திரு வாதிரைச் சாத்துமுறையும் நடைபெறுகின்றன. இக் கோவிலின் முகப்பில் தென்புறம் அனுமாரும் வடபுறம் பிள்ளையாரும் காட்சி தருகின்றனர்.

சென்ன மல்லீசர் சென்னகேசவப் பெருமாள் கோவில்

இக் கோவில்கள் தேவராச முதலி தெருவில் இருக்கின்றன. இவை பூக்கடைக் கோவில் என்றும் பெயர் பெறுவன. இவ்விரண்டு கோவில்களும் பக்கத்தில் பக்கத்தில் அம்மையப்பர் காட்சியை அறி வுறுத்துகின்றன. முதலிற் சென்னகேசவரர் கோவிலை வழிபடு வோம். இரண்டு கோவில்களுக்கும் பொதுவான திருக்குளம் இருக் கிறது. உள்ளே சென்றவுடன் வடக்கு நோக்கிய அலங்கார மண்டபம் இருக்கிறது. தெற்குச் சுற்றில் முதலில் ஆயிரம் திருமுடிகளையும் இரண்டாயிரம் திருக் கண்களையுமுடைய சக்கரத்தாழ்வார் இருக்கிறார். அவருக்குப் பின்புறத்தில் தெற்கு நோக்கி அழகியசிங்கர் காட்சி யருள்கின்றார். சிறிது தள்ளிப் போனால் சிறிய திருவடியாகிய ஆஞ்ச நேயர் மேற்கு நோக்கியிருக்கிறார். அங்கே அவரையடுத்து ஆழ்வார் கள், திருக்கச்சி நம்பிகள், பட்டர்பிரான் வேதாந்ததேசிகர் ஆகி யோர் இருக்கிறார்கள். மேற்குச் சுற்று வருவோம். முதலில் சீதை இலக்குவன் அனுமன் ஆகிய இவர்களோடு இராமபிரான் எழுந் தருள் மூர்த்தியாகவும் அமர்ந்திருக்கிறார். அதனையடுத்து அம்மை

செங்கமலவல்லித்தாயார் திருக்கோவில் இருக்கிறது; கும்பிடுவோம். வடக் கோரத்தில் தெற்கு நோக்கிய வைகுந்த வாசல் அழகாக அமைந்திருக்கிறது; வடக்குச் சுற்றுக்கு வருவோம். முதலில் உருக்குமிணி சத்தியபாமாவுடன் வேணுகோபாலனும், நவநீதக் கண்ணனும், இரண்டாவதாகச் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி ஆண்டாளும், மூன்ருவதாகப் பிள்ளை லோகாச்சாரியாரும் கிழக்கே பார்க்கக் காட்சியருளுகின்றனர். இதே சுற்றில் மணவாள மாமுனிகள், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், நாத முனிகள் ஆகியோர் இருக்கின்றார்கள். இப்படியாக நான்கு சுற்றுக்களையும் வணங்கி வரும்போது கிழக்குச் சுற்றில் நடுவே பலி பீடமும் கொடி மரமும் இருப்பதைக் காண்கின்றேம். அதற்கு மேல் ஓர் எடுப்பான மண்டபத்தில் பெரிய திருவடியென்னும் கருடாழ்வார் இருக்கிருர். அம்மண்டபத்தின் தென் புறமாகக் கிழக்கு நோக்கிச் சேனை முதலியார், பெரியாழ்வார், ஆளவந்தார், வட புறத்தில் கூரத்தாழ்வார், இராமாநுசர், முதலியாண்டான் ஆகிய அறுவர் மூலவரும் உற்சவருமாகக் காட்சியருள்கின்றுர்கள். இங்ஙனம் ஆழ்வார் ஆசாரியார்களையெல்லாம் வலம் வந்து வணங்கிய பின்னே சீதேவி பூதேவியுடன் கருவறையில் எழுந்தருளியிருக்கின்ற சென்ன கேசவப் பெருமாளைக் கண்குளிரக் கண்டு கும்பிடுவோம். அவர் திரு முன்பு இருக்கின்ற எழுந்தருள் திருமேனிகள் சென்ன கேசவர், சீதேவி, பூதேவி, கௌதுகர், பலிபேரர், சயனபேரர்; மூலவர் அசையாத திருமேனி, கௌதுகரும் அசையாதவரே. அதனுல் எழுந்தருளி வரமாட்டார். உற்சவபேரர் வீதி வலம் வருபவர். சயனபேரர் பள்ளியறைக்குப் போவார். பலி பேரர் திருநாளில்லாத காலங்களிற் கோவிலைச்சுற்றி வந்து தீய தேவதைகள் அணுகாமற் பாதுகாப்பவர். சக்கரத்தாழ்வார் திருவிழாவில் முன் செல்பவர். இங்ஙனமாக இவர்களை நாம் கருவறையில் ஒரே சமயத்திற் கண்டு கண்குளிர்கின்றேம். இத்திருக்கோவிலில் சித்திரைத் திருவோணத்தில் தீர்த்தவாரி நடைபெறும் பத்து நாட் பெரு விழாக் கொண்டாடப் பெறுகிறது.

இனி, சென்னை மல்லீசரை வழிபட வருவோம். அம்மையைக் கண்ட கண்கள் இப்பொழுது அப்பனைக் காணப் போகின்றன. திருக்கோவிலில் முதலில் மேற்கு நோக்கியிருப்பது வேள்விச்சாலை. அதனை அடுத்துச் சூரியமூர்த்தி; அதனையடுத்து வடக்கு நோக்கிய

பிரசன்ன விநாயகர் இவர்களைக் காண்கின்றோம். பிள்ளையாருக்கு பின் புறம் திருமுழுக்குக் கிணறு இருக்கிறது. தெற்குச் சுற்றின் நடுவே கேசவர் கோவிலுக்குட்புகும் திருவாயிலும் தென்மேற்கு மூலையில் கோவில் அலுவலகமும் இருக்கின்றன. மேற்குச் சுற்று வருவோம். இங்கே மான்களோடும் வான்மகளோடும் குமரப் பெருமான் கோவில் கொண்டுள்ளார். வடகோடியிற் பேரழகுத் திருமேனியுடைய பிரமராம்பிகை கிழக்கு நோக்கிக் காட்சியருளு கின்றார். இனி, வடக்குச் சுற்று வருவோம். அங்கே அழகான அருமையான அனுபூதி மண்டபம் விளங்குகின்றது. இதிலே சமைய விரிவுரைகள் நடைபெறுகின்றன. வடக்குச் சுற்றின் கீழ் கோடியில் ஆறுமுகப் பெருமான் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார். அவரையடுத்துத் திருக்கோவில் காவலர் வைரவ மூர்த்தியைக் கும்பிடுகின்றோம். அதனையடுத்து எடுப்பான மேடைமேல் திருமண மண்டபம் அமைந்திருக்கிறது. கிழக்குச் சுற்றின் நடு நாயகமாகக் கொடி மரம், பலிபீடம், இடபம் ஆகிய இவை உள்ளன.

இதுகாறும் நாம் சூழ்ந்து வந்தன வெளிச் சுற்றுக்கள். இனி உட்சுற்று வருவோம். தென்கிழக்கு மூலையில் ஒன்பது கோள் களும், அவைகளின் எதிரே எழுந்தருள் திருமேனிகளாக அம்மை யப்பர், முருகர், பிள்ளையார், இரண்டு கைகளுடைய பிரமராம்பிகை சண்டேசர் முதலியோர் இருக்கிறார்கள். மேற்குச் சுற்றிற் சித்தி கணபதியும் கருவறையின் பின்புறம் மேற்கு நோக்கிய திருமாலும், வடக்குச் சுற்றில் கோமுகத்தின் அருகே நான்முகனும் சண்டேசரும், காளியம்மையும், தென் திசை நோக்கிச் சமையகுரவர் நால்வரும் பிச்சாடணரும் இருப்பதைக் காண்கிறோம். அதனையடுத்துக் கூத்து மண்டபம் வந்து அங்கே சிவகாமி மணிவாசகருடன் எழுந்தருளியிருக் கின்ற கூத்தப் பெருமானைக் கும்பிடுவோம். அம் மண்டபத்தை யடுத்துத் திருப்பள்ளியறை தெற்கு நோக்கி யிருக்கிறது : அதனை யடுத்து இளமுருகனார் காட்சியருள்கின்றார்.

இப்போது நாம் கருவறைக்கு வந்து விட்டோம். மாமண்டபத் தைத் தாண்டிக் கருவறையில் நுழையத் தொடங்கும்போது அதன் இருபுறத்திலும் திரிபுராசுரர்களில் இருவர் திருவாயிற் காவலராயிருப் பதைக் காண்கின்றோம். அதனையடுத்து நாம் செல்ல இருப்பது அர்த்த மண்டபம்.

கருவறையிற் சிவலிங்க வடிவமாகச் சென்ன மல்லீசர் காட்சி யருள்கின்றார். அவர் அருகே புனித பூரணியம்மை அவர்மேல் வைத்த கண்ணை வாங்காமல் அவரையே பார்த்துக்கொண்டு அருந் தவம் புரிகிறார். இங்ஙனம் தவம் புரியும் உயிர்களுக்கே பெருமானுடைய திருவருள் கைகூடும் என்பதை உலகத்தாருக்கு அறிவிப்பதே இவ்வம்மையாரின் தவம்.

மல்லீசப் பெருமானைக் கண்குளிரக் கண்குளிரக் கண்டு கைகளுந் தலை மீதேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம் மெய்யெலாம் பொழிய வேத முதல் வரைப் பணிந்து போற்றி, “ ஐயனே ! மல்லீசப் பெருமானே உலகெல்லாந்திகழும் திருவருளைப் பரப்பிச் சைவத்தை நிலை நாட்டி உலகனைத்தும் வாழ்வித்தருள்க ” என்று திருவருளை வேண்டி நிற்போம்.

பங்குனிப் பௌர்ணமியில் இத்திருக்கோவிலிற் பெருவிழா நடைபெறுகிறது.

சென்ன மல்லீசர், சென்ன கேசவப் பெருமாள் கோவில்கள் இன்று பூக்கடையில் அமைந்திருப்பது போலவே முன்பு உயர்நீதி மன்றத்தின் தென் புறமாக அமைந்திருந்தன. அவைகளை வெள்ளையர் இடித்து விட்டார்கள். அப்போது மக்கள் வெகுண்டனர். வெள்ளையருடன் அந்நாளில் மிக்க செல்வாக்குடனிருந்த மணலி முத்துக் கிருட்டிண முதலியார் என்ற பெரியார் அக்கற்களைக் கொண்டே இந்த இடத்தில் கோவில் கட்டி அமைத்துப் பூசனைக்கும் வகை செய்தார் என்பது வரலாறு. இது நடந்தது கி. பி. 1700-ல்.

பைராகிமடம் வேங்கடேசப் பெருமாள் கோவில்

இத் திருக்கோவில் செனரல் முத்தையா முதலி தெருவிலுள்ள பைராகி மடத்துடன் இருக்கிறது. இதில் அலர்மேல்மங்கையுறை மார்பன் திருவேங்கடமுடையான் வேங்டேசப் பெருமான் எழுந்தருளியிருக்கிறான். புரட்டாசி மாதம் நடைபெறும் பெருந் திருவிழாவின் ஏழாம் திருநாள் திருத்தேர்க் காட்சி நடைபெறும். முதல் நாள் செல்வர் விழாவும், இரண்டாம் நாள் சேனை முதலியாழ்வான் திருவிழாவும் நடைபெற்று மூன்றும் நாள் கொடியேறுகிறது.

36. பூங்காநகர்

கந்தசாமி கோவில் என்னும் முத்துக்குமாரசாமி கோவில்

பூங்கா நகரில் இத்திருக் கோவில் இருசப்பச் செட்டி தெருவிலிருக்கிறது. கோவிலின் திரு முன்பு ஓர் அழகான கோபுரம் விளங்குகின்றது. வடக்கு நேரக்கிய இக் கோபுர வாயிலினுள்ளே தெற்கு நோக்கிச் செல்லுவோம். சென்ன மல்லீசர் சென்ன கேசவர் ஆகிய இருவரும் சென்னப்பர்; மக்கள் இப் பெயரைத் தங்கள் பிள்ளைகளுக்கு வைத்து வணங்கினர். அப்படிப் பெயர் பெற்ற ஒருவர் சென்னப்ப நாயக்கர்; அவர் ஆட்சியில் இருந்தது இப்போது சென்னைமாநகர் உள்ள இடம். அவருடைய உறவினர், பெத்தியாலு நாயக்கர் என்பவர். இவர் பெயராலேதான் பெத்து நாயக்கன் பேடை அமைந்தது. முத்தியாலுப்பேட்டையில் கந்தப் பாசாரி என்பவர் தமக்குச் சொந்தமான பூந்தோட்டத்தில் பிள்ளையார் கோவில் கட்டிக் கும்பிட்டு வரலானர். அதனால் அவரைக் கந்தப் பண்டாரம் என்று பலரும் சிறப்பாக அழைத்தனர். அவருக்கு நெருங்கிய நண்பர் மாரி செட்டியார். இருவரும் ஒவ்வொரு கார்த்திகையிலும் திருப்போரூருக்குச் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்தார்கள். கலி 4774-க்குச் சரியான சாலிவாகன சகம் 1595 பிரமாதி மார்கழி மாதம் 13-ம் நாள் வெள்ளிக்கிழமை அவர்களிருவரும் கார்த்திகையானதனால் வழிபாடு செய்யத் திருப்போரூருக்குச் சென்றார்கள். அங்கே பெருமான் அவர்களுக்கு, " அன்பர்களே! என்னைச் சென்னைக்குக் கொண்டு செல்லுங்கள் " என்று கனவில் அறிவித்தார்.

ஆண்டவன் அருளின்படி அங்கிருந்த ஒரு புற்றினைச் சிதைத்துப் பார்க்க அதனுள் முத்துக் குமாரப் பெருமானின் சிலைத் திருமேனி அகப்பட்டது. திருப்போரூர்ப் பெருமான் திருவருளை நினைந்து உள்ளம் உருகிய அவர்கள் முத்துக் குமரன் திருமேனியைச் சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். இந்த அதிசயத்தைக் கண்டு கேட்ட சென்னை மக்கள் அவர்களை எதிர்கொண்டழைத்து முத்துக் குமரனுக்குத் திருக்கோவில் அமைத்தார்கள். இது கந்த கோட்டமாகக் காட்சியளிக்கின்றது. முத்துக் குமரப் பெருமான் திருக்கோவிலில் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு வட பக்கத்தில் அம்மையும் அப்பனும் எழுந்தருளி யிருக்கின்றார்கள்.



சென்னை— கந்தகோட்டம்

பக்கம் 214

இங்கே, வடலூர் இராமலிங்க அடிகளும் ஆமாத்தூர் அடிகளாகிய தண்டபாணி அடிகளும் பாம்பன் அடிகளும் இத் திருக்கோவிலில் வந்திருந்து பாமாலைகள் எண்ணற்றன பாடிக் கந்தசாமி என்ற முத்துக் குமரனுக்குச் சாத்தி வழிபட்டார்கள்.

இருநூற்றுத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இங்கு எழுந் தருளிய முத்துக் குமரனுக்கு நூற்றுப் பதினறு ஆண்டுகளுக்கு முன் கருங்கற் கட்டிடம் , நிறைவு பெற்றது.

ஐந்து நிலைக் கோபுரத்தை வணங்கிக் கந்தப்பனை வழிபடக் கோவிலினுட் செல்லுவோம். கிழக்குச் சுற்றில் வலப்புறம் மதிலின் தொடக்கத்தில் காவடி ஏந்திக் களிப்புடன் ஆடும் இடும்பன் திருவுரு இருக்கிறது. இடப்புறம் மதிலில் நிலைக் கண்ணுடி ஒன்று இருக் கிறது. அக் கண்ணுடியின் கீழ் இராமலிங்க அடிகளும் பாம்பன் அடிகளும் இருக்கிருர்கள். அவர்களுள் இராமலிங்கர் பல மூர்த்தி களைப் பாடியவர். பாம்பன் அடிகளோ முருகனையன்றிப் பிற மூர்த்திகளைப் பாடாத கடுந்தவ விரதம் பூண்டவர். அக் கிழக்குச் சுற்றின் நடுவே கொடிமரம் இருக்கிறது. பின் சித்தி கணபதி, சூரியன், வீரவாகுதேவர் இவர்களை வணங்குவோம். இங்குள்ள எழுந்தருள் திருமேனிகள் பின்வருவன :— 1. பிள்ளையார், 2. கயிலாசநாதர், 3. முத்துக் குமாரர், 4. சட்டி நாயகர், 5. சந்திர சேகரர், 6. சுக்கிரவார அம்மை, 7. பிச்சாடண மூர்த்தி, 8. அத்திர தேவர், 9. திருமால், 10. நான்முகன், 11. சண்டேசர், 12. அகோர வீரபத்திரர், 13. சுமுத்திரேசர், 14. பழநியாண்டவர், 15. சமையா சிரியர், 16. நவவீரர்கள், 17. மோகினி, 18. காளி, 19. திரிசூலம், 20. அகத்தியர், 21. நக்கீரர், 22. குண்டோதரர்.

கந்தப் பெருமானுக்கு வலதுபுறம் வள்ளியம்மையும், இடதுபுறம் தேவயானையும் இருக்கிருர்கள். அம்மைமார் இருவருக்கும் இடையில் கந்தசாமிப் பெருமான் காண்பார் உள்ளத்தைக் கவரும் பேரழகுடன் எழுந்தருளியிருக்கின்ருர். தேவயானை அம்மைக்கு இடது புறத்தில் சுந்தரேசப் பெருமானும் அவருக்கு இடது புறத்தில் மீனுட்சியம்மை

யும் காட்சியருள்கின்றனர். அம்மைக்கு அடுத்த இடத்தில் வள்ளி, தேவயானையுடன் மயில் மேல் ஆறுமுகப் பெருமான் தெற்கே பார்க்கக் காட்சி அருள்கின்றார். தெற்குச் சுற்று கீழ்மேலாக இருக்கிறது. இதில் மிகப் பெரிய முப்பத்திரண்டுகால் மண்டபம் இருக்கிறது. ஒவ்வொரு தூணும் அருமையான சிற்பங்களோடு அமைந்திருக்கிறது. முத்தக் குமாரசாமிதான் எழுந்தருள் மூர்த்தி. இத் திருக்கோவிலில் கூத்தப் பெருமான் சிவகாமி காண நடனம் ஆடுகின்றார். மாணிக்க வாசகர், பதஞ்சலி, வியாக்கிர பாதரும் கும்பிட்டு நிற்கிறார்கள். கோவிலுக்கு மேற்கே ஓர் அழகான திருக்குளம் இருக்கிறது. அதில் ஆண்டுதோறும் தெப்ப விழா நடக்கிறது.

37. நேதாசி சாலை

சிவசுப்பிரமணியசாமி கோவில்

சிறுபசார்தான் நேதாசி சாலை. அதில் வடபுறமாக இத் திருக் கோவில் இருக்கிறது. வள்ளி, தேவயானையுடன் முருகப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கிறான். தென்மேற்கிற் பிள்ளை யாரும், வடமேற்கிற் சிவலிங்கப் பெருமானும், வடபுறம் தென்முக மாகப் பார்வதி அம்மையும் ஆறுமுகப் பெருமானும், கூத்தப் பெருமானும் காட்சியருள்கின்றனர்.

38. முல்லாசாகிபு தெரு

அரங்கநாதசாமி கோவில்

இத் திருக்கோவிலில் சீதேவி பூதேவியாருடன் அரங்கநாதப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். பெருமாள் திருமேனி பேரழகு படைத்தது; கும்பிட்டு உய்வதற்குக் கண்ணுக்கு ஒரு பெருவிருந்து! பெருமாளுக்கு நாள் விழாவும் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறு கின்றன,

39. தங்கச்சாலை

முருகப்பெருமான் கோவில்

இத் திருக்கோவில் குப்பையர் தெருவுக்கு வடபுறம் கிழக்கே பார்க்க இருக்கிறது. நடுநாயகமாக மூத்தபிள்ளையாரும், தென்புறம் வள்ளி தேவயானையுடன் முருகப்பெருமானும், வடபுறம் சிவலிங்கப் பெருமானும் இருக்கின்றனர். சிவலிங்கம் படிகலிங்கம்; பெருமான் பெயர் சொக்கலிங்கம்; பெருமானுக்கு இடதுபுறமாக அம்மை மீனாட்சி தெற்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றாள். வடக்குச் சுற்றில் கூத்தப் பெருமான் தென்முகமாகக் காட்சியருள்கின்றார்.

இத் திருக்கோவிலின் கோபுரம் பெரியது. அதனால் இது மலைக் கோவில் என்று பொதுமக்களால் அழைக்கப்பெறுகிறது.

அருணாசலேசுவரர் கோவில்

இத்திருக்கோவில் அண்ணாமலைப் பிள்ளை தெருவில் இருக்கிறது. கிழக்கே பார்க்க அருணாசலேசப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். பெருமானுக்கு வடபுறம் தெற்கே பார்க்கக் கூத்தப் பெருமானும், கூத்தப் பெருமானுக்குக் கிழக்கே தென்முகமாக உண்ணாமுலையம்மையும் எழுந்தருளியிருக்கின்றனர். உண்ணாமுலையம்மை வடமொழியில் 'அபீதகுசாம்பிகை' எனப் பெயர் பெறுவாள்.

வெளிச்சுற்றில் தென்மேற்கில் பிள்ளையாரும் வடமேற்கே ஆறுமுகப் பெருமானும், விமானத்துடன் கூடிய திருக்கோவில் களிற் கிழக்குமுகமாகக் காட்சியருள்கின்றனர். வடகிழக்கே வராகி தேவியும் அண்ணாமலையாராம் சிவலிங்கப்பெருமானும் காளிகா தேவியும் அமர்ந்திருக்கின்றனர். தலைத் திருவாயிலின் தென்புறம் வரதராசப் பெருமாள் காட்சியருள்கின்றார்.

ஏகாம்பரேசுவரர் கோவில்

இருசப்ப செட்டி தெருவுக்கு வடபுறம் இருக்கிறது இத் திருக் கோவில். ஏகாம்பரேசுவரர் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அம்மை காமாட்சி பெருமான் திருமுன்பு தென்முகமாகக் காட்சி யருள்கின்றாள். பெருமான் திருமுன்பும் அம்மை திருமுன்பும் கொடிமரம் இருக்கிறது. கோவிலுக்கு மேற்கே பூந்தோட்டமும் திருக்குளமும் இருக்கின்றன. கூத்தப் பெருமான் தனிக்கோவிலில் தென்முகமாக அமர்ந்துள்ளார். தென்மேற்கே வன்னிப் பிள்ளையார் இருக்கிறார். வடமேற்கே ஐம்முகப் பிள்ளையார் அமர்ந்துள்ளார். இவருடைய ஐந்துமுகங்களும் யானை முகங்கள்; இவருடைய திரு மேனியின் பின்புறம் மேற்கே பார்க்க முருகன் இருக்கிறார்.

பங்குனி உத்தரத்திற் பெருவிழா நடைபெறுகிறது; ஏழாம் திரு நாள் திருத்தேர்; எட்டாம் திருநாள் அறுபத்து மூவர்; பத்தாம் திருநாள் பங்குனி உத்தரத்தில் இரவு திருக்கலியாணம், இருநூறு ஆண்டுகளின் முன் நாடோறும் காஞ்சிபுரம் சென்று ஏகாம்பரநாத ரையும் காமாட்சியம்மையையும் வழிபட்டு வந்த ஒரு பெரியவரால் காஞ்சிப்பெருமான் ஆணையால் இத்திருக்கோவில் கட்டப்பெற்றது.

40. அரசியலார் மனைப்பகுதி

இட்டலிங்கேசுவரர் கோவில்

மலைச் சாலை (Mount Road) யில் அரசியலார் மனைப் பகுதி (Government Estates)-யில் ஆளுநர் (Governor) அரண்மனையின் அருகே இத் திருக்கோவில் உள்ளது. பெருமான் தானே முளைத்தெழுந்த மூர்த்தி, சுவயம்புலிங்கம். அக்காலம் ஆளுநர் மாளிகை கட்டப் பெறுவதற்கு முன்னரே இப் பெருமான் இங்கே எழுந்தருளியிருந்து வந்தார். நினைப் பவர் நினைப்பவற்றை அருளும் மூர்த்தி இவர். ஆதலின் இட்டலிங்கேசு வரர் என்ற திருப்பெயர் இவருக்குப் பொருந்தும்!

TAMIL NADU ARC

நகராட்சி

என்

1. புதுவண்
2. இராயபுர
3. இங்காரத
4. சஞ்சீவிர
5. கொருக்கு
6. வியாசர்
7. பேசின்பி
8. பெத்துந
9. ஏழுகிணறு
10. அம்மன்
11. முத்தியால
12. துறைமுக
13. கச்சாலே
14. கொத்தவ
15. சௌக்கா
16. திரிவிலிய
17. சூளை
18. புளியங்
19. பெரம்பூர்
20. செம்பிய
21. அயனவர
22. கீழ்ப்பாக
23. புரசைப்
24. குசப்பே
25. வேப்பே
26. பெரிய
27. இடைப்ப
28. பூங்கா
29. நேப்பிய
30. இந்தாதி
31. [illegible]
32. எழும்பூ
33. ஆயிரம்
34. நுங்கம்ப
35. கோடம்ப
36. வடக்குத்
37. இராயப்பே
38. புதுப்பாக
39. திருவேட்ப
40. சேப்பாக
41. திருவல்லி
42. சாம் பச
43. மீர்ச்சாப
44. வடக்கும
45. தெற்கும
46. தேனும் பே